ஓம்.

பகவாந் பதஞ்ஜலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

இது

பிரஹ்மஸ்ரீ ஸீதாராமசாஸ்திரியார் அவர்களின் உதவியைக்கொண்டு

தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று

சில குறிப்புகளுடன்

மதுரை பிரஹ்மக்ஞாந சபை அக்கிராஸநாதிபதி

பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயரவர்களால்

பிரஸித்தம் செய்யப்பெற்றது.

விவேகபாநு அச்சியந்திரசாலை

மதுரை.

*Copy-right Registered.*

இதன் விலை] 1912 [ரூபாய் 1.

ஓம்.

பகவாந் பதஞ்ஜலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்

இது

பிரஹ்மஸ்ரீ ஸீதாராமசாஸ்திரியார் அவர்களின் உதவியைக்கொண்டு

தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று

சில குறிப்புகளுடன்

மதுரை பிரஹ்மக்ஞாந சபை அக்கிராஸநாதிபதி

பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயரவர்களால்

பிரஸித்தம் செய்யப்பெற்றது.

விவேகபாநு அச்சியந்திரசாலை

மதுரை.

*Copy-right Registered.*

இதன் விலை] **1912** [ரூபாய் **1**.

# பொருளடக்கம்.


| | | சூத்திரங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| 1. | முகவுரை | | 1 |
| 2. | முதலாவது ஸமாதிபாதம். | 51 | 3—40 |
| 3. | இரண்டாவது ஸாதநபாதம் | 55 | 41—80 |
| 4. | மூன்றாவது விபூதிபாதம் | 55 | 81—117 |
| 5. | நான்காவது கைவல்யபாதம் | 34 | 118—140 |
| 6. | விஷய அகராதி | | 141 |

# குறிப்பு.

ஸம்ஸ்க்ருதபாஷையில் யோக ஸம்பந்தமாக அளவிறந்த சாஸ்திரங்கள் உள்ளன. சத உபநிஷத் தொகுதியில், அநேக உபநிஷத்துக்கள் யோகத்தைப்பற்றியவை. இவைகள் எல்லாவற்றிலும் பிரஸித்தமானது பாதஞ்சலயோகசாஸ்திரமே. அதற்கு அடியில் கண்ட வியாக்யாநங்களுள்ளன.

1. ஸ்ரீமத் வியாஸ ரிஷி செய்துள்ள யோகபாஷ்யம்.

2. மேற்கண்ட பாஷ்யத்திற்கு, வாசஸ்பதிமிச்ரர் செய்துள்ள, தத்வவைசாரதி என்னும் வியாக்யாநம் (Anandasrama Press, Poona.)

3. ஸ்ரீமத் விக்ஞாநபிக்ஷு அவர்கள் செய்துள்ள யோகவார்த்திகம் (Nirnayasagara Press, Bombay.)

4. ஸ்ரீமத் போஜராஜர் செய்துள்ள "இராஜமார்த்தாண்டம்" என்னும் ஓர்விர்த்தி (Nirnayasagara Press, Bombay.)

5. ஸ்ரீமத் ஸதாசிவ பிரஹ்மேந்திரர் செய்துள்ள யோக ஸுதாகரம்என்னும் யோகசூத்திரவிர்த்தி. (ஸ்ரீரங்கம் வாணிவிலாசம் பிரஸ்).

6. ஸ்ரீமத் ராமாநந்தயதிகள் செய்துள்ள மணிப்பிரபா என்னும் வியாக்யாநம். (Benares Chowkhamba Sanskrit Book-depot.)

7. ஸ்ரீமத் ஸ்வாமிநாராயணதீர்த்தர் செய்துள்ள யோகசித்தாந்த சந்திரிகை என்னும் வியாக்யாநம். Do.

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

## முகவுரை

—:o:—

பதஞ்சலி மஹாமுனிவர், சரீரசுத்தி செய்து, அதனால் காய வித்தி பெறுதலுக்கு அநுகூலமாக வைத்திய சாஸ்திரத்தையும்; வாககு சுத்திசெய்து, அதனால் சப்தப்பிரஹ்ம உபாஸனை நலம் தருமபடி அனுஷ்டிப்பதற்கு, பாணிநி வியாகரண சூத்திரங்கட்குப் பெயர்போன மஹாபாஷ்யத்தையும்; மனத்தைச் சுத்தி செய்து, கைவல்யம் பெறுவதற்கு அனுகூலமாக இந்த யோக சாஸ்திரத்தையும், மனிதர்களின் மேல் உள்ள காருண்ணியத்தினால் அருளிச் செய்தார். அவர் இன்ன தேசத்தில் இன்ன காலத்தில் அவதரித்தாரென்பது, வியக்தமாகத் தெரியவில்லை. ஆனால் இற்றைக்கு 2,300 வருஷங்களுக்கு முன்னர் காஷ்மீரத்தில் இருந்திருக்கலாமென்று சில வித்துவான்களின் அபிப்பிராயம். இவரை ஆதிசேஷ அவதாரமாகச் சொல்லுவதுண்டு.

இந்த யோகசாஸ்திரம் நான்கு பாதங்களாக நடைபெறுகிறது:— (1) சமாதிபாதம் (2) ஸாதநபாதம் (3) விபூதிபாதம் (4) கைவல்யபாதம் என்பனவாம்.

இந்த யோக சாஸ்திரத்துக்கு பாஷ்யம் செய்தவர் வியாசர். இவர் பகவான் ஸ்ரீ. வேதவியாஸர் எனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். மற்றும் சிலர், இவர் வேறொரு ரிஷியாவர் என்றும், வேத வியாஸரல்லர் என்றும் சொல்லுகிறார்கள். இவ்வியாஸ பாஷ்யத்திற்கு வாசஸ்பதி மிச்ரர் "தத்வ வைசாரதி" என்னும் விரிவான வியாக்கியானம் செய்திருக்கிறார். மேலும், விஞ்ஞானபிக்ஷு என்பவர் "யோகவார்த்திகம்" என்னும் வார்த்திகமும் எழுதியுள்ளார். ஸ்ரீ. போஜராஜர் என்பவர், "ராஜமார்த்தாண்டம்" என்னும் ஓர் விருத்தியையும் செய்திருக்கிறார்.

யோக சாஸ்திரத்தின் முக்கிய தாத்பரிய மென்னவென்றால்: யோகத்தின் ஸ்வரூபம்; அதன் ஸாதநம், அதன் விபூதிகள், சித்திகள் அதன் பலனான கைவல்லியமாம். இவ்விஷயங்களில், யோக சாஸ்திரத்திற்கும் உபநிஷத்துக்களுக்கும் யாதொரு விரோதமுமில்லை. உபநிஷத்துக்களின் பரமதத்துவங்களை சாக்ஷாத்கரிப்பதற்கு யோகசாஸ்திரம் பரமஸாதகமானது. ஆனால் சாங்கிய சாஸ்திரத்தின் ஸித்தாந்தத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு யோகசாஸ்திரம் நிகழ்கின்றமையாலும், சாங்கியத்துக்கும் உபநிஷத்துக்களுக்கும் சில முக்கிய விஷயங்களில் வேற்றுமை உண்மையாலும், யோகசாஸ்திரத்திற்கும் உபநிஷத்துக்களுக்கும் சில விஷயங்களில் விரோதமுள்ளதெனல் அறியத்தக்கது.

இம்மொழிபெயர்ப்பு வியாஸ பாஷ்யத்தை அனுசரித்து நடைபெறுகிறது. ஷை பாஷ்யத்தினின்றும், மற்றவிடங்களினின்றும் சில முக்கியமான விஷயங்கள் குறிப்பாய்; சுருக்கமாய் எழுதப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பு ஆசிரியர்.

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

## 1-வது. சமாதிபாதம்.

---

### பதஞ்சலியார் ஸ்தோத்திரம்.

* 𑌯𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌰𑍂𑌪𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑌿 𑌜𑌗𑌤𑍋𑌽
𑌨𑍇𑌕𑌧𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌯
𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑍀𑌣𑌕𑍍𑌲𑍇𑌶𑌰𑌾𑌶𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑌮𑌵𑌿𑌷𑌧𑌰𑍋𑌽
𑌨𑍇𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌃 𑌸𑍁𑌭𑍋𑌗𑍀 ।
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌿𑌰𑍍𑌭𑍁𑌜𑌗𑌪𑌰𑌿𑌕𑌰𑌃
𑌪𑍍𑌰𑍀𑌤𑌯𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂
𑌦𑍇𑌵𑍋𑌽𑌹𑍀𑌶𑌃 𑌸 𑌵𑍋𑌽𑌵𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌿𑌤𑌵𑌿𑌮𑌲𑌤𑌨𑍁
𑌰𑍍𑌯𑍋𑌗𑌦𑍋 𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 ॥

(இதன் பொருள்) சகல கிலேசங்களும் அற்றுப்போனவரும், உக்கிரமான விஷத்தையுடையாராயும், அநேக முகங்களையுடையராயும், யோகஸித்தியைக் கொடுக்கிறவராயும், எப்போதும் தியானத்தில் இருப்பவராயுமுள்ள ஸர்ப்பராஜாவான ஆதிசேஷன், உலகத்தின் அநுக்கிரகத்திற்காக அனேக ரூபமாக அவதரிக்கிறர். அத்தகைய " ஆதிசேஷபகவான் சிஷர்களான உங்களை இரக்ஷிக்கட்டும்.

† 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌦𑍇𑌨 𑌵𑌾𑌚𑌾𑌂
𑌮𑌲𑌂 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌵𑍈𑌦𑍍𑌯𑌕𑍇𑌨 ।
𑌯𑍋𑌽𑌪𑌾𑌕𑌰𑍋𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑌂 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌂
𑌪𑌤𑌞𑍍𑌜𑌲𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑌾𑌨𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 ॥

(இதன்பொருள்) வாக்கு, காயம், மனம் இவைகளின் மலங்களைப் போக்கடிக்கும்படியாக முறையே சப்தசாஸ்திரத்தையும், வைத்திய சாஸ்திரத்தையும், யோகசாஸ்திரத்தையும் ஜன உபகாரமாக அருளிய பகவான் பதஞ்சலியாரைப் போற்றுவாம்.

---

* *இது வியாஸ பாஷ்யத்திலுள்ளது.*

† *இது வேறொரு இடத்தினின்று எடுக்கப்பட்டது.*

— சூத்திரங்கள்.

1. 𑌅𑌥 𑌯𑍋𑌗𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌮𑍍 ॥

**யோகசாஸ்திரம் பூர்வமுறையின் சார்பாய் ஆரம்பிக்கப்படுகிறது.**

குறிப்பு:— ஆதியில் சாங்கியத்திற்குக் கபிலமுனியும், வேதாந்தத்திற்கு வியாசபகவானும் இருக்கின்றமைபோல, யோகசாஸ்திரத்திற்கு ஆதிகர்த்தர் ஹிரண்ணிய கர்ப்பராவர். பதஞ்சலியார் முன்னுள்ள சாஸ்திரத்தை அநுசரித்துப் பிரகிருத நூலைச் செய்திருக்கின்றமையால் சூத்திரத்தில் "அநுசாஸநம்" என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

யோகம் என்றால் சமாதி என்பது பொருள், அல்லது சேர்தல் என்றும் பொருள் கொள்ளலாம். ஜீவாத்மா பரமாத்மாவினுடன் ஒன்றுபடுதலாம். முன்னது தான் இந்நூலாசிரியரின் கருத்து. யோகசாஸ்திரத்தின் பிரயோஜனம் பிரகிருதிக்குட்பட்ட ஆன்மாவை வியோகம் பெறும்படி செய்தல். பந்தத்திற்குட்பட்டவன் பந்தவிமோசனம் பெறுதலுக்குச் சாதனமான நூல்.

சித்தமானது ஐந்து பூமிகள் அல்லது படிகளை உடையது.

(1) க்ஷிப்தம்=சஞ்சலமான நிலைமை.

(2) மூடம்=ஒன்றுமறியாத நிலைமை.

(3) விக்ஷிப்தம்=சொற்பகாலம் சஞ்சலமின்மையும், வெகுகாலம் சஞ்சலமுண்மையும் இருக்கின்ற நிலைமை.

(4) ஏகாக்கிரம்=ஒரே வஸ்துவை அவலம்பித்திருக்கின்ற நிலைமை.

(5) நிருத்தம்=விருத்திசூந்நியமான நிலைமை, ஆனால் விருத்திபீஜமாகிய சம்ஸ்காரமாத்திரம் உள்ள நிலைமை.

முதல் மூன்றுபடிகளில் யோகாப்பியாசம் முடியாது. நான்காம், ஐந்தாம் படிகளில் கூடும்.

2. 𑌯𑍋𑌗𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌰𑍋𑌧𑌃 ॥

**யோகம் என்பது சித்தவிருத்திகளை நிரோதம் செய்தலாம்.**

குறிப்பு 1:—இந்த சூத்திரத்தால் நிருத்தம் என்ற நிலையான அஸம்பிரஞ்ஞாத சமாதி என்பது மாத்திரந்தான் யோகம் எனப் பொருள்படும். ஆனால் எல்லாச் சித்தவிர்த்திகள் என்று சூத்திரத்தில் சொல்லாமையால் கீழான படிகளான க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம் இவைகளை நீக்கி ஏகாக்கிரம், நிருத்தம் என்ற இரண்டுபடிகளும் யோகப்பயிற்சிக்கு உரியதாகும். சித்தம் என்பது சத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுடன் கூடி நிகழ்வது. சத்வகுணமானது எப்போதும் அதனிடம் உள்ளது. சித்தம், ரஜஸ், தமஸ் இவைகளுடன் சம்பந்திக்கும்போது, உலக விஷயங்களின் பாவங்கள் உண்டாகின்றன. தமஸ் மேலிட்டால், அதர்மம், அஞ்ஞானம், வைராக்கியமின்மை, ஐசுவரியமின்மை மனத்திற்கு ஏற்படும். ரஜஸ் மேலிட்டால், ஷைபாவங்களின் எதிர்மறையான நிலைமை உண்டாகிறது. ரஜஸ் அற்பமேனும் இல்லாமல் போய்த்துப்போமாகில், புருஷஸ்வரூபத்தில் பிரதிஷ்டை உண்டாகிறது. இந்நிலையானது தர்மமேகத்தியானத்திற்குப் போதலுக்கு அநுகூலமாயுள்ளது. தர்மமேக சமாதிவரையில் உள்ள சமாதியின் பல படிகள் ஸம்பிரஞ்ஞாத சமாதியில் அடங்கும். தர்மமேக சமாதியைப்பற்றிப் பின்னர் விவரிப்போம்.

குறிப்பு 2:—ஸம்ஸ்கார மாத்திரம் மிகுந்திருந்து விர்த்திகள் ஒழிவடையும்போது, அந்நிலை அஸம்பிரஞ்ஞாத சமாதியாம். யோகம் ஸம்பிரஞ்ஞாதசமாதியென்றும் அஸம்பிரஞ்ஞாத சமாதியென்றும் இருவகைத்தாம். இவ்விரண்டும் முறையே ஸபீஜம் என்றும் நிர்பீஜம் என்றும் பெயர்பெறும்.

3. 𑌤𑌦𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍍 ॥

அப்போது (விர்த்திகள் அடங்கும்போது) புருஷன் தன் ஸ்வரூபத்தில் இருப்பான்.

குறிப்பு:—விர்த்திகள் அடங்கினால் விஷயம் ஒன்றுமில்லை. அச்சமயத்தில் கேவலம் தன்னிலையில் புருஷன் இருப்பான். அது கைவல்லிய ஸ்திதியைப் போன்றதாம்,

4. வ்ருத்திஸாரூப்யமிதரத்ர ॥

ஏனையகாலத்தில் (விர்த்திகள் அடங்காமல் இருக்கின்ற காலத்தில்) புருஷன், நிகழும் அந்தந்த விர்த்தியுடன், ஸம்பந்தித்திருப்பான்.

5. வ்ருத்தய: பஞ்சதய்ய: க்லிஷ்டாக்லிஷ்டா: ॥

விர்த்திகள் ஐவகை. சில துக்ககரமானவை. சில துக்கமின்மையானவை.

6. ப்ரமாணவிபர்யயவிகல்பநித்ராஸ்ம்ருதய: ॥

பிரமாணம், விபரியயம், விகல்பம், நித்திரை, ஸ்மரணை என்பன ஐவகை விர்த்திகளாம்.

7. ப்ரத்யக்ஷாநுமாநாகமா: ப்ரமாணாநி ॥

பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம் என்பன பிரமாணங்கள்.

*குறிப்பு 1:—உபமானம், அருத்தாபத்தி, அனுபலப்தி, இம்மூன்றையும் சேர்த்து சிலர் ஆறு பிரமாணங்கள் உண்டென்பார்கள். ஆனால் இவை மூன்றும் அநுமானத்தில் அடங்கும். ஆகமம் = ஆப்த வாக்கியம், சப்தம், சர்வஞ்ஞனுகவும், கருணையுள்ளவனுகவுமிருக்கின்ற புருஷனின் வாசகம்.*

*குறிப்பு 2:—இம்மூன்று பிரமாணங்களினும் தாரதம்மியமுண்டு. சாதாரண மனிதன் பிரத்தியக்ஷத்தையும், அறிவில்மிகுந்தவன் பிரத்தியக்ஷம் அனுமானத்தையும், இன்னும் விசால அறிஞன் சப்தத்தையும் பிரமாணமாகக்கொள்ளுவான். எல்லாப் பிரமாணங்களும், ஆத்மஸம்வித் பெறும்வரையில் பயனுள்ளவை. ஆத்மஸம்வித் அடைந்த மஹாபுருஷனுக்குத் தன்னுடைய சாக்ஷாத்காரமே அன்றி, மற்றவை பிரமாணமன்று. அந்த உயர்நிலை பெறுவதற்கே, பிரமாணங்கள் படிகளாம், சாதனங்களாம்.*

8. விபர்யயோ மித்யாஜ்ஞாநமதத்ரூபப்ரதிஷ்டம் ॥

விபரியயம் என்பது ஒரு வஸ்துவிற்குரிய ஸ்வரூபம் தோன்றமல் பொய்யான வேறொரு ஸ்வரூபம் தோன்றலாம்.

*குறிப்பு:—சந்தேகம் என்பது விபரியயத்தில் சேர்ந்ததாக சூத்திரக்காரர் அபிப்பிராயம். அதனுல் அதைப்பற்றி வேருகச் சொல்லவில்லை.*

9. ஶப்தஜ்ஞாநாநுபாதீ வஸ்துஶூந்யோ விகல்ப:॥

விகற்பம் என்பது வஸ்து உண்மையில் இன்றி, வார்த்தைமாத்திரை யை அநுசரித்து உண்டாகும் மனோவிர்த்தியாம்.

குறிப்பு:—முயற்கொம்பு, வந்தியா புத்திரன், சைதன்னியம் (அறிவு) புருஷனுடைய ஸ்வரூபம், (இதில் சைதந்நியம், புருஷன் என்ற இரண்டு வார்த்தைகளினால் வித்தியாசமிருப்பினும், அவை கள் குறிக்கும் பொருள் ஒன்றே, இரண்டல்ல). ராகுவின் தலை இவை போன்றவை உதாரணமாகும்.

10. அபாவப்ரத்யயாலம்பநா வ்ருத்திர்நித்ரா॥

நித்திரை என்பது வெளி விஷய பிரஞ்ஞை இன்றி (சத்வ ரஜோ குணங்கள்அடங்கி, தமோகுணம் மேலிடும் காலையில்) அவித்தை சம்பந் தமான மநோவிர்த்தியாம்.

குறிப்பு:— சாதாரண ஜனங்களின் அபிப்பிராயத்தில், நித்தி ரையில் விர்த்தி சூன்யமாம். தூங்கி விழித்ததின்மேல், 'சுகமாய்த் தூங்கினேன்' என்ற ஸ்மரணை இருக்கின்றமையால், உண்மையில் அது தூக்கத்தில் அபாவரூபமான ஒரு விர்த்தியாக இருக்கின்றது.

11. அநுபூதவிஷயாஸம்ப்ரமோஷ: ஸ்ம்ருதி:॥

ஸ்மிருதி என்பது அனுபவித்த விஷயம் மனத்தைவிட்டு நழுவாமலி ருத்தலாம்.

குறிப்பு:—அனுபவித்த(பிரமாணத்தினால் அனுபவித்த)இவ்வை ந்து விர்த்திகளும் சுகம், துக்கம், மோகம் இவைகளுக்குட்பட்டவை. இவ்விர்த்திகளில் பிரமாணம், விபரியயம், விகற்பம் இவைமூன்றும் ஜாக்கிரதாவஸ்தையில் அனுபவிக்கப்படுகின்றன. இவைகளின் வாசனைகள் மாத்திரம் ஸ்வப்நாவஸ்தையில் அனுபவிக்கப்படுகின் றன. ஸுஷுப்தி அவஸ்தையில் நித்திரை மாத்திரம் உள்ளது. ஸ்மிருதி மற்றைய இரண்டு அவஸ்தைகளிலும் உள்ளது; நித்திரை யில் இன்றும்.

12. அப்யாஸவைராக்யாப்யாம் தந்நிரோத:॥

இவைகள் (மேற்கண்ட விர்த்திகள்) அப்பியாசம், வைராக்கியம் (என்ற உபாயங்களால்) நிரோதம் செய்யத்தக்கவை.

குறிப்பு:—மநோவிர்த்திகளாகிற பிரவாகமானது, சத்வம் மே லிட்டிருந்தால், நல்ல மார்க்கத்திலும், ரஜஸ், தமஸ்கள் மேலிட்டிரு

ந்தால், தீயமார்க்கத்திலும் செல்லுகின்றது. நல்ல மார்க்கம் என்பது அந்தர்முகமாய்க் கைவல்லியத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும். தீய மார்க்கமானது விஷய நுகர்ச்சி என்ற ஸம்ஸாரத்திற்குள் கொண்டுபோய் விடும். வைராக்கிய ஸாதகத்தால், விஷயப் பிரவாகத்தைத் தடுத்து அணைபோட்டும், அப்பியாச சாதநத்தால், நல்ல மார்க்கம் என்றதனை வெட்டிவிட்டும், அதில் மநோவிர்த்திகளைச்செல்லும்படி செய்தலுமாம். வைராக்கியம், பிரதிபந்தம்அநிஷ்டநிவிர்த்தியையும், அப்பியாசம் இஷ்டப்பிராப்தியையும் தரும்.

13. தத்ர ஸ்திதௌ யத்நோऽப்யாஸ꞉॥

அதில் (அப்புருஷனிடத்தில்) மனத்தை ஸ்திரமாக நிறுத்தலின் முயற்சி அப்பியாசமாம்.

குறிப்பு:—பகிர்முகமாகிய விர்த்திகள் போய் அந்தர்முகமான விர்த்திகள் நடைபெறல் ஸ்திதி எனப்படும். அந்நிலையை அடைவதற்காக, பஹிர் அந்தர் சாதநங்களை அநுஷ்டித்தல்அப்பியாசமாம்.

14, ஸ து தீர்க்காலநைரந்தர்யஸத்காரா
ஸேவிதோ த்ருடபூமி꞉॥

நீண்டகாலம் இடையறாமல் துறித்தலக்ஷியத்தில் பிரயத்தனத்துடன் அவ்வப்பியாசம் நிகழுமாகில், அது திடமானதாகும்.

15. த்ருஷ்டாநுஶ்ரவிக விஷய வித்ருஷ்ணஸ்ய
வஶீகாரஸம்ஜ்ஞா வைராக்யம்॥

வைராக்கியம் என்பது, பிரத்தியக்ஷ, (சாஸ்திரங்களில் பிரஸ்தாபித்திருக்கிற)அப்பிரத்தியக்ஷ விஷயங்களில் அவாவின்றி அவைகளை ஸ்வாதந்தர்யம் செய்யும் தகைமையாம்.

குறிப்பு:—வேண்டுதல், வேண்டாமை, இல்லாநிலைமை, வைராக்கியம். அது நாலுபடியுள்ளது. (1) யதமாநம்—முயற்சி. மனம் இந்திரிய விஷயங்களிற் செல்லாமல், தடுத்தலின் முயற்சி முதற்படி. (2) வியதிரேகம்—அம்முயற்சி செய்கிறதில், சில விஷயங்களைப்பற்றி விருப்பு வெறுப்பில்லாமல் முன்னரே தள்ளப்பட்ட விஷயங்களாகின்றன. அஃதாவது அவைகள் சம்பந்தமாக வைராக்கியம் பக்குவமாகியிருக்கிறது, சில நம்மை இழுக்கின்றன; அவை நம்மை இழுக்காமல் தடுக்க முயலுகின்றோம். இவைகளைப்பற்றிய வைராக்கியம்

பக்குவமாகிக்கொண்டுவருகின்றது. சில நம்மை இழுக்கின்றன. ஆனால் அவைகளைத் தடுக்க எவ்விதமுயற்சியும் செய்ய நாம் ஆரம்பிக்கவில்லை. இவைகளைப்பற்றி வைராக்கியம் ஏற்பட்டு, இனி பக்குவமாகவேண்டும். இவ்விதமாக விஷயங்களின் இழுப்பில் தாரதம்மியம் அறிதல் இரண்டாம்படி. (3) ஏகேந்திரியம்—பக்குவமானவைகளில், இந்திரியங்கள் சலிக்காமல் இருக்க, மனம் மாத்திரம், விஷயங்களில் ஒரு விருப்பு அல்லது வெறுப்பைக் கொள்ளுதல். மனமாகிற ஒரு இந்திரியத்தின் தொழில் இருக்கின்றமையால் ஏகேந்திரியம் என்பது மூன்றாம்படி (4) வசீகாரம்—விஷயங்கள் தாமே ஒழிவை அடைகின்றன. இந்திரியங்கள்சலிக்கவில்லை, மனத்தினிடத்திலுள்ள விருப்பு, வெறுப்பு என்றவையும் அற்றுப்போதல், அதனால் சுதந்தரம் ஏறபடும். நாம் விஷயங்களின் வசமாகாமல், அவைகளை வசமாக்கிக் கொள்ளல். இது நான்காம் படி. புருஷ தர்சனம் நிகழ்வதினால் இஃது உண்டாகும். கீதை உ-ம் அத்தியாயம் 59-ம் சுலோகம் இங்கு கவனிக்கத்தக்கது.

16. தத்பரம் புருஷக்யாதேர்குணவைத்ருஷ்ண்யம்॥

பரம வைராக்கியம் என்பது, புருஷதர்சனம் நிகழ்வதினால் (சத்வ, ரஜஸ், தமஸ் என்ற) குணங்களினும் பற்றில்லாத நிலையாம்.

குறிப்பு:—சாதாரண வைராக்கியம், காரியங்களான விஷயங்களில் பற்றில்லாமை. காரணங்களான குணங்களில், பற்றில்லாமை பரமவைராக்கியம். முன்னது அபர வைராக்கியம் என்றும் பின்னது பரவைராக்கியம் என்றும் பெயர்பெறும். முன்னது ஸத்வ குணம் மேலிட்டு| ரஜோகுணம் சம்பந்தமுடையதாய் தமஸ் அற்றுப்போயிருக்கின்ற நிலை. இதில் சித்திகள் அடையலாம். சுவர்க்கம், விதேகிகளின் நிலைமை, பிரகிருதிலயம் முதலியவை பெறலாம். பின்னதான பரவைராக்கியம் பெற்ற யோகி ஷை அனுபவங்கள் அடைய அருகனாகவிருந்தும், அவைகளை அலக்ஷியம் செய்து, புருஷதர்சநம் நோக்கமுள்ளவனாக, புருஷனை சாக்ஷாத்கரிக்கிறான்.

17. விதர்க்கவிசாரானந்தாஸ்மிதாரூபா
நுகமாத் ஸம்ப்ரஜ்ஞாத:॥

ஸம்பிரஜ்ஞாத ஸமாதி என்பது விதர்க்கம், விசாரம், ஆநந்தம் அஸ்மிதை என (நால் வகை) ரூபத்தை அனுசரித்து நிகழ்வதாகும்.

குறிப்பு:—சாதனங்களைச் சொல்லி, பின்னர் சாத்தியம், அதாவது அடையப்படும் ஸமாதிகளைச் சொல்லுகின்றார். ஸமாதி இருவிதம். முதற்படி ஸம்பிரஞ்ஞாத ஸமாதி, இரண்டாம்படி அஸம்பிரஞ்ஞாத ஸமாதி. ஸம்பிரஞ்ஞாத சமாதி நான்கு உட்பிரிவுகளை யுடையது. யோகியானவன் ஸ்தூல வஸ்துவை முதன்மையில் தியானம் செய்து (விதர்க்கம்), பின்பு அதன் சூக்ஷ்ம நிலையான தன்மாத்திரைகளைத் தியானம் செய்கிறான் (விசாரம்). இது வில்வித்தையில் பழகுவோன், முதலில் ஸ்தூல லக்ஷியத்தையும், பின்பு சூக்ஷ்ம லக்ஷியத்தையும் வைத்துப் பழகுவது போன்றதாகும்.

(1) ஸ்தூலவஸ்து தியானம்—விதர்க்கம்.

(2) சூக்ஷ்மவஸ்து தியானம்—விசாரம்.

(3) இந்திரியங்கள் ஸ்தூலவஸ்துக்களில் செல்லாமல் அதன்தன் ஸ்தானத்தில் நிற்கும்படி செய்தலினால் உண்டாகும் அனுபவம்—ஆனந்தம்.

(4) வேறு ஒன்றும் மனத்தில் வராமல் பிரயத்தனத்தால் தடுத்து நான் என்ற பிரஞ்ஞைமட்டும் இருப்பது அஸ்மிதை. விசாரம், ஆனந்தம், அஸ்மிதை இம்மூன்றும் விதர்க்கத்தில் இருக்கின்றன. ஆனந்தம், அஸ்மிதை இவ்விரண்டும் விசாரத்தி லிருக்கின்றன. அஸ்மிதை மாத்திரம் ஆனந்தத்தில் இருக்கின்றது. மேற்கண்ட விஷயங்களையே அடியில் வருமாறு சொல்லலாம்:

(1) முதற்படியில் ஸ்தூல விஷயங்களின் ஒன்றை லக்ஷியம் செய்து தியானம் நிகழும்—விதர்க்கம்.

(2) இரண்டாம்படியில் சூக்ஷ்மமான விஷயங்களின் யாதேனும் ஒன்றை லக்ஷியம்செய்து தியானம் நிகழும். பஞ்சதன்மாத்திரை, அகங்காரம், மஹத்தத்துவம் முதலியவைகளில் ஒன்றின்மேல் தியானிப்பது—விசாரம்.

(3) மூன்றாம்படியில், ஸ்தூலசூக்ஷ்ம விஷயங்கள் இல்லாமல், இந்திரியங்களை அதனதன் ஸ்தானத்தில் நிறுத்தி, அந்நிலையில் தியானம் பண்ணுவது ஆனந்தம்.

*அடியில் வருவனவற்றை 18-வது சூத்திரத்திற்கு அருத்தமாகச் சேர்த்துக்கொள்ளுக:—*

**மற்றது (அஸம்பிரஞ்ஞாத சமாதியானது) மநச்சஞ்சல மின்மையை அடிக்கடி அப்பியசிப்பதினைல் உண்டாகும். (ஆனல்) சித்தத்தில் பூர்வ ஸம்ஸ்காரசேஷமிருக்கும்.**

(4) நான்காம் படியில், இந்திரியங்களையும் விட்டு நான் என்ற பாவம் தனித்திருத்தல் அஸ்மிதை.

இம்முறையில் மனத்திற்கு யாதேனும் ஒரு ஆலம்பநம் (பிடிப்பு) உள்ளது. அதனால் இந்த ஸமாதிக்கு ஸம்பிரஞ்ஞாத ஸமாதி எனப் பெயர்.

18. விராமப்ரத்யயாப்யாஸபூர்வ꞉
ஸம்ஸ்காரசேஷோऽந்ய꞉॥

குறிப்பு:—இம்முறையின் அப்பியாஸம் ஸ்திரமானபிறகு, ஒருவித ஆலம்பநமுமின்றி மனம் தனித்திருத்தல் ஏற்படும். ஆனால் ஸம்ஸ்கார சேஷம், இச்சமாதி நிகழுங்கால், இருக்கும். இச்சேஷமும் இச்சமாதி ஸ்திரப்படுமாகில், ஒழியும். இந்நிலையைத் திருமூலர் அடியில் வருமாறு பிரஸ்தாபிக்கிறார்:—

நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்றகிலேனே —திருமந்திரம்.

இது எல்லா விர்த்திகளும் ஓய்ந்த நிலை. திரிபுடி அற்ற படி. ஆனால் இது ஸுஷுப்தியின் லயம் அன்று. பிரஞ்ஞை மாத்திரம் இருக்கும். அலையற்ற கடல்போன்ற நிலைஇது. "திரை பொரா மன்னும் அமிர்தத் தெண் கடலே" என்ற மாணிக்கவாசகர் அனுபவ வாக்கு இங்கு கவனிக்கத்தக்கது. ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் நீங்கப்பெற்று, சுத்த ஸத்வ குணஸ்வரூபமாகவே ஆகின்ற நிலை இதுவாம். பரவைராக்கியம் இவ்வுயர்நிலைக்குச் சாதனமாம்.

மனத்தின் ஏகாக்கிர நிலையில் ஸம்பிரஞ்ஞாத சமாதி ஏற்படக்கூடியது. மனத்தின் நிருத்த நிலையில், அஸம்பிரஞ்ஞாத சமாதி ஏற்படக்கூடியது. அதனால் அஸம்பிரஞ்ஞாத சமாதி, நிரோத சமாதி என்றும் பெயர் பெறும்.

19. ஭வப்ரத்யயோ விதேஹப்ரக்ருதிலயாநாம் ॥

இந்த அஸம்பிரஞ்ஞாத சமாதியானது வைராக்கியம் முற்றும் ஏற்படாமல் போன நிலையில்) தேவர்களின் ஸ்தானத்தையும் பிரகிருதிலய ஸ்தானத்தையும் கொடுக்கும்.

குறிப்பு:—*அஸம்பிரஞ்ஞாத சமாதி* (1) *பவப்பிரத்தியயம்* (2) *உபாயப்பிரத்தியயம் என இருபடிகள் உடையது,*

(1) பவப்பிரத்தியயம், *அவித்தையைக் காரணமாக உடையது. அதாவது அவித்தையின் சம்பந்தமுடையது. இந்நிலையில் அவித்தை என்ற ஆவரணம் உள்ளது. பல புவனங்களின் போகங்களை அனுபவிக்கவேண்டுமென்ற இச்சை யோகியைப்பற்றி நிற்கும். வைதேகியும் அல்லது தேவர்களின் நிலைமையும் இதில் அடங்கும். இவ்வித அனுபவங்களுக்குக் காலவரம்பு உண்டு, "இந்திரியங்களை உபாஸிக்கிறவர்கள், 10 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களில் வசிப்பார்கள் என்றும், பூதங்களை, அதாவது பஞ்சதந்மாத்திரைகளை உபாஸிக்கிறவர்கள் 100 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களிலும், அகங்காரத்தை உபாஸிக்கிறவர்கள் 1000 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களிலும் வசிப்பார்க" ளென்றும் வாயுபுராணத்தில் சொல்லியிருக்கிறது.*

*பிரகிருதிலயாள், மகத், அவ்யக்தம் முதலியவைகளை உபாஸிக்கிறவர்கள். அதாவது அதுவும் தானும் ஒன்று என, உபாஸிக்கிறவர் வர்கள். சரீரம் போனபிறகு, உபாஸியமான வஸ்துவுடன் லயத்தை அடைகிறார்கள்.*

"யதாக்ரதுரஸ்மிம்ல்லோகே புருஷோ ஭வதி ததேதஃ ப்ரேத்ய ஭வதி"—*சாந்தோக்கிய உபநிஷத்.*

(இதன் பொருள்) புருஷன் எந்த சங்கல்பத்துடன் மரணமடைகிறானோ, அந்த சங்கல்பரூபமாக லோகாந்தரத்தில் ஆகிறன்.

"யம் யம் வாபி ஸ்மரந்பாவம் த்யஜத்யந்தே களேவரம்।
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவ பாவித:॥

*பகவத்கீதை,*

(இதன் பொருள்) "கௌந்தேய (ஒருவன் தனது வாழ்வின்) முடிவிலே எந்தெந்தப் பொருளை நினைந்து சரீரத்தை விடுகின்றனோ, அதனைப் பற்றிய பாவனையை எப்பொழுதும் பாவித்து, (ஸம்பாதித்துக்கொண்ட) வனாய் அதையே அடைகிறன்.

இவர்களுக்கு நீடித்த சுகமிருந்தாலும் அதற்கு முடிவு உண்டு. புநர்ஜந்மம் உண்டு. தவளைகளின் கருக்கள் மழையில்லாத காலத்தில் மண்ணோடு கலந்து அந்தர்கதமாக இருக்கின்றன. அவை போல, இப்பிரகிருதிலயாள் அவியக்தத்தில் லயமடைகிறார்கள். பின்பு தவளைக் கருக்கள் வருஷகாலத்தில் உண்டாகுமாறுபோல, இப்பிரகிருதிலயாளரனவர்கள், பூமியில் சரீரம் பெறுகிறார்கள். அவர்களுக்கு அந்த லயகாலத்தில் அந்த லயம் கைவல்வியத்திற்குச் சமமானதாகத் தோன்றும்; ஆனால், அது கைவல்லியமன்று.

உபாயப்பிரத்தியயம்:—புருஷ ஸாக்ஷாத்காரத்தை உண்டுபண்ணுதல் மநத்தின் பிரயோஜநம். மேற்கண்ட பிரகிருதிலய அநுபவங்களில் பற்றில்லாமல், மநம் மேல் நோக்கி, புருஷ தர்சநம் பெறுமாகில், அதுவே கைவல்லிய நிலை. இது தான் உபாயப்பிரத்தியயம். மஹத்தை அதாவது புத்தியை நான் என்று உபாஸிக்கிறவர்கள், 10,000 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களில் வசிப்பார்கள் என்றும், அவியக்தத்தை உபாஸிப்பவர்கள் 1,00,000 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களில் வசிப்பார்கள் என்றும், புருஷ தர்சநம் அடைகிறவர்கள் காலவரம்பைத் தாண்டுகிறார்கள் என்றும், வாயு புராணத்தில் சொல்லியிருக்கின்றன.

20. ஶ்ரத்3தா4வீர்யஸ்ம்ருதிஸமாதி4

ப்ரஜ்ஞாபூர்வக இதரேஷாம்॥

(முன் பிரஸ்தாபித்த தேவர்களின் ஸ்தாநம், பிரகிருதிலயஸ்தாநம் இவைகளைக் கருதாத)மற்றவர்களுக்கு சிரத்தை, வீரியம், ஸ்மிருதி, ஸமாதி இவைகள் மூலமாய் (கைவல்லியம் சித்திக்கும்.)

குறிப்பு:—சிரத்தை என்பது இங்கு, உயர்நலமமைந்த லக்ஷியமான கைவல்லியத்தை நோக்கான மநத்தின் தெளிவும், அதனால் மநத்தின் விசேஷ முயற்சியுமாம். புத்தி மேன்மேலும் தெளிவுபெற, வீரியம், அதாவது மந எழுச்சி, மந உத்ஸாகம் ஏற்படும்.

ஸ்மிருதி: அந்த உயர்நலமுள்ள லக்ஷியம் மநத்தில் தோன்றவே, அதை இடையறாது நினைத்தல், தியாநித்தல்.

ஸமாதி: அப்படி நினைத்தலால் மநம் ஐகாக்ரியம் கொள்ளும். மநச்சலநமின்மை உண்டாம்.

பிரஞ்ஞை: மநம் ஸமாதி பெறவே யதார்த்தமான ஞாநம், மெய்யுணர்வு உண்டாகும்.

இவைகளில் முன்னது, பின்னது உண்டாவதற்கு அநுகூலமாம்.

21. தீவ்ரஸம்வேகாநாமாஸந்ந:॥

தீவிரமான வைராக்கியமுள்ளவர்களுக்கு, ஸமாதிநிலை ஸமீபமாயுள்ளது.

குறிப்பு:—யோகிகள் 9 வித படிகளில் உள்ளவர்கள். உபாயங்கள், வைராக்கியங்களின் தாரதம்மியங்களினால் அப் படிகள் ஏற்படுகின்றன. உபாயம் மூன்று விதம்—மிருது, மத்தியமம், அதிமாத்திரை; வைராக்கியமும் மூன்று விதம். அதிமாத்திரையான உபாயம், அதிமாத்திரையான வைராக்கியம் இவையிரண்டும் கூடிய யோகிக்கு, இச்சூத்திரத்திற் சொல்லிய பிரகாரம், ஸமாதி ஸமீபத்திலுள்ளது. அதாவது ஸமாதி லாபம், ஸமாதி பலம் உண்டாகிறது.

சிரத்தை முதலிய உபாயங்களை அப்பியஸித்தாலும், ஸமாதி லாபம், ஏன் எல்லாரும் அடையவில்லை என்றால், மேற்கண்ட விதமாக, சிரத்தை முதலியவைகள் பல படிகளாக இருக்கின்றன. அப் படிகளின்கண்ணுள்ள யோகிகள் பல திறத்தாராக இருக்கின்றார்கள். உபாயம், வைராக்கியம் பல தாரதம்மியங்களை உடையன. அத் தாரதம்மியங்களுக்குக் காரணம், பூர்வஜந்மங்களில் ஏற்பட்ட ஸம்ஸ்கார விசேஷங்களாம். ஸம்பிரஞ்ஞாத ஸமாதியின் பலன் அஸம்பிரஞ்ஞாத ஸமாதியாம். அஸம்பிரஞ்ஞாத ஸமாதியின் பலன் கைவல்லியமாம்.

22. मृदुमध्याधिमात्रत्वात्ततोऽपि विशेषः ॥

மேலும் அத்தீவிரமான வைராக்கியம் மூன்று படிகளை உடையது; மிருது, மத்தியமம், அதிமாத்திரை. அவைகளில் பின்னது முன்னதை விட விசேஷமாம்.

23. ईश्वरप्रणिधानाद्वा ॥

ஈசுவரபக்தி விசேஷத்தினாலாவது.

குறிப்பு:—முன் 20-ம் சூத்திரத்தில் கண்ட உபாயங்களைத் தவிர, பின்வரும் சூத்திரங்களில் பிரஸ்தாபிக்கப்படும் இன்னும் பல உபாயங்களால் ஸமாதிநிலையைப் பெறலாம் என்பதைச் சொல்லுகிறார். இச் சூத்திரத்தில் ஈசுவரப் பிரணிதானம், அதாவது இறைவனிடம் அன்பின் மிகுதியால் ஸமாதி லாபம், பலம் பெறலாம் என்பது சொல்லப்படுகிறது. வேறு வியாபாரமின்றி பக்தியினால் மாத்திரம் இச்சமாதி லாபம் சித்திக்கும். பக்தி என்பது மனம், மொழி, மெய்களால் நிகழ்வது. பக்தியினால் மாத்திரம் என்பதற்குப் பகவத்கீதை 9-ம் அத்தியாயம், 22-ம் சுலோகம் பார்க்க.

24. क्लेशकर्मविपाकाशयैरपरामृष्टः
पुरुषविशेष ईश्वरः ॥

கிலேசம், கர்மம், பலன்கள், ஆசயம் இவைகள் இல்லாத புருஷ சிரேஷ்டன் ஈசுவரனும்.

குறிப்பு 1:—முன் சூத்திரத்தில் சொன்ன ஈசுவரன் எத்தன்மையன் என்பதை, 24, 25, 26-வது சூத்திரங்களிலும், அவரைப் பக்திசெய்யும் முறையை 27, 28-லும், அதன் பயனை 29-லும் விவரிக்கிறார்.

குறிப்பு 2:—கிலேசம், 2-வது பாதம், 3-ம் சூத்திரத்திற் சொல்லியிருக்கிறபடி, அவித்தை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம், என்பனவாம். கர்மங்கள் என்றால் அவைகளுக்குக் காரணமான நன்மை, தீமையாம். பலம் என்பது அக்கர்மங்களின் பயன்கள். அவை ஜாதி, ஆயுஸ், போகங்கள் என்பவையாம். ஆசயம் என்றால் பூர்வகர்ம வாசனைகள். இப் பூர்வகர்ம வாசனைகளே இந்த ஜந்மத்தில் கர்மங்கள் நடைபெறக் காரணமாகும். இவை சித்தத்தில் லயித்

ஸ்காரரூபமாக இருக்கின்றன. புருஷன் அவைகளின் பலன்களை அநுபவிப்பதால் அவனிடம் ஆரோபிக்கப்படுகின்றன. இது, சண்டையில் யுத்தவீரர்கள் ஜயித்தாலும் தோல்வியடைந்தாலும், அஜ்ஜயமும் தோல்வியும் இராஜாவைச் சேர்கின்றமைபோலவாம். இந்த போகம் சுத்தமாய்ப் பற்றாத புருஷ சிரேஷ்டன் ஈசுவரன்.

(1) வேதாந்திகள், ஜீவனுக்கு அஞ்ஞானதசையில், கர்த்திருத்துவம், போக்திருத்துவம் உண்டென்பார். சாங்கியர்களும், பாதஞ்சலர்களும், கர்த்திருத்துவம் புத்திக்கும், போக்திருத்துவம் ஜீவனுக்கும் உண்டென்பார்கள். இந்த வித்தியாசம் கவனிக்கத் தக்கது.

(2) கைவல்லியத்தை அடைந்த மஹாபுருஷர்கள் அநேகர் உண்டு. ஆனால், அவர்கள் ஈசுவரர்கள் ஆகமாட்டார்கள் என்பதைக் குறிப்பிட, சிரேஷ்டன், விசேஷன் என்ற பதங்கள் உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. அவர்களுக்கு முன் 3 பந்தங்கள் இருந்து, பின் அவைகள் விலகிவிட்டன. மூன்று பந்தங்களாவன :—

i. பிரகிருதிலயாளுக்கு : மூலப்பிரகிருதியால் மாத்திரம் பந்தம் உண்டு.

ii. விதேகாளுக்கு (தேவர்களுக்கு): ஷட் பிரகிருதி விகாரங்களால் (மஹத், அஹங்காரம், பஞ்சதந் மாத்திரைகளால்) ஏற்படுகிற பந்தம் உண்டு.

iii. மேற்கண்டவர்களுக்குக் கீழானவர்களுக்கு தக்ஷிணை பந்தமுண்டு. அதாவது பூத பௌதிகமான பந்தம்.

ஈசுவரனோ எப்போதும் எக்காலத்திலும் பந்தம் இல்லாதவன். பிரகிருதிலயாளுக்கு முன்னும் பந்தம் இருந்தது. இனியும் பந்தம் நேரிடும். அவர்களுக்குப் பிரகிருதியாலேயே பந்தம் ஏற்படுகிறது.

(3) அத்தன்மையான புருஷசிரேஷ்டர் இருக்கிறார் என்பதற்குப் பிரமாணம் என்னவென்றால், சாஸ்திரம்தான். சாஸ்திரம் எப்படிப் பிரமாணமாகும்? அஃது உத்தமமானவர்களின் உயர்கல

மமைந்த புத்தியின் அநுபவஞானம். அத்தன்மையான புத்திக்கும் சாஸ்திரத்திற்கும் உள்ள சம்பந்தம் அநாதி. இது முன்னது, இது பின்னது என்று நம்மால் அறியமுடியாது. அதனால் ஈசுவரன் என்றும் முக்தர், என்றும் எல்லாசம்பத்துமுள்ளவர். மேலான வரையும் சமானமான வரையும் இல்லாதவர்.* அவர் எல்லா ஐசுவரியத்துக்கும் முடிவு, எல்லை.†

(4) உலகத்தில் எல்லா வகையானும் ஸமமாயுள்ள இரண்டு வஸ்துக்கள் இல்லை. காலத்தினாலாவது வித்தியாஸம் ஏற்படும். அதனால் ஈசுவரன், மாணிக்கவாசகர் சொல்லுகிறபடி,

> "முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
> முத்தனே! முடிவிலா முதலே!"
>
> "குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே!
> ஈறிலாக் கொழுஞ்சுடர்க்குன்றே!" —மாணிக்கவாசகர்.

தானாய்த், தனிமுதலாய், என்றுமுள்ளவர்.

அத்வைத வேதாந்தத்தின் மோக்ஷத்திற்கும் பாதஞ்சலாள் கைவல்லியத்திற்கும் வித்தியாஸம் என்னவென்றால், பின்னதில் ஜீவபேதத்துவம், ஈசுவர பேதத்துவம் இருக்கின்றன. முன்னதில் இவைகள் அற்று அகண்டாகார விர்த்தியைப் பெறுதலே மோக்ஷமாம்.

---

* மனனக மலமற மலர்மிசை யெழுதரும்
மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்
இனனுணர் முழுநல மெதிர்நிகழ் கழிவினும்
இனனில னெனனுயிர் மிகுநரை யிலனே. —நம்மாழ்வார்.

†அவ்யக்தாத்து பர: புருஷ: புருஷாந்ந பரம் கிஞ்சித்
ஸா காஷ்டா ஸா பரா கதி: —கட உபநிஷத்

இதன்பொருள்—மூலப்பிரகிருதியைவிட புருஷன் மேலானவர். அவர் தான் முடிவு, எல்லை, அவரைவிட மேலானது வேறு ஒன்றுமின்றாம்

(5) ஐசுவரியம், ஞாந, இச்சா, கிரியா சக்திகளின் ஸம்பூர்ணமும், விசேஷ ஞாநமும், கிரியையும் ஈசுவரனிடம் எவ்விதம் இருக்கப்பாலன? ஈசுவரன் ஸதாமுக்தன். அவித்தைக்குப் புறம்பானவர். போகாபவர்க்கங்களுக்காக நம்மைப்போல அவருக்கு மநம் இல்லை. அப்படியானல் மநம் இன்றி, ஞாந கிரியா சக்திகள் எவ்விதம் அவரிடம் உள்ளன என்றால், ஜீவர்களிடம் உள்ள மநம் ஸத்துவ, ரஜஸ், தமஸ் உள்ளதாக இருக்கிறது. அவர் சுத்த ஸத்துவமான மநத்தைச் சுவீகரித்துக்கொள்ளுகிறார். தாமே அந்த சுத்த மநத்தில், ஞாந, கிரியை என்ற சக்திகள் அமைகின்றன. ஈசுவரன் இத்தன்மையான மநத்தைச் சுவீகரித்துக்கொளல், மனிதர்களைப்போல அவித்தையாலன்று. அதனால் இம்மநத்தில் ஸ்வாமி, ஸ்வாமித்துவம் இல்லை. ஜனங்களின்மேலுள்ள பரம கருணையால், தாபத்திரயத்தினின்று அவர்களைக் கரையேற்றும் பொருட்டு, ஞாந, தர்ம உபதேசத்திற்காக, தாமே சுத்த சத்துவமான மநத்தை ஏற்படுத்திக்கொள்ளுகிறார். சாதாரண மனிதன் அவித்தை வசமாகிறான். ஈசுவரன், அவித்தையின் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டு, அவித்தையை, லோகோபஹாரார்த்தம், ஸ்வீகரித்துக்கொள்ளுகிறார். இராமனின் வேஷம் பூண்ட ஒருவன், இராமனாக நடித்தாலும், அந்நடந காலத்திலும், உண்மையில் தான் ராமன் அல்லன் எனத் தெரிந்திருப்பான்போல, ஈசுவரன் தாமே இந்த அவித்தையை வருவித்துக்கொள்ளுகிறார். இது அவருடைய தத்துவமன்று.

(6) ஜகத்திற்கு க்ஷேமம் உண்டாக்கவேண்டியதற்காக, ஸத்துவ குணத்தை ஈசுவரன் ஸ்வீகரித்துக்கொள்ளுகிறார்.* ஸத்துவகுணமிருந்தால்தான், ஜகத்திற்கு அநுக்கிரஹம் செய்யவேண்டுமென்று ஈசுவரனுக்கு இச்சையுண்டாகிறது. இவ்விதமாக அந்நியோந்

---

*𑌅𑌜𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍𑌨𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 ॥

ப. கீ. 4-ம் அத்தியாயம் 6-ம் சுலோகம்.

*இதன்பொருள்-(நான்) பிறப்பற்றவனானலும், நாசமற்ற சுபாவமுள்ளவனானலும், பிராணிகளுக்கீசனுயிருந்தாலும், சொந்தமான சத்வாம்சமாயையைச் சுவீகரித்து, ஸ்வரூப சக்தியினாலே அவதாரஞ் செய்கிறேன்.

நிய ஆச்ரய தோஷம் போலத்தோன்றுகிறது. உண்மையில் இல்லை, ஜகத் சிருஷ்டி, ஸம்ஹாரம் என்பவை அநாதியாக விருப்பதால், ஈசுவரனிடம் எப்போதும் ஸத்துவ குணம் உள்ளது. அடுத்த கல்பத்தில், சிருஷ்டி முறை இவ்விதமென்று சங்கல்பித்துக் கொண்டு, ஈசுவரன் ஒரு கல்பத்தின் சிருஷ்டியை ஸம்ஹரிக்கிறார். முன் சங்கல்பமானது மூலப்பிரகிருதியுடன் மஹாப்பிரளய காலத்தில் லய அவஸ்தையைப் பெற்றிருந்தாலும், சிருஷ்டி காலத்தில் அந்த ஸங்கல்ப வாசனையானது, பின்பு ஈசுவரனின் சத்வ சித்த ரூபமாகப் பரிணமிக்கின்றது. ஒருவன் மறுநாள் சூரிய உதயத்திற்கு முன் எழுந்திருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தூங்குகிறான். பின்பு, அவ்வெண்ணத்தின் காரியமாக, அந்தக் குறிப்பிட்ட காலத்தில் எழுந்திருக்கிறான். இது போலவே ஈசுவரன் சிருஷ்டி விஷயமும், ஈசுவரன் ஜகத்திற்கு அநுக்கிரஹம் செய்யவேண்டுமென்று இச்சையும், அதற்காகச் சத்துவ குணத்தைச் சுவீகரித்தலும், அதனால் சிருஷ்டியும், இவை அநாதியாகஇருக்கின்றமையால், மேல்கண்ட அந்நியோந்நியாச்ரய தோஷம் இல்லை.

(7) பிரளய காலத்தில், ஈசுவரனின் சித்தமானது, பிரகிருதியில் லயத்தை அடைகிறதில்லையென்று சிலர் சொல்லுவார். அது சரியன்று. பிரகிருதியில் லயத்தை அடையாமற் போனால், சித்தம் அதினின்று உண்டானதாகச் சொல்ல இயலாது. சித்தம் ஜடமாயும், ஈசுவரன் சேதநனாகவும் இருக்கின்றமையால், சித்தம் ஈசுவரனிடமிருந்து உண்டாவது என்று சொல்ல இயலாது. அதனால், மூன்றாவதாக வேறு ஒன்றைக் கற்பிக்க, மூன்றாவது இருப்பதற்குப் பிரமாணம் இல்லை. அதனால், ஈசுவரரின் சித்தமானது பிரதாநத்தில் லயம் அடைகிறது.

(8) மேற்கண்டபடி சொல்வதற்குப் பிரமாணம் யாது? சாஸ்திரம், அதாவது வேதம், ஸ்மிருதி, புராணங்கள், இதிஹாஸங்கள், இவைகள் ஈசுவரனின் உத்கிருஷ்ட சத்துவ குணத்தினின்று உண்டாயின. அதாவது மகரிஷிகளின் சுத்த மநத்தின் ஸத்துவ நிலையில் தோன்றிய விஷயங்கள் பின்பு வெளிவந்தன.

25. தத்ர நிரதிசயம் ஸர்வஜ்ஞபீஜம்॥

**அவரிடத்தில் (ஈசுவரனிடத்தில்), எல்லாவற்றையும் அறியும் சக்தியானது உயர்வற உயர்வுபெற்றது.***

1. இந்திரியங்களுக்குப் புறம்பாய் உள்ள விஷயங்களில், நடந்த விஷயம், நடக்கப்போகும் விஷயம், நடக்கிற விஷயம் இவைகளைத் தனியாகவோ, ஒருங்காகவோ, பெரிதாகவோ, அல்லது சிறிதாகவோ அறியும் சக்தியானது ஸர்வஞ்ஞபீஜம். அதாவது இந்த ஞானம் மேன்மேலும் பெருகிக்கொண்டுபோய் எந்த இடத்தில் முடிவு பெறுகிறதோ, அந்த ஞானஸ்வரூபி ஈசுவரன். ஞானம் பெருகிக்கொண்டுபோய் முடிவுபெறும் இடம் ஈசுவரன் என்றதினால், ஈசுவரன் இருக்கிறான் என்று சித்திக்கும். அப்போது, சப்தப் பிரமாணம் வேண்டுவதில்லையே என்றால், அநுமானத்தில் ஈசுவரன் உளன் என்று சாமாந்நியமான அறிவு மாத்திரம் உண்டாகும். அவன் குணங்களைப்பற்றியும், இத்தன்மையன் என்பதைப் பற்றியும் உள்ள விசேஷஞானம் சப்தப்பிரமாணத்தினால்தான் உண்டாகும்.

2. அவருடைய சிருஷ்டியினால் அவருக்கு யாதொரு பிரயோஜநமுமில்லை. பிராணிகளின் பிரயோஜநம் உண்டாகிறது பிராணிகளுக்கு ஞான தர்மங்களை உபதேசிப்பதினால், "கல்பம், பிரளயம், மஹாப்பிரளயம் இவைகளில் ஏற்படும் ஜநந மரணங்களினின்று பிராணிகள் கரையேறும்படி செய்வதுதான் ஈசுவரன் அடையும் பிரயோஜநம். இவ்விதமே பஞ்சசிகாசாரியார் முன்னர் அடியில் வருமாறு சொல்லியிருக்கின்றார்." "ஆதி வித்வான் (கபிலர்)

---

* குறிப்பு:—நாம் கிஞ்சிஞ்ஞர், அவர் ஸர்வஞ்ஞன். ஸ்ரீநம்மாழ்வார், ஸ்ரீமாணிக்கவாசகர், முதலாயினோரது பாசுரங்கள் இங்கு கவனிக்கத் தக்கன.

"உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே."—நம்மாழ்வார்.

"சிறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே"—மாணிக்கவாசகர்.

"வால் அறிவன்"—நாயனார்.

சுத்தஸாத்விக சித்தத்தை நிர்மித்து, அதன் மூலமாய், கருணையால் ஜிஞ்ஞாஸுவாகிய ஆசுரி என்பாருக்கு ஸாங்கிய சாஸ்திரத்தை உபதேசித்தார். கபிலர், மஹாவிஷ்ணுவின் அவதாரமாகையால், ஈசுவரன் பிராகிருத சரீரமில்லாதவர், அதனால் சுத்தசித்தத்தை நிர்மித்துக்கொண்டாரெனச் சொல்லியிருக்கிறது.”

3. சாதாரணமாய் ஜனங்களுக்கு, அறிவு, ரஜஸ், தமஸ் என்ற குணங்களின் சம்பந்தத்தினால், மநம் ஆவரண விக்ஷேப சக்திகளுக்குட்பட்டிருக்கிறது. ஈசுவரனுக்கோ இவை யில்லை.

4. புத்தர், கபிலர், அர்ஹத்தர்கள் முதலான அநேக தீர்த்தங்கரர்கள் (சாஸ்திரத்தை உண்டுபண்ணியவர்கள், அவதாரபுருஷர்கள், மஹான்கள் அந்தந்த மதங்களில் ஸர்வஞ்ஞர்களாக மதிக்கப்படுகின்றமையால் அவர்களை ஏன் ஸர்வஞ்ஞர்களாகச் சொல்லக்கூடாது? ஸர்வஞ்ஞன் என்ற பதம், அநுமானத்தினால், ஒருவன் என்றே ஏற்படும்.

அநுமானத்தினால் ஸாமாந்நியமான ஞானம் உண்டாகுமேயன்றி விசேஷஞானம் உண்டாகாது. அவ்வீசுவரனுடைய விசேஷகுணங்களைப்பற்றிய ஞானம் உண்டாகாது. அது ஆகமத்தினால்தான் கூடும். (ஆகமம்=வருதல். இந்திரியங்கட்குப் புறம்பான விஷயங்களைப் புத்திக்குத் தெரிவிக்கும் சாஸ்திரம், ஆகமம். இது வழக்கமாய் வேதத்திற்கே சொல்லப்படுகிறது). ஆனால் புத்தர் முதலியவர்களால் உண்டுபண்ணப்பட்ட சாஸ்திரங்கள் ஆகமங்கள் ஆகமாட்டா. ஆகம ஆபாசமாம். போலியானவைகள் எல்லாப் பிரமாணங்களுக்கும் விரோதமான க்ஷணிகஞானம், ஆத்மா இல்லையென்பது முதலியவைகளை அம்மத சாஸ்திரங்கள் உபதேசிப்பதினால் அவை புத்திக்கு மயக்கத்தை உண்டுபண்ணுகின்றன. சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸங்கள், புராணங்கள் இவைகள்தான் (அப்யுதய= நிச்ரேயஸ) அதாவது இஹ, பர, லோக விஷய சுகங்கள், சாசுவதமான பேறு இவைகளை அடைவதற்கு உண்மையான உபாயங்களை உபதேசிக்கின்றன. ஈசுவரனின் பெயர், குணங்கள் முதலியவை வேத சாஸ்திரங்களால்தான் அறியக்கூடியவை. பெயர் என்றால் ஆறு அங்கங்கள், பத்து குணங்கள் ஏற்படுகின்றன.

இவ்விதம் வாயு புராணம்:— எல்லாவற்றையும் அறியுந்தன்மை, என்றும் திருப்தியாயிருத்தல், அநாதியான ஞானம், ஸ்வதந்தரம், குறைவில்லா சக்தி, அநந்த சக்தி இவை ஆறும் ஈசுவர அங்கங்கள் என்று அறிஞர்கள் சொல்லுகின்றார்கள். ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், தபஸ், ஸத்தியம், க்ஷமை, தைர்யம், ஜகத்தை சிருஷ்டிக்கும் சக்தி, ஆத்ம ஸ்வரூபஞானம், எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமாகவிருத்தல் என்ற 10 குணங்கள் எப்பொழுதும் அழிவில்லாமல் ஈசுவரனிடம் இருக்கின்றன. இத்தன்மையான குணங்களை உடையவரானால் துக்கம் நிறைந்த இந்த லோகத்தை ஈசுவரன் சிருஷ்டித்திருக்கமாட்டார் என்ற ஆக்ஷேபணைக்கு சமாதானம்:— பரம சிரேயஸ்கரமான கைவல்லியத்தைப் பிராணிகள் அடையும் பொருட்டு சுகதுக்கங்களை ஏற்படுத்தி, அவைகளின் அநுபவங்களினால் பிராணிகளின் மநஸ் சுத்தியாகி, ஞானம் உண்டாகி, பிரகிருதி புருஷ விவேகம் ஏற்படுகிறது. அதனால் கைவல்லியம் ஸித்திக்கிறது. இது ஈசுவரனின் பரமகாருண்ணியத்தைக் காட்டுகிறது.

முக்தி இருவிதம்:—(1) சத்யோமுக்தி (2) கிரமமுக்தி. இந்த ஜந்மத்திலேயே உடனே முக்திபெறுதல் ஒருவிதம். மேல் மேல் படியேறி மேல் மேல் லோகங்களிற் சென்று கடையில் பிரஹ்மலோகம் (7-வது லோகம்) போய் பிரஹ்மாவுடன் தங்கியிருந்து மஹா பிரளயாந்தத்தில் பிரஹ்மாவுடன் சேர்ந்து முக்தி பெறுதல் தான் கிரமமுக்தி எனக் கூறப்படுவது. ஈசுவரனால் உபதேசிக்கப்பட்ட ஞாநதர்மங்களினால் அநேகர் இம்முக்தியை அடைகிறார்கள். மற்றவர்களோ பிரகிருதியில் லயமடைகிறார்கள், மரணத்தக்குச் சமாநமான துக்கத்தை யடைகிறார்கள். அவரவர்கள் விகாசமுறையில் இருக்கின்றபடிகளான நிலைமையுடன் லயம் அடைகின்றார்கள். பின்பு வேறு ஒரு பிரஹ்மாண்டம் சிருஷ்டி ஏற்படுங்காலத்தில், அந்தந்த நிலையில் வெளிக்கிளம்புகின்றார்கள். ஆனால் இவர்கள் பிரகிருதிலயர்கள் அல்லர், பிரகிருதிலயர்கள் உபாஸனைக்கிரமத்தில் முக்தியடைகின்றவர்கள். பிரஹ்மாவின் ஒரு பகலில் 14 கல்பம், 14 மநு, 14 இந்திரன். இவ்வாறு அதிகாரிகள் பதினான்கு பதினான்காக நிகழும். பிரஹ்மாவின் இராத்திரி நிதப்பிரளயம், ஓர் ஓர் கல்பத்தில்

பூ: புவ: ஸுவ: என்ற மூன்று லோகங்களுக்கு மாத்திரம் லயம். 4 யுகங்களும் 72 தரம் சுற்றிவந்தால் ஒரு கல்பம். இப்போது பிரஹ்மாவுக்கு 51-வது வயது நடப்பு. வைவஸ்வத மங்வந்தரத்தில் 27 தடவை சதுர்யுகங்களும் சுற்றிவந்துவிட்டன. பிரஹ்மாவின் 100-வது வயசு முற்றுப்பெறுகிற காலமே மஹாப்பிரளயகாலமாம். சத்திய லோகத்தில் பூதங்கள் எல்லாம் லயமடைகின்றன. யோகிகளின் குருபரம்பரை ஈசுவரன், ஹிரண்ணிய கர்ப்பராவர்.

26 பூர்வேஷாமபி குரு:
காலேநாநவச்சேதாத்॥

காலவரம்பைக் கடந்தவராகையால் அவர், பூர்விக ஞாதாசாரியர்களின் குருவாவர்.*

27. தஸ்ய வாசக: ப்ரணவ:॥

அவருடைய பெயர் பிரணவம்.

குறிப்பு:—பிரணவம் என்பதின் பொருள் 'என்றும் புதிதாயுள்ளது. என்பதாம்.' மற்றைய சப்த ராசிகள் மாறும். பிரணவம் ஒன்றே என்றும் மாறாதது, நித்தியமானது. 'ஓம்' என்ற பதத்திற்குப்பொருள் ஈசுவரன் என்பதே பதம், அர்த்தம் (பொருள்) இவைகளின் ஸம்பந்தம் ஸங்கேதமாக ஏற்பட்டதா, அல்லது தீபம், பிரகாசம் இவைகளின் சம்பந்தம் போன்று என்றும் உடன் நிகழ்வதா? அவருக்கும் (அர்த்தத்திற்கும்) பிரணவத்திற்கும் பதத்திற்கும் உள்ள சம்பந்தம் ஸ்வபாவமாய் என்றும் உள்ளது. மேலும், சங்கேதமென்றால் மனிதர்களுடையதன்று. ஈசுவரனால் சிருஷ்டிகாலத்திலேயே, இன்ன பதத்திற்கு இன்ன பொருளென்று சங்கற்பிக்கப்பட்டது. பதத்திற்கும் அர்த்தத்திற்கும் உள்ள சம்பந்தத்தை சங்கேதம் வெளிப்படுத்துகின்றது. பிதா, புத்திரன் என்பவர்களுக்குள் நிகழும் சம்பந்தம் என்றும்உள்ளது. அதை வார்த்தை பிரகாசப்படுத்துகிறது. ஓர் ஓர் கல்பத்தின் முடிவில், பிராணிகள் வாசனைகளுடன்

* மற்ற குருக்கள் காலவரம்புக்குட்பட்டவர்கள். அவர் ஆதி குரு சுவேதாஸ்வதரோபநிஷத்தின் யோப்ரஹ்மாணம் என்ற மந்திரம் இங்கு கவனிக்கத்தக்கது.

லயமடைந்து, பின்பு வேறு கல்ப ஆரம்பத்தில் எல்லா வாசனைகளு டன் வெளிவருமாறுபோல, சப்த ராசிகள் அவைகளின் சக்தியுடன் (இன்ன அர்த்தத்திற்கு இன்ன சப்தம் என்ற சம்பந்தம்) பிரளய காலத்தில் பிரகிருதியில் லயம் அடைகின்றன. பின்பு சிருஷ்டி காலத்தில் வெளிப்படுகின்றன. சப்தத்திற்கும் அர்த்தத்திற்கு முள்ள சம்பந்தம் பரிணும நித்தியம், கூடஸ்த நித்தியமன்று. புருஷன் ஒருவனே கூடஸ்த நித்தியன் சப்தராசிகள் எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. பூமியினின்று உண்டாகின்ற ஜீவ ராசிகள் (உத்பீஜம்) மற்றகாலங்களில் பூமியோடு பூமியாக லயமாகி, வருஷகாலத்தில் வெளியாகின்றன. அவைபோல சிருஷ்டிகாலத் தில், முன் லயம் அடைந்த வஸ்துக்கள், ஜீவராசிகள், சப்தராசிகள் பின் வெளிப்படுகின்றன.*

28. தஜ்ஜபஸ்தத³ர்த²பா⁴வநம்॥

அப்பிரணவத்தை ஜபித்தலும் அதன் பொருளாகிய ஈசுவரனைத் தியா நித்தலும் வேண்டும்.

குறிப்பு:—அப்படிச் செய்வதினுல் யோகியின் மநம் ஆவரண விக்ஷேபசக்தி குறைந்தவர ஐகாக்ரியம் பெறுகிறது அந்த ஐகாக் ரியத்திஞல் ஸமாதியும் அதன் பலஞன ஈசுவரப் பிரகாசமும் உண் டாகும்.

29. தத꞉ ப்ரத்யக்சேதநாதி⁴க³மோ(அ)ப்யந்தராயாபா⁴வஶ்ச॥

அதனுல் (பிரணவ தியாநத்தினுல்) புருஷனுடைய உண்மையான ஸ்வ ரூபஞாநமும் விக்நங்கள் நீங்குதலும் உண்டாகும்.

குறிப்பு:—ஈசுவரப் பிரஸாதத்திஞல் வியாதி முதலானவைகள் இவனை அணுகா. இவனைவிட்டு அகன்றுவிடும். தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தைப் பார்ப்பான். ஈசுவரன் சுத்தஞயும், பிரஸந்நராயும் (கிலேசங்கள் இல்லாதவராயும்), கேவலஞயும் (புண் ணிய பாப சம்பந்தமில்லாதவஞயும்), ஜந்ம, ஆயுஸ், போகங்களில்

* கடோபநிஷத்தின் பிரணவத்தைப்பற்றிய மந்திரங்கள் இங்கு கவ நிக்கத்தக்கன.

லானும் எப்படி இருக்கிறானோ, அப்படியே புத்திக்குப் பிரகாசத்தை உண்டுபண்ணுகிற புருஷனும் இருக்கிறான். விருத்த தர்மங்கள் உள்ள இரண்டு வஸ்துக்களில் ஒன்றை அறிந்தால் மற்றதை அறிய முடியாது. ஒரே மாதிரியான தர்மங்களையுடையவைகளாக இருப்பின் ஒன்றை அறிந்தால் மற்றதை அறிதல் கூடும். அதனால், ஈசுவரனுக்கும் புருஷனுக்கும் (யோகியின் புத்திக்கு சாக்ஷியான புருஷனுக்கும்) மேற்கண்டபடி குணஸாம்யமிருப்பதால் ஈசுவரஸ்வரூபத்தை அறிவதால், புருஷ ஸ்வரூபத்தை அறிவதாகும். பிரத்தியக்சேதநன் என்றால் அவித்தியாவான், அதாவது உள்ளபடி அறியாமல் விபரீதமாக அறிகிறவன் என்பதாம். இதன் தேர்ந்த கருத்து, இந்தப் பிரணவ உபாஸனையால், சித்தம் அந்தர்முகப்படுதலும், தடைகள் நீங்குதலும் உண்டாகும்.

30. 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑌸𑌂𑌶𑌯𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌲𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌰𑌤𑌿𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿
𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌲𑌬𑍍𑌧𑌭𑍂𑌮𑌿𑌕𑌤𑍍𑌵𑌾𑌨𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌨𑌿 𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑌿
𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌾𑌃॥

தடைகளாவன:—(1) வியாதி, (2) மநநோய்மை, (3) ஸம்சயம், (4) பிரமாதம், (5) ஆலஸ்யம், (6) அவிரதி (துறத்தல்இன்மை), (7) பிராந்தி தர்சநம், (8) யோகபூமியை அடையாமை,(9) சமாதிநிலையினின்று நழுவுதல். மநத்திற்கு விக்ஷேபத்தை யுண்டுபண்ணும் தடைகளான, இவை ஒன்பது, இவைகளால்தான் மநோவிர்த்திகள் உண்டாகின்றன.

குறிப்பு:—வியாதி வாத, பித்த,சிலேஷ்மதாதுக்களும், ஆகாரங்களின் ரசமும், மநஸ் முதலிய விந்திரியங்களும் நேர்மையில்லாமலிருத்தலால் உண்டாகும்.

மநநோய்மை=ஒரு காரியத்தைச் செய்வதற்குத் தகுதியில்லாமை, அதாவது, பூர்வ அநுபவமின்மையாலும், பூர்வ ஸம்ஸ்காரமின்மையாலும் ஒரு காரியத்தைச் செய்வதற்குத் தகைமையின்றிருத்தல்.

ஸம்சயம்=இதுவோ அதுவோவென்று சந்தேகங் கொள்ளுதல்.

பிரமாதம்=ஸமாதி ஸாதநங்களில் பிரவிர்த்தியில்லாமை.

ஆலஸ்யம்=தமஸினால், சரீரம், மநம், இரண்டும் பிரவிர்த்திக்காமல் இருத்தல்.

அவிரதி= விஷய சுகங்களின் மேல் ஆசை, விஷயங்களில் ஒழிவில்லாமை.

பிராந்திதர்சநம்=பிரமையினால் ஒன்றை வேறொன்றாகவறிதல்

யோகபூமியையடையாமை=யோகாப்பியாஸம் செய்துகொண்டுவருகையில் உயர்ந்த ஸமாதி நிலையைப் பெறாமல் கீழான பூமிகளின்கண் உண்டாம் சித்திகளின் மேல் ஆசைகொண்டு, அவைகளில் திருப்தியாகவிருத்தல்.

ஸமாதிநிலையினின்று நழுவுதல் = ஸமாதி நிலைபெற்ற பிறகு அதைக் காப்பாற்றிக்கொள்வதில் முயற்சியில்லாமை.

31. 𑌦𑍁𑌃𑌖𑌦𑍌𑌰𑍍𑌮𑌨𑌸𑍍𑌯𑌾𑌂𑌗𑌮𑍇𑌜𑌯𑌤𑍍𑌵𑌶𑍍𑌵𑌾𑌸𑌪𑍍𑌰𑌶𑍍𑌵𑌾𑌸𑌾 𑌵𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌸𑌹𑌭𑍁𑌵𑌃॥

துக்கம், தௌர்மநஸ்யம், சரீர நடுக்கம், உச்வாஸம், நிச்வாஸம் இவை விக்ஷேபத்துடன் நிகழ்பவை.

துக்கம் என்பது ஆத்தியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் இவைகளால் உண்டாகும். துக்கம் பிரதிகூலமான அநுபவம்.

தௌர்மநஸ்யம்=செய்த முயற்சி பலிக்காமல் அதனால் உண்டாம் மநச்சஞ்சலமாம்.

சரீரநடுக்கம்=அங்கங்களின் அசைவு. இது யோகாப்பியாஸத்திற்கு விரோதி.

உச்வாஸ நிச்வாஸம்=நம்முடைய ஸ்வாதீநமின்றி காற்று உள்ளே போதலும் வெளியே வருதலும்.

ரேசகம், பூரகம் என்றவை இத்தனை மாத்திரை என்ற அளவுக்குட்பட்டு சுவாஸம் நடைபெறும்படி செய்தல்.

32. தத்ப்ரதிஷேதார்த்தமேகதத்வாப்யாஸ:॥

இவைகளை நிவிர்த்தித்து ஒன்றான தத்துவத்தை மாத்திரம் அப்பியஸித்தல் வேண்டும்.

குறிப்பு:—(1) *நிவிர்த்தித்து என்றால், முன் சொல்லியிருக்கிறபடி, வைராக்கியத்தால் நிவிர்த்தி ஏற்படுத்தலாம். ஒன்றான தத்துவம் என்பதற்கு ஈசுவரன் என்பது அர்த்தமாம்.* விஞ்ஞாந பிக்ஷுவின் *அபிப்பிராயப்படி யாதேனும் ஒரு தத்துவத்தைப் பற்றிச் சிந்தனை கொள்ளுதல் இதில் பயன்படும் என்கிறார். ஆனால் முன்னுள்ள சூத்திரங்களை நோக்க, ஈசுவரன் என்று கொள்ளுதலே உசிதமாகும். மேலும் மநம் ஒருமுகப்படவேண்டுமென்றால் உயர்வற உயர்நலமமைந்த அந்த பரம புருஷனைத் தியானித்தலே வேண்டும்.*

(2) க்ஷணிக விஞ்ஞாந வாதிகளின் மத கண்டநம்:—
(a) *அவர்கள் மதப்படி, மநோவிர்த்திகளைத் தவிர, மநம் என்று பிரத்தியேகமாக வேறொன்றுமில்லை. ஒவ்வொரு விர்த்தியும் க்ஷணிகம் அதனால் ஒவ்வொரு விர்த்தியும் நிகழ்தல் ஏகாக்கிரமாகும். அதனால் விக்ஷிப்தமே இல்லை என முடியும். அதனால் யோகாப்பியாஸமுயற்சி வேண்டுவதில்லை யெனவேற்படும். அது சரியன்று, மநம் வேறு, க்ஷணிகமன்று, நிலையுள்ளது. ஒரு பதார்த்தத்தைப் பல பதார்த்தங்களினின்று வேறுபடுத்தி அந்த வேறுபடுத்தப்பட்ட பதார்த்தத்தில் மநத்தை நிற்கும்படி செய்தல் கூடும். அதனால் ஏகாக்கிரம் ஏற்படும், அதனால் விக்ஷேபநிவிர்த்திக்காகச் செய்யவேண்டிய முயற்சி பிரயோஜநமுள்ளதுதான்.*

(b) க்ஷணிகவிஞ்ஞாந வாதிகளின் வேறு அபிப்பிராயம்:— *விர்த்திகள் பல உள. அவைகளின் பிரவாகத்தில், ஓரே விர்த்தியாகவே மநம் மாறி நிற்றல் கூடுமன்றோ? அது சரியன்று. அவர்களின் ஸித்தாந்தப்படி, விர்த்தியும் மநமும் க்ஷணிகமென்பதனால், இரண்டிலும் பிரவாகம் ஏற்படுதல் கூடாது. அதனால் ஏகாக்கிரம் உண்டாவதற்கு அவகாசமில்லை.* நான் *என்ற ஆலய விஞ்ஞாநம் (சாமாந்திய அகங்காரம் என்பார் வேதாந்திகள்) என்ற ஸ்திரமான நிலைமை*

இருக்கின்றது என்றாலோ, அந்த "நான்" என்பதற்கு விக்ஷிப்தமின்மையாலும், விக்ஷிப்தம் மனத்தையே பொறுத்ததாகவிருக்கின்றமையாலும் யோகமுயற்சி பிரயோஜனம் இன்றே என்பது ஏற்படும்.

(c) க்ஷணிக விஞ்ஞானவாதிகள், அதாவது வைநாசிகர்களின் சித்தாந்தத்தில், தர்மம் ஒன்றே உளது. அது ஆசிரயிக்கும் தர்மி என்பது இலது என்பதாம். அதனால் அந்தக்கரணம் இல்லை என்பார். விர்த்திகளின் பிரவாகம் இருக்கின்றது என்றால், அது சரியன்று. பிரவாகம் என்றால் ஸஜாதீயப் பிரத்தியயம் (ஒரே மாதிரியான விர்த்திகள்) தொடர்ந்து நிகழவேண்டும். அப்படியில்லாமல் விஜாதீயப் பிரத்தியயம் (விருத்தமான பிரத்தியயங்கள்) நடைபெற்றால் பிரவாகம் எங்ஙனம் உண்டாகும்? விர்த்திகள் தனித்தனியாக உண்டாகி அழிகின்றமையால், ஒரு விர்த்தியின் பலனை மற்றொரு விர்த்தி அநுபவிப்பதும் அறிதலும் எங்ஙனம்?

(d) மநம் ஒவ்வொரு க்ஷணத்திற்கும் வேறு வேறு என்றால் நான் என்ற அநுபவம் நிகழமாட்டாது. விர்த்திபேதங்கள் இருப்பினும், நான் என்ற தொடர்புளது. விர்த்திகள் விஷயங்கள் வெவ்வேறாயினும், நான் என்ற ஞாநம் அபிந்நமாக அநுபவத்திலிருக்கின்றது. சித்தம் ஒவ்வொரு விஷயத்திற்கும் வேறு வேறாயின், இந்த நான் என்ற அநுபவம் எப்படி உண்டாகும்? அது பிரமை (மருள்) என்று சொல்வது சரியன்று. அபேதமான 'அஹம்' என்ற ஞாநம் பிரத்தியக்ஷமான அநுபவம். இதற்கு விரோதமான வைநாசிகர்களின் மதம் சரியன்று.

33. 𑌮𑍈𑌤𑍍𑌰𑍀𑌕𑌰𑍁𑌣𑌾𑌮𑍁𑌦𑌿𑌤𑍋𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌣𑌾𑌂 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖
𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾𑌣𑌾𑌂𑌭𑌾𑌵𑌨𑌾𑌤𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌨𑌮𑍍॥

சுகமாயிருப்பவர்கள், துக்கிக்கிறவர்கள், புண்யம் செய்பவர்கள், பாபிகள். இவர்களிடம் முறையே ஸ்நேஹம், கருணை, சந்தோஷம், உபேக்ஷை இப்பாவனைகளை அப்பியாசம் செய்வதால் மநம் பிரஸாதம் பெறுகிறது.

குறிப்பு:—ராகத் துவேஷாதிகள், அகங்காரம், அசூயை, ஈரிஷை, கோபம் முதலிய துர்க்குணங்கள் நீங்கி மநம் நிர்மலமாகவேண்டியதற்கு உபாயம் சொல்லுகின்றார். சுகமாயிருப்பவரைப் பார்த்தால் ஈரிஷை உண்டாகும் அதனால் மநத்திற்குக் கல்மஷம் உண்டாகும். அப்படி உண்டாகாமல் இருத்தற் பொருட்டு அவர்பால் ஸ்நேஹபாவத்தையும், துக்கத்திற்குள்ளானவர்களிடம் தயை, காருண்ணியத்தையும்* புண்ணியம் செய்பவர்களிடம் சந்தோஷத்தையும், பாபம் செய்பவரிடத்தில், அவரையும் அவர் செய்யும் பாபத் தொழிலையும்பற்றிக் கவநியாதிருத்தலையும், நம் மநத்தில் உண்டு பண்ணிக்கொளல் வேண்டும்†. அப்படிச் செய்வதினால் மநத்தின் சாஞ்சல்லியம் நீங்கும். பரிசுத்தமாகவும், ரஜஸ், தமோகுணங்கள் நீங்கப்பெற்று, மநம் சுத்த ஸாத்விக குணமுடையதாகும் அதனால் சித்தம் ஐகாக்ரியம் அடையும், மநம் ஒருநிலைப்பெறும்.

இந்த சூத்திரம் தியாநகாலங்களில் தவிர, மற்ற காலங்களில், அதாவது உலகத்தில் நடைபெறுங் காலத்தில், யோகி ஒழுகவேண்டிய முறையை உபதேசிக்கின்றது.

34. ப்ரச்சர்த்தநவிதாரணாப்யாம் வா ப்ராணஸ்ய॥

பிராணனைப் பிரயத்நத்தால் (யோக முறைப்படி) வெளியே விடுதலும், உள்ளே நிறுத்தலும், என்ற பயிற்சியாலாவது (மநத்தை ஒருநிலைப் படுத்தல் வேண்டும்.)

குறிப்பு:—முந்திய சூத்திரத்திற் சொல்லியிருக்கிறபடி "மைத்ரீகருணை" முதலிய தன்மைகள் ஏற்படாவிடில், மநத்தை ஒரு நிலையில் இருக்கும்படி செய்தலுக்குச் சாதநங்களைச் சொல்லுகிறார், இந்த சூத்திரத்தில் ஒரு உபாயம் சொல்லுகிறார். அதுதான் பிராணாயாமம். வா என்பது இனிவரும் மற்ற சாதநங்களை உத்தேசித்தது.

பிராணாயாமம் செய்தலினால் மநத்தின்கண் உண்டாம் விர்த்திகள் ஒடுங்கும்.

---

* அதனால் பிறர்க்கு அபகாரம் செய்தலை நிவிர்த்தித்து, உபகாரம் செய்தலே நலம் என்ற எண்ணம் உண்டாகும்.

† அப்படிச் செய்வதினால், உண்டாகும் கோபம் விலகும்.

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே—திருமந்திரம்.

வெளியே விடுதல் (ரேசகம் செய்தல்) உள்ளே நிறுத்தல் (கும்பகம் செய்தல்) என்ற முறை இந்த சூத்திரத்தில் சொல்லியிருக்கின்றது. அதாவது பூரகம் செய்யாமல் கும்பகம் செய்தலாம். இம்முறையில் வெளியேறின வாயுவை வெளியிலேயே இருக்கும்படி செய்தல் கும்பகமாம். இவ்விதம் செய்வதால், சரீரம் லகுத்துவத்தை அடைகிறது. அதன்மேல் மநம் ஸ்திரப்படுகிறது.

பூரகம், கும்பகம், பின்பு ரேசகம் என்ற முறை மற்றொன்று. அது இந்த விடத்திற் சொல்லவில்லை. கீதை 6-ம் அத்தியாயம் பார்க்க.

35. விஷயவதீ வா ப்ரவ்ருத்திருத்பந்நா மநஸ: ஸ்திதிநிபந்தநீ॥

அல்லது விஷயங்களை ஆசிரயித்த பிரவிர்த்தியானது மநத்தை அசையாமல் கட்டுப்படுத்தும்.

குறிப்பு:—விசேஷமான இந்திரிய சக்திகளை உண்டுபண்ணக்கூடிய மூக்கு நுனிமுதலிய ஸ்தானங்களில் சித்த ஐகாக்ரிய முறைகளை நாடுதல், யோகமுறையில் நன்னம்பிக்கையை யுண்டுபண்ணும். அப்படிச் செய்வதால், தூரதிருஷ்டி, தூரக்கேள்வி, வாசனைப் பொருளின்றி நல்ல வாசனைகளின் அநுபவம் இவைபோன்ற சித்திகள் உண்டாகிறதினால், யோகாப்பியாசத்தில் உண்மையான நம்பிக்கை ஏற்படும். அதனால், தீவிரமான யோகமுயற்சி உண்டாகும்.

நாஸிகாக்கிரத்தில் மநத்தை நிறுத்தினால் திவ்விய (சூக்ஷ்மமான) கந்தங்களின் அநுபவமும், நாக்கின்நுனியில் மநத்தைநிறுத்தித் தியாநம் பண்ணினால் தாரணை, தியாநம், சமாதிமுறைகளை அப்பியஸித்தால் (இதுவே ஸம்யமம் என்றும் பெயர்பெறும்), திவ்விய ரசங்களின் அநுபவமும், தாலுவில் தியாநம்செய்தால் திவ்விய ரூபங்களின் அநுபவமும், நாவின் மத்தியில் தியாநம் செய்தால் திவ்விய ஸ்பரிசங்களின் அநுபவமும், நாவின் அடிமூலத்தில் தியாநம் செய்

னால் திவ்விய சப்தங்களின் அநுபவமும் உண்டாகும். இவ்விதமான அநுபவம் ஏற்பட்டால் ஸம்சயம் நீங்கி ஸ்தைர்யம் உண்டாகி சமாதிப்பிரஞ்ஞைக்கு த்வாரம் (வழி) உண்டாகும். முன் சொன்ன தியாந மானது சந்திரன், சூரியன், கிரகங்கள், ரத்நங்கள், தீபம், மணி, முதலியவைகள் மேலும் நிகழலாம். அதனால் மேற்கண்டபடி சமாதி பிரஞ்ஞைக்கு வழி ஏற்படும்.

சாஸ்திரத்தினாலும், அநுமாநத்தினாலும், குருஉபதேசத்தாலும் தெரிந்த விஷயம் அவன் அவன் ஸ்வந்த அநுபவமில்லாவிடில் பரோக்ஷமாகவேயிருக்கும். அதனால் மோக்ஷம் முதலிய சூக்ஷ்ம விஷயங்களில், உண்மையான ஸ்திரமான நம்பிக்கை உண்டாகிற தில்லை. யாதேனும் ஒரு சூக்ஷ்மமான விஷயத்தில் பிரத்தியக்ஷமான அநுபவம் ஏற்படுமாகில் சாஸ்திரம், அநுமாநம், குருஉபதேசம் இவைகளால் தெரிந்துகொண்ட ஞாநம் ஸ்திரப்படுகிறது. அதனால் மோக்ஷம் வரையுள்ள மற்ற சூக்ஷ்மமான விஷயங்கள் உண்மையென நம்பிக்கை உண்டாகிறது. இதனால் தான் மநத்திற்கு ஸம்ஸ்கார அப்பியாஸ முறைகள் சொல்லப்படுகின்றன. விர்த்திகள் நாநாவிதமாக மாறிக்கொண்டிருக்கின்றமையால் விர்த்திகள் ஒடுங்கும் பொருட்டு அநேக அப்பியாஸங்கள் இப்போது சொல்லப்படுகின்றன. அந்த அப்பியாஸம் பிரயோஜநப்படவேண்டுமானால், அதாவது மநத்தின் ஸ்திரமான நிலை உண்டாகவேண்டுமானால், அப்பியஸிக்கப்படும் முறையைத்தவிர மற்ற விஷயங்களில் வைராக்கியம் வேண்டும். அந்த வைராக்கியத்தை வசீகாரம் எனச் சொல்லுகிறது.

36. விஶோகா வா ஜ்யோதிஷ்மதீ

அல்லது, துக்கமில்லாமல், ஜோதிஸை (மநத்தின் ஸ்த்வ பாவத்தை) ஆசிரயித்த பிரவிர்த்தி (மநத்தை அசையாமல் கட்டுப்படுத்தும்.)

குறிப்பு:—ஹிருதய புண்டரீகத்தில் மநத்தை நிறுத்தி, தாரணை தியாநம், ஸமாதி கொள்ளுகிறவனுக்கு புத்தி நிர்மலமாகவும் ஆகாசம் போல் எல்லாவற்றிலும் வியாபிக்கும் இயல்பினதாகவும் ஆகிறது.

ஹிருதய புண்டரீகத்தில் ஒரு சக்ரம் உள்ளது. அது 8 தளமுள்ளது. அது அதோமுகமானதாக இருக்கிறது. பிராணாயாமத்தினால் ஊர்த்துவமுகமாகத் திருப்பி, அதில் மநத்தை நிறுத்தவேண்டும். அதன் மத்தியில் சூரியமண்டலம் ஜாக்கிரதாவஸ்தையின் இருப்பிடமும் அகாரம் என்ற அக்ஷரமும், அதன் மேல் சந்திரமண்டலம் ஸ்வப்நாவஸ்தையின் இருப்பிடமும் உகாரம் என்ற அக்ஷரமும், அதற்கும் மேல் அக்நிமண்டலம் சுஷுப்தி அவஸ்தையின் இருப்பிடமும் மகாரம் என்ற அக்ஷரமும், அதற்கும் மேல், பரவியோம ஸ்வரூபம் தூரீய அவஸ்தை பிரஹ்ம நாதம் என்று சொல்லப்படும் அர்த்த மாத்திரையும் இருக்கின்றன. அந்தத் தாமரையின் கர்ணிகையில் ஊர்த்துவமுகமான பிரஹ்ம நாடி இருக்கின்றது. அது சூரியாதி மண்டலங்களின் மத்தியில் பிரவேசிக்கிறது. அதற்கு மேல் போய்க்கொண்டிருக்கிறது ஸுஷும்நா நாடி. அது வெளியிலுள்ள சூரியமண்டலங்களைத் தாண்டிப்போகின்றது. அது தான் மநத்தின் ஸரியான ஸ்தாநம். அதில் தாரணை, தியாநம் செய்தால், சித்தஸம்வித் உண்டாகிறது. வஸ்துக்களின் உண்மையான நிலை(Thought Forms)யின் சாக்ஷாத்காரம் பெறுகிறான். அந்த ஸ்தாநத்தில் மநம் நிற்பதினால் சூரியன், சந்திரன், கிரகங்கள், ரத்நங்கள் இவைகளின் தேஜோரூபங்களாக நாநாவிதமாகத் தோன்றுகிறது. அதாவது அந்த மநம் அந்த ரூபங்களாக ஆகிறது. ஸுஷும்நா நாடியை ஆசிரயித்திருக்கின்றமையால், இந்த மநஸ் ரஜஸ், தமஸ் இரண்டும் குறைந்தும் சத்வம் மேலிட்டும் இருக்கின்றது. அதனால் அந்த நிலை ஜோதிஷ்மதீ (ஜோதிஸை உடையது) என்று சூத்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

முன்னே சொல்லியபடி விஷயங்களில் சம்பந்தம் பெற்றது போல, அஸ்மிதையில் (நான் இருக்கிறேன் என்ற பாவம்) ஏகாக்கிரதை பெற்ற மநஸ் ஆனது அலையற்ற சமுத்திரம் போலவும், சாந்தமாயும், (ரஜஸ், தமஸ் அற்றதாயும்) எங்கும் வியாபகமுள்ளதாயும், நான் என்ற சுத்தப் பிரஞ்ஞைமாத்திரம் உள்ளதாயுமிருக்கின்றது. இவ்விதமாகவே சாங்கிய சூத்திர வியாக்கியாதாவான பஞ்சசிகாசாரியாரும் சொல்லுகின்றார்.

விஷயங்களை ஆசிரயித்து நிகழும் பிரவிர்த்தியும், அஸ்மி தையை ஆசிரயித்த மநப் பிரவிர்த்தியும் ஜோதிஷ்மதீ எனப் பெயர் பெறும். இதனால் யோகியின் மநம் ஸ்திரமான நிலையை யடைகின்றது.

37. வீதராகவிஷயம் வா சித்தம்॥

அல்லது ஆசைவிட்ட மஹா புருஷர்களை மநம் விஷயீகரித்தலினால் (அது ஸ்தைர்யம் பெறும்.)

குறிப்பு:—ஆசைவிட்டவர்களான வியாஸர் முதலிய மஹர்ஷிகளின் குணங்களைத் தியாநித்தல் வேண்டும். அவர்களின் மநோ நிலையைத் தியாநித்தலால் அந்நிலையை, அப்பியாஸம் செய்கிற யோகி பெறுகிறான்.

38. ஸ்வப்நநித்ராஜ்ஞாநாலம்பநம் வா॥

அல்லது ஸ்வப்நத்திலும் நித்திரையிலும் ஏற்படும் ஞாநத்தை ஆசிரயித்துத் தியாநிப்பதால் மநம் நிலை பெறும்.

குறிப்பு:—(1) வேறு ஒரு அர்த்தம் "அல்லது ஸ்வப்நத்திலும் நித்திரையிலும் ஞாநம் நழுவாது வைத்துக்கொளல்." என்பதாம். ஜாக்கிரதையினின்று ஸ்வப்நத்திற்குப் போகும்போதும், ஸ்வப்நத்தினின்று சுஷுப்திக்குப் போகும்போதும் நான் என்ற பிரஞ்ஞையின் தொடர்பு அற்றுப்போகிறது. அத்தொடர்பு அறாமல், பிரஞ்ஞை நிலைத்தல் வேண்டும். அற்றுப்போகும் நிலையை பாழ் என்று சொல்லுகிறது. அப் பாழைத் தாண்டுதலுக்கு முயல வேண்டும். இது தான் இந்த சூத்திரத்தின் தாத்பரியம். நினைவிற்கும் கனவிற்கும் மத்தியில் ஒரு பாழ், கனவிற்கும் ஸுஷுப்திக்கும் மத்தியில் ஒரு பாழ், சுஷுப்திக்கும் துரியத்துக்கும் மத்தியில் ஒரு பாழ், ஆக முப்பாழ்கள், அதாவது லய ஸ்தாநங்கள் உண்டு.

(2) இந்திரியங்களுக்கு விஷயங்கள் இல்லாமலும், மநஸ் ஆனது வாஸநாரூபமான விஷயங்களை அநுபவிக்கும் ஸமயம் ஸ்வப்

நமாம். நித்திரையின் லக்ஷணம் முன் 10-ம் சூத்திரத்திற் கண்டு கொள்க.

(3) ஸ்வப்நத்தில் யாதேனும் ஒரு தேவதை அல்லது மஹா புருஷர் அல்லது உயர்ந்த பாவம் தோன்றும் பக்ஷத்தில் நினைவில் அந்த தேவதை, அந்த புருஷன், அந்த உயர்ந்த பாவம் இவைகளின்மேல் மநத்தை நிறுத்தினால், மநம் ஒருமுகப்படும். யோகி ஸ்தைர்யம் பெறுவான்.

(4) ஸுஷுப்தியின் ஞாநம்:—ஸாத்விக ஸுஷுப்தியின் ஞாநம், "சுகமாய்த் தூங்கினேன்" என்ற மட்டில்தான் ஸ்மிருதி நினைவில் உண்டாகும். அந்நிலையில் (சுகம் அநுபவித்த நித்திரை சமயத்தில்) மநம் தன் நிலையிலிருக்கும். அதுவே ஏகாக்ரமான நிலை. பிரஹ்மவித்துக்கள் அந்த ஸுஷுப்தி சுகத்தையே பிரஹ்ம ஸ்வரூபம் என்கின்றார்கள். சாந்தோக்கிய உபநிஷத்தில் ஸுஷுப்தியின் விசாரணையைப்பற்றிய விஷயம் இங்கு கவனிக்கத்தக்கது.

39. 𑌯𑌥𑌾𑌭𑌿𑌮𑌤𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑍍𑌵𑌾॥

அல்லது எது உனக்கு நலமெனப்படுகிறதோ, அதின் மேல் தியானித்தலினால்.

குறிப்பு:—எது பிரியமாகவிருக்கிறதோ, அதன்மேல் மநம் நிற்பதாகும். அதனால் ஐகாக்ரியம் சித்திக்கும். தேவதையைத் தனக்குப் பிரியமான ரூபமாகத் தியானித்தலினால், மநம் ஸ்தைர்யம் பெறும்.

40. 𑌪𑌰𑌮𑌾𑌣𑍁 𑌪𑌰𑌮𑌮𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌵𑌶𑍀𑌕𑌾𑌰𑌃॥

(இவ்விதமாய்த் தியானிக்கின்ற யோகிக்கு) பரம அணு முதல் பரம மஹத் வரையில் (உள்ள எல்லாம்) ஸ்வாதீநப்படும்.

குறிப்பு:—மேற்கண்ட உபாயங்களினால், யோகியானவன் ஸ்தூலவஸ்து முதல் வர வர மஹா ஸூக்ஷ்மவஸ்து வரை தியாநம் செய்யும்படியான திறமையும் சூக்ஷ்ம வஸ்து முதல் மஹா ஸ்தூல

வஸ்து வரை தியாகம் செய்யும்படியான திறமையும் பெறுதல் கூடும். இதில் எவ்விதத் தடையும் கிடையாது. இந்நிலையைப் பெற்ற யோகியானவன், ஜகாக்ரியத்தின் பூர்ணத்திறமையைப் பெறுகிருன். இனி அவ்விஷயத்தில் பழக்கம் வேண்டுவதில்லை.

41. 𑌕𑍍𑌷𑍀𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌰𑌭𑌿𑌜𑌾𑌤𑌸𑍍𑌯𑍇𑌵 𑌮𑌣𑍇𑌰𑍍𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑍃
𑌗𑍍𑌰𑌹𑌣𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑍁 𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌤𑌦𑌞𑍍𑌜𑌨𑌤𑌾 𑌸𑌮𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌃॥

இவ்வித அப்பியாசத்தால், மநோவிர்த்திகள் க்ஷீணமாகியிருக்கின்ற யோகியின் மநஸ் அஸ்மிதையையும் இந்திரியங்கள், விஷயங்கள் இவைகளுடன் ஏகீ பாவத்தையும் அடையும். நிர்மலமான ஸ்படிக மணியைப் போன்றதாகும்.

குறிப்பு:—ஸ்படிக மணியின் ஸமீபத்தில் செம்பருத்தியின் புஷ்பத்தை வைத்தால் அதன் நிறம் அம் மணியில் தோன்றிடும். அது போல யோகியின் மநம் நிகழும். விர்த்திகள், சாத்விக, ராஜஸ், தாமஸம் என மூன்று விதங்கள். ராஜஸ, தாமஸ விர்த்திகள் மாத்திரம் க்ஷயத்தை அடைகின்றன. சாத்விக விர்த்தி இருக்கின்றது. சாத்விக விர்த்தி நிகழ்நிலைத்தான் மநம் அந்தர்முகப்படுகிறது என்று சொல்லுகிறது. மற்ற இரண்டு விர்த்திகள் (ராஜஸ, தாமஸம்) பகிர்முகமானவை. முதன்மையில் இவ்விரண்டு வித விர்த்திகள் அடங்கி, மநம் அந்தர்முகப்படும், சாத்விக விர்த்தி மாத்திரம் நிகழும். பின்பு, இவ்விர்த்தியும் ஒடுங்கும். ராஜஸ தாமஸ விர்த்திகள் நிகழும் காலத்தில் மநம் மலிநமாக விருக்கும். இவை நீங்கி ஸாத்விக விர்த்தி அதிகப்படவே, மநம் ஸ்படிகம்போல் நிர்மலமாக இருக்கும். அப்போது எந்த வஸ்துவுடன் மநம் ஸம்பந்தப்படுகிறதோ, அந்த வஸ்துவின் தன்மையாக ஆகிவிடுகிறது.* அது ஓர் நிலைமை. மநஸ் ஆனது விஷயங்களுடன் சம்பந்திக்காமல், இந்திரியங்களுடன் மாத்திரம் சம்பந்தித்து, இந்திரியங்களை விஷயமாகக்கொள்ளும் நிலைமை இரண்டாவது.† மநம் பிரமாதாவுடன் (ஆத்மாவுடன்) சம்பந்தித்தல் மூன்றும் நிலைமை. இதற்கு கிரஹீதிருஸமாபத்தி என்று பெயர்.

* இதற்கு கிராஹ்யஸமாபத்தி என்று பெயர்.

† இதற்கு கிரஹணஸமாபத்தி என்று பெயர். கிரஹணம் என்றால் இந்திரியங்களுக்குப் பெயர்.

கிரஹீதிரு என்றால் கிரஹிக்கிறவன், அதாவது ஆத்மா என்றர்த்தம் ஸமாபத்தி = தந்மயமான பரிணாமம், தன்னிடத்தில் உள்ள ஆத்மா வினிடம் தந்மயப்படுதலைத் தவிர, முக்தர்களான சுகர், பிரஹ்லாதர் முதலானவர்களிடம் மநத்தை ஒரேபிடியாய் நிறுத்தலும் இந்த ஸமா பத்தியிலடங்கும்.

42. தத்ர ஶப்தார்த்தஜ்ஞாநவிகல்பை: ஸங்கீர்ணா ஸவிதர்க்கா ஸமாபத்தி:॥

மேற்கண்ட ஸமாபத்திகளுக்குள், சப்தம், அர்த்தம், ஞாநம் இவை களுடன் கலந்து நிகழும் ஸமாபத்தியானது ஸ்விதர்க்க ஸமாபத்தி என்று பெயர் பெறும்.

குறிப்பு:—41-ம் சூத்திரத்தில் ஸமாபத்தியின் பொதுவான லக்ஷணம் சொன்னார். இந்த சூத்திரம் முதல் 44-ம் சூத்திரம் வரை யில், ஸமாபத்தியின் விசேஷ லக்ஷணங்கள் சொல்லப்படுகின்றன. உதாரணமாக இந்த ஸமாபத்தியில் "பசு" என்ற பதம், அதன் பொ ருள், அதன் ஞாநம், இவை தியாநத்தில் கலந்து நிற்றலாகும். இது திரிபுடி நிகழும் நிலை. அதாவது மநோவிர்த்தியானது மேற்கண்ட மூன்றிலும் சம்பந்தப்பட்டிருக்கும். பதத்தையும் ஞாநத்தையும் விட்டு பொருள்மாத்திரத்தில் மநம் தனித்து நின்றால், அத்துடன் ஒன்றுபட்டால், அது நிர்விதர்க்க ஸமாபத்தி என்று சொல்லப்படும். அதாவது இதில் சப்தத்தினுடைய ஸங்கேத ஞாநமும், அநுமாநத் திற்கு ஸாதநமான ஸ்மரணமும் விலகும்போது, மநம் அர்த்தத்தில் மாத்திரம் நிற்கும். இந்த நிர்விதர்க்க ஸமாபத்தியில் உண்டாகின்ற வஸ்து ஞாநமானது யோகிக்கு உண்மையான பிரத்தியக்ஷப் பிரமா ணமாகிறது, இப்பிரமாணம், சப்தம், அநுமாநம் என்ற பிரமாணங் களுக்குக் காரணமாக இருக்கின்றது.

43. ஸ்ம்ருதிபரிஶுத்தௌ ஸ்வரூபஶூந்யேவார்த்தமாத்ர நிர்பாஸா நிர்விதர்க்கா ॥

ஸ்மிருதி போயும், நான் என்ற பிரஞ்ஞை அற்று இருக்கிறது போல வும் (தியாநம் பண்ணப்படும்) வஸ்து மாத்திரமாக மநம் நிற்கும் நிலைமை யான்து, நிர்விதர்க்க ஸமாபத்தி எனச் சொல்லப்படும்.

குறிப்பு:—ஸ்மிருதி, பிரத்தியக்ஷம், சப்தம், அநுமாநம் முதலிய பிரமாணங்களால் அநுபவித்த விஷயங்களின் நினைப்பு. இந்த ஸமாபத்தியில் திரிபுடி அற்று மநம் வஸ்து ரூபமாக ஆகிறது. ஷை இரண்டு ஸமாபத்திகளும் ஸ்தூலமான வஸ்துக்களைத் தியாகித்த லாம்.

44. ஏதயைவ ஸவிசாரா நிர்விசாரா ச ஸூக்ஷ்மவிஷயா வ்யாக்யாதா ॥

முன் சொன்ன (ஸவிதர்க்க நிர்விதர்க்க ஸமாபத்திகளின் முறைப்படியே) சூக்ஷ்மமான வஸ்துக்களை விஷயீகரிக்கிற ஸவிசார, நிர்விசார ஸமாபத்திகள் சொல்லப்படுகின்றன.

குறிப்பு:—முன் ஸவிதர்க்க நிர்விதர்க்க ஸமாபத்திகளில், ஸ்தூலமான விஷயங்களின் தியாகம் திரிபுடி உள்ளதாகவும், திரிபுடி அற்றதாகவும் நிகழ்ந்தது. அவ்விதமே, சூக்ஷ்மமான வஸ்துக்களை விஷயீகரித்தலிலும், தியாகித்தலிலும், திரிபுடி உள்ளது ஸவிசார ஸமாபத்தி என்றும், திரிபுடி அற்றது நிர்விசார ஸமாபத்தி யென்றும், அறியத்தக்கது. விசாரம் என்றால் தியாகத்தில் ஒரு நிலையாம், தர்க்க விசாரம் அன்றாம். சூக்ஷ்ம வஸ்து என்றால் பரம அணு. இவைகள் அலையும் மநத்தை நிறுத்தும் முறை.

45. ஸூக்ஷ்மவிஷயத்வம் சாலிங்கபர்யவஸானம் ॥

(மேற்கண்ட) ஸூக்ஷ்மமான வஸ்துவை விஷயீகரித்தலானது மூலப்பிரகிருதிவரை நடைபெறுகிறது.

குறிப்பு:—பஞ்ச பூதங்களின்சூக்ஷ்மமான நிலை—பஞ்சதந்மாத்திரைகள். பஞ்சதந்மாத்திரைகளின் சூக்ஷ்மமான நிலை லிங்கம் அதாவது மஹத்தத்துவம். மஹத்தத்துவத்தின் சூக்ஷ்மமான நிலை அலிங்கம், அதாவது மூலப்பிரகிருதி. மூலப்பிரகிருதியைவிட சூக்ஷ்மமான வஸ்து இல்லை. மூலப்பிரகிருதியை விட சூக்ஷ்மமாகப் புருஷன் இருந்தாலும், புருஷன் பிரபஞ்சத்திற்கு உபதான காரணமாக இல்லை. மூலப்பிரகிருதி பிரபஞ்சத்திற்கு உபதான காரணமாக இருக்கின்றமையால், அதுவே முடிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

46. தா ஏவ ஸபீஜ: ஸமாதி: ॥

(மேற்கண்ட நாலு ஸமாபத்திகளும்) பீஜத்துடன் கூடிய ஸமாதி களே.

குறிப்பு:—"பீஜத்துடன் கூடிய" என்றால் "வெளியிலுள்ள வஸ்துவை ஆலம்பநமாக ஆசிரயித்த" என்பதாம்.

47. நிர்விசாரவைசாரத்யே(அ)த்யாத்மப்ரஸாத: ॥

நிர்விசார ஸமாதியில் சாமர்த்தியமுள்ளவனுகில் மநத்தில் தெளிவான ஞாநம் உண்டாகிறது.

குறிப்பு:—ரஜஸ், தமஸ் இவைகள் விஷயங்களை மறைத்தலாகிய ஆவரணத்தை யுண்டுபண்ணுகின்றன. இவைகள் யோகாப்பியாஸத்தினுல் போகவே, மநம் ஸத்துவமாகப் பிரகாசிக்கின்றது. வைசாரத்யே=பாண்டித்தியம் உண்டாகும்போது. சாதாரணமாய் ஏனையருக்கு ஞாநம் ஒன்றின்பின் ஒன்ருய்க் கிரமமாக உண்டாகிறது, இந்நிலையை அடைந்தவனுக்கு அப்படியின்றி ஏக காலத்தில் எல்லா விஷயங்களின் ஞாநம் உண்டாகிறது. இந்நிலையில் உள்ளவன், பிறர் யாராலும் பரிதபிக்கக்கூடாதவனுக அத்தன்மையான உயர்ந்த ஸ்தாநத்தை அடைந்து பர்வதத்தின் மேலுச்சியிலுள்ளவன் போல, ஜநங்களைக் கருணையுடன் பார்க்கிருன். இவ்விதம் மஹா பாரதத்தில் சாந்தி பர்வத்தில் சொல்லப்பட்டுள்ளது.

48. ருதம்பரா தத்ர ப்ரஜ்ஞா ॥

அந்நிலையிலுள்ள பிரஞ்ஞை 'ரிதம்பரா' என்று பெயர் பெறும்.

குறிப்பு:—அந்நிலையில் உள்ள பிரஞ்ஞையானது, ஸம்சய விபரியயங்களின்றி வஸ்துக்களின் உண்மையான ஸ்வரூபத்தையே அறிவிக்கிறது. ரிதம்பரா = உண்மை தரித்தல்.

49. ச்ருதாநுமாநப்ரஜ்ஞாப்யாமந்யவிஷயா
விசேஷார்த்தத்வாத் ॥

(முன் சொல்லிய ரிதம்பரா என்ற பிரஞ்ஞையானது) சுருதி, அநுமாநங்களால் ஏற்படும் பிரஞ்ஞையை விட வேறனது. அது வஸ்துக்களின் விசேஷ ஸ்வரூபத்தைத் தெரிவிக்கிறது.

குறிப்பு:—சுருதி அநுமானங்களால் கிடைக்கும் ஞானம் சாமாந்நியமானது. வஸ்துக்களின் விசேஷ ஸ்வரூபத்தைக் காட்டும் தன்மையது அல்ல. ரிதம்பரா என்ற பிரஞ்ஞையானது மேற்கண்ட இரண்டு பிரமாணங்களும் பிரவேசிக்க இயலாத பிரஞ்ஞாபூமி. இதில் உள்ளபடி யதார்த்தஞானம் உண்டாகிறது. சூக்ஷ்மமான பரம அணுக்கள், மறைவுள்ள வஸ்துக்கள், தூரத்திலுள்ள வஸ்துக்கள், இந்த பிரஞ்ஞா நிலையில், பிரத்தியக்ஷமாகின்றன. இவைகள் லௌகிக பிரத்தியக்ஷம், சப்தம், அநுமானங்களான பிரமாணங்களுக்குப் புறம்பானவை.

50. தஜ்ஜ: ஸம்ஸ்காரோऽந்யஸம்ஸ்காரப்ரதிபந்தீ ॥

மேற்கண்ட (ரிதம்பரா என்ற பிரஞ்ஞாநிலையால் ஏற்படும் ஸம்ஸ்காரமானது) மற்றைய வெளி விஷயங்களால் ஏற்படும் ஸம்ஸ்காரங்கள் உண்டாகாமல் தடுக்கும் தன்மையது.

குறிப்பு:—இந்நிலையில் உள்ள யோகியானவன், வெளிவிஷயங்கள் தன் மநத்தில் தங்க இடம் கொடான். அத்தன்மையான பூர்வ வாஸனைகள் இருப்பினும், அவைகள் தன்னை மேற்கொள்ளவும் இடங்கொடான். ஸமாதியினால், பிரஞ்ஞையானது ஸ்திரப்படுகிறது. அதனால் ஸமாதிரூபமான ஸம்ஸ்காரமானது, மேன்மேலும் விருத்தியடைகிறது. சாதாரண விஷய அநுபவத்தில் மநம் அதன்கண்ணே நிற்பது போல ஸமாதி நிலை உறுதிப்பட, மநம் அந்நிலையில் இருப்பதாகும். இரண்டிற்கும் வித்தியாஸம் இல்லையென்றாலோ, வித்தியாஸம் உண்டு. ஸமாதி நிலையால் ஏற்படும் ஐகாக்ரியமானது மநத்தின் விஷய வாஸனைகளைப்போக்கி அதைத் தூய்மைப்படுத்தும் இயல்பினது, புருஷ ஸாக்ஷாத்காரம் உண்டாகும்படி செய்கிறது. புருஷ ஸாக்ஷாத்காரம் உண்டாகவே மநம் விர்த்தியின்றி ஓய்வடைகிறது. மநோநாசம் உண்டாகிறது என்னலாம். விஷய அநுபவத்தின் ஐகாக்ரியமானது விஷய அநுபவங்களை விருத்திபண்ணுகிறது.

51. தஸ்யாபி நிரோதே ஸர்வ-
நிரோதாந்நிர்பீஜ: ஸமாதி: ॥

மேற்கண்ட (ரிதம்பரா பிரஞ்ஞையால் ஏற்படுகிற) ஸம்ஸ்காரப் பிரவாகத்திற்குத் தடை உண்டாகும்போது எல்லா ஸம்ஸ்காரங்களுக்கும் தடை உண்டாகின்றன. அந்நிலை “நிர்பீஜம்” என்ற ஸமாதியாகும்.

குறிப்பு:—இந்த நிர்பீஜ ஸமாதியானது எல்லா ஸம்ஸ்காரங்களையும் பாதிக்கின்றது. இதனால் மநத்தின் விஷய அநுபவச்செயல் அற்றுப்போகிறது. யோகியானவன் கைவல்லியத்தை அடைகிறான். அந்நிலையில் புருஷன் தன் ஸ்வரூபமாத்திரத்தில் இருப்பவனும், சுத்தனும், கேவலனும் ஆகிறான். இந்நிலையில் "முக்தன்" எனப்படுகிறான். முதன்மையில், பல விர்த்திகளால் சித்தம் அலையுள்ளதாக இருந்து, பின்னர் யோகப்பயிற்சியால் பலவிர்த்திகள் தவிர்ந்து, ஒரே விர்த்தி மாத்திரம் ஏற்பட்டது. இந்நிலையில் நான் என்ற பிரஞ்ஞை உள்ளது. பின்னர் அந்த விர்த்தியும் ஒழியவே கைவல்லிய பதவி ஸித்திக்கிறது. அடியில் வரும் திருமந்திர வசநம் இங்கு கவனிக்கத்தக்கது.

நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே

சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தா
லாற்றரி தாகிய வைந்து மடங்கிடு
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே—திருமூலர்

ஸமாதிபாதம் முற்றிற்று.

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

## 2-வது ஸாதந பாதம்.

1. தபஃ ஸ்வாத்யாயேஶ்வரப்ரணிதாநாநி க்ரியாயோகஃ॥

தபஸ், ஸ்வாத்தியாயம், ஈசுவரப்பிரணிதாநம் இவை கர்மயோகம்.

குறிப்பு:—முந்திய அத்தியாயத்தில், எவன் மநம் ஒழிவை யடைந்து, அந்தர்முகப்பட்டு சமாதியில் நோக்காயுள்ளதோ, அவனுக்குப் பயன்படும்படியாக யோகம் சொல்லப்பட்டது. எவன் மநம் அந்தர்முகப்படாமல், வெளி விஷயங்களில் பிரவிர்த்திக்கின்றதோ அவனும் யோகியாக ஆதலுக்கு அநுகூலமான ஸாதநங்கள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படுகின்றன.

தபஸ் என்றால் தாபத்தை உண்டுபண்ணுதல், அதனால் மநம், மொழி, மெய்யைப் பரிசுத்தப்படுத்தல். மநத்தில் ஏற்படும் அசுத்தியானது வெகுகாலமாய் இருந்து வருகிற கர்ம கிலேசங்களால் நாநாவிதமாயும், விஷய நுகர்ச்சியில் பிரவிர்த்திக்கும்படியாயும் செய்கிறது. அது தபஸ்வினால் பேதிக்கப்படுகிறது. அதனால் தபஸ் முக்கிய ஸாதநம். சித்தத்தின் பிரஸாதத்தைப் பாதிக்காமல் இத் தபஸ் நிகழவேண்டும். தபஸ் என்றால் காயக்கிலேசம் எனப் பொருள் பெறும். சுத்தமாக ஆகாரமின்மை யோகாப்பியாசத்திற்கு விரோதம். இதனால் மித போஜநம் வேண்டும் என்பது இங்கு கிரஹிக்கப்படுகிறது. அதனால்தான் சித்தத்தின் பிரஸாதத்தைப் பாதிக்காமல் என்ற எச்சரிக்கை ஏற்பட்டிருக்கிறது.

ஸ்வாத்தியாயம் யோகத்திற்குச் சாதகமான பிரணவ முதலிய பரிசுத்த மந்திரங்களை ஜபித்தலும், உபநிஷத் முதலிய மோக்ஷ சாஸ்திரத்தைப் படித்தலும் இதில் அடங்கும்.

ஈசுவரப் பிரணிதாநம், ப்ர = நன்றாய், நிதாநம் = வைத்தல். சகல காரியங்களையும் பரம குருவான ஈசுவரனிடத்தில் அர்ப்பணம் செய்தல்,

𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥

ஸ்ரீமத் பகவத்கீதை 12-ம் அத்.

அல்லது பலாபேக்ஷையின்றிக் கர்மங்களைச் செய்தல்,

𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇 𑌮𑌾 𑌫𑌲𑍇𑌷𑍁 𑌕𑌦𑌾𑌚𑌨 ।
𑌮𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌭𑍂𑌰𑍍𑌮𑌾 𑌤𑍇 𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ॥

ஸ்ரீமத் பகவத் கீதை 2-ம் அத். 47-ம் சு.

2. 𑌸𑌮𑌾𑌧𑌿𑌭𑌾𑌵𑌨𑌾𑌰𑍍𑌥𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑌤𑌨𑍂𑌕𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 ॥

அது (முன் சொல்லிய கிரியா யோகமானது) ஸமாதி நிலையை யடைதற்கும் கிலேசங்களைக் குறைசெய்துகொண்டு வருதலுக்கும் (பிரயோஜநமாம்).

3. 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌾𑌭𑌿𑌨𑌿𑌵𑍇𑌶𑌾𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑌾𑌃 ॥

அக்கிலேசங்களாவன:—அவித்தை, அஸ்மிதை, ராகத்துவேஷம், அபிநிவேசம் (உயிர்மேல் பற்று.)

குறிப்பு:—இவை ஐந்தும் மனிதனை ஆசிரயித்து குணங்களை ஸ்திரப்படுத்துகின்றன. மஹத், அகங்காரம், தந்மாத்திரைகள் முதலிய பரிணாமங்களை விருத்தி செய்கின்றன. காரிய காரண பரம்பரையை விருத்தி அடையும்படி பண்ணுகின்றன. ஒன்றுக்கொன்று உதவியாகவிருந்து கர்மங்களின் பரிபாகத்தை உண்டு பண்ணுகின்றன.

4. 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌤𑌨𑍁𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍
𑌨𑍋𑌦𑌾𑌰𑌾𑌣𑌾𑌮𑍍 ॥

ப்ரஸுப்த, தநு, விச்சிந்ந, உதார என்ற நான்குவித அவஸ்தைகளையுடைய மேற்கண்ட அஸ்மிதை முதலிய நான்கு கிலேசங்களுக்கும் அவித்தை என்பது இருப்பிடமாம்.

குறிப்பு:— பிரஸுப்த=வெளியாகாமல் வித்தில் மரம்போல உள்ளடங்கி யிருத்தல்.

தநு = ஒரு வாஸனையை, வேறொரு எதிரிடையான வாஸனையை அப்பியாஸம் செய்து குறைத்தல்.

விச்சிந்ந = ஒரு விர்த்தி வெளிப்படுங் காலத்தில், மற்ற விர்த்திகள் ஒடுங்குதல்.

உதார = ஓர் ஓர் விஷயத்தை நோக்கி விர்த்தி வெளிப்படுதல்.

மேற்கண்டபடி நாலுவிதமான அவஸ்தைகளை அஸ்மிதை முதலிய கிலேசங்கள் பெறுகின்றன.

புருஷ ஸாக்ஷாத்காரம் பெறுமவனுக்கு இக்கிலேசங்கள் வறுத்த விதைபோல ஆகும். திரும்பவும் அவைகள் முளைக்காவாம். அவனைப் பாதிக்காவாம். அது ஐந்தாம் அவஸ்தை எனப் பெயர் பெறும். அதனால் அந்த ஜந்மம் அவனுடைய கடையான ஜந்மமாம். விதேகப் பிரகிருதிலயாளுக்கு அவர்கள் மஹத்தான சுகங்கள் அநுபவிக்குங் காலத்தில், கிலேசங்கள் பிரஸுப்த அவஸ்தையைப் பெறும். அச்சுகங்கள் முடியுங்காலத்தில் திரும்பவும், அவர்கள் ஜந்மம் பெறும் சமயத்தில் அவர்களைப் பாதிக்கும்.

கிலேசங்கள் வரவரக் குறைதலுக்கு இப்பாதம் முதல் ஸூத்திரத்தில் சொல்லியிருக்கிற தபஸ் முதலானவை ஸாதநங்களாம்.

எல்லாக் கிலேசங்களும் அவித்தையின் பேதங்களாம்.

தத்வங்களில் லயமடைகிறவர்களுடைய கிலேசங்கள் பிரஸுப்த அவஸ்தையைப் பெறும்.

யோகிகளுடைய கிலேசங்கள் தநு என்ற அவஸ்தையைப் பெறும்.

ஸாதாரண விஷயிகளுடைய கிலேசங்கள் விச்சிந்ந, உதார என்ற அவஸ்தைகளைப் பெறும்.

5. அநித்யாஶுசிது:காநாத்மஸு
நித்யஶுசிஸுகாத்மக்யாதிரவித்யா ॥

அநித்தியத்தையும், அசுத்தத்தையும், துக்கத்தையும், அநாத்மாவையும் முறையே நித்தியமாயும், சுத்தமாயும், சுகமாயும், ஆத்மாவாயும் நினைத்தல் அவித்தையாம்.

குறிப்பு :—அநித்தியத்தை நித்தியமாக நினைத்தல், பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களை நித்தியமென்று நினைத்து, அவைகளை உபாஸனை செய்து, அவைகளின் ஸ்வரூபத்தைப் பெறவேண்டுமெ

னச் சிலர் முயலுகின்றார்கள். அவ்விதமே, சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள் முதலியவைகளை நித்தியமாக நினைத்து அவைகளின் தாரதம்மியம் (நிலைமை) அடைய விரும்பினவராய் நாநாவிதமான கர்மங்களைச் சிலர் அநுஷ்டிக்கிறார்கள். அமரர்களாக வேண்டுமெனப் பல தேவர்களை உபாஸிக்கின்றார்கள்.

அசுத்தத்தைச் சுத்தமாய் நினைத்தல்.—மாதாவின் கர்ப்பாசயம் என்ற இடம், மாதாபிதாக்களின் சுக்கில சோணித சம்பந்தத்தினால் ஏற்படும் உற்பத்தி நிலை, மாதா உட்கொள்ளும் உணவினின்று சுண்டப்பெற்ற உணவு, கர்ப்பப்பையினின்று சிசு வெளிவந்தமேல் உண்டாகும் வியர்வை, மரணம் முதலியன அசுத்தமாக இருக்கின்றன. அவற்றைச் சுத்தமென்று மதித்தல், அசுத்தமாக இருக்கின்ற சரீரத்தைச் சுத்தமென்று மதித்தல், இவ்வித மதியீநத்தால் ஸ்திரீகளைச் சந்திரனைப்போலவும் இன்னும் பலவிதமாக வர்ணித்தலும், பாபத்தைப் புண்ணியமென நினைத்தலும், தீயதை நலமெனக் கருதலும் இவை போன்றவை இதில் அடங்கும்.

துக்கத்தைச் சுகமென்று நினைத்தல், அறிஞர் உலகத்தில் உள்ள யாவும் துக்கமெனக் கருதுவர்.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
தற்றோ ருறுவ தறிகஎன்று அருளி"

என்ற மணிமேகலைச் செய்யுள் இங்கு கவனிக்கத்தக்கது.

அநாத்மாவை ஆத்மாவாக நினைத்தல்:—அநாத்மாவாகிய புத்திரகளத்திராதிகளையும், போகத்திற்கு இருப்பிடமான சரீரத்தையும், இந்திரியங்களையும், மநத்தையும் ஆத்மாவென நினைத்தல். நான்குவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிற அவித்தையானது, பெருகிவரும் கிலேசங்களுக்குக் காரணமாயும், கர்மத்திற்கும் அதின் பலத்திற்கும் இருப்பிடமாயும், ஆகிறது. அமித்ரன் என்ற பதம், மித்ரமின்மை என்ற அர்த்தத்தை மாத்திரம் குறிப்பிடாமல் மித்ரன் என்பதற்கு எதிரிடையான சத்துருவைக் குறிப்பிடுகிறது. அவ்வித

மே அவித்தை என்ற பதம் ஞாநமின்மை என்ற அர்த்தத்தைமாத்திரம் குறிப்பிடாமல் வித்தைக்கு எதிரிடையான அவித்தை என்ற பதார்த்தத்தைக் குறிப்பிடுகிறது. அவித்தை என்பது பாவ வஸ்துவாம். அபாவமன்று.

6. த்ருக்தர்சநசக்த்யோரேகாத்மதேவாஸ்மிதா ॥

பார்க்கிறவன் (திருக்) பார்க்கச் சாதநமான கருவியுடனே (தர்சந—அகங்காரத்துடனே) சேர்ந்து ஒன்றாய் இருப்பவன் போல நடைபெறும் நிலைமை அஸ்மிதையாம்.

குறிப்பு:—புருஷன் பார்க்கிறவன் (திருக்). தர்சநம், பார்வையென்றும், பார்வைக்குச் சாதநம் என்றும் பொருள்படும். ஆனால் இவ்விடத்தில் சாதநமான அந்தக்கரணமாம். புருஷன் அந்தக்கரணத்துடன் சேர்ந்து ஒன்றாய் இருப்பது போலத் தோன்றுதல் அஸ்மிதை. ஆத்மாவான புருஷன் அநாத்மாவான அந்தக்கரணத்தில், நான் அதாவது ஆத்மா என்றபிமானித்தல் அஸ்மிதை என்பதாம், பார்க்கிறவனான ஆத்மா பார்வைக்குச் சாதநத்தைத் தான் என்றபிமானித்தல். பார்வைக்குச் சாதநமாவது அந்தக்கரணம். இது அகங்காரம், புத்தி, சித்தம், மநஸ், எனப் பிரியும். இவைகளில் அகங்காரம் மூலம். சித்தம் என்பது முன் அநுபவத்தைச் சிந்திப்பது, மநஸ் என்பது பிரகிருதத்தில் விஷயங்களை அறிவது, புத்தி என்பது அவிவேகம் ஏற்பட்டுச் சந்தேகம்வருங்கால் தீர்மானிப்பது. ஆத்மா எப்போதும் பரிணாம மில்லாதவன். அந்தக்கரணம் எப்போதும் பரிணாமமுள்ளது. ஆத்மா சேதநன், அந்தக்கரணம் அநாத்மா, ஜடம். காம் கோபம், துக்கம், சந்தோஷம் முதலிய அநுபவங்கள் அடையுங்கால், நான் கோபி, நான் துக்கி, நான் ஸந்தோஷி என்று சொல்லும்போது அந்தக்கரணத்துடன் சேர்ந்து அப்படி நினைக்கிறோம். ஆத்மா, அந்தக்கரணம் இவைகளின் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்தால் கைவல்லியம் ஏற்படும். கைவல்யம் என்பது தன்நிலை. ஆத்மாவும் அந்தக்கரணமும் சம்பந்தப்பட்டால் விஷயங்களின் அநுபவம் உண்டாகும். இன்றேல் தன் நிலையில் ஆத்மா இருக்கிறான்.

7. ஸுகானுஶயீ ராக:॥

ஆசையானது ஸுகத்தையும் ஸுகஸாதநத்தையும் நோக்கியதாக நடைபெறுகிறது.

*குறிப்பு:—முன்னநுபவித்த ஸுகத்தின் ஸ்மரணையால், சுகத்தின்மீது அல்லது ஸுகஸாதநத்தின்மீது உண்டாகும் ஆசை ராகம் எனப்படும். ஸுகசிந்தனையின்மேலுள்ள ஆசையும் இதில் அடங்கும்.*

8. து:கானுஶயீ த்வேஷ:॥

வெறுப்பானது துக்கத்தையும், துக்கஸாதநத்தையும் நோக்கியதாக நடைபெறுகிறது.

*குறிப்பு:—முன்னநுபவித்த துக்கத்தின் ஸ்மரணையால் துக்கத்தின்மீது அல்லது துக்கஸாதநத்தின்மீது உண்டாகும் வெறுப்பு த்வேஷமெனப்படும்.*

9. ஸ்வரஸவாஹீ விதுஷோऽபி ததாரூடோऽபிநிவேஶ:॥

அபிநிவேசம் என்பது ஸ்வபாவமாய் வாஸநாரூபமாக நிகழ்வதாயும் ஸாதாரண மனிதனிடத்தில் போல வித்துவானிடமும்கூட ஸ்திரப்பட்டிருக்கிறதாயுமுள்ள ஒரு பற்று.

*குறிப்பு:—உயிர்ப்பற்று, அதாவது முன் ஜந்மத்தின் மரணாநுபவம் பின் ஜந்மத்தில் வாஸநா ரூபமாக விருந்துகொண்டு, ஆத்மாவானது சரீராதிகளினின்று விட்டுப்பிரிதல் உண்டாகக்கூடாதென்ற மனோவிர்த்தி அபிநிவேசமாம். இஃது எல்லாப் பிராணிகளிடமும் உள்ளது. "நான் இறக்காமல் என்றும் இருக்கக்கடவேன்" என்ற பிரார்த்தனை ரூபமான விர்த்தி எல்லா ஜீவராசிகளிலும் தவறாமல் இருக்கின்றது. மரண அநுபவமில்லாதனுக்கு இஃது இருக்கப்பாலதன்று. மரணபயம் இருக்கின்றமையால் பூர்வ ஜந்மம் உண்டென அநுமானிக்கலாகும், பிறந்த புழுவுக்குங்கூட மரணபயம் உள்ளது. இது பிரத்தியக்ஷம், அநுமானம், சப்தம் என்ற பிரமாணங்களால் உண்டாகின்றதன்று, அறிவில்லானிடமும், அறிவுள்ளானிடமும் இது ஸமானமாக இருக்கின்றது.*

10. 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌵𑌹𑍇𑌯𑌾𑌃 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌃 ॥

வாசநாரூபமான சூக்ஷ்மமான கிலேசங்கள் எதிரிடையான பரிணமங்களால் தள்ளத்தக்கன.

குறிப்பு:—கிலேசங்கள் ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என இருவகைத்து. வாஸநாரூபமானவை ஸூக்ஷ்மமானவை. யோகியின் மநம் ஸமாதியை யடையும்போது மேற்கண்ட ஐவகையான கிலேசங்கள் வறுத்த வித்தைப்போலாகி மநத்துடன் லயமடைகின்றன.

மநம் விஷயங்களை நோக்கிப் பகிர்முகப் படாமல், தனக்குக் காரணமான அஸ்மிதையை நோக்கி அந்தர்முகப்பட்டு ஸ்வரூப நாசம் பெறுகிறது. இதுதான் எதிரிடையான பரிணமம் பெறல். மநம் நாசமுறுகிறதினால், அது சம்பந்தமாகவுள்ள சூக்ஷ்மமான கிலேசங்களும் நாசமடைகின்றன.

11. 𑌧𑍍𑌯𑌾𑌨𑌹𑍇𑌯𑌾𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌃 ॥

(ஸ்தூலமான கிலேசங்களான) விர்த்திகள் தியாநத்தினால் தள்ளத்தக்கவைகள்.

குறிப்பு:—முன் சூத்திரத்தில் வாஸநாரூபமான சூக்ஷ்மமான கிலேசங்கள் அழிவுறும் முறை உபதேசிக்கப்பட்டது. இந்த சூத்திரத்தில் ஸ்தூலமான கிலேசங்கள் (அவைகளே விர்த்திகளாம்) அழிவுறும் முறை சொல்லப்படுகின்றது. அதாவது அவைகள் தியாநத்தால் அழிகின்றன.

அழுக்கான வஸ்திரம் தோய்க்கப்பட்டால் அதன் ஸ்தூலமான மலம் முதலில் போகின்றது, பின்பு உவர்மண் முதலியவை சேர்த்துத் தோய்த்தால் அதன் சூக்ஷ்மமான மலம் போகின்றது. மலத்தின் வாஸனையானது வஸ்திரம் அழியும்வரை நிற்பதாகும். வஸ்திரம் அழிந்தால் அதுவும் அழியும், அவ்விதமே அடர்த்தியான கிலேசங்கள் கிரியா யோகத்தால் பிரிந்து விலகியும், தியாநத்தால் ஸூக்ஷ்மமாகியும் பின்பு மநோநாசத்தால் நாசமடைகின்றன.

12. 𑌕𑍍𑌲𑍇𑌶𑌮𑍂𑌲𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌶𑌯𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌜𑌨𑍍𑌮𑌵𑍇𑌦𑌨𑍀𑌯𑌃

(புண்ணிய பாப) கர்மங்களின் ஸம்ஸ்காரம் கிலேசங்களை மூலமாக உடையது. இது திர்ஷ்டமான இந்த ஜந்மத்திலும் அதிர்ஷ்டமான ஜந்மத்திலும் அறியப்பாலது.

குறிப்பு:—கிலேசங்கள் இன்னவை என்ற நிரூபணம் முன்னர் ஏற்பட்டது. கிலேசங்கள் என்ற பெயர் வருதலுக்குக் காரணம் என்னவென்றால், அவைகள் சாக்ஷாத்தாக நேரில் சுக துக்கங்களை உண்டுபண்ணு விட்டாலும், கர்மங்களை உண்டுபண்ணி அவைகள் மூலமாய் மனிதனைக் கர்மபலங்களை அநுபவிக்கும்படியாகச் செய்கின்றமையால் அவைகளுக்கு அப்பெயர் ஏற்பட்டது. இதில் கர்மங்களின் காரணம், கர்மங்களின் ஸ்வரூபம், கர்மங்களின் பலம் இவை மூன்றும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அவித்தை முதலிய கிலேசங்களை முன்வைத்துத்தான், புண்ணிய பாப கர்மங்களில் பிரவிர்த்தி உண்டாகின்றது. அதனால் கிலேசங்கள் கர்மங்களின் காரணமாகும். கர்மங்களின் ஸ்வரூபம்: முதலில் ஸ்தூலமாக வெளிப்பட்ட கர்மங்கள் இந்த ஜந்மத்திலோ வரும் ஜந்மத்திலோ பலனைக் கொடுக்கும் வரையில், ஸம்ஸ்கார ரூபமாக சூக்ஷ்ம நிலைமையை அடைகின்றது. அது ஆசயம் என்று சூத்திரத்தில் சொல்லப்பெற்றிருக்கிறது.

கர்மங்களின் பலன் இருவகைத்து. ஒன்று, கர்மங்கள் நிகழும் ஜந்மத்திலேயே பலன் உண்டாதலும், அநுபவித்தலும், அறிதலும்; மற்றொன்று, இனிவரும் ஜந்மாந்தரங்களில் பலன் உண்டாக, அதை அந்த ஜந்மாந்தரங்களில் அநுபவித்தலும் அறிதலுமாம்.

நந்திகேசுவரர் மனிதனுகப் பிறந்து தீவிர தபஸ், மந்திர ஜபம், ஸமாதி முதலியவைகளால் ஈசுவர ஆராதனைகளைப் புரிந்து, அவைகளின் பயனுக அதே ஜந்மத்தில் தேவஜாதி, தீர்க்க ஆயுஸ், திவ்விய போகங்களையும் அடைந்தார்.

விசுவாமித்திரர் தீவிரமான தபஸ் முதலியவைகளால், அதே ஜந்மத்தில் உயர்ந்த ஜாதி, தீர்க்க ஆயுஸ், ஸித்திகள் இவைகளைப் பெற்றுர். அவ்விதமே உக்கிரமான பாபகர்மத்தால் பலன் இந்த ஜந்மத்திலேயே உண்டாகும். நகுஷன் முன் ஜந்மத்தில் செய்த புண்ணிய கர்மபலனுக இந்திர பதவி பெற்றும் உடனே கொடிய பாபம் செய்ததினுல் அதே ஜந்மத்தில் ஸர்ப்பமாக ஆனுன்.

அதிர்ஷ்ட கர்மபலன்களாவன:—இதே ஜன்மத்தில் யாதொரு காரணமுமின்றி நன்மை அல்லது தீமையான ஸம்பவங்கள் ஒருவனுக்கு நேரிடுகின்றன. அவைகளின் காரணத்தை ஆராய்வோமாகில் அச்சம்பவங்கள், முன் ஜன்மங்களிற் செய்த கர்மங்களின் பலன் எனவே மதிக்கத்தக்கன. சில கர்மங்கள் செய்கின்றோம். அவைகளின் பலனை இனிவரும் ஜன்மங்களில் அநுபவிப்போம்.

13. ஸதி மூலே தத்விபாகோ ஜாத்யாயுர்போகா: ॥

**கர்மாசயத்திற்கு மூலமான கிலேசமானது இருந்தால்தான், ஜநநம் தீர்க்காயுஸ், போகம் என்றவை கர்மங்களின் பலனாக ஏற்படும்.**

குறிப்பு:—கர்மங்களின் பலன்கள் ஏற்படவேண்டுமாயின் கிலேசங்கள் இருத்தல் வேண்டும். அதனால் கிலேசங்களின் க்ஷயத்தை அடையும் யோகிக்கு கர்மபலன்கள் கிடையா என்று இதன் மூலமாக ஏற்படுகிறது. யோகியானவன், பிரகிருதி புருஷ விவேகம் பெற்று, அதனால் கிலேசங்களைத் தகிக்கிறான். கிலேசங்கள் போகவே, உமிபோன நெல் வித்தைப்போல, கர்மங்கள் பலனைக் கொடுக்கும் தன்மையை இழக்கின்றன.

கர்ம பரிபாகம் மூன்று விதம்:—(1) ஜாதி, மக்கள், தேவர், நரகர், விலங்கு முதலியன. (2) ஆயுஸ் உயிருடன் இருக்கும் காலம் தீர்க்கமாக இருத்தல்வேண்டும். (3) போகம், இதுதான் கர்மங்களின் பலனுடைய அநுபவம். முன் ஜாதியும் ஆயுஸும் இதற்கு ஸாதநம்.

ஒரே ஜன்மத்தில் பரஸ்பர விருத்தமான சுக, துக்க அநுபவங்கள் காணப்படுவதால், முன் கர்மங்களுள் பரிபாகமுள்ள அநேகங்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஜன்மத்தைக் கொடுக்கின்றன என ஏற்படுகிறது. ஆனால் ஒரு பெரிய கர்மம் மாத்திரம் அந்த ஜன்மத்தின் பொது கதியை நடத்தும். சிறியனவானபல கர்மங்கள் அந்த ஜன்மத்தில் பல சமயங்களில் சுகங்களையும் துக்கங்களையும் உண்டுபண்ணும் சில கர்மங்கள் பிறப்பையும், சில ஆயுளையும், சில போகத்தையும் கொடுக்கின்றன. கர்மங்களின் ஸ்வரூபத்தை அறிதல் மிகவும்

கஷ்டமானது. அதனால்தான் பகவத் கீதையிலும் பகவான் "ஙஹநாகஃ-டெணாஙதிஃ" என்றார்.

பொதுவாய்க் கர்மங்கள் இரண்டு விதமான தகைமைகளுடையன:—

(1) அவைகள் செய்யப்பெறும் ஜந்மத்திலேயாவது, வரும் ஜந்மத்திலேயாவது சுக துக்கமான போகங்களை உண்டுபண்ணும் இயல்பின.

(2) ஒருவிதமான கர்மத்தைச் செய்துகொண்டு வருவதால், அத்தன்மையான கர்மங்களைச் செய்யத்தூண்டும் வாஸனை ஏற்படுகின்றது. அவ்வாஸனை நன்மையாக இருப்பின், விவேகத்தினால் அதை யறிந்து, அதை விருத்தி செய்தலும், அது தீமையாக இருப்பின் வைராக்கியத்தால் அதைத் தவிர்த்து வேறு நல்ல கர்மத்தை அப்பியாஸம் செய்தலும் யோக சாஸ்திரத்தின் உபதேசமாம்.

கர்மங்கள் பூமியில் பிறப்புக்கும் இறப்புக்கும் மத்தியகாலத்தில் தான் பெரும்பாலும் ஏற்படுகின்றன. இறந்தமேல் மறு ஜந்மம் ஏற்படும் வரை அவைகள் அநேகமாக உண்டாகின்றன அல்ல. அப்போது முன் கர்மங்களின் அநுபவம் மாத்திரம் நிகழும். சிறு பான்மையாய் லோகாந்தரங்களில் ஜீவன் கர்மம் செய்தல் கூடும்.

மரணகாலத்தில் இனிவரும் ஜந்மத்திற்குக் காரணமாகும் பரிபக்குவமான கர்மங்கள் நன்றாய் வியக்தப்படுகின்றன; ஜீவனின் பிரஞ்ஞையில் தோன்றுகின்றன. இதுவிஷயமாகப் ப்ருஹத் ஆரண்ணியக உபநிஷத், 4-வது அத்தியாயம், 4-வது பிராஹ்மணம், 2-ம் மந்த்ரத்தையும், அதன்மேல் ஸ்ரீமத் சங்கராசார்யரவர்களின் பாஷ்யத்தையும் பார்க்க. பகவத்கீதை 8-ம் அத்தி., 6-ம் சுலோகமும், 2-ம் அத்தி. 72-ம் சுலோகமும் இங்கு கவனிக்கத் தக்கன. இதனால்தான், மரணகாலத்தில் பகவந் நாமத்தை உச்சரித்தலும் உபநிஷத் முதலான பாராயணங்களும் மரிக்கிறவன்காதில் படும்படியாக உச்சரிக்கின்றார்கள். அவைகளால் நல்ல சிந்தனை யுண்டாகி, அவன் அச்சிந்தனைக்குரிய நற்கதியை யடைதல் கூடும் என்பதாம்.

14. 𑌤𑍇 𑌹𑍍𑌲𑌾𑌦𑌪𑌰𑌿𑌤𑌾𑌪𑌫𑌲𑌾𑌃
𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

அவை (ஜாதி, ஆயுஸ், போகம்) சுக, துக்கங்களைப் பலனாக உடையன. ஏனெனில் அவைகளுக்கு (ஜாதி, ஆயுஸ், போகங்களுக்கு) புண்ணிய பாபகர்மங்கள் காரணமாக இருக்கின்றமையால்.

குறிப்பு:—*புண்ணிய, பாபகர்மங்கள், ஜாதி, ஆயுஸ்களை உண்டு பண்ணுகின்றன. அவைகள் உண்டாகவே, கர்ம பலங்களான சுக துக்கங்களின் அநுபவம் ஏற்படுகின்றது. ஜாதி, ஆயுஸ்கள் விலக்கப்படுவதற்காக உபாயத்தைத் தெரிவிக்க இச்சூத்திரம் ஏற்பட்டிருக்கிறது.*

15. 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌤𑌾𑌪𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌦𑍁𑌃𑌖𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌿
𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌚𑍍𑌚 𑌦𑍁𑌃𑌖𑌮𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌨𑌃 ॥

விவேகியாகிய யோகிக்கு எல்லாம் (விஷயசுகமெல்லாம்) துக்கமாகவே இருக்கின்றன. ஏனெனில், (விர்த்திகளின்) பரிணாமம் (அவைகள் நிகழுங்காலத்தில் உண்டாம்.) தாபம், (பூர்வ) வாஸனைகள் துக்கமாகத் தோன்றுகின்றன, தவிரவும் குணங்களால் உண்டாகும் மநோவிர்த்திகள் பரஸ்பர விரோதங்களாகவும் இருக்கின்றன.

குறிப்பு:— (1) *துக்கத்தைக் கொடுக்கக் கூடிய ஜாதி, ஆயுஸ், முதலியவை தள்ளத்தக்கவையாயினும், சுகத்தைக் கொடுக்கக் கூடிய ஜாதி, ஆயுஸ்கள் தள்ளத்தக்கவை யல்லவே என்ற வினாவிற்கு இச்சூத்திரம் சமாதானம் சொல்லுகிறது. யோகிக்கு எல்லாம் துக்கமே.*

(2) *விஷயசுகம் அவித்தையா லேற்படுகிறது. சுகம் என்பது கர்மேந்திரியம், ஞானேந்திரியம், மநம் இவைகள் சலநமற்று ஓய்வடைதல். அதாவது அவைகள் திருப்தியடைதல். அத் திருப்தியில்லாமல் அவை சஞ்சலித்துக் கொண்டிருக்குமாகில் துக்கப் பிராப்தி யேற்படுகிறது. விஷயசுகங்களை யநுபவிப்பதினால் அவைகளின் ஆசை முடிவு பெறாது, பெருகுவதாகும். தேள் கொட்டுமெனப் பயந்து ஸர்ப்பம் கடிக்கப் பெற்றாற்போல, விஷய சுகங்களின் போகத்தால் திருப்தி பெற்று அவைகளின் ஆசையைத் தொலைக்க கருதுகிறவனவன், இன்னும் அதிக ஆசைபற்றியவனாகி அதி*

கத் துக்கங்களுக்கு உள்ளாவான். விஷய சுகங்களை அடிக்கடி அநுபவிக்க, காமாக்னி விருத்தியடைகிறது. இச்சைகொண்ட விஷயம் கிடைக்காவிடில் துக்கமுண்டாகும். கிடைத்தாலும் அநுபவிக்க முடியாவிட்டாலும் துக்கமுண்டாகும். அநுபவித்தற்குத் தடை செய்பவர்களிடம் துவேஷமுண்டாகும். தன்னிஷ்டப்படி விஷய சுகங்களை யநுபவிக்கிறதினாலும் வியாதிகள் நேரிடுவதாகும். இவை போன்று பரிணாமத்தின் துககம் நிகழும்.

விஷயசுகம் அநுபவிக்குங்காலத்தில், அது நீடித்திருக்கமாட்டாதே என்ற கவலையும், அதினால் என்ன கெடுதல் நேரிடுமோ என்ற கவலையும் இவை போன்று தாபத்தின் துக்கம் நிகழும்.

ஸுக துக்க அநுபவங்களினால் அவைகளின் வாஸனைகள் அமைகின்றன. அவை உண்மையில் யோகிக்கு துக்கமே.

இதனால் பகவான் கௌதம புத்தர் ஜந்மம் துக்கம், வியாதி துக்கம், ஜரை துக்கம், ஸகலமும் துக்கமென்று உபதேசித்தார்.

**16.** ஹேயம் து:கமநாகதம் ॥

**வரப்போகின்ற துக்கம் (பிரயத்நத்தால்) தவிர்க்கத்தக்கது.**

குறிப்பு:—(1) வியாதி, வியாதியின் காரணம், அதை நிவிர்த்திக்கும் உபாயம், ஆரோக்கியம் இந்நான்கும் எவ்விதம் வைத்திய சாஸ்திரத்தில் விசாரிக்கப் படுகின்றனவோ, அவ்விதமே இந்த சாஸ்திரத்திலும் (ஹேயம்) தள்ளத்தக்கது இன்னது, அதன் காரணம், அதைத் தவிர்க்கிறதற்கு உண்டான உபாயம், பின்பு மோக்ஷம் என்பன விசாரிக்கத்தக்கவை. இந்த சூத்திரம் முதலாவதான ஹேயத்தைப்பற்றியது.

(2) மூன்று காலத்திலும், துக்கம் தள்ளத்தக்கதாக விருந்தாலும், இறந்தகாலத்தைப்பற்றிய துக்கம் அநுபவித்துச் சென்றமையாலும், நிகழ்காலத்தைப்பற்றிய துக்கம் அநுபவிக்கப்படுகின்றமையாலும், அவைகள் தள்ளுவதற்குச் சாத்தியமானவையல்ல. அதனால் வருங்காலத்தைப்பற்றிய துக்கம் மாத்திரம் தள்ளத்தக்கது என்று இச்சூத்திரம் அறிவிக்கிறது.

17. 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌦𑍃𑌶𑍍𑌯𑌯𑍋𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑍋 𑌹𑍇𑌯𑌹𑍇𑌤𑍁𑌃 ॥

**புருஷனுக்கும் புத்திக்கும் உள்ள சம்பந்தமானது (ஹேய) துக்கத்திற்குக் காரணமாம்.**

*குறிப்பு:— (1) புருஷனிடத்திலிருக்கின்ற சைதந்நிய சக்தியானது புத்தியில் பிரவேசிக்கின்றதினால், உதாஸீநனான புருஷன் திரஷ்டா எனப்படுகின்றான். திருச்யம் என்றால், புத்தியில் தோன்றுகிற எல்லாவிஷயங்களுமாம். புத்தியென்பது பிரதாநத்தின் அதி சூக்ஷ்மமான நிலைமை. மநஸ், சித்தம், அகங்காரம், புத்தி முதலியன பிரகிருதியின் பரிணாமங்கள்.*

*(2) புருஷன் ஹிருதயகுகையில் இருக்கிறான். அவன் ஸமீபத்திலிருக்கிறது புத்தி. அதனால் புத்தியை மாத்திரம் புருஷன் அறியலாம். அதனால் புத்தியைத் திருச்யம் எனச் சொல்லலாம். மற்றைய வஸ்துக்கள் புருஷனுடன் ஸாக்ஷாத் ஸம்பந்த மின்மையால், அவைகளைத் திருச்யம் என எப்படிச் சொல்லுதல் கூடும்? இதற்குச் சமாதாநம், புத்தியானது எல்லா விஷயங்களையும் இந்திரியங்கள் மூலமாய்க் கிரஹித்து, அவ்வவ்விஷயங்கள் ரூபமாகத் தன்னைப் பரிணமித்துக்கொள்ளுகின்றது. அத்தகைய புத்தியைப் புருஷன் சாக்ஷாத்கரிப்பதால், புத்தியில் பரிணாமமாக அமைந்திருக்கின்ற எல்லா விஷயங்களையும் புருஷன் அறிந்தவனாக ஆகின்றான். அதனால் எல்லா விஷயங்களும் திருச்யமாக ஏற்படுகின்றன.*

*(3) புருஷனிடமுள்ள சைதந்நிய சக்தியைப் புத்தி அடைவதாலும் புருஷனுக்கு அடுத்த சமீபத்தில் புத்தி இருக்கின்றமையாலும் இரண்டும் (புருஷனும் புத்தியும்) ஒன்றுபோலத் தோன்றுகின்றன. அயஸ்காந்தத்தைப்போல, புத்தியானது புருஷனிடமுள்ள சக்தியை ஆகர்ஷித்து, புருஷனும் தானும் அபேதமாகத் தோன்றுகிறது. இந்தஅபேதப் பிராந்தி தான் அவித்தை என்னப்படும். இது தான் துக்கத்திற்குக்காரணம். இப்பிராந்தியை விலக்குவதினால் கைவல்லியம் ஏற்படும். முள் தனிமையாக இருந்தால் யாதொரு கெடுதியுமில்லை. அது காலில் தைத்தால் துக்கமுண்டாகிறது. அதைப் பிடுங்கி எறிந்தால் துக்கம் நீங்குகிறது. அதுபோல புத்திக்கும்*

புருஷனுக்கும் ஏற்பட்டிருக்கிற ஸம்யோகம் நீங்கினால் துக்கம் நீங்குகிறது.

(4) புத்தியின் சத்துவத்தை, ரஜஸ்தமோ குணங்கள் மேல் போகவிடாமல் பாதிக்கின்றன. அவை யிரண்டையும் விலக்கி, சத்துவகுணம் மாத்திரம் மேலிடும்படி செய்தால், புத்தியானது புருஷ ஸாக்ஷாத்காரத்தைப் பெறுகிறது.

18. 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌶𑍀𑌲𑌂 𑌭𑍂𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂
𑌭𑍋𑌗𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 ॥

திருச்யம் என்பது பிரகாசம், கிரியை, இருத்தல், இவைகளை உடையதாகவும், பூதங்கள், இந்திரியங்கள் ரூபமாகவும், (புருஷனுக்கு) போக கைவல்லியங்களைக் கொடுக்கக் கூடியதாகவும், இருக்கிறது.

குறிப்பு:—திருச்யத்தின் ஸ்வரூபம் இந்த சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. பிரதானம் முதல் பௌதிகங்கள் வரை (ஸ்தாவர ஜங்கமங்கள் வரை) யுள்ள ஸமஸ்த பதார்த்தங்களும் திருச்யமெனப்படும். பிரகாசம், கிரியை, இருத்தல், என்பன முறையே சத்வ, ரஜஸ், தமோ குணங்களின் காரியமாம். குணங்கள் சூக்ஷ்மமாகவிருக்கின்றமையால், அவைகளைப் பிரஸ்தாபிக்காமல் அவைகளின் காரியங்கள் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன.

பிரகாசம் ஸத்வகுணம் மேலிடுதல்.

கிரியை ரஜோகுணம் மேலிடுதல் சஞ்சலமாக இருத்தல்.

இருத்தல் மேற்கண்ட இரண்டும் இல்லாமல் மோக ரூபமாக இருத்தல்.

வஸ்துக்கள் குணங்களால் தாரதம்மியப்படுகின்றன. பிரதானமே பஞ்சதந் மாத்திரைகளாகவும், பூதங்களாகவும் கர்மேந்திரிய ஞானேந்திரியங்களாகவும் புத்தி, சித்தம், மநஸ், அகங்காரங்களாகவும் பரிணமிக்கின்றது. போகம் அபவர்க்கம், விஷய நுகர்ச்சி, வீடு அல்லது கைவல்லியம் இவைகளைப் புருஷனுக்குக் கொடுக்கிறவைகளாக மேற்கண்ட பிரதானத்தின் பரிணாமங்களிருக்கின்றன.

சைவ ஸித்தாந்தத்தில் சொல்லுகிறபடி தநு, கரண, புவந, போகங்கள், புருஷன் மேன் மேலும் சித்த சுத்தி பெற்றுக் கடைமுறையில் வீடுபெற ஏற்பட்டிருக்கின்றன.

திருச்யம் அல்லது பிரபஞ்சத்தின் பிரயோஜநம் யாது? புருஷன் அநுபவம் பெறுதலின் பொருட்டாம். புருஷன் தன் இயற்கை நிலைமையின் அருமையையும் பெருமையையும் மறந்தான். ஒரு கதை—இந்திரன் ஒரு காலத்தில் பன்றியாக ஆயினன்; தன் பெட்டைப்பன்றியுடனும், குட்டிகளான பரிவாரங்களுடனும் உல்லாசமாகவும் சந்தோஷமாகவும் காலங்கழித்தான். தேவர்கள் இந்திரனின் நிலையைக்கண்டு வியஸநமுற்று "ஓ! பன்றியே! நீவிர் இந்திரனுவீர். நீவிர் பன்றியாக உழலுவானேன் என்று வினவ, இந்திரனுன பன்றி சொன்னதாவது:—"நான் இந்நிலையிலேயே இருக்கட்டும். இது எனக்குச் சுகமாக இருக்கின்றது. தேவலோகம் எனக்கு வேண்டாம்." இதைக் கேட்ட தேவர்கள் வியப்புற்று இன்னவிதம் செய்தால் இந்நிலையைவிட்டு இந்திரன் திரும்புவார் எனத் தெரியாமல் திகைப்புற்றார்கள். பின்பு ஒன்றுன்றாய்ப் பன்றிக்குட்டிகளை அவர்கள் கொல்ல ஆரம்பித்தார்கள். கடைசியில் பெண் பன்றியையும் கொன்றார்கள். எல்லாப் பன்றிக்குட்டிகளும் தன் இணை பிரியாத பெட்டைப்பன்றியும் இறந்தமேல் பன்றி ரூபமான இந்திரன் மிக வியஸநமுற்று 'ஹோ!' என்று கதறி அழுகவே, தேவர்கள் அப்பன்றி சரீரத்தை வெட்டிப் பிளந்தார்கள். அதனின்று திடீரென்று இந்திரன் வெளிவந்து, இது என்ன கனவு! என்று சிரித்தான். இவ்விதம் புருஷன் பிரகிருதியுடன் ஸம்பந்தித்து, அபேத நினைவுகொள்ளுகிறுன். தேஹோஹம் என்ற பாவனை பெறுகிறுன். தன்னுடைய உண்மை நிலையை மறக்கிறுன். புருஷனுன ஆத்துமா உண்மையில் சுத்தனுகவும் அஸங்கனாகவும் இருக்கிறுன். பிரபஞ்சமாகிய திருச்யத்துடன் புருஷன் சம்பந்தம் பெறுகிறதனுல், சுக துக்கங்களுக்குட்பட்டவன்போலக் காணப்படுகிறுன். இச்சம்பந்தத்தை அநுபவத்தினுல் விலக்கிக்கொள்ளுதலின் பொருட்டு யோகசாஸ்திரம் பிரவிர்த்தித்தது (இது விவேகாநந்தர் சொல்லியது).

19. விஶேஷாவிஶேஷலிங்கமாத்ராலிங்காநி குணபர்வாணி ॥

விசேஷங்கள், அவிசேஷங்கள், லிங்கம், அலிங்கம், இவை (சத்வ, ரஜஸ், தமஸ்) என்ற குணங்களின் பரிணாமங்கள்.

குறிப்பு:—(1) *விசேஷங்களாவன, பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாயம் என்ற 5 மஹா பூதங்களும், 5 கர்மேந்திரியங்களும், 5 ஞானேந்திரியங்களும், மநம் 1, ஆக 16, இவை எப்போதும் மாறி மாறிக்கொண்டிருக்கின்றமையால் ஸாங்கிய சாஸ்திரத்தில் விகாரங்கள் எனப் பெயர் பெறும். இவை 16ம் காரியங்களே அல்லாமல் காரணமல்ல*

(2) *அவிசேஷங்களாவன பஞ்சதந்மாத்திரைகள், அகங்கார தத்துவம் ஆக 6 இவை புத்தி (மஹத்தத்துவத்தின்) யின்காரியங்களாயும், மேற்கண்ட 16 விசேஷங்களுக்குக் காரணமாகவும் இருக்கின்றன. இவை புத்தியின் காரியமாக இருக்கின்றமையால் விகிருதி என்றும், விசேஷங்களுக்குக் காரணமாக இருக்கின்றமையால் பிரகிருதி என்றும், இரண்டு தன்மைகளை உத்தேசித்து பிரகிருதி விகிருதி என்றும் பெயர் பெறும்.*

(3) *லிங்கம், மஹத்தத்துவம்: மூலப்பிரகிருதியான அலிங்கத்தில் இது லயமடைவதால், இது லிங்கமெனப் பெயர் பெறும்,*

(4) *அலிங்கம், மூலப் பிரகிருதி, இது லயம் அடையக்கூடியது, பிறிதொன்றுமில்லை. அதனால் இது அலிங்கமென்னப்படும். இது குணங்களுக்குள் தாரதம்மியமில்லாத ஸாம்யா அவஸ்தை.*

*விசேஷங்கள் 16, அவிசேஷங்கள் 6, மஹத்தத்துவம் 1, மூலப்பிரகிருதி 1, ஆக தத்துவங்கள் 24, புருஷன் உள்பட 25.*

20. த்³ரஷ்டா த்³ருஶிமாத்ர: ஶுத்³தோ⁴(அ)பி ப்ரத்யயாநுபஶ்ய: ॥

பார்க்கிறவன் (புருஷன்) அறிவை (ஞானத்தை) ஸ்வரூபமாக உடையவன் சுத்தன், அதாவது பரிணாமமில்லாதவன். ஆயினும் புத்தி விர்த்தியை அநுசரித்து விஷயங்களைக் கிரஹிக்கிறன்.

குறிப்பு:—(1) *புருஷன் சுத்தனாய் இருப்பினும், புத்தியின் விர்த்தி விசேஷங்களில் பிரதிபிம்பிக்கின்றமையால், புத்தியின் சவ*

ங்கள் புருஷனுடையவையாக நினைக்கப்படுகின்றன.

(2) புருஷன், சேதநன். புத்தி, அசேதநம். புத்திக்குப் பல சாமக்கிரியைகள் வேண்டும். அவையாவன, இந்திரியங்கள், விஷய ங்கள் முதலியன.

(3) புருஷன் ஸ்வார்த்தன், புத்தி பரார்த்தம், சைதந்யமே புருஷன்.

**21.** தத³ர்த² ஏவ த்³ருஶ்யஸ்யாத்மா ॥

**திருச்ய வஸ்துவின் ஸ்வருபம் (இருத்தலானது) அவனுடைய (புரு ஷனுடைய) பிரயோஜநத்திற்காகவாம்.**

குறிப்பு:—(1) திருச்யம், அதாவது வஸ்துக்களானவை கார் யம், காரணம், கரணம், என குணத்திரயங்களாக இருக்கின்றன. அவை புருஷனின் போகத்தின் பொருட்டும், மோக்ஷத்தின் பொரு ட்டுமாம். பிருஹதாரண்ணியக உபநிஷத்தின் மைத்திரேயீ பிராஹ் மணத்தில்

"ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் ப⁴வதி"।
என்பது இவ்விஷயத்தையே உபதேசிக்கின்றது.

(2) திருச்ய வஸ்துக்களுக்கு அழிவு உண்டு. புருஷனுக்கு அழிவில்லை.

(3) அத்வைத வேதாந்திகளின் அபிப்பிராயத்தில், பிரஹ் மமே பிரபஞ்சஸ்வரூபமாகத் தோன்றுகிறது என்பதாம். சாங்கிய யோகிகள் மதத்தில் புருஷனும் பிரபஞ்சமும் வேறாக இருப்பி னும், புருஷனுடைய சம்பந்தமின்றி பிரபஞ்சம் (ஸத்) இருத்த லைப் பெறுதலின்றாம்.

**22.** க்ருதார்த²ம் ப்ரதி நஷ்டமப்யநஷ்டம்
தத³ந்யஸாதா⁴ரணத்வாத் ॥

**போகம், அபவர்க்கம் இரண்டையும் அடைந்தபுருஷனை (முக்தனை) உத்தேசிக்க, பிரதாநம் நாசமுற்றாலும், அது முக்தனுக்கும் மற்றவர்களுக் கும் பொதுவாயுள்ளமையால், (அம் மற்றவர்களை உத்தேசிக்க) நாசமுறு கிறதில்லை.**

குறிப்பு:—(1) யோகிகள் மதத்தில் புருஷர்கள் பலர். அதனால் ஒருவன் முக்தி பெறுவதினால், பிரதாநம் அவனைக் குறித்து நாசமடைந்தாலும், மற்றவர்களுக்கு நாசமடைகிறதில்லை. வேதாந்திகள் மதத்தில், புருஷன் ஒருவனே ஆயினும், புருஷன் பிரதிபிம்பிக்கின்ற உபாதிகள் பலவாறாக இருக்கின்றமையால், உபாதிகள் நாசமுறும் வரையில் ஸம்ஸார பந்தம் உண்டு.

(2) பிரதாநம் ஒன்று, புருஷர்கள் பலர். இது ஸாங்கிய யோகிகளின் ஸித்தாந்தம். அடியிற்கண்ட மந்திரம் இங்கு கவனிக்கத்தக்கது.

"𑌅𑌜𑌾𑌮𑍇𑌕𑌾𑌂 𑌲𑍋𑌹𑌿𑌤𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌂
𑌬𑌹𑍍𑌵𑍀𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑍃𑌜𑌮𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍂𑌪𑌾𑌃"

சுவேதாசுவதரோபநிஷத்

புருஷார்த்தம் பெற்றவனுக்குப் பிரதாநம் இல்லை. புருஷார்த்தம் பெறாதவனுக்கு, பிரதாநமானது, மஹதாதிரூபமாகப் பரிணமித்து, ஸம்ஸாரத்தை யுண்டுபண்ணுகிறது. இதனால் ஒருவன் முக்திபெற மற்றவர்களுக்கு இன்றாம் என்பது ஸித்தாந்தம் பெறுகிறது.

23. 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑍋𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌹𑍇𑌤𑍁𑌃
𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 ॥

**திருச்யம், திரஷ்டா, இவ்விரண்டின் சக்திகளின் சம்பந்தமானது ஸ்வரூபத்தை அடைதலுக்குக் காரணமாம்.**

குறிப்பு:—(1) ஸ்வம், திருச்யம் அதன் சக்தி என்றால், ஜடத்தன்மை. பார்க்கத்தகுந்ததாக இருத்தல் புத்திமுதல் கீழ்க்கடையில் உள்ள யாவற்றும் திருச்யமாம். ஸ்வாமி என்றால் (ஸ்வத்தை) உடையவன், அதாவது புருஷன், புத்தி (அந்தக் கரணம்), விஷயங்கள் (திருச்யங்கள்) இருக்கின்றன. புத்தி இந்திரியங்களுடன் சேர்ந்து வெளிநோக்கி விஷயங்களைக் கிரஹிக்க, போகங்கள் உண்டாகின்றன. அதனால் பந்தம் ஏற்படுகிறது. புத்தி, இந்திரியங்களின் சம்பந்தத்தைத் தவிர்த்துப் புருஷனை அறிதல் அபவர்க்கம் எனப்படும். அதுவே கைவல்லியமாம். இவ்விதம் யோகியான

வன் கைவல்லிய நிலையைப் பெறவே, பிரதாநம் இவனுக்கு, முன் ஸூத்திரத்தில் சொல்லியபடி நாசத்தை அடைகிறது.

(2) கடோபநிஷத்திலுள்ள அடியில்வரும் மந்திரம் இந்த ஸூத்திரத்தை விளக்குகின்றது.

ஆத்மேந்த்ரிய மநோயுக்தம்।
போக்தேத்யாஹுர் மநீஷிண꞉॥

இதன் பொருள்: இந்திரியங்கள், மநம், இவைகளுடன் புருஷன் சேருங்கால், போக்தா என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள்.

விமுக்தஶ்ச விமுச்யதே॥

என்ற வசநத்தினல், இவைகளைவிட்ட புருஷன் முக்தனுகிறுன் என்று சொல்லப்படுகிறது.

(3) ஸம்யோகம் என்பது முன் 1-வது குறிப்பில் கண்டபடி புத்தியின் மூலமாய் விஷயங்களுடன் சம்பந்தித்தலும் விஷயங்களைத் தவிர்த்து புத்தி புருஷனை ஸாக்ஷாத்கரித்தலுமாம். பிரகிருதி புருஷ ஸம்யோகத்தின் முடிவான பிரயோஜநம் யாதெனில், புத்தி முதலில் விஷயங்களுடன் சம்பந்தம்பெற்று, விஷய நுகர்ச்சியின் துக்கத்தை அநுபவத்தால் அறிந்து அவைகளைச் சிறுகச் சிறுகத் தவிர்த்து, வெளிநோக்கியதான புத்தி பின்பு அந்தர் முகப்பட்டு ஆத்ம விஷயங்களில் பயின்று, கடைமுறையில் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெறுதலுக்கேயாம். ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெறவே, பிரகிருதி புருஷவிவேகம் ஏற்படும். ஞாநம், அதாவது புருஷதர்சநம் பிரகிருதி புருஷ வியோகத்திற்கு காரணமாம். அதர்சநம் (அவித்தை) பிரகிருதி புருஷ ஸம்யோகத்திற்குக் காரணமாம். அவித்தை என்ற திரைநீங்கவே, ஸ்வதஸ்ஸித்தமான கைவல்லியம் ஸித்திக்கிறது. இந்த தாத்பரியத்தைக் கீதையின் முடிவில் அர்ஜுநன் சொல்லியிருக்கிறுர்:—

"நஷ்டோமோஹஸ்ஸ்ம்ருதிர்லப்தா"

இதன்பொருள் "மயக்கம் தீர்ந்தது. முன்னிருந்த ஞாநத்தைத் திரும்பப் பெற்றேன். இதில் ஸ்மிருதி என்ற வார்த்தையா

னது கவனிக்கத்தக்கது. ஸ்மிருதி=முன்னினைவு. அதாவது எப்பொழுதும் ஜீவாத்மாவானவன் ஸர்வஞ்ஞன்; மயக்கத்தினால் அறியாதவன் போலிருக்கிறான். மயக்கம் நீங்கவே ஸ்வாபாவிகமான ஞானம் வெளிப்படுகிறது.

24. 𑌤𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍁𑌰𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 ॥

அதற்கு (பிரகிருதி புருஷ ஸம்யோகத்திற்கு)க் காரணம் அவித்தையாம்.

குறிப்பு:—முன் சூத்திரத்தில் ஸம்யோகத்தின் ஸ்வரூபம், காரியம், இரண்டும் சொல்லப்பட்டன. இந்த சூத்திரத்தில் அதன் காரணம் சொல்லப்படுகிறது.

அவித்தை (பிராந்திஞானத்தினால் உண்டாகிற வாஸனை) ஸம்யோகத்திற்குக் காரணம். திரஷ்டாவையும், திருச்யத்தையும் ஒன்றுபடுத்தி, நான் என நினைத்தல் பிராந்தி. அந்த பிராந்தி வாஸனையுடன் கூடிய மநமானது பிரளய காலத்தில் பிரதாநத்தில் லயத்தை அடைந்து ஸ்ருஷ்டிகாலத்தில் அந்த பிராந்தி வாஸனையுடன் வெளிவருகிறது. இத்தன்மையான மநஸ்ஸினால் தான் பந்தம் உண்டாகிறது. அதனால் அநாத்மாவில் ஆத்மாவை நினைத்தும், நான் எனது என்ற பாவனைகளை ஜீவன் விருத்தி செய்கிறான்.

25. 𑌤𑌦𑌭𑌾𑌵𑌾𑌤𑍍𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌭𑌾𑌵𑍋 𑌹𑌾𑌨𑌂
𑌤𑌦𑍍𑌦𑍃𑌶𑍇𑌃 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌂 ॥

அது (அவித்தை) இல்லாமல் போதலினால் (முன் சொல்லிய) புத்தி, புருஷன் இரண்டின் ஸம்யோகம் அற்றுப்போகின்றது. (இதற்கு) ஹாநம் என்று பெயர். அதுவே (இந்த ஹாநம் நிகழ்தல்) சைதந்நிய ஸ்வரூபியாகிய புருஷனுக்குக் கைவல்லியமாம்.

குறிப்பு:—முன்னர் தள்ளத்தக்கதான துக்கம் இன்னதென்றும் துக்க காரணம் இன்னதென்றும், நிரூபணம் செய்து ஹாநம் (விடுதல்) என்பது இன்னது என்று இச்சூத்திரத்தில் வியவஹரிக்கிறார். பந்த நிவிர்த்தி ஏற்பட்டால் ஸ்வதஸ்ஸித்தமான புருஷ ஸ்வரூபம் வெளியாகிறது என முன் சொல்லியபடி, இப்போதும் அவித்தை நீங்கவே, புருஷஸ்வரூபம் ஸித்திக்கிறதென்று இச்சூத்திரத்தில் சொல்லப்படுகிறது.

26. விவெக஖்யாதிரவிப்லவா ஹாநோபாய: ॥

ஸ்திரமான விவேகஞாநம் முன் சொல்லிய ஞாநம் பெறுதலுக்குச் சாதநமாம்.

குறிப்பு:-(1) விவேகம், திரஷ்டாவான புருஷன் வேறு, திருச்யமாகிய புத்தி முதலிய பிரபஞ்சம் வேறு, என ஆராய்தல். ஞாநம், அதை அறிதல். விப்லவம் என்றால் மித்தியா ஞாநம்.

(2) முதலில் சாஸ்திரஞாநத்தால் விவேக ஞாநமானது சாதாரணமாய் உண்டாகிறது. அஃது அநுபவமில்லாமல் பரோக்ஷ ஞாநம் ஏற்படுகிறது. பின்பு மநநத்தினால் அந்த சாஸ்திரஞாநம் திடப்பட்டும், விஷயங்களில் மநத்திற்கு வைராக்கியம் உண்டாகியும், அதனால் மநஸ் ஆனது அந்தர்முகப்பட்டு, புருஷனையே நிரந்தரமாகத் தியாநித்து, மநஸ் ஆனது புருஷ ஸ்வரூபத்தைப் பெறுகிறது. இதைத்தான் அவிப்லவ* என்ற பதம் விவரிக்கிறது.

27. தஸ்ய ஸப்ததா ப்ராந்தபூமி: ப்ரஜ்ஞா ॥

அவனுடைய (அந்த யோகியினுடைய) பிரஜ்ஞையானது கடைமுறையில் ஏழு படிகளை உடையது.

குறிப்பு:—(1) ஸ்திரமான விவேகத்தையுடைய யோகியின் பிரஞ்ஞைக்கு ஏழு படிகள் உள்ளன.

i. அறியவேண்டியவை அறியப்பட்டன. இனி அறிய வேண்டியவை ஒன்றுமில்லை. இந்த பூமியில் ஸர்வ ஸம்சயங்களும் நிவிர்த்தி அடைகின்றன. தன்னை அறியவேண்டுமென்ற விருப்பம் மாத்திரம் உள்ளது.

ii. பந்தத்திற்குக் காரணமான கிலேசங்கள் எல்லாம் நாசம் பண்ணப்பெற்றன. ஸர்வ துக்கங்களும் நிவிர்த்தி யடைகின்றன.

iii. இனி அடையவேண்டியவை ஒன்றுமில்லை. ஸர்வ காமப் பிராப்தி உண்டாகின்றது. இப்போது இவனுக்கு ஆப்தகாமன்

*"சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்" என்ற
திருமூலர்வசநம் இங்கு கவனிக்கத்தக்கது.

என்று பெயர். 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌸𑌹 என்ற தைத்தரீய வசநம் இங்கு கவனிக்கத்தக்கது.

iv. இனிச் செய்யவேண்டியவை ஒன்றுமில்லை. நான் கிருத கிருத்தியன் என்ற ஞாநம் உண்டாகிறது.

v. ஸர்வ கார்யநிவிர்த்தி ஏற்படுகிறது. புத்தியானது நிர்மலமாகி சோக நிவிர்த்தியைப் பெறுகிறது.

vi. ஆறும்படியில் புத்திக்கே காரணமான குணங்கள் இவனை விட்டு நழுவிப் பிரதாநத்தில் லயமடைகின்றன. புத்தியும் சூந்யம் பெறுகிறது. இதில் "அபயம்" என்று உபநிஷத்துக்களில் சொல்லப்பெறும் நிலை ஏற்படுகிறது.

vii. இதில் புருஷன் தனிமையாக இருக்கிறான். எல்லா ஸம்பந்தங்களும் விலகி, கேவலனாக இருக்கிறான். இதுவே கைவல்லிய நிலை.

(2) முதல் நான்கு படிகளில் கார்யங்களினின்று கிரமமாக விடுதலையும் ஐந்தாம் ஆறும் படிகளில் காரணங்களினின்று விடுதலையும் ஏற்படுகின்றன. ஏழாம்படியில், ஸ்வரூபமாத்திரமாக புருஷன் இருத்தலும் ஏற்படுகிறது.

(3) மேற்கண்ட ஏழு படிகளும் உபநிஷத்துக்களில் அடியில் வருமாறு சொல்லப்படுகின்றன:—

i. 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌃 𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃
𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 ॥

இதன் பொருள்: காரணரூபத்தால் பரமாயும், காரிய ரூபத்தால் அபரமாயுமிருக்கின்ற அந்த பரமாத்மாவை ஒருவன் பார்ப்பானாகில், ஹிருதயத்தின் கண்ணுள்ள அவித்தியா வாஸநாமயமான பந்தங்கள் பேதிக்கப்பெற்று விட்டுப்போகின்றன. ஸமஸ்தமான ஸம்சயங்களும் நாசமுறுகின்றன. இந்த ஞாநியின் ஆகாமி, ஸஞ்சித கர்மங்களும் நசிக்கின்றன.

ii. 𑌏𑌤𑌂 𑌹 𑌵𑌾𑌵 𑌨 𑌤𑌪𑌤𑌿।
𑌕𑌿𑌮𑌹𑌂 𑌸𑌾𑌧𑍁 𑌨𑌾𑌕𑌰𑌵𑌮𑍍।
𑌕𑌿𑌮𑌹𑌂 𑌪𑌾𑌪𑌮𑌕𑌰𑌵𑌮𑌿𑌤𑌿।—தைத்திரீயோபநிஷத்.

இதன் பொருள்: நான் ஏதோ காரணத்தால் சுபகர்மத்தைச் செய்யாமற் போனேனே, ஏதோ காரணத்தால் பாபகர்மத்தைச் செய்தேனே என்ற தாபத்தால் அந்த ஞாநியானவன் தபிக்கப்பெறுகிறானில்லை.

iii. 𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑍇𑌤𑌿॥—தைத்திரீயோபநிஷத்.

இதன் பொருள்: அந்த ஞாநி, பிரஹ்மமாக இருந்து, ஒரே காலத்தில் எல்லாக் காமங்களையும் அடைகிறான்.

iv. 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌚𑍇𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌦𑌯𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃।
𑌕𑌿𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍 𑌕𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌶𑌰𑍀𑌰𑌮𑌨𑍁𑌸𑌂𑌜𑍍𑌵𑌰𑍇𑌤𑍍॥
பிருஹதாரண்யகோபநிஷத்.

இதன் பொருள்: ஒருவன் தன் ஸ்வரூபமின்னதென்று அறிவானாகில், அவன் செய்யவேண்டிய காரியம் என்ன? அவன் செய்யவேண்டியது ஒன்றுமில்லை, என்றபடி.

v. 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍋 𑌮𑍋𑌹𑌃 𑌕𑌃 𑌶𑍋𑌕 𑌏𑌕𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌃॥

இதன் பொருள்: எங்கும் ஆத்மா ஒன்றையே பார்க்கிறவனுக்கு மோஹம் ஏது? சோகம் ஏது?

vi. 𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑍇𑌵𑍈𑌷 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌽
𑌨𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇𑌽𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑍇𑌽𑌨𑌿𑌲𑌯𑌨𑍇𑌽𑌭𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇॥
தைத்திரீயோபநிஷத்.

𑌅𑌭𑌯𑌂 𑌵𑍈 𑌜𑌨𑌕 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋𑌽𑌸𑌿।
பிருஹதாரண்யகோபநிஷத்.

இவை இரண்டின் சேர்ந்த பொருள்: ஆத்மாவை அறிந்தவன் பயமற்ற நிலையைப்பெறுவான்.

vii ஸ-த்யஂஜ்ஞா நமநஂதஂப்ரஹ்ம।
ப்ரஹ்மவித்ப்ரஹ்மைவ பவதி॥—தைத்திரீயோபநிஷத்.

*இதன் பொருள்: பிரஹ்மமானது ஸத்ரூபமாயும், சித்ரூபமாயும், ப்ரிச்சேதமில்லாததாயும் இருக்கிறது. பிரஹ்மத்தை அறிந்தவன் பிரஹ்மமாகவே ஆகிறான்.*

28। யோகாஂகாநுஷ்டாநாதஶுத்திக்ஷயே
ஜ்ஞாநதீப்திரா விவேகக்யாதேஃ॥

**யோகாங்கங்களை அநுஷ்டிப்பதினால், மநத்தின் மலம் குறையக் குறைய, புருஷஸாக்ஷாத்காரம் வரையில், ஞாநப்பிரகாசமானது மேன் மேலும் உண்டாகிறது.**

*குறிப்பு:—ஐந்து வகையாயுள்ள (அவித்தை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம்) விபரீயஞாநம் யோகாங்கங்களான யமம், நியமம், முதலியவைகளைச் சரியாய் அப்பியஸிப்பதினால் குறைவு படுகிறது. அதன் முடிவில் புருஷதர்சநம் ஏற்படுகிறது. யோகாங் கங்களை அநுஷ்டித்தால் பிரகிருதி புருஷ விவேகஞாநம் தானே உண்டாகின்றது. அவ்வநுஷ்டாநத்தால் மநமலம் நீங்கவே, ஸ்வத ஸ்வித்தமான புருஷனின் ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது.*

29. யமநியமாஸநப்ராணாயாமப்ரத்யாஹாரதாரணாத்யாந
ஸமாதயோऽஷ்டாவஂகாநி॥

**யமம், நியமம், ஆஸநம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணை தியாநம், ஸமாதி என்பன யோகமுறையின் எட்டு அங்கங்களாம்.***

*குறிப்பு:—(1) இதில் சொல்லப்பட்டிருக்கிற வரிசையில் முன்னதை அப்பியஸிக்காமல், பின்னதை மாத்திரம் அப்பியஸித் தால் பிரயோஜநமின்று. உதாரணமாக யமம் மாத்திரம் தனித்து*

---

** இயம நியமமே யெண்ணிலா வாதன
நயமுறு பிராணயாமம் ப்ரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியாநஞ் சமாதி
யயமுறு மட்டாங்க மாவது மாமே.—திருமந்திரம்.*

அப்பியஸிக்கலாம். யமம் இன்றி, நியமம் முதலியவற்றை அப்பிய ஸித்தால் பிரயோஜநமுண்டாகாது. அப்படியே யமம், நியமம் இன்றி ஆஸநம் மாத்திரம் பிரயோஜநமின்றாம். அப்படியே பின் னுள்ளவைகளைப்பற்றியும் அறிந்துகொள்க.

(2) முதல் பாதத்தில் பிரஸ்தாபித்துள்ள அப்பியாஸம், வைராக்கியம், வீரியம் முதலியவை யமம் முதலியவைகளுள் அடங் கும். அப்படியே வேதாந்திகள் சொல்லுகிற விவேகம், வைராக்கி யம், ஷட்ஸம்பத்தி, முமுக்ஷுத்துவம் இவைகளும் யமம் முதலிய வைகளுள் அடங்கும்.

30. அஹிம்ஸாஸத்யாஸ்தேயப்ரஹ்மசர்யாபரிக்ரஹா யமா:॥

அஹிம்ஸை, சத்தியம், களவின்மை, இந்திரியநிக்கிரஹம், திரவிய அபேக்ஷையின்மை, இவை யமத்தின் ஸ்வரூபங்களாம்*

குறிப்பு:—அஹிம்ஸை: மநம், வாக்கு, காயத்தால் எவ்விதத்தா லும், எக்காலத்திலும், எப்பிராணிக்கும் ஹிம்ஸை செய்யாதிருத்தல். சத்திய முதலான மற்றையவை அஹிம்ஸை என்ற தர்மத்தைச் சுத்தம்செய்வதற்கும், பூர்த்திபெறச் செய்வதற்கும் ஏற்பட்ட ஸாத நங்கள். அஹிம்ஸை என்ற தர்மத்தைப் பரிபாலிக்காமல் மற்றைய தர்மங்களை அநுஷ்டித்தல் பிரயோஜநமில்லை. அஹிம்ஸை என்ற தர்மம் மற்றைய தர்மங்களின் அநுஷ்டாநமின்றி பூர்த்திபெறு தாகையால், அவைகள் முக்கிய ஸாதநங்களாம்.

ஸத்தியம்:—பிறர் நன்மையின் பொருட்டு, பிரமாணங்களால் கிரகித்து, மநத்தால் நினைத்தபடி வாக்கினால் சொல்லுதல். இதைக் கேட்கிறவன் உள்ளபடி கிரகிக்கும்படியாகச் சொல்லவேண்டும். வஞ்சகமும் கபடமுமுள்ளதாயும், கேட்கிறவன் உள்ளபடி அறி யாமலிருக்கும்படியாகவும் மொழிதல் சத்தியமன்று. உண்மையா யிருப்பினும், பிராணிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய மொழி

*கொல்லான் பொய்கூறான் களவிலா னெண்குண
னல்லா னடக்க முடையா னடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காம
மில்லா னியமத் திடையினின் றானே.—திருமந்திரம்.

மாத்திரம் சத்தியமாகும். உண்மையாயிருப்பினும் தீமைபயக்கக் கூடியவை அசத்தியமேயாகும். ஒருகால் நன்மை உண்டுபண்ணக் கூடியதான பொய்யும் சத்தியத்தின் பெருமையைப் பெறும்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

என்ற குறள் இங்கு கவனிக்கத் தக்கது.

மநுவின் வசநம் இதுவாம்.

ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத்
ந ப்ரூயாத் ஸத்யமப்ரியம்
ப்ரியம் ச நாந்ருதம் ப்ரூயாத்॥

இதன் பொருள்: உண்மைபேசு, அது பிரியகரமாக இருத்தல் வேண்டும். உண்மையான வார்த்தையாயினும், பிரியமின்றேல், அதைச் சொல்லுதலைத் தவிர். பிரியமானதென்று பொய்யைப் பேசாதே.

களவின்மை:—பலாத்காரமாகவாவது, இரஹஸ்யமாகவாவது, பிறர் பொருளை அபஹரிக்காமல் இருத்தலும், அத்தன்மையான சிந்தனையைத் தவிர்த்தலும், இந்திரிய நிக்கிரஹம் அல்லது பிரஹ்மசர்யம், ஸ்திரீகள் பற்றிய காமனைகளைத் தவிர்த்தலுமாகிய இவையே களவின்மையாம். ஸ்திரீகள் பற்றிய காமனைகள்: இது 9 விதமான அங்கங்களையுடையன. (1) ராகத்துடன் ஸ்திரீகளைப் பார்த்தல் (2) ஸ்பரிசித்தல், (3) அவர்கள் வார்த்தைகளைக் கேட்டல், (4) அவர்களைச் சிந்தித்தல், (5) அவர்களைப்பற்றிப் பேசுதல், (6) அவர்களுடன் விளையாடல், (7) அவர்களுடன் பேசுதல், (8) அவர்களைப்பற்றி ஸங்கற்பித்தல், (9) அவர்களுடன் ஸம்ஸர்க்கம் செய்தல் என்பவைகளாம்.

பிரஹ்மசர்யம்:—பிரஹ்ம = வேதத்தை உத்தேசித்து, சர்யம் = நியமங்களை அநுஷ்டித்தல். வேதாத்தியயநம் செய்தலுக்கு, இந்திரிய நிக்கிரஹம் முக்கியமானதால், பிரஹ்மசர்யம என்ற பெயர் இந்திரிய நிக்கிரஹத்திற்கு ஏற்பட்டுவிட்டது.

திரவிய அபேக்ஷை இன்மை:—சரீர யாத்திரைக்கு இன்றியமையாதவைகளைத் தவிர மற்ற விஷயங்களில் பிரவிர்த்தியில்லாமலிருத்தல் என்பது இதன் முக்கிய கருத்து. சொத்தைச் சம்பாதித்தல், அதைப் பேணுதல், அதற்காகப் பிறரை ஹிம்ஸித்தல் இவைகளைத் தவிர்க்கவேண்டும்.

31. ஜாதிதேஶகாலஸமயாநவச்சிந்நா:
ஸார்வபௌமா மஹாவ்ரதம்॥

ஜாதி, தேசம், காலம், ஸமயம் இவைகளின் வரம்புக்குட்படாமல், யோகத்தின் எல்லாப் பூமிகளிலும், யமம் என்ற விரதமானது அநுஷ்டிக்கத்தக்கது. இதைப் பூர்ணமாக அநுஷ்டித்தல் மஹாவிரதமெனப்படும்.

குறிப்பு:—உதாரணமாக, மீன் பிடிக்கிறவன் மீனைமாத்திரம் ஹிம்ஸித்தல் கூடும் என்று சொன்னாலும், மற்றவைகளைத் தவிர்த்தல்—ஜாதி.

கோவில் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் ஹிம்ஸித்தலை விலக்கல்—தேசம்.

அமாவாஸ்யை முதலிய பருவகாலங்களில் தவிர்த்தல்—காலம்.

சிராத்தம் முதலியவைகளில் தவிர்த்தல்—ஸமயம்.

இப்படியே சத்தியம் முதலிய யமங்களையும் சேர்த்துஆராய்ந்து கொள்ளுக.

32. ஶௌசஸந்தோஷதப:ஸ்வாத்யாய
ஈஶ்வரப்ரணிதாநாநி நியமா:॥

பரிசுத்தம் செய்துகொள்ளுதல், ஸந்தோஷம், (தபஸ்) துவந்தங்களைச் சகித்தல், (ஸ்வாத்தியாயம்) யோகஸித்திக்கநுகூலமான மந்த்ரங்

களை ஜபித்தல், (ஈசுவரப் பிரணிதானம்)எல்லாக் கர்மங்களையும் ஈசுவரனிடம் அர்ப்பணம் செய்தல், நியமமாம்.*

குறிப்பு:—பரிசுத்தம் செய்துகொள்ளுதல் இருவகைத்து. ஒன்று பாஹ்ய சௌசம், ஜல முதலியவைகளால் ஸ்தூல சரீரத்தைச் சுத்தி செய்தல். இரண்டாவது ஆந்தர சௌசம், மைத்ரீ, முதிதா முதலிய ஸத் பாவங்களால் மநத்தின் மலத்தை நீக்குதல்.†

ஸந்தோஷம் : கிடைத்ததை வைத்துத் திருப்திபெறல்.

தபஸ் : காயக் கிலேசத்திற்குரிய சாந்த்ராயண விரதத்தை அநுஷ்டித்தல். ஸுகதுக்கங்களான துவந்தங்களை ஸகித்தல்.

மற்றவைகள் சூத்திரத்தின் அர்த்தத்திலேயே விளங்கும்.

**33.** 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌬𑌾𑌧𑌨𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌭𑌾𑌵𑌨𑌮𑍍॥

(யம நியமங்களுக்கு)விருத்தமான சங்கற்பங்களால் தடைகள் நேரிடுமாகில் அச்சங்கற்பங்களின் தோஷங்களை நினைக்கப்பாலது.

**34.** 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌾 𑌹𑌿𑌂𑌸𑌾𑌦𑌯𑌃 𑌕𑍃𑌤𑌕𑌾𑌰𑌿𑌤𑌾𑌨𑍁𑌮𑍋𑌦𑌿𑌤𑌾
𑌲𑍋𑌭𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍋𑌹𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾 𑌮𑍃𑌦𑍁𑌮𑌧𑍍𑌯𑌾𑌧𑌿
𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌦𑍁𑌃𑌖𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌫𑌲𑌾
𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌭𑌾𑌵𑌨𑌮𑍍॥

---

* ஆதியை வேதத்தி னப்பொரு ளாளனைச்
சோதியை யங்கே சுடுகின்ற வங்கியைப்
பாதியுண் மன்னும் பராசக்தி யோடுட
னீதி யுணர்ந்து நியமத்த னாமே.

தூய்மை யருளுண் சுருக்கம்பொ றைசெம்மை
வாய்மை நிலைமை வளர்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே.

தவஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீ ரைந்து
நிவம்பல செய்யி னியமத்த னாமே.—திருமந்திரம்.

குறிப்பு:—ஒண்மதிச்சொல் = பிரணவம். நிவம்=நிபம்=காரணம்.

† 1-ம் பாதம், 33-ம் சூத்திரத்தைப் பார்க்க.

யோகத்திற்குத் தடைகளான ஹிம்ஸை முதலியன, தான் நேரில் செய்தாலும், பிறரைச் செய்யும்படி ஏவினாலும், அதைச் சரியென்று அநுமோதித்தாலும், (எல்லாம் பாபமே யென்றும்), அவை ஆசையினாலாவது, கோபத்தினாலாவது, மோஹத்தினாலாவது உண்டாயினும், அவை அற்பமாயினும், மத்திமமாயினும், அதிகமாயினும் ஏற்பட்டாலும், அவை முடிவில்லாத் துக்கங்களுக்கும், அறிவில்லாமைக்கும் காரணமாகின்றன எனச் சிந்திக்கத்தக்கவை.

குறிப்பு:—(1) *இந்த சூத்திரத்தில் யம, நியமங்களுக்கு விரோதிகளான எண்ணங்களின் ஸ்வரூபத்தையும், அவை உண்டாகும் பிரகாரத்தையும், காரணங்களையும், உட்பிரிவுகளையும், அவைகளின் பயன்களையும் விவரித்திருக்கிறார்.*

(2) *துக்கங்கள் என்றால் துக்கங்களுக்குரிய அநேக ஜந்மங்கள் என்று தாத்பர்யம்.*

35. 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌤𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌵𑍈𑌰𑌤𑍍𑌯𑌾𑌗𑌃॥

அஹிம்ஸை ஸ்திரமாகிப் பூர்ணம் பெறும்பொழுது, அந்த யோகியின் முன்னர் பகைமை போய்விடும்.

குறிப்பு:—*அந்த தர்மத்தை அநுஷ்டிக்கிறவன் முன்னிலையில் பரஸ்பரம் வைரியாயுள்ள ஜீவராசிகளும் கூட விரோதத்தை விட்டு, பரஸ்பரம் அன்பு பாராட்டும். உதாரணம்: பசு, புலி; பாம்பு, கீரி; எலி, பூனை முதலியனவாம். மஹாதேவரின் குடும்பம் இங்கு கவனிக்கத்தக்கது.*

36. 𑌸𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌫𑌲𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌮𑍍॥

ஸத்திய விரதம் ஸ்திரமாகிப் பூர்ணம் பெறவே, யோகியின் வார்த்தை கர்மபலத்தை உண்டுபண்ணும் தன்மையை உடையதாகிறது.

குறிப்பு:—*ஸத்தியம் என்ற தர்மம் பூர்ணமாக ஏற்படவே, யோகியின் வார்த்தை பலிக்கக்கூடியது. விளையாட்டில் சொன்னாலும் கூட அது பலிக்கும். நன்மை, தீமை என்ற இருபலன்களையும் அளிக்கும். அவன் வார்த்தை தவறாது.*

37. 𑌅𑌸𑍍𑌤𑍇𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌰𑌤𑍍𑌨𑍋𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍍॥

களவின்மை ஸ்திரப்பட்டுப் பூர்ணமாகவே, எல்லாவிடத்திலும், எல்லாக் காலத்திலும் ரத்நங்கள் முதலிய எல்லாப் பொருள்களும் அவனையடையும்.

38. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌵𑍀𑌰𑍍𑌯𑌲𑌾𑌭𑌃॥

பிரஹ்மசர்யம் ஸ்திரமாகிப் பூர்ணம் பெறவே, வீர்ய லாபம் உண்டாகும்.

*குறிப்பு:—வீர்யத்தை வியயம் பண்ணுமல் உள்ளே அடக்க, மநத்தெளிவு, புத்திநுட்பம், தைர்யம், பலம் உண்டாகும். அஷ்டஸித்திகள் ஏற்படும்.*

39. 𑌅𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑍇 𑌜𑌨𑍍𑌮𑌕𑌥𑌨𑍍𑌤𑌾𑌸𑌂𑌬𑍋𑌧𑌃॥

பிரதிக்ரஹம் இல்லாமை ஸ்திரமாகிப் பூர்ணம் பெறவே, பிறப்பின் காரணம் தெளிவுபெறும்.

*குறிப்பு:—பிறரிடம் யாதொன்றையும் கிரகிக்காமலும் இச்சிக்காமலும் இருத்தல் ஸ்திரப்படுமாகில், யோகியானவன் பிரகிருத ஜந்மம் உண்டாதலுக்கு யாது காரணம் என்றும், முன் ஜந்மங்களில் தான் செய்த கர்மங்கள் இன்னவை யென்றும், அவை இனி எத்தனை ஜந்மங்களை உண்டுபண்ணுமென்றும், தான் கைவல்யம் பெறும் வரை ஏற்படும் ஜந்மங்கள் இன்னவையென்றும் அறிவான்.*

*பிறர் உதவியை நாடான், என்பதினுல், தான் தனித்து நிற்கும் தகைமையையுடையவனுவான். ஜநநத்தை உண்டுபண்ணும் இரணத்தை இனிச் செய்யான். அதனுல் அவன் மநம் தூய்மை பெறுகிறது. அந்நிலையின் பயனுய்ப் பிறப்பு இன்னதென்பதையும், அதன் பிரகாரத்தையும் (மக்கள், தேவர், நரகர் முதலியவைகள்), பிறப்பின் காரணங்களான கிலேசங்களையும் கர்மங்களையும், அதன் பலனுன துக்கத்தையும், முடிவான புருஷ ஸாக்ஷாத்காரத்தையும் குரு உபதேசத்தால் அறிகிருன்.*

40. 𑌶𑍌𑌚𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌾 𑌪𑌰𑍈𑌰𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌃॥

சௌசம் (சுத்தம்) பூர்ணமாக ஏற்படவே தன் அவயவங்களில் அருவருப்பும், பிறருடன் சேராமலிருத்தலும் உண்டாகின்றன.

குறிப்பு:—இனி, நியமங்களின் ஸித்திகளைச் சொல்லுகிறார். தன் சரீரத்தை அடிக்கடி உள்ளும் புறமும் சுத்திசெய்துவரவே, அதன் ஆராய்ச்சி ஏற்படுகிறது. அதன் தன்மை அசுத்தமென அறிகிறான். அதனால் சரீரத்தின்மேலுள்ள அபிமானம் விட்டு விலகுகிறது. பிறர் சரீரங்களைப்பற்றி இன்னும் அதிகமான அருவருப்பு உண்டாகிறது.

41. ஸத்த்வஶுத்திஸௌமநஸ்யைகாக்ர்ய
ேந்த்ரியஜயாத்மதர்ஶநயோக்யத்வாநி ச

அதனால் (சௌசத்தின் ஸித்தியால்) மநம் சுத்தம் பெறுதலும், அதனால் மநத் தெளிவும், அதனால் மநம் ஒருமைப்படுதலும், அதனால் இந்திரிய ஜயமும், முடிவில் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெறுதலுக்குரிய தகைமையை அடைதலும் ஏற்படுகின்றன.

42. ஸந்தோஷாத் அநுத்தமஸ்ஸுகலாப: ॥

ஸந்தோஷம் என்ற நியமம் ஸித்திபெறுதலினால் உயர்நலமுள்ள ஸுகம் உண்டாகும்.

குறிப்பு:—எல்லா விஷய சுகங்களையும் அநுபவித்தலால் ஏற்படும் ஸந்தோஷத்தைப் பார்க்கிலும், அவைகளில் விருப்பு வெறுப்பு என்ற பற்றில்லாமல் இருத்தலினால் ஏற்படும் ஸந்தோஷம் மிகவும் உயர்நலமுடையது. தைத்தரீய உபநிஷத்தின், ஆநந்த மீமாம்ஸையில் இந்தப் பற்றில்லாமை கடைமுறையில் பிரஹ்மாநந்தத்தைக் கொடுக்கும் என்ற உபதேசமுள்ளது.

43. காயேந்த்ரியஸித்திரஶுத்திக்ஷயாத்தபஸ: ॥

தபஸ்ஸினால் அசுத்தத்திற்குக் காரணமாம் கிலேசங்கள் நசித்துப் போகின்றன. அதன் பயனாகச் சரீரத்திற்கும் இந்திரியங்களுக்கும் ஸித்திகள் ஏற்படுகின்றன.

குறிப்பு:—சித்திகள், அணிமா முதலான* 8 ஸித்திகளும், இந்திரியங்களுக்கு லோகாந்தரத்திலும், தேசாந்தரத்திலும், காலாந்தரத்திலும் நேரிடும் விஷயங்களைப் பார்த்தல், கேட்டல் முதலிய ஸித்திகளும் உண்டாகும்.

44. ஸ்வாத்யாயாதிஷ்டதேவதாஸம்ப்ரயோக:॥

(யோகாநுகூலமான) மந்த்ரங்களை ஜபிக்கிறதினால், இஷ்டமான தேவர்களுடைய ஸாந்நித்தியம் உண்டாகிறது.

குறிப்பு:—மந்த்ர ஜபத்தினால் மந்த்ர அதிஷ்டான தேவர்கள், மந்த்ரத்தைக் கண்டுபிடித்த ரிஷிகள், ஸித்த புருஷர்கள் இவர்கள் இவனுக்கு தர்சநத்தைக் கொடுத்து, அநுக்ரஹம் செய்கிறார்கள்.

45. ஸமாதிஸித்திரீஶ்வரப்ரணிதாநாத்॥

ஈசுவரனைத் தியாநம் செய்வதால் அல்லது ஈசுவரனுக்குத் தன்னை அர்ப்பணம் செய்வதால் ஸமாதியின் ஸித்தி ஏற்படுகிறது.

குறிப்பு:—ஈசுவரத் தியாநத்தால் ஸமாதி பூர்ணம் பெறுதல் உண்டாகிறது. அதாவது யோகியின் பிரக்ஞை விசாலமாகிறது. காலதேசங்களின் வரம்பின்றி எல்லாவற்றையும் அறியும் தகைமையைப் பெறுகிறான்.

ஈசுவரத் தியாநத்தால், ஸமாதி பூர்ணம் உண்டாகிறது என்பதினால் யமம் முதலியவை வேண்டுவதில்லை என்று அர்த்தமில்லை. யமம் முதலியவை மாத்திரம் இருந்து ஈசுவரத் தியாநம் இல்லாவிடில் ஸமாதி ஸித்தி உண்டாகாது என்பது பொருள்.

46. ஸ்திரஸுகமாஸநம்॥

ஆஸநம் என்பது ஸ்திரகரமாயும், ஸுககரமாயும் இருத்தலாம்.

---

| | | |
|---|---|---|
| *அணிமா | = | அணுவைப்போலாதல். |
| மஹிமா | = | மிகவும் பருத்தல். |
| கரிமா | = | இருப்பு மலையினுங் கனத்தல். |
| லகிமா | = | பஞ்சிலும் இலேசாதல். |
| பிராப்தி | = | வேண்டுவனவெல்லாமடைதல். |
| பிராகாமியம் | = | குறைவின்றியிருத்தல். |
| ஈசத்துவம் | = | யாவர்க்கும் தேவனாகுதல். |
| வசித்துவம் | = | யாவரும் வணங்கநிற்றல். |

குறிப்பு:—ஆஸநம் இருவகைத்து, ஒன்று பாஹ்ய ஆஸநம் வஸ்த்ரம், கருப்பு மான்தோல், தர்ப்பை, கம்பளம் முதலியன. இரண்டாவது சாரீர ஆஸநம், பத்மாஸநம், வீராஸநம், பத்ராஸநம், ஸ்வஸ்திகாஸநம், தண்டாஸநம் முதலியன. முந்தியவை சரீரத்திற்குப் புறம்பானவை. பிந்தியவை சரீர அவயவங்களைப் பல விதமாக அமைத்துக்கொள்ளுதலால் ஏற்படுகின்றவை.

47. ப்ரயத்நஶைதில்யாநந்தஸமாபத்திப்யாம்॥

முயற்சியைத் தேயும்படி செய்தலானும், அநந்தன் உபாஸனையாலும் ஆஸநஜயம் உண்டாகும்.

குறிப்பு:—முயற்சியைத் தேயும்படி செய்தல், என்றால், மநம், மெய், மொழிகளால் ஸாதாரணமாய் உண்டாகும் பிரயத்நங்களைத் தடுத்து ஒருமுகப்படுத்தல்.

அநந்தன் = ஆதிசேஷன். பூமியைத் தாங்குகிற 1,000 தலைகளையுடைய ஆதிசேஷனை உபாஸனை செய்வதால், ஆஸந ஜயத்தைப் பெறுகிறான். அநந்தன் ஆஸநத்திற்கு அபிமாநியான தேவதை. புராணவரலாற்றை நீக்கி, அதன்கண் குப்தமாயுள்ள உண்மையை வெளியிடில், பூமிக்கு ஆகர்ஷண சக்தியுண்டு, ஸூர்யனுக்கும் ஆகர்ஷண சக்தியுண்டு. இரண்டும் ஒன்று மற்றொன்றை இழுக்கின்றன. பூமி சிறிது, அதனால் அதன் சக்தியும் சிறிது. சூரியன் பெரிது, அதனால் அதன் சக்தி பெரிது. அக்காரணத்தால் பூமி, சூரியனிடம் வீழ்ந்து போகாமல் தன் நிலையைக் காப்பாற்றிக்கொண்டு தான் இயங்குகின்றது போல, யோகியானவன் பெரிதான பலமான உலகப் பற்றுக்களை ஜயித்து, அந்தர்முகப்பட்டு, மநத்தை ஒருமுகப்படுத்தி ஸ்திரப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஆகர்ஷணசக்தி ஸர்ப்பமாகப் பிரதிகப்படுத்தப்பட்டிருக்கிறது.

48. ததோ த்வந்த்வாநபிகாத:॥

அதனால், (ஆஸந ஜயத்தினால்) துவந்தங்களின் உபத்திரவம் இன்றாம்.

குறிப்பு:—துவந்தங்கள் = சீதோஷ்ண முதலியவைகள்.

49. தஸ்மிந்ஸதி ஶ்வாஸப்ரஶ்வாஸயோர்கதிவிச்சேத:
ப்ராணாயாம:॥

**அதில் (ஆஸந ஜயம் ஏற்படும்போது) சுவாஸத்தின் வரத்துப்போக்கை நிறுத்தல் பிராணயாமமாம்.**

குறிப்பு:—(1) ஆஸந ஜயத்தின் மூலம் சரீரம் ஸ்வாதீநம் ஆகிக்கொண்டுவர, பிராணாயாமம் செய்தல் இயலும். பிராணன் = பிராணனை, ஆயாமம் = நீளும்படி செய்தல்.

ஸாதாரணமாய், உசுவாஸமும், நிசுவாஸமும் நம்முடைய பிரயத்நமின்றி யாதொரு தடையில்லாமல் விரைவாய் நடைபெறுகிறது. பிரயத்நத்தால் அவை அளவுக்குட்பட்டு நடைபெறும்படி செய்தல். அதாவது, உட்கொள்ளும் சுவாஸத்தை விரைவாய்த் தானே செல்லாமல் தடுத்து நீண்டகாலம் நிகழும்படியாகவும் அவ்விதமே உட்கொண்ட சுவாஸத்தை வெளியேறாமல் நீண்டகாலம் தங்கும்படி செய்தலும், பின்னர் நிசுவாஸமாகிய வெளியேறும் சுவாஸத்தை நீண்டகாலம் நிகழும்படி செய்தலும் பிராணயாமம் எனப்படும். உசுவாஸம் = பூரகம், நிறுத்தல் = கும்பகம், நிசுவாஸம் = ரேசகம்.

(2) வெறுமையாக சுவாஸத்தை மேற்கண்டபடி நிகழும்படி செய்தல் மாத்திரம் போதாது. அடியிற்கண்ட மநுஸ்மிருதியின் வசநத்தை அநுஸரித்துச் செய்தல் வேண்டும்.

ஸவ்யாஹ்ருதிம் ஸப்ரணவாம் காயத்ரீம் ஶிரஸா ஸஹ।
த்ரி: படேதாயதப்ராண: ப்ராணாயாம: ஸ உச்யதே॥

இதன் பொருள்: பிரணவத்தோடு கூடிய ஏழு வியாஹிருதிகள், காயத்ரீ, அதன் சிரஸ் இவைகளை மநத்தால் மும்முறை ஜபித்து சுவாஸத்தை நிரோதம் செய்தல், பிராணயாமம் என்பதாம். இது துவிஜர்கள் செய்யவேண்டிய முறை. ஏனையர் அவரவர்கள் இஷ்டதேவதையைத் தியாநம் பண்ணிக்கொண்டு செய்தல் நலமாம்.*

*கும்பகத்தி னுள்ளே குறித்தரனைத் தாளுக்கிற்
றும்பிபோ னிற்குந் தொடர்ந்து. —ஔவைகுறள்.

50. 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌭𑌿𑌃
𑌪𑌰𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌃॥

வெளிப்போகின்ற சுவாஸம் (ரேசகம்) என்ன, உட்கொள்ளும் சுவாஸம் (பூரகம்) என்ன, நிறுத்தப்பெறும் சுவாஸம் (கும்பகம்) என்ன, இவைகளை தேசத்தினலும், காலத்தினலும் எண்ணிக்கையாலும் கவனித்துப் பார்த்து வருதலினல், சுவாஸம் நீண்டதாகவும் சூக்ஷ்மமாகவும் ஆதல் இயலும்.

குறிப்பு:—(1) *ரேசகம் முன் மாசம் 12 அங்குலம் நீண்டது, இந்த மாஸம் 18 அங்குலம் நீண்டது என்றறிவது தேசத்தால் அறிதலாம். முன் மாசம் 2 நிமிஷ காலம் ரேசகம் நிகழ்ந்தது, இந்த மாஸம் 3 நிமிஷ காலம் நிகழ்ந்தது என்றறிவது காலத்தால் அறிதலாம். முன் மாசம் 1 முதல் 10 வரை எண்ணும் வரைக்கும் ரேசகம் நடைபெற்றது, இந்த மாஸம் 1 முதல் 20 வரை எண்ணும் வரைக்கும் ரேசகம் நடைபெற்றது என்றறிவது எண்ணிக்கையால் அறிதலாம். இவ்விதமே, பூரகம், கும்பகம் முதலியவைகளையும் தேசம், காலம், எண்ணிக்கைகளைச் சேர்த்து அறிந்து கொள்ளுக.*

*(2) ஸ்வபாவமாய் ஏற்படும் உசுவாஸ நிசுவாஸங்களை அப்படி நிகழாமல் பிரயத்நத்தால் சிறுகச் சிறுகத் தடுத்து வந்து, கடைமுறையில் கும்பகம் தீர்க்ககாலம் நிகழும்படி செய்தல் தான் பிராணுயாமத்தின் முக்கியக் கருத்தாம். அதனுல், மநம் சலநமற்று ஓய்வைப்பெறும்.*

*(3) ரேசகத்தின் அப்பியாஸத்தில் சுவாஸம் எப்படி நீண்டு வருகிறது என்பதை, பஞ்சு முதலிய மெல்லிய திரவியங்களை மூக்கின் முன்னர் வைத்துப் பரீக்ஷிக்கவேண்டும். பூரகத்தின் அப்பியாஸத்தில் எவ்விதம் சுவாஸம் நீண்டு உட்கொள்ளப்படுகிறது என்பதை, முதல் மாசம் அல்லது வருஷத்தில் மார்பு வரையும், இரண்டாம் மாசம் அல்லது வருஷத்தில் நாபி வரையும், மூன்ரும் மாசம் அல்லது வருஷத்தில் மூலாதாரம் வரையும், பின்னர் கடைமுறையில் சரீரம் முழுமையும் சுவாஸம் எறும்புபோல் ஊரிக்கொண்டு பிரவேசித்து ஸஞ்சரிக்கிறதைக் கவநமாய் ஆராய்ந்து அறியலாம்.*

(4) பிராணன், சாதாரணமாய் சுவாஸம் (பிராணவாயு) என்றாலும், உண்மையில், சரீரத்தின்கண்ணுள்ள எல்லா சக்திகளுக்கும் ஏற்பட்ட பெயர். பிரச்ந உபநிஷத்தில், உலகத்திலுள்ளவைகள் ரயி, பிராணன் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிராணயாம ஜயம் என்றால், அந்தப் பிராணனை ஸ்வாதீநப்படுத்தலாம்.

(5) பிராணவாயு நாஸித்துவாரங்களிரண்டிலும் மாறி மாறி ஸஞ்சரிக்கின்றது. இடது துவாரத்தின் வழியாய்ச் செல்லும் போது, இடைகலை யென்றும், சந்திரன் என்றும், வலது துவாரத்தின் வழியாய்ச் செல்லும் போது பிங்கலை யென்றும், சூரியனென்றும், புருவமத்தியில் அது நிற்கும்போது, ஸுஷும்நா அல்லது சுழிமுனை யென்றும் அக்கினி என்றும் பெயர் பெறும்.*

(6) தமிழ் நூல்களில், முக்கியமாக ஔவையாரது ஞானக்குறளில், பிராணயாமத்திற்கு வாயுதாரணை என்று பெயர் வழங்குகிறது.

(7) சுவாஸமானது நாஸித்துவாரங்களில் நடைபெறுவதில் ஒவ்வொரு நாஸியில் 5 நாழிகை மாறி மாறி நடைபெறும். அப்படி நடைபெறுவதில் 5 பாகமாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகத்திலும் அடியில் வரும் விவரப்படி காலம் செல்லும்.

| | | | |
|---|---|---|---|
| i. | பிருதிவீ | $1\frac{1}{2}$ | நாழிகை |
| ii. | அப்பு | $1\frac{1}{4}$ | நாழிகை |
| iii. | தேயு | 1 | நாழிகை |
| iv. | வாயு | $\frac{3}{4}$ | நாழிகை |
| v. | ஆகாயம் | $\frac{1}{2}$ | நாழிகை |

பிருதிவீ என்றால் இரு நாஸித்துவாரங்களுக்கும் மத்தியில் இருக்கின்ற பாகத்தைத் தழுவிச் செல்லும் சுவாஸத்தின் பெயர்.

அப்பு என்றால் நாஸித்துவாரத்தின் வெளிப்பக்கத்தைத் தழுவிச் செல்லும் சுவாஸம்.

---

*இடைபிங் கலைகள் ரேசக மாற்றில்
அடையும் அரனா ரருள். —ஔவை குறள்.

தேயு என்றால் நாஸித்துவாரத்தின் மேற்பக்கத்தைத் தழுவிச் செல்லும் சுவாஸம்.

வாயு என்றால் நாஸித்துவாரத்தின் கீழ்பாகத்தையொட்டிச் செல்லும் சுவாஸம்.

ஆகாசம் என்றால் துவாரமுழுவதையும் தழுவிச் செல்லும் சுவாஸம்.

இவைகளைப்பற்றி இன்னும் மற்ற விவரங்களை அகஸ்தியர் சர சாஸ்திரத்தில் கண்டுகொள்க. சுவாஸகதியின் மாத்திரை விவரங்களை ஹடயோக பிரதீபிகை முதலிய சாஸ்திரங்களிற் கண்டுகொள்க.

51. ஸ்பாஹ்யாப்யந்தரவிஷயாக்ஷேபீ சதுர்த்த:॥

நான்காவது, (ரேசகம், பூரகம், கும்பகம் இவைகள் நீங்கலான) வெளி (ரேசகம்) உள் (பூரகம்) விஷயங்களின்றி சம்பவிக்கிறது.

குறிப்பு:—ஸாதாரண அப்பியாஸி கும்பகம் பண்ணுதல், ரேசக பூரகங்களின் சம்பந்தத்துடன் நிகழ்வது. இதில் பிரஸ்தாபிக்கப்படுவது கேவல கும்பகம். அதாவது ரேசக பூரகங்களின்றி, நினைத்தமாத்திரத்தில் செய்தலாம். இது உயர்தர நிலையாம்.

52. தத: க்ஷீயதே ப்ரகாசாவரணம்॥

அதனால் (பிராணாயாமத்தினால்) பிரகாசத்தை (புத்தியின் தெளிவை) மறைக்கிற திரையானது வரவர நீங்குகிறது.

குறிப்பு:—(1) பிராணாயாமம் செய்துவருகின்ற யோகியின் புத்தியை மறைக்கிற ஆவரண ரூபமான கர்மமானது வரவரக் குறைவுபடுகிறது. கர்மமானது புத்தியில் ராகத்தை அதிகப்படுத்தி, புத்தியின் ஸத்வகுணத்தை மறைத்து, விஷயாதிகளில் பிரவிர்த்திக்கும்படி செய்கிறது. அதனால், புத்தியின் பிரகாசம் (தெளிவு) குறைகிறது. இதுவே இங்கு ஆவரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முறைப்படி பிராணாயாமம் செய்வதினால், இந்த ஆவரணம் வரவர நீங்கி, புத்தி பிரகாசத்தைப் பெறுகிறது.

" பிராணாயாமத்தைவிட உயர்ந்த தபஸ் வேறில்லை. அதனால் சித்த சுத்தி உண்டாகும். அதனால் ஞானப்பிரகாசம் ஏற்படும்."
—பஞ்சசிகாசாரியர்.

(2) எல்லாப் பாபங்களுக்கும் பிராணாயாமம் பிராயச்சித்தமாக விதிக்கப்பெற்றிருக்கிறது. அது சரீரம், இந்திரியங்கள், மநம் இவைகளிலுள்ள தோஷங்களை விலக்கும். எல்லாப் பிராயச்சித்தங்களிலும் பிராணாயாமம் உயர்ந்தது. மற்றைய பிராயச்சித்தங்கள், சரீரம், இந்திரியங்கள் இவைகளைச் சுத்தம் செய்யும். அவைகளின் பயனாக, மநம் சுத்தம்பெறும். பிராணாயாமமோ, மநத்தை நேராகச் சுத்தம் செய்யும் இயல்பினது. ஈசுவர ஸாக்ஷாத்காரத்தையும் உண்டுபண்ணும்.*

53. தாரணாஸு ச யோக்யதா மநஸ:॥

(பிராணாயாமத்தினால் ஆவரணம் நீங்கவே) மநத்திற்கு தாரணையின் தகைமை உண்டாகிறது.

குறிப்பு:—மநத்தை ஒரு இடத்தில் நிறுத்தல் தாரணையாம். விபூதி பாதம் முதல் சூத்திரத்தில் இதன் விவரம் சொல்லப்பட்டிருக்கிறது.

---

*ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே.

புள்ளினு மிக்க புரவியை மேற்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கு
முள்ளது சொன்னோ முணர்வுடை யோருக்கே.

பிராணன் மனத்தொடும் போரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப் பிறப்பில்லை
பிராணன் மடைமாறி பேச்சறி வித்துப்
பிராண னடைபேறு பெற்றுண் டீர்நீரே.

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே.—திருமந்திரம்.

54. ஸ்வவிஷயாஸம்ப்ரயோகே சித்தஸ்ய ஸ்வரூபாநுகார
இவேந்த்ரியாணாம் ப்ரத்யாஹார:॥

பிரத்யாஹாரம் என்பது, இந்திரியங்கள் விஷயங்களுடன் சம்பந்தமில்லாமல் சித்தத்தினுடைய தன்மையை அநுசரிப்பது போல இருத்தலாம்.

குறிப்பு:—(1) பிராணாயாம அப்பியாஸத்தால் ஆவரணம் பொய்த்துப்போய், மநம் வைராக்யம் பெற்று புருஷ ஸாக்ஷாத்காரத்தை நோக்கி அபிவிருத்தியுள்ளதாக ஆகின்றது. அந்நிலையில் இந்திரியங்கள் விஷயங்களுடன் சம்பந்திக்காமல் மநத்தையே அநுஸரிக்கின்றன. பிரத்தியாஹாரம்: பிரதி= பிரதிலோமமாக, எதிரிடையாக, ஆஹாரம் = பிரவிர்த்திக்கும்படி செய்தல்: அதாவது இந்திரியங்களை விஷய சம்பந்தங்களினின்று பெயர்த்து, அதற்கெதிரிடையாக மநத்துடன் பொருந்தும்படி செய்தல்.

(2) இந்திரியங்களின் சுபாவம் விஷயங்களுடன் சம்பந்தித்தல். அச்சம்பந்தத்தை நீக்கினால், ஸத்துவத்துடன் சம்பந்திக்கும் யோக்யதையின்றி ஜடமாக இருக்கின்றமையால் மநத்துடன் சம்பந்தப்பட்டது போல் (இவ) என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. மநத்திற்கு சத்துவத்தைக் கிரஹிக்கும் யோக்யதை உண்டு.

(3) இராணித் தேனீயானது வெளிக்கிளம்ப, மற்றைத் தேனீக்கள் வெளிக்கிளம்புமாறு போல, மநம் வெளியேற இந்திரியங்கள் அதைத் தொடர்கின்றன.

55. தத: பரமா வஶ்யதேந்த்ரியாணாம்॥

அதனால் (பிரத்யாஹாரத்தால்) இந்திரியங்கள் பூர்ணமாய் வசப்பட்டிருக்கும் தன்மை உண்டாகிறது.

குறிப்பு:—(1) வசப்படுதல், பூர்ணமாய் (பரமமாய்) வசப்படுதல் இவை இரண்டிற்கும் வித்யாஸமுண்டு. சப்த முதலிய விஷயங்களை ராகத் துவேஷமின்றி அநுபவித்தல் இந்திரிய ஜயம் என்கின்றார்கள் சிலர்.

(2) சாஸ்த்ரங்களில் நிஷேதிக்கப்படாத விஷயங்களை அநுபவித்தல் இந்திரிய ஜயம் என்கிறார்கள் வேறு சிலர்.

(3) விஷயங்களின் வசமாகாமல் ஸ்வேச்சையாக அவைகளை அநுபவித்தல் என்கிறார்கள் மற்றும் சிலர்.

(4) ராகத் துவேஷமில்லாமலும், அவைகளின் பயனாகிய ஸுகதுக்கங்களில்லாமலும் தடஸ்தனாக இருந்து விஷயங்களை அநுபவித்தல் இந்திரிய ஜயம் என்கிறார்கள் இன்னும் சிலர்.

(5) ஏகாக்ரதை பெற்ற மநத்துடன் இந்திரியங்கள் ஒருமைப்பட்டபடியால், விஷயங்கள் முன்னிருந்தாலும் அவைகளைக் கிரகிக்காமலிருத்தல் இந்திரிய ஜயம் என்கிறார் ஜைகீஷவ்ய மஹரிஷி.

(6) இந்த ஐந்தாம் அபிப்பிராயத்தைத் தான் பூர்ணமாய் (பரமமாய்) இந்திரியங்களை வசப்படுத்தல் என்கிறார் பகவான் பதஞ்சலியாரும். ஒரு இந்திரியத்தை ஜயித்தால் மற்றைய இந்திரியங்களின் ஜயம் ஏற்படுகிறதில்லை. மநமானது அந்தர்முகப்பட்டு விஷயங்களின் சம்பந்தமின்றி நிரோதம் பெறுங்காலத்தில் எல்லா இந்திரியங்களின் ஜயமும் உண்டாகிறது. இது தான் பரமாவசியம் என மூலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(7) இந்த பாதத்தில் i. கிரியாயோகம் ii. கிலேசங்கள் iii. கர்மங்களின் பரிபாகம், விபாகங்கள் iv. அவைகளின் பயனான ஹேயம் (துக்கம்) v. துக்கம், துக்கத்தின் காரணம், அதன் நிவிர்த்தி உபாயம், அதன் நிவிர்த்தி ஆன நிலை, அதாவது கைவல்யம், இவைகளைப்பற்றிச் சொல்லியிருக்கின்றது.

யமம் முதலிய யோக அஷ்டாங்கங்களில் யமம், நியமம், ஆஸநம், பிராணாயாமம், பிரத்யாஹாரம் என்ற ஐந்து பஹிரங்க ஸாதநங்களும் இந்த பாதத்திலும், தாரணை, தியாநம், ஸமாதி அடுத்த பாதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸாதநபாதம் முற்றிற்று

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

## 3-வது விபூதிபாதம்.*

**1.** தேசபந்தச்சித்தஸ்ய தாரணா॥

**தாரணை என்பது மநத்தை (ஒரு குறித்த) இடத்தில் கட்டுதலாம்.**

குறிப்பு:—(1) மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், நாபிசக்ரம், ஹிருதய புண்டரீகம், பிரஹ்மரந்த்ர ஜ்யோதிஸ், புருவமத்யம், நாஸிநுனி, உள்நாக்கின் நுனி, சரீரத்தில் இவைபோன்ற இடங்களிலாவது அல்லது வெளியிலுள்ள விஷயங்களிலாவது, மநோவிர்த்தியை நிறுத்தல், ஒரே விர்த்தியில் நிற்கும்படி மநத்தைக் கட்டுதல் தாரணை எனப்படும். அடியிற்கண்ட திருமந்திர வசநம் கவனிக்கத் தக்கது.

> கோணா மனத்தைக் குறிகொண்டு கீழ்க்கட்டி
> வீணாத்தண் டூடே வெளியுறத் தானோக்கிக்
> காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
> வாணா ளடைக்கும் வழியது வாமே.

(2) பிராணாயாமத்தினால் வாயுவையும், பிரத்யாஹாரத்தினால் இந்திரியங்களையும் ஜயித்து மநத்தை ஒரு இடத்தில் நிறுத்த முயலவேண்டும். முதலில் பகவானுக்கு எல்லாக் கல்யாணகுணங்களுடன் கூடியவும் பல ஆபரணங்களுடையவுமான ஸ்வரூபத்தைக் கற்பித்து, அதில் நிற்கும் திறமைபெற்ற பின்பு அந்தக் கற்பித்த ஸ்வரூபத்தினின்று ஒவ்வொரு ஆபரணத்தின் குணத்தை ஒன்றின் பின் ஒன்றாய்த் தள்ளி, அந்தந்த ஆபரணமின்றியும் அந்தந்தத் தனித்தனி குணமின்றியுமுள்ள ஸ்வரூபத்தில் மநத்தை நிறுத்த வேண்டும். பின்பு அந்த ஸ்வரூபத்திலும் பல அவயவங்களையும் தள்ளி, நேதிபண்ணிக்கொண்டேபோக, ஒரு நிலையில் ஜ்யோதிஸை யோகியானவன் காண்பான், அதில் மநம் நிற்கும்படி செய்யவே பின்பு அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் எல்லாம்

* ஸம்யமம் என்னப்படும் தாரணை முதலிய அந்தரங்க ஸாதநங்களையும் அவைகளால் பெறக்கூடிய ஸித்திகளையும் இந்த அத்தியாயத்தில் பகவான் பதஞ்சலியார் சொல்லுகின்றார்.

ஒன்றாகும் நிலை சித்திக்கும். அதுவே நிர்விகல்ப ஸமாதி.* ஸ்ரீமாணிக்கவாசகரின் அடியில் வரும் பாசுரம் இங்கு கவனிக்கத்தக்கது.

இன்றெனக்கருளி இருள் கடிந்து
உள்ளத்திலெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிரிது மற்றின்மை.

இது பஹிஷ்பிரபஞ்ச லயசிந்தனையைச் சொல்லுகின்றது.

(3) "நேதி" பண்ணிக்கொண்டு போகும் முறை தன் சம்பந்தமாகவும் வெளிப்பிரபஞ்சம் சம்பந்தமாகவும் நிகழும். அதைத்தான் தன் (யோகியின்) சரீர சம்பந்தமான சக்ரங்கள் என்றும், வெளிப் பிரபஞ்ச சம்பந்தமாக வெளி விஷயங்கள் என்றும் குறிப்பு 1-வது பாராவில் சொல்லப்பட்டுள்ளது. இந்த இரண்டுவித முறைகளைத் தான் கடோபநிஷத்தின் அடியிற் குறிப்பிட்ட மந்திரங்கள் உபதேசிக்கின்றன.

3-ம் வல்லி 10, 11 மந்திரங்கள் பஹிஷ்பிரபஞ்ச லய சிந்தனையையும், 6-ம் வல்லி 7, 8 மந்திரங்கள் ஆந்தரப்பிரபஞ்சமாகிய உள்நோக்கிய லய சிந்தனையையுமாம் என்று அறிக.

2. தத்ர ப்ரத்யயைகதாநதா த்யாநம்॥

அதில் (அவ்விதம் மநம் ஒரு இடத்தில் கட்டுண்டு இருப்பதில்) மநம் ஓரே விர்த்திரூபமாக இருத்தல் தியாநமாம்.

குறிப்பு:—(1) தியாநிக்கப்படும் வஸ்துவில் பிரவாகம்போல இடையறாது மநத்தை இருக்கும்படி செய்தல் தியாநம்.

(2) விஷ்ணு புராணத்தில் கேசித்வஜனுக்கும் காண்டிக ஜநகருக்கும் நடந்த ஸம்வாதத்தில் பின்வரும் விஷயமுள்ளது.

---

* அரித்த வுடலையைம் பூதத்தில் வைத்துப்
பொருத்தவைம் பூதஞ்சித் தாதியிற் போந்து
தெரித்த மனாதிசத் தாதியிற் செல்ல
தரித்தது தாரணை தற்பரத் தோடே.—திருமந்திரம்.

பலவாருன விர்த்திகளைத் தள்ளி ஒரு லக்ஷ்யத்தில் நிகழும் ஏகரூபமான விர்த்திப் பிரவாகம் தியாநமாகும். முற்கூறிய யமம் முதலிய அங்கங்கள் ஸ்திரப்பட்டால் தான் புத்தி ஏகாக்ரதை பெற்று தியாநத்திற்கு யோக்யமாக அமையும்.

(3) பிரத்யாஹாரம் = இந்திரியங்களை ஜயித்தல். தாரணை = ஒரு லக்ஷ்யத்தில் சொற்ப காலம் மநத்தை நிறுத்தல். தியாநம் என்பது ஒரு லக்ஷ்யத்தில் மநத்தை தீர்க்ககாலம் நிறுத்தல். ஸமாதி, தான் நினைத்தபடி 10 நாள், ஒரு மாதம், ஒரு வருஷம் மநத்தை நிறுத்தல். இவ்வாருக விக்ஞாநபிக்ஷு என்பாரின் அபிப்பிராயம்.

(4) தியாநம் பயன்படவேண்டுமாஞல், குறித்த காலம், குறித்த இடம், நியமித்த முறை இவை மாருமல் திநந்திநம் நேர்மையாய்ச் செய்தல் வேண்டும். ஒருநாள் ஒரு இடத்திலும் ஒரு காலத்திலும் ஒரு முறையாகவும் மறுநாள் இவைகளை மாற்றுதலும் அல்லது தியாநம் செய்யாமல் இருத்தலும், வேறு ஒரு நாள் சாவகாசம் அதிகம் உளது என எண்ணி அதிக காலம் தியாநித்தலும் பயன்படாவாம். ஆஞல் தியாநம் நிகழும் காலத்தைச் சிறுகச் சிறுக அதிகப்படுத்திக்கொண்டு போதல் நலம் தரும்.

3. ததேவார்த்தமாத்ரநிர்பாஸம்
ஸ்வரூபசூந்யமிவ ஸமாதி:॥

அந்த தியாநமே, வஸ்து ஸ்வரூபமாக மாத்திரம் தோன்றுவதாயும் தியாநம் தியாநிக்கிறவன் என்ற இரண்டின் ஸ்வரூபமும் இல்லனபோலிருப்பதாயும் நிகழ்கின்ற மநத்தின் நிலையில் ஸமாதி எனப் பெயர் பெறும்.

குறிப்பு:—(1) ஸ்வரூப சூந்யம்போல் : தியாநம், தியாநிக்கிறவன் என்ற ஸ்வரூபங்கள் உள்ளன. அவை அழியவில்லை. ஆஞல் அவைகளின் அறிவு இன்றும் என்பது கருத்து. நிர்மலமான ஸ்படிகம், அதன் சமீபத்தில் உள்ள செம்பருத்திப்புஷ்பத்தின் ரூபமாக அதாவது நிறமாகத் தோன்றுவது போல, நிர்மலமான மநம் அது இலக்ஷிக்கிற வஸ்து ரூபமாக இருப்பதாகத் தோன்றலாம்.

(2) தாரணையில் பல விஷயங்களைத் தவிர்த்து, ஒரு வஸ்துவில் மநம் கட்டப்படுகிறது. தியாநம், ஒரே வஸ்துவை திரிபுடியுடன் சிந்தித்தல். ஸமாதி திரிபுடி அற்று த்யேய ரூபமாக (வஸ்து ரூபமாக) மநம் ஆகுதலாம். அந்நிலையில் தீர்க்க காலம் மநம் இருத்தல் ஸம்ப்ரக்ஞாத ஸமாதி. த்யேய வஸ்துவின் ஞாநம் கூட இல்லாமல் வெகுகாலம் மநம் இருத்தல் அஸம்ப்ரக்ஞாத ஸமாதியாம். இவ்விதமான தாரதம்யங்கள் அறியத்தக்கன.*

4. த்ரயமேகத்ர ஸம்யம:॥

மேற்கண்ட மூன்றும் (தாரணை, தியாநம், ஸமாதி) ஒருங்காக ஸம்யமம் என்று சொல்லப்பெறும்.

குறிப்பு:—ஸம்யம = மநத்தை நன்றாய் அடக்குதல்.

5. தஜ்ஜயாத் ப்ரஜ்ஞாலோக:॥

அதை (ஸம்யமத்தை) ஜயிப்பதால் பிரக்ஞைக்குப் பிரகாசம் உண்டாகிறது.

குறிப்பு:—எவ்வளவுக் கெவ்வளவு ஸம்யமம் ஸ்திரப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பிராந்தி ஸம்சயங்கள் நிவிர்த்தியாகி ஸமாதி பிரக்ஞை நிர்மலமாகிறது.

6. தஸ்ய பூமிஷு விநியோக:॥

அந்த ஸம்யமமானது (உயர்) பூமிகளில் (ஏறுவதற்கு) பிரயோஜநமானது.

---

* மன்மனம் எங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே.

என்ற திருமந்திரம் இங்கு கவனிக்கத்தக்கது.

குறிப்பு:—(1) மேற்கண்ட தாரணை, தியானம், ஸமாதி என்பவைகளில் ஏறியவனுக்கு இனிவரும் யோகபூமிகளில் ஸம்யமம் உபயோகமானது. கீழான பூமிகளை ஸ்வாதீநப்படுத்தாமல் மேல் பூமிகளில் பிரவேசித்தல் இயலாதாம். ஒருகால் ஆயினும் அவைகளில் பிரக்ஞாப் பிரகாசம் நிகழாதாம். கீழான பூமிகளில் சித்திகளில் ஆசைப்பட்டு அவைகளை அப்பியஸிக்கிறவன், (அதாவது தூரதர்சநம், தூரக்கேள்வி முதலியன) மேல் பூமியில் ஏற இயலான். கீழ் பூமி பிரவிர்த்திகளை விட்டு மேல் நோக்கவேண்டும். ஒரு பூமிக்கு அடுத்து மேலாக இன்னபூமி இருக்கிறதென்பது யோகிக்குத் தனக்குத் தானே தெரியவரும். இதை வேறொருவர் உபதேசிக்கவேண்டியதில்லை. முந்திய பூமியில் இருக்கின்றவன் அதன் அநுபவத்தால் இனிவரும் பூமியின் தன்மையைத் தெரிந்துகொள்வான். அந்த உயர்பூமியைத் தர்சித்து ஸந்தோஷிப்பான். ஓர் ஓர் பூமியில் யோகம் ஸ்திரப்படுவதால் மேன்மேலும் யோகம் நலம்பெறும். மேற்கண்ட விஷயங்களில் சில அடியிற்கண்ட சுலோகத்தின் தாத்பரியத்தை வெளிப்படுத்துகின்றன.

"யோகேந யோகோ ஜ்ஞாதவ்யோ
யோகோ யோகாத் ப்ரவர்த்ததே।
யோ அப்ரமத்தஸ்து யோகேந
ஸ யோகீ ரமதே சிரம்॥"

இதன் பொருள்:—(ஒரு பூமியின்) யோகாப்பியாஸத்தினால் (அதன் அடுத்த மேல் பூமி (இத்தன்மையதென) அறியப்படுகிறது. பூர்வபூமியை ஜயிப்பதால் மேலானபூமியில் பிரவேசம் ஏற்படுகிறது. எந்த யோகி யோகாப்பியாஸத்தில் உண்டாகும் சித்திகளில் மயங்கி மோசம் போகானோ, அவன் யோகத்தின் சுகத்தை நீடித்த காலம் அநுபவிக்கிறான்.

(2) பல பூமிகள் என்பது தியானத்தில் பல படிகள் என அறியவேண்டும். முதலில் ஈசுவரனைப் பல ஆபரணங்கள் உள்ளவராகத் தியானிக்கவேண்டும். அந்தத் தியானம் ஸ்திரப்பட அவைகளில் ஒன்றொன்றாய் விட்டு அவரைத் தியானிக்கவேண்டும். பின்பு

எல்லாவற்றையும் முற்றும் விட்டு அவரைத் தியானிக்கவும், பின்பு அவருடைய பல அங்கங்களைத் தியானிக்கவும், பின்பு அவரும் தியானிக்கிறவனும் ஒருவர் என தியானிக்கவும் வேண்டும். அதாவது "ஸோஹம்" "ஹம்ஸ:" என்ற விதமாய் "அவரே நாம்" "நாமே அவர்" என்பதாகத் தியானிக்கவேண்டும். பின்பு இந்தவித துவை நாட்டமும் அற்று, "நான்" என்ற பிரக்ஞை மாத்திரம் நிகழும் நிலைமை வரையில் தியாகம் உயர்கலம் பெறுவதாகும்.*

7. த்ரயமந்தரங்கம் பூர்வேப்ய:॥

முன் சொன்ன (யமம் முதலியவற்றைப் பார்க்கிலும் இவை மூன்றும் (ஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு) அந்தரங்க ஸாதநங்களாம்.

குறிப்பு:—இயமம், நியமம் முதலிய ஐந்தும் சரீரம், பிராணன், இந்திரியம், மநம் இவைகளின் மலங்களை விலக்குகின்றன. தாரணை முதலிய மூன்றும் ஸமாதியின் ஸ்வரூபத்திற்கு ஸாக்ஷாத்தாக உதவுகின்றமையால் அந்தரங்கமெனச் சொல்லப்படுகின்றன.

8. ததபி பஹிரங்கம் நிர்பீஜஸ்ய॥

இவை மூன்றும் கூட, நிர்பீஜ ஸமாதிக்கு (அஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு) வெளிப்படையான ஸாதநங்களாம்.

குறிப்பு:—(1) தாரணை முதலியவை ஓய்வடைந்த நிலையே அஸம்ப்ரக்ஞாத ஸமாதியாகும். இந்நிலையில் தாரணை முதலியவை இல்லாமற் போகின்றன. அதனால் இவை பஹிரங்க (வெளிப்படையான) சாதகங்கள் எனச் சொல்லப்படுகின்றன.

(2) தாரணை முதலியவை யாதேனும் ஒரு விர்த்தியுடன் நிகழ்வது. இவை மூன்றின் அப்பியாஸத்தினால் ஸம்ப்ரக்ஞாத ஸமாதியின் மேன்மையை யோகி அடைகிறான். பரவைராக்யம் என்ற பிரக்ஞா ப்ரஸாதத்தைப் பெறுகிறான். இதனால் அஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு அர்ஹனாகிறான். தாரணை முதலியவை பிரக்ஞாப்ர

---

* நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே.—திருமந்திரம்.

ஸாதத்தை உண்டுபண்ணுகிறதே தவிர ஸாக்ஷாத்தாக அஸம்ப்ரக்ஞாத ஸமாதியை உண்டுபண்ணுகிறதில்லை.

9. வ்யுத்தாநநிரோதஸம்ஸ்காரயோரபிபவப்ராதுர்பாவௌ நிரோதக்ஷணசித்தாந்வயோ நிரோதபரிணாம: ॥

பஹிர்முகமான வாஸனைகள் என்ன, அவைகளைத் தடுக்கின்ற வாஸனைகள் (என்ன அதாவது நிரோத வாஸனைகளென்ன), இவைகள் முறையே தறைதலும் விருத்தி பெறுதலும் (ஏற்படுங்காலத்தில்) நிரோதம் என்ற பூமியில் மநம் இடையறாது நிற்கும். அது நிரோத பரிணமம் (நிரோத விர்த்தியாக மநம் மாற்றம் பெறுதல்) எனப் பெயர் பெறும்.

குறிப்பு:—(1) புருஷன் அசலன். குணம், குணகாரியம் எல்லாம் சலநமுள்ளவை. குணகாரியமான மநமும் சலநமுள்ளதினால், அஸம்ப்ரக்ஞாத ஸமாதியிற்கூட மநம் சலநமுற்றிருக்கும். அதாவது பரிணமம் பெற்று நிகழும். அந்நிலையில் உள்ள பரிணமம் எத்தன்மையது என்பதை இச்சூத்திரம் விளக்குகின்றது.

(2) வ்யுத்தாநம் என்பது மநம் பஹிர்முகப்படுதல். இந்த இடத்தில் அஸம்ப்ரக்ஞாத ஸமாதியை நோக்க, ஸம்ப்ரக்ஞாதஸமாதி பஹிர்முகமாக இருத்தலால், வ்யுத்தாநம் என்பது ஸம்ப்ரக்ஞாத ஸமாதியைக் குறிக்கிறது. நிரோதம் என்பது பரவைராக்யம். இவ்விது ஏற்படுதல் அஸம்ப்ரக்ஞாத ஸமாதி நிலையாம்.

10, தஸ்ய ப்ரசாந்தவாஹிதா ஸம்ஸ்காராத் ॥

அதற்கு (அந்நிலையிலுள்ள மநத்திற்கு) மேற்படி நிரோத ஸம்ஸ்கார அப்பியாசத்தினால், சாந்தநிலை பிரவாகமாக ஏற்படுகிறது.

குறிப்பு:—பிரவாகம் = இடையறாமல் இருத்தல். வ்யுத்தாந ஸம்ஸ்காரம் குறைவுபடவும் நிரோத ஸம்ஸ்காரம் ஸ்திரப்படுதலை இச்சூத்திரம் விளக்குகின்றது.

11. ஸர்வார்த்ததைகாக்ரதயோ: க்ஷயோதயௌ சித்தஸ்ய ஸமாதிபரிணாம: ॥

எல்லா வஸ்துக்களையும் பற்றிச் செல்லும் மநத்தின் தன்மை குறை யவும், ஐகாக்ரியம் பெறும் தன்மை விருத்தியாகவும் மநம் ஸமாதி நிலையைப் பெறுகிறது.

*குறிப்பு:—இது ஸம்ப்ரக்ஞாத ஸமாதியைப் பற்றியது. மநத்திற்கு இரண்டு தன்மைகள் உண்டு. ஒன்று எல்லா வஸ்துக்களையும் கிரகிக்கும் தன்மை. மற்றது ஒரே வஸ்துவினிடம் ஒருமுகப்பட்டிருக்கும் தன்மை. இவைகளில் முன்னது ஸாதாரணமாய் நடைபெறுகிறது, பின்னது குப்தமாக இருக்கிறது. முன்னதை அடக்கி, அல்லது குறைபண்ணிப் பின்னதை வெளிப்படுத்தி விருத்தி செய்தால், ஸமாதி கைகூடும். இதுவே மநம் ஐகாக்ரியம் பெறும் நெறி.*

**12.** 𑌤𑌤𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑍋𑌦𑌿𑌤𑍌 𑌤𑍁𑌲𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑍌
𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌕𑌾𑌗𑍍𑌰𑌤𑌾𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌃 ॥

பிறகு (விக்ஷேபவிர்த்தி குறைந்த பிறகு) சித்தத்தின் சென்ற விர்த்தியும், நிகழும் விர்த்தியும் ஒரே ரூபமாக இருந்தால், மநம் ஏகாக்கிர நிலையைப் பெறும்.

*குறிப்பு:—(1) ஒரே வஸ்துவைப் பார்ப்பதில் அவ்வஸ்துவின் பல பாகங்களைப் பார்த்தால் வித்தியாஸமான விஷயங்கள் மநத்தில் உண்டாகின்றன. அப்படியின்றி ஒரு வஸ்துவின் ஒரே பாகத்தை அதாவது அதன் ஒரே விஷயத்தை மநத்தில் நிறுத்தி அவ்விர்த்தி ரூபமாக மநம் நிற்கும் நிலை மநத்தின் ஒருமுகப்பட்ட நிலை. இந்நிலையில் காலங்கழிதல் தோன்றாது. எவ்வளவுக் கெவ்வளவு காலநிகழ்ச்சி பிரக்ஞைக்கு வராமல் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு மநத்தின் ஏகாக்கிர நிலை உறுதிப்பட்டதென்பதற்கு அறிகுறியாம். சாதாரணமாய் ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றிய சிந்தனை நீடித்து நிகழுமாகில் அப்போது காலநிகழ்ச்சி தோன்றாமல் இருக்கின்றமையைக் காண்கின்றோம், எவ்வளவு காலம் கழிந்துவிட்டது என்று கூடே ஆச்சரியமாகக் காண்கின்றோம். இச்சூத்திரத்தில் அத்தன்மையான நிலையைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. விர்த்தியின் பிரவாகம் ஒரே தன்மையாக நிகழற்பாலது என்பது இச்சூத்திரத்தின் தேர்ந்த பொருள்.*

(2) முன் சூத்திரத்தில் ஸமாதிநிலையைப்பெற முயலுகின்ற மநத்தின் நிலையையும், இச்சூத்திரத்தில் ஸமாதி நிலையைப் பெற்ற மநத்தின் நிலையையும் சொல்லுகிறார்.

13. 𑌏𑌤𑍇𑌨 𑌭𑍂𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌷𑍁
𑌧𑌰𑍍𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌾 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌾 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 ॥

அதனால் (முன் சூத்திரங்களில் மநத்தின் பரிணமங்களைச் சொல்லி விட்டபடியால்) பூதங்களுடையவும், இந்திரியங்களுடையவும் தர்மம், லக்ஷணம், அவஸ்தை என்ற மூன்று பரிணமங்கள் தெளிவாய்ச் சொல்லப்பட்டனவாக ஏற்படுகிறது.

குறிப்பு:—ஒவ்வொரு வஸ்துவும், தர்மம், தர்மி என இருபான்மையதாக நினைக்கற்பாலது. தர்மத்தை உத்தேசிக்க, தர்மி நிலையுள்ளதாகவும், தர்மம் நிலையில்லாததாகவும் இருக்கின்றன. வஸ்துவின் உண்மையான நிலை ஸ்திரமானதாக இருக்கின்றமையால், அது கூடஸ்த தன்மையை உடையது என்று சொல்லப்படுகின்றது. தர்மங்களோ மாறிமாறிக்கொண்டிருக்கும் தன்மையனவாகையால் அவைகள் பரிணமங்கள் எனச் சொல்லப்படுகின்றன. இப்பரிணமங்கள் முப்பான்மையன, தர்மம், லக்ஷணம்,, அவஸ்தை என்பனவாம்.

தர்மம் என்பது வஸ்துவை நோக்கும் காலத்தில் அதன்கண் முன்னுள்ள ஒரு குணத்தின் நிலைமை வெளிப்படுதல்.

அவஸ்தை: அந்நிலைமை விருத்தியடைதலும் அல்லது குறைதலும்.

லக்ஷணம்:ஒரு குணம் அல்லது தர்மம் நிகழும் காலத்தில் மற்றைய தர்மங்கள் சென்றிருக்கலாம், இனிமேல் வரலாம். இதில் கால வித்தியாசம் ஏற்படும்.

உதாரணமாக அந்தக்கரணம் என்பது தர்மி, அதின்கண் வ்யுத்தானம், நிரோதம், ஏகாக்கிரம் என்ற மூன்று தர்மங்கள் ஏற்படுகின்றன. ஒரு தர்மம் நிகழுங் காலத்தில் மற்றைய இரண்டில் ஒன்று அதீதமாகவும் (சென்று போனதாகவும்), மற்றொன்று அநாகதமாகவும் (இனி வரப்போகின்றதாகவும்) இருக்கின்றன. அந்தக்கர

ணத்தை உத்தேசித்து நிகழும் குணம் தர்மபரிணாமம் என்றும், சென்று போனதை அல்லது வரப்போகின்றதை உத்தேசித்து லக்ஷண பரிணாமம் என்றும், நிகழும் தர்மம் விருத்தியடைந்தாலும் குறைந்தாலும் அது அவஸ்தாபரிணாமம் என்றும் சொல்லப்படுகின்றன. இவ்விதமே பூதங்களிலும் இந்திரியங்களிலும் இந்த மூன்று பரிணாமங்கள் ஏற்படுகின்றன. தர்மம் ஒரு குணம் உற்பத்தி அவஸ்தை அதுவே விருத்திப்படுதல் அல்லது குறைவுபடுதல். லக்ஷணம் ஒரு குணம் நிகழ்தல், ஒன்று முன்னமேயே நிகழ்ந்தது, ஒன்று இனி நிகழப்போகின்றது. இவைகளை முறையே ஆங்கில நூல்களில் Causality (காரண காரியபரம்பரை), Space (தேசம்), time(காலம்) என மூன்றாகச் சொல்லப்படுகின்றன. தர்மம், தர்மி என்ற சம்பந்தமானது எப்போதும் ஒரே நிலையுள்ளதன்று. ஒரு தர்மத்தை நோக்க, மற்றொன்று தர்மியாக இருக்கலாம். அந்தத் தர்மியே வேறொன்றை நோக்க தர்மமாக அமைவுறும். தர்மி, தர்மம் என்ற பரம்பரை, காரணகாரியப்பிரவாகத்தில் உள்ளே நோக்கிச் செல்லச் செல்ல கடைமுறையில் மூலப்பிரகிருதி தர்மியாக முடியும். இது சாங்கிய சாஸ்திரத்தின் துணிபு. அத்வைத சாஸ்திரத்தில் கடைமுறையிலுள்ள மூலப்பிரகிருதியான தர்மியே அநிர்வசநீயமான ஈசுவர சக்தி அல்லது மாயை என்ற தர்மமாக ஏற்படும். சிலர் அபிப்பிராயத்தில் தர்மங்களுடைய தொகுதியைத்தவிர தர்மி என்பது தனித்து வேறாக ஒன்றுமில்லை என்பதாம். யோகிகள் மதத்தில் தர்மங்கள் மாறி மாறிக் கொண்டிருந்தாலும் அவைகளை விட வேறாக மாறாததாக ஒன்று உளது என்பதாம். அது தர்மி, தர்மத்தை உடையது.

14. 𑌶𑌾𑌨𑍍𑌤𑍋𑌦𑌿𑌤𑌾𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌪𑌾𑌤𑍀 𑌧𑌰𑍍𑌮𑍀॥

தர்மி என்பது சாந்தம், உதீதம், அவ்யபதேசியம் என்ற தர்மங்களில் நுழைந்துள்ள தொடர்பான வஸ்துவாம்.

குறிப்பு:—சாந்தம் = அடங்கிப்போன, சென்றுபோன. உதிதம்=உற்பத்தியாகின்றன, நிகழ்கின்ற, அவ்யபதேசியம்=சூக்ஷ்மமான, அதனால் சொல்லமுடியாத, குப்தமாயுள்ள, காரணரூபமாயுள்ள, இனி வெளியாகக்கூடிய, அந்தர்கதமாகவுள்ள, இனி வரப்

போகின்றன. மேலும் அவ்யபதேசியம் என்ற வார்த்தை இன்னகாரணத்தினின்று இன்ன காரியம் உண்டாகும் என்பதைச் சொல்லக்கூடாமையைத் தெரிவிக்கும் பொருட்டு உபயோகிக்கப்பட்டிருக்கிறது. "ஸொகாமயத ஐஹஸ்௩ாஂ ப்ரஜாயெயெதி" என்ற தைத்திரீயோபநிஷத் வசநத்தை யநுசரித்து எல்லாக் காரணமும் எல்லாக் காரியமாகவும் ஆகலாம் என்பது பாஷ்யகாரரான வியாஸ ரிஷியின் அபிப்பிராயம்.

அதனால் நீர், நிலம், சீதம், உஷ்ணம் முதலானவைகளின் பரிணாமத்தால், தேசகாலங்களை அநுசரித்து, காரண ரூபமான பீஜத்தில் இருக்கின்ற சிற்சில சக்திகள் விசித்திரமான இலை, மலர், காய், கனிகளாக வெளிப்படுகின்றன. இவைகளைத் தவிர, வெளிப்படாத சக்திகள் அநேகம் குப்தமா யிருக்கின்றன. ஒவ்வொரு காரணத்திலும் எல்லாக் காரியங்களும் உள்ளன. ஆனால் அவை வெளிப்படுதல் கால தேச வர்த்தமானங்களைப் பொறுத்ததாக இருக்கிறது. அநேக சக்திகள் வெளிப்படாமைக்கு அநேக தடைகள் இருக்கின்றன. அத்தடைகளை விலக்கினோமாகில், அச்சக்திகள் வியக்தப்படும். யோகியானவன் அத்தடைகளை விலக்கிக்கொள்ளும் சக்தியையுடையவனாகையால், எந்தக் காரியத்தையும் எந்தக்காரணத்தினின்றும் உண்டுபண்ணுவான்.

15. க்ரமாந்யத்வம் பரிணாமாந்யத்வே ஹேது: ॥

தர்மியின்கண் பரிணமங்கள் வெவ்வேறாக இருத்தலுக்கு (தர்மியில் தர்மங்கள் ஒன்றின்பின் ஒன்றாய்த் தோன்றும்) கிரமம் காரணமாம்.

குறிப்பு:—(1) உதாரணமாக, மண் ஒன்றே பொடியாகவும், பிண்டமாகவும், கடமாவும் இருக்கிறது. "மண் ஒன்று தான் பல நற்கலமாயிடும்" என்ற திருமந்திர வசநம் இங்கு கவனிக்கத்தக்கது. பல மாற்றங்கள் இருந்தாலும் தர்மியாகிய மண் ஒன்றே என்று அறிக. தர்மங்களைத்தவிர, தர்மி என்பதாக வேறு ஒன்று இல்லை என்னும் பக்ஷத்தில், ஒவ்வொரு பரிணாமமும் உண்டாகும் காலத்தில் மண் என்ற ஞாநம் வாராமல் போம். அநுபவத்தில் அப்படியன்று. மண் என்ற ஞாநம் உள்ளது. இப்பரிணாமங்கள் ஒன்றின்பின் ஒன்றாய்

தோன்றலில் ஒருபரிணாமம் தர்மியாகவும் மற்றொன்று தர்மமாகவும் ஏற்படுகிறது. கடாதிகளை நோக்க, மண் தர்மி. ஜலத்தை நோக்க மண் தர்மம். ஜலம் தர்மி. இவ்விதமே தேஜஸ், வாயு, ஆகாசம் பஞ்ச தந்மாத்திரைகள், பூதாதி, அகங்காரம், மஹத்தத்துவம், மூலப் பிரகிருதிவரை ஆராய்ச்சி நிகழில், கீழானது தர்மமாகவும், மேலானது தர்மியாகவும் கடைமுறையில், மூலப்பிரகிருதி தான் பரமதர்மியாக ஏற்படும். இது சாங்கியர்களின் சித்தாந்தம். புருஷனைத் தவிர, மற்றெல்லா வஸ்துக்களும் ஒவ்வொரு க்ஷணத்திலும் பரிணாமமுள்ளவை. அதனால் ஒருவஸ்து புதிதாகத் தோன்றினும் பழமையைப் பெற்று க்ஷீண தசையை அடையினும், சிறுகச்சிறுக மாறுதல் அடைந்து அவ்விதம் தோன்றுதல் ஏற்படுகிறதே அல்லாமல், முன்பின் காரணமின்றி திடீரென, அவ்விதம்தோன்றுதல் இன்றாம்.

(2) சில பரிணாமங்கள் மனத்திற்குப் பிரத்தியக்ஷமானவை, சில பரோக்ஷமானவை. அவைகளில், காமம், சுகம், துக்கம், பிரமாணங்கள் முதலியவை பிரத்தியக்ஷமானவை. நிரோதம் (அஸம்ப்ரக்ஞாத ஸமாதிநிலை, புண்ணியாபுண்ணிய தர்மங்கள், மனதின் வாஸனைகள்) சத்வகுண, ரஜோகுண, தமோகுணங்கள் மேலிடுவதால் உண்டாம் மனத்தின் பரிணாமங்கள், சரீரத்தின்கண் பிராணன் இருக்கின்றநிலை, சரீர சேஷ்டைகளுக்கும் மனச் சேஷ்டைகளுக்கும் உள்ள சம்பந்தம், வஸ்துக்களின் சக்தி, இவை ஏழும் பரோக்ஷமானவை.

16. பரிணாமத்ரயஸம்யமாததீதானாகதஜ்ஞானம் ॥

மூன்று பரிணாமங்க (தர்மம், லக்ஷணம், அவஸ்தை) ளிலும் ஸம்யமம் செய்வதினால் (மனத்தை நிறுத்துவதினால்) சென்ற விஷயங்களினுடையவும், வரப்போகின்ற விஷயங்களினுடையவும் சாக்ஷாத்காரமான ஞானம் உண்டாகிறது.

குறிப்பு:—வஸ்துக்களின் உண்மையான நிலையை அறிந்தால் அதாவது அவைகளின் சூக்ஷ்மமான பரிணாமங்களை அறிந்தால், அவை மூலமாய் முன்பின் அறியலாம். ஸம்யமம்=தாரணை, தியானம், ஸமாதி.

17. ஶப்தார்த்தப்ரத்யயாநாமிதரேதராத்யாஸாத்ஸங்கர
ஸ்தத்ப்ரவிபாகஸம்யமாத்ஸர்வபூதருதஜ்ஞாநம் ॥

சப்தம், அர்த்தம், மநோவிர்த்தி, ஞாநம் இவைகளில் ஒன்றை மற்றொன்றில் ஆரோபம் செய்வதினால், அவைகள் கலந்துபோகின்றன. அவைகளைப் பிரித்துத் தனிப்படுத்திய ஸமயத்தில் அவைகளின்மேல் ஸம்யமம் செய்தால், எல்லாப் பிராணிகளின் சப்தத்தையும் அறியும் தகைமை உண்டாகும்.

குறிப்பு:—வர்ணங்களை (அக்ஷரங்களை) ப்பார்க்க வேறானதாகவும், ஆனால் அக்ஷரங்களால் வ்யங்க்யமாகவும் (வெளிப்படுத்தக்கூடியதாகவும்) நித்தியமாகவும், சூக்ஷ்மமாகவும் உள்ள சப்த நிலைமை ஒன்றுஉண்டு. அதற்கு ஸ்போடம் என்று பெயர். ஸ்போடம்=குமிழி போன்று வெடித்தல். பதஸ்போடம் என்றும், வாக்யஸ்போடம் என்றும் ஸ்போடம் இரண்டு விதம். ஒரு பதத்தைச் சொன்னவுடனே, அதன் ஞாநத்தை உண்டுபண்ணும் தன்மை பதஸ்போடமாம். அவ்விதமே வாக்யத்தின் ஞாநத்தை உண்டுபண்ணும் தன்மை வாக்யஸ்போடமாம். உதாநன் என்ற வாயுவானது மார்பு முதலிய 8 ஸ்தாநங்களுடன் சம்பந்தித்து, எல்லா அக்ஷரங்களையும் உண்டுபண்ணுகின்றது. எல்லா அக்ஷரங்களும் எல்லா அர்த்தங்களையும் கொடுக்கும் இயல்பினவாயினும் அவைகளால் அமைக்கப்பெற்ற பதங்கள், வாக்யங்கள் எல்லா அர்த்தங்களையும் வெளிப்படுத்தாமல், அறிஞர்களுடைய ஸங்கேதத்தால் ஓரோர் பதமும் வாக்யமும் ஓரோர் அர்த்தத்தை மாத்திரம் கொடுக்கின்றன. அப்படி ஸங்கேதத்தினால் ஏற்படும் அர்த்தத்தைத் தவிர்த்து, வர்ணஸ்வரூபமான சப்தத்தில் ஸம்யமம் செய்வதினால், சூத்திரத்தில் கண்டபடி எல்லாப் பிராணிகளின் சப்தத்தையும், அதாவது பாஷையை அறியும் தகைமை உண்டாகும். அதாவது அந்தந்தப் பிராணிகளின் மநத்தில் உண்டாகும் அர்த்தத்துடன் சப்தத்தை அறிய இயலும். இன்ன சப்தம் இன்ன பிராணியினுடையது என்பதை சாதாரணப் பழக்கத்தில் யாரும் அறிதல் கூடும். அதற்கு யோகாப்பியாஸம் வேண்டுவதில்லை.

18. ஸம்ஸ்காரஸாக்ஷாத்கரணாத் பூர்வஜாதிஜ்ஞாநம் ॥

ஸம்ஸ்காரத்தை ஸம்யமம் செய்வதினுல் பூர்வ ஜந்மத்தின் ஞாநம் உண்டாகிறது.

குறிப்பு:—(1) ஸம்ஸ்காரம் இருவிதம். i. சில பிரகிருத அநுபவத்தால் உண்டாகின்றன. ii. சில முன்னநுபவங்களின் ஸ்மரணையால் உண்டாகின்றன.

ஒரு ஸம்ஸ்காரத்தை ஸம்யமம் செய்தலென்ருல், தேச, கால, காரணம் இவைகளுடன் சம்பந்தித்து ஸம்யமம் செய்தால் முந்திய ஜந்மத்தின் ஞாநம் உண்டாகும்.

(2) ஒரு கதை:—ஜைகீஷவ்யர் என்ற ஒரு ரிஷி இருந்தார். அவர் மஹா யோகி. பூர்வம் 10 மஹாப்பிரளயங்களில் தான் இருந்த ஜந்மங்களைத் தொடர்பாய் அறிந்தவர். ஆவட்யர் என்ற வேருரு ரிஷி அடியில் வருமாறு அவரை வினவினர்:— "அடிக்கடி ஜநநம் எடுத்தலினுல் துக்கம் ஏற்படுமே? பல மிருகங்களாகப் பிறத்தலினுல் துக்கம் உண்டாயிருக்குமே? நரக வாதனைகள் என்ன? ஸ்வர்க்காநுபவங்கள் என்ன? மனிதனுகப்பிறத்தலில் துக்கம் அதிகமா, சுகம் அதிகமா?" ஜைகீஷவ்யர் அடியில் வருமாறு மறுமொழி சொன்னர்:—"எல்லாம் துக்கமாகவே இருக்கின்றன. சுகம் இல்லை" ஆனுல், பிரகிருதி லயம் என்பதைச் செய்வதினுல் ஏற்படும சந்தோஷமும் அந்த துக்கத்தில் சேருமோ என்று ஆவட்யர் திரும்ப வினவினர். விஷய சுகத்தை உத்தேசிக்க, இந்த பிரகிருதி லயத்தால் உண்டாகும் சந்தோஷம் உயர்வாக இருப்பினும், கைவல்யத்தை உத்தேசிக்க, இந்த சந்தோஷம் குணத்ரயங்களின் காரியமாகையால் துக்கமே. இதில் திருஷ்ணதந்து(ஆசையின் நூலான தொடர்) இருக்கின்றதே, அதுவும் நீங்கவேண்டும். அப்போதுதான் சுத்த கைவல்யம் ஏற்படும் என மறுமொழி கூறினர்.

19. ப்ரத்யயஸ்ய பரசித்தஜ்ஞாநம் ॥

விர்த்திகளை ஸம்யமம் செய்வதினுல் பிறர் மநத்தில் உண்டாகும் எண்ணங்களை அறியலாம்.

குறிப்பு:— விர்த்திகளை ஸம்யமம் செய்தல் என்பது தன்னுடைய அல்லது பிறருடைய விர்த்திகளை ஸம்யமம் செய்தல் என அறியவேண்டும். மநம் திரிகுணாத்மகம். ஒவ்வொரு தனித்த மநமும் ஔபாதிக பேதம் பெறுகிறது. மநத்திற்கு ஸ்வாபாவிக பேதமில்லை. ஔபாதிக பேதம் யதார்த்தமல்ல. அதனால் மநத்தின் விர்த்திப் பிரவாஹமானது எல்லாருக்கும் ஒரே மாதிரியானது. அதனால் ஒரு விர்த்தியை ஸம்யமம் செய்வதால் எல்லாருடைய எண்ணங்களையும் அறியலாகும். அடுத்த சூத்திரம் இதைத் தெளிவு பண்ணுகிறது.

20. ந ச தத் ஸாலம்பநம் தஸ்யாவிஷயீபூதத்வாத் ॥

அது (மற்றவனுடைய மநோவிர்த்தியை அறிவதானது) விஷயத்துடன் கூடியதல்ல. இவன் (ஸம்யமம் பண்ணுபவன்) விர்த்தியில் அது இன்மையால்.

குறிப்பு:—ஸம்யமம் பண்ணுபவன் மற்றவனுடைய விர்த்தியில் ஸம்யமம் செய்கிறானேயல்லாமல், அவ்விர்த்திக்குக் காரணமான விஷயத்தில் ஸம்யமம் செய்கிறானில்லை. அதனால் மற்றவனுடைய விர்த்தியின் வெளி விஷயம் ஸம்யமம் செய்கிறவனுக்கு நேரில் சாதாரணமாய்த் தெரியாது. ஆனால், அவ்விஷயத்தை அறியவேண்டுமென இச்சித்தால் மற்றவன் விர்த்தியின் மூலமாய் அவ்விஷயத்தில் ஸம்யமம் செய்தால் கூடும்.

21. காயரூபஸம்யமாத் தத்க்ராஹ்யசக்திஸ்தம்பே சக்ஷுஃப்ரகாசாஸம்ப்ரயோகே(அ)ந்தர்தாநம் ॥

ஒரு சரீரத்தின் ஸ்வரூபத்தில் ஸம்யமம் செய்தலினால், அதின் கண்ணிந்திரியத்தினால் கிரஹிக்கக்கூடிய தன்மைக்குத் தடை ஏற்படுகிறது. அதனால் பார்க்கிறவன் கண்ணுக்கும் அந்த சரீரத்திற்கும் சம்பந்தம் அற்றுப்போவதால் அச்சரீரத்திற்கு மறைவு (அந்தர்தாந சக்தி) உண்டாகிறது.

குறிப்பு:—ரூபத்தை கிரஹிக்கும் சக்தியைத் தடுத்தல்: ஒரு வஸ்துவைப் பார்த்தல் என்றால், அந்த வஸ்துவினின்று ரஸ்மியின் சலநம் (Vibrations of ether) வெளிக்கிளம்பிப் போய்ப் பார்க்கும் கண்ணைத் தாக்கி, அக்கண்ணின் திரவியத்தில் ஒரு ஸம்ஸ்காரத்தை

(மாறுதலை)உண்டாக்குகிறது.அதன் காரியமாக மகத்தில் ரூபம் புலப்படுகிறது. தடுத்தல் என்றால் அந்த வஸ்துவினின்று அதன் ரஸ்மியை வெளிப்போகாமல் தடுத்தல், நிறுத்திவைத்தல்; இதனால் பார்க்கிறவன் கண் வஸ்துவைப் பார்க்காமல் போகிறது. இவ்விதமே சப்தம், ரஸம், முதலியவைகளில் ஸம்யமம் செய்தலினால், யோகி தான் பேசுகிற வார்த்தையையும், தான் அநுபவிக்கும் ரஸத்தையும் மாற்றான் அறியாதபடி செய்துகொள்ளலாம்.

22. 𑌸𑍋𑌪𑌕𑍍𑌰𑌮𑌂 𑌨𑌿𑌰𑍁𑌪𑌕𑍍𑌰𑌮𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌤𑌤𑍍𑌸𑌂𑌯𑌮𑌾𑌦𑌪𑌰𑌾-
𑌨𑍍𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌰𑌿𑌷𑍍𑌟𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌾 ॥

(கர்மங்கள் இருவிதம்) உடனே பலனைக் கொடுக்க ஆரம்பித்தவை, வெகு தாமஸத்தில் பலனைக் கொடுக்க ஆரம்பிக்கின்றவை. இவைகளில் ஸம்யமம் செய்வதினால் யோகி, மரணகாலத்தை அறிகிறான். அவ்விதமே அரிஷ்டங்களின் அறிகுறியாலும் (அம்மரணகாலம் தெரியவரும்).

குறிப்பு:—(1) பூர்வஜந்ம கர்மங்கள் இருவகை. i ஸோபக்கிரமம்=சீக்கிரத்தில் பலனைக் கொடுக்கின்றவை, நன்றாய்ப் பிழிந்த ஈரவஸ்திரம் வெய்யிலில் உலர்ந்துவிடுவதுபோல சீக்கிரத்தில் பலனைக் கொடுக்கின்றவை. ii நிருபக்கிரமம்=பிழியாத ஈரவஸ்திரம் வெய்யிலில்லாதவும் காற்றில்லாதவும், அடர்ந்த நிழலில் உலர்வதுபோல தாமஸத்தில் பலனைக் கொடுக்கின்றவை.

(2) மரண காலத்தை அறிதல் என்றால், தேசம், காரணம் முதலியவற்றையும் அறிதலாம்.

(3) அபராந்தம்=சாதாரண ஜநங்களின் மரணம். பராந்தம்=பிரஹ்மாவின் பிரளயம். தாமஸத்தில் பலனைக் கொடுக்கும் கர்மங்களைக்கூட யோகியானவன் தன் யோகபலத்தால் அநேக சரீரங்களை எடுத்துக்கூட சீக்கிரத்தில் அப்பலன் நிகழும்படி செய்துகொள்ளுகிறான். பட்டினத்தடிகள் 7½ நாட்டுச் சநி தசையின் கஷ்டங்களை 7½ நாழிகைகளில் அநுபவிக்கும்படி செய்துகொண்டமை இங்கு கவனிக்கத்தக்கது.

(4) அரிஷ்டங்கள் சம்பவங்கள் பயமுறுத்தும் தன்மையன வாக இருக்கின்றமையால் அப்பெயர் ஏற்பட்டது. இவை மூன்று விதம்:—ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம்.

ஆத்யாத்மிகம்: உதாரணமாகக் காதை மூடினால் ஒருவித சப்தம் சாதாரணமாய்க் கேட்கிறது. மரணம் சமீபித்தால், அவ்விதம் கேட்காது. கண்களின் பக்கங்களை அழுத்தினால் சாதாரணமாய்த் தோன்றும் ஜ்யோதிஸ் தோன்றாது. மரணத்திற்கு 6 மாதத்திற்கு முன்முதல் துருவநக்ஷத்திரம் தெரியாமற்போம். சாயா புருஷ தர்சநத்திலும், இந்திரதநுவிலும் அநேக விபரீதமானதோற்றங்கள் உண்டாகும். அவை மரணத்தின் அறிகுறிகளாம். பின்னும் இவை போன்றவை.

ஆதிபௌதிகம்: யமதூதர்கள் வருதல் போன்ற தோற்றம், நிஷ்காரணமாய் முன்னிறந்தவர்களின் தர்சநம்.

ஆதிதைவிகம்: ஸ்வர்க்கலோகதர்சநம். ஸித்தர்களின் காட்சி. வழக்கமாய்ப் பார்க்கும் ஒவ்வொன்றும் இந்த லோகத்தின் அநுப வத்தில் தலைகீழாய்த் தோன்றும்.

23. மைத்ர்யாதிஷு பலாநி ॥

மைத்ரீ முதலான (கருணா, முதிதா) பாவனைகளில் ஸம்யமம் செய்தால் விசேஷ சக்திகள் உண்டாகின்றன.

குறிப்பு:—முதலான என்ற பதம் கருணை, முதிதா * என்பவை களைக் குறிக்கின்றது. உபேக்ஷை என்பது இதில் சேரவில்லை. உபேக்ஷை என்பது பாபிகளுடைய நன்மை தீமைகளைக் கவனியா மல் இருத்தல். அது அபாவரூபம். அதனால் உபேக்ஷை என்பது ஸமாதியில் சேரவில்லை. யோகிக்கு இந்த ஸம்யமத்தினால் மைத்ரீ முதலிய நற்சுபாவங்கள் விருத்தியடைகின்றன. மேலும், தான் சங்கற்பித்தால், பிறரிடமும், இச்சுபாவங்களை உண்டுபண்ண இயலும். ரிஷிகளின் ஆசிரமத்தைச் சுற்றி வைரியான பிராணிகள் கூட ஒன்றோடொன்று சிநேகம் பாராட்டுகின்றன என்று புரா ணங்களில் பார்க்கிறோம். அதற்குக் காரணம், ரிஷிகள் தங்களு

* முதலாம் பாதம் 33-வது சூத்திரம் பார்க்க.

டைய மைத்ரீ, கருணா, முதிதா என்ற பாவனைகளைத் தங்களைச்சுற்றி எங்கும் பரவும்படி செய்கின்றமையால் என்றறிக.

24. 𑌬𑌲𑍇𑌷𑍁 𑌹𑌸𑍍𑌤𑌿𑌬𑌲𑌾𑌦𑍀𑌨𑌿 ॥

எதன் பலம் வேண்டுமென்று நினைத்து அதில் ஸம்யமம் செய்யப்படுகிறதோ அந்த பலம் கிடைப்பதாகும். யானை முதலியவையின் பலம் உண்டாகும்.

குறிப்பு:—முதலியவை = கருடன், ஹநுமான், ஸிம்ஹம் என்பவையாம். மநந்திற்கு ஸ்வயமாக எல்லாவித ஸாமர்த்தியமும் இருப்பதால், இத்தகைய சக்திகள் உண்டாகின்றன.

25. 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌲𑍋𑌕𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌟𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 ॥

ஜ்யோதிஷ்மதீ என்ற பிரவிர்த்தி காலத்தில் இருக்கும் புத்தியை ஒரு வஸ்துவை நோக்கிச் செலுத்தினால், சூக்ஷ்மமான வஸ்துக்கள், மறைந்த வஸ்துக்கள், தூரத்தில் உள்ள வஸ்துக்கள் இவைகளின் ஞானம் உண்டாகும்.

குறிப்பு:—ஜ்யோதிஷ்மதீ என்பதைப்பற்றி முதல்பாதம் 36-ம் சூத்திரத்தைப் பார்க்க. இந்த சூத்திரம் ஸூக்ஷ்ம திருஷ்டி, தூர திருஷ்டி முதலிய ஸித்திகளைப் பற்றியது.

26. 𑌭𑍁𑌵𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑍇 𑌸𑌂𑌯𑌮𑌾𑌤𑍍 ॥

சூரியனில் ஸம்யமம் செய்வதினால் புவநங்களின் ஞானம் உண்டாகிறது.

குறிப்பு:—(1) புவநங்கள் = லோகங்கள். பவநங்கள் = ஜீவிக்கும் இடம், கிரஹங்கள் = Planets.

i. லோகங்கள் ஏழு. தெற்கேயுள்ள அவீசி முதல் வடக்கே மேருவரை பூமி. மேரு முதல் துருவ நக்ஷத்திரம் வரை அடங்கிய நக்ஷத்திரங்களின் மண்டலங்கள் உள்பட புவர்லோகம்— 2. அதன்மேல் ஸுவர்லோகம்—3. இது 5 படிகள் உடையது. ஸ்வர்க்கலோகத்திற்கு மஹேந்த்ர லோகமென்றும் பெயர். பிரஜாபதியை தேவதையாகவுடைய மஹர்லோகம்—4. இது ஜ்யோதிர்மயமானது. இதற்குமேல் 3 படிகளையுடைய பிரஹ்மலோகம். அதாவது, ஜநோலோகம், தபோலோகம், ஸத்தியலோகம.

ii அவீசிக்கு மேல் 6 வித நரகங்கள் உள்ளன: (1) மஹாகால (2) அம்பரீஷா (3) ரௌரவ (4) மஹாரௌரவ (5) காலசூத்திர (6) அந்ததாமிஸ்ர. முதலாவதான நரகம் கரமானது. அது பூமி. இரண்டாவது ஜலத்தன்மையானது. மூன்றாவது அக்நிமயமானது. நான்காவது வாயுமயமானது. ஐந்தாவது ஆகாசரூபமானது. ஆறுவது அதிக இருள் உள்ளது. ஜீவர்கள் இந்த 6 நரகங்களில் தங்களுடைய துஷ்கர்ம பலன்களை அநுபவிக்க வெகுகாலம் ஒரே ஜந்மத்தில் இருந்துகொண்டு வசிக்கிறார்கள்

iii ஷை நரகங்களுக்குக் கீழாக 7 பாதாள லோகங்கள் உள்ளன: (1) மஹாதல (2) ரஸாதல (3) அதல (4) ஸுதல (5) விதல (6) தலாதல (7) பாதள. இந்த 7 லோகங்களான த்வீபங்களுடன் கூடிய இப்பூமியானது 8-வது என்று சொல்லப்படுகிறது. மேல் ஏழு லோகஙகள், கீழ் ஏழு லோகங்கள், இவைகளில் மேலிருந்தும் கீழிருந்தும் பார்த்தால் 8-வது பூமியாம். இந்த பூமியின் மத்யபாகத்தில் மேரு மலை இருக்கிறது. * அது ஸுவர்ணமயமானது. அதின் சிகரங்கள் வெள்ளி, பச்சை, ஸ்படிகம், ஸுவர்ணம், நாநாவிதமான மணிகள் இவைகளாலானவை போல் தோன்றுகின்றன. இந்த மேரு மலைக்குத் தென்பார்சத்தில் நாவல்பழம் போன்ற உருண்டைவடிவான பூமி இருக்கின்றமையால், இப்பூமிக்கு நாவலந்தீவு (ஜம்பூத்வீபம்) என்ற பெயர் அமைந்திருக்கிறது. ஸூர்ய சலநத்தினால் இராப்பகல் என்ற காலவித்யாஸத்திற்கு இஃது உட்பட்டிருக்கிறது. மேருவுக்கு வடக்கில் 3 மலைகள் இருக்கின்றன. அவைகளுக்கு வெளுப்பு, கறுப்பான கொடுமுடிகள் உள்ளன. அந்த மூன்று பர்வதங்களின் மத்தியில் மூன்று வர்ஷங்கள் இருக்கின்றன (வர்ஷம் என்றால் கண்டம்) :— (1) ரமணகம் (2) ஹிரண்மயம் (3) உத்தரகுரு. மஹாமேருவிற்குத் தெற்கே (1) நிஷதம், (2) ஹேமகூடம் (3) ஹிமாசலம் என்ற மூன்று மலைகள் இருக்கின்றன. இம்மூன்று மலைகளை அடுத்தடுத்து அததன் சார்பில் ஒரு வர்ஷமாக 3 வர்ஷங்களிருக்கின்றன. அவையாவன: ஹரிவர்ஷம், கிம்புருஷம், பாரதவர்ஷம். மேருவிற்குக்கிழக்கே பத்ராசலம், என்ற ஒரு வர்ஷமிருக்கின்றது. மால்யவாந் என்ற மலை அதன் கிழக்கெல்லை. மேருவுக்கு

* இதுவே பூமியின் நாராசம் (Axis).

மேற்கே கேதுமாலம் என்ற வர்ஷம் கந்தமாதந பர்வதம் வரையில் விஸ்தரித்திருக்கிறது. பத்திராசலம், கேதுமாலம் என்ற வர்ஷங்களுக்கு மத்தியில் இளாவர்ஷம் என்றது இருக்கிறது. மேருவைச் சுற்றி இந்த 9 வர்ஷங்கள் இருக்கின்றன. இந்த 9 வர்ஷங்கள் அடங்கியது ஜம்பூத்வீபம். அதன்நீளம் லக்ஷயோஜந தூரம், அதன் இரண்டு மடங்கு விஸ்தாரமுள்ள லவணஸமுத்ரத்தால் அது சூழப் பெற்றிருக்கிறது. இதற்கப்பால் 6 த்வீபங்கள் இருக்கின்றன. அவைகளாவன:— சாகம், குசம், கிரௌஞ்ச, சால்மலி, பிலக்ஷ. புஷ்கர. அவைகள் முறையே கருப்பஞ்சாறு, கள்ளு, நெய், தயிர் பால், சுத்தஜலம் இவைகளாலாய ஸமுத்ரங்களினால் சூழப்பெற்றிருக்கின்றன. இந்த ஏழு த்வீபங்களும் * 50 கோடி யோஜந விஸ்தீர்ணமுள்ளதாக இருக்கின்றன. இவைகள் (இந்த பூமி உள்பட) அண்டத்தின் மத்தியில் இருக்கின்றன. இந்த 14 லோகங்கள் உள்ள இந்த அண்டமானது மினுமினுப் பூச்சியைப்போன்று மூலப் பிரகிருதியின் சூக்ஷமமான அவயவம். அந்த அண்டத்தில் பாதாளம் ஸமுத்ரம், பர்வதங்கள் இவைகளில் தேவர்கள் வகுப்பில் சேர்ந்த அஸுரர்கள், கந்தர்வர்கள், கிந்நரர்கள், கிம்புருஷர்கள், யக்ஷர்கள் ராக்ஷஸர்கள், பூதங்கள், பிரேதங்கள், பிசாசங்கள், அபஸ்மாரகர்கள் அப்ஸரஸ்கள், பிரஹ்மராக்ஷஸர்கள், கூஷ்மாண்டர்கள், விநாயகர்கள் இவர்கள் வாஸம் பண்ணுகிறார்கள். மற்ற இடங்களில் புண்ணியரான தேவ, மநுஷ்யர்கள் வாஸஞ்செய்கிறார்கள். மேரு பர்வதத்தில் தேவர்கள் விளையாடும் தோட்டமும் அதில் தேவர்கள் கூடும் சபாமண்டபமும் இருக்கின்றன அதன் பெயர் ஸுதர்மா. ஸுதர்சநம் என்றொரு பட்டணமிருக்கிறது. திரிதசர்கள் (மூன்று அவஸ்தைகளையுடையவர்கள், அதாவது பால்யம், யௌவநம், கௌமாரம் என்ற மூன்று தசைகளையுடையவர்கள்), அக்நிஷ்வாத்தர்கள், யாம்யர்கள், துஷிதர்கள், அபரிநிர்மிதவசவர்த்திகள், பரிநிர்மித வசவர்த்திகள் ஆகிய இந்த 6 தேவ ஜாதிகள் மஹேந்த்ர லோகத்தில் வஸிக்கிறார்கள். இதுவே ஸ்வர்க்க லோகம். இவர்கள் நினைத்த மாத்திரத்தில் காரியங்கள் செய்கிறவர்கள்.

---

* இவைகளைப்பற்றி "மனிதனின் வம்சாவளியின் உண்மை" என்ற புஸ்தகத்தைப் பார்க்க.

இவர்கள் அணிமாதி ஐசுவர்யமுள்ளவர்கள். ஒரு மன்வந்தரம் வரை ஆயுஸ் உள்ளவர்கள், காமருகர்ச்சியுள்ளவர்கள், ஸங்கல்பத்திஞல் மாதாபிதாக்களின் ஸம்பந்தமின்றி சரீரங்களை உண்டுபண்ணிக்கொள்ளுகிறவர்கள். அப்ஸரஸ்த்ரீகளால் சூழப்பட்டிருக்கிறார்கள்.

மஹர்லோகத்தில் (பிரஜாபதியின் லோகத்தில்) 5 வகை தேவர்கள் இருக்கிறார்கள்; (1) குமுதர்கள் (2) ரிபுக்கள் (3) பிரதர்தநர்கள் (4) அஞ்சநாபர்கள் (5) பிரசிதாபர்கள். இவர்கள் பஞ்ச மஹா பூதங்களை வசத்திலுடையவர்கள். தியாநத்தை ஆகாரமாகவுடையவர்கள். 1000 கல்பம் வரை ஆயுஸ் உள்ளவர்கள்.

பிரஹ்மாவை அதிபதியாகவுடைய ஜநோலோகத்தில் வஸிக்கிற தேவர்கள் 4 விதம்:— (1) பிரஹ்மபுரோகிதர்களுக்கு 1000 கல்பம் ஆயுஸ், (2) பிரஹ்மகாயிகர்களுக்கு 2000 கல்பம் ஆயுஸ், (3) பிரஹ்ம மஹாகாயிகர்களுக்கு 4000 கல்பம் ஆயுஸ், (4) அமரர்களுக்கு 8000 கல்பம் ஆயுஸ். இவர்கள் பஞ்சமஹாபூதங்களையும் இந்த்ரியங்களையும் வசப்படுத்தினவர்கள். முன்னவரைவிடப் பின்னவர் 2 மடங்கு ஆயுளை அதிகமாக உடையவர்கள்.

தபோலோகத்தில் உள்ளவர்கள் 3 வகை:—(1) அஹாஸ்வரர்கள் (2) மஹாஹாஸ்வரர்கள் (3) ஸத்தியமஹாஹாஸ்வரர்கள். இவர்கள் பூதங்கள், இந்திரியங்கள், பஞ்சதந்மாத்திரைகளை வசப்படுத்தினவர்கள். ஜநோலோகத்தில் வஸிக்கின்ற அமரர்களைவிட, தபோலோகத்திலுள்ள இம்மூன்று வகுப்பினரும், முறையே முன்னவரைக் காட்டிலும் பின்னவர் 2 மடங்கு ஆயுளை உடையவர்கள். முன்போல விவரித்துக்கொள்ளுக. இவர்கள் ஊர்த்வரேதஸ்களை உடையவர்கள். மேல் லோகங்களிலும் கீழ்லோகங்களிலும் ஆவரணமில்லாதவர்கள். எல்லாவற்றையும் அறியக்கூடியவர்கள்.

ஸத்யலோகத்திலுள்ளவர்கள் 4வகையினர். 'தமக்கு' என்றுதேசம், வாஸஸ்தானம் இல்லாதவர்கள். யாதொரு ஆதாரமுமில்லாதவர்களாய் தம் ஸ்வரூபத்திலுள்ளவர்கள்:—(1) அச்யுதர்கள். (2) சுத்த நிவாஸர்கள். (3) ஸத்யாபாக்கள். (4) ஸஂஜ்ஞாஸஂஜ்ஞிர்கள். இவர்கள் முறையே ஸவிதர்க்கம், ஸவிசாரம், ஆநந்தம், அஸ்மிதை

இந்நான்கு முறையாக தியானத்தைச் செய்கின்றவர்கள். இவர்கள் மூலப்பிரகிருதியைத்தம்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள்.

மேற்கண்ட லோகங்களெல்லாம், ஒரு பிரஹ்மாண்டத்திற்குட் பட்டவைகள். அவைகளிலுள்ளவர்கள் அதைக் கடந்துபோக இயலாதவர்கள். விதேஹர்கள், பிரகிருதிலயர்கள் இவ்விருவரும் பிரஹ்மாண்டத்தைக் கடந்தவர்களாகையால், மேற்கண்டவர்களில் சேரவில்லை. மேற்கண்ட விஷயங்கள் ஸூர்யனிடத்தில் ஸம்யமம் செய்வதினால் யோகிக்குத் தெரியவரும்.

27. சந்த்ரே தாராவ்யூஹஜ்ஞாநம் ॥

சந்திரனிடத்தில் ஸம்யமம் செய்வதினால் நக்ஷத்ரங்களின் அமைப்பை யறியலாம்.

குறிப்பு:—ஸூர்யனின் காந்தி நக்ஷத்ரங்களின் காந்தியைக் கீழ்ப்படுத்தலினால், ஸூர்யனின்மேல் ஸம்யமம் செய்தால், நக்ஷத்ரங்களைப்பற்றிய ஞானம் உண்டாகாது.

28. த்ருவே தத்கதிஜ்ஞாநம் ॥

துருவநக்ஷத்ரத்தினிடத்தில் ஸம்யமம் செய்வதினால் நக்ஷத்ரங்களின் கதிகளை (சலநங்களை) அறியலாம்.

குறிப்பு:--முந்திய சூத்திரத்தில் நக்ஷத்திரங்களின் அமைப்பும், இதில் அவைகளின் கதியும் சொல்லப்பட்டிருக்கின்றன.

29. நாபிசக்ரே காயவ்யூஹஜ்ஞாநம் ॥

(நம் சரீரத்திலுள்ள) நாபிசக்ரத்தில் ஸம்யமம் செய்வதினால் சரீரத்தின் அமைப்பை அறியலாம்.

குறிப்பு:—இதுவரை வெளியிலுள்ள விஷயங்களுடைய ஸித்தியைச் சொன்னார். இனி சரீரத்திற்குள்ளே உள்ள விஷயங்களின் ஸித்தியைச் சொல்லுகிறார். நாபியானது சரீரத்தின் மத்தியிலிருக்கிறது. அது வேர்க்கிழங்கு போலிருக்கின்றமையால் நாபிகந்தம் என்று பெயர். சரீரத்தின் அமைப்பு:—தோல், ரக்தம், மாம்ஸம், நரம்புகள் (ஸ்நாயு), அஸ்தி, மஜ்ஜை, வாதம், பித்தம், சிலேஷ்மம்,

சுக்லம் ஆகிய இப்பத்தும் சரீரத்திலுள்ளன. இவைகளில் மூன்னுள்ளது பிந்தியதற்குப் புறம்பேயுள்ளது.

30. 𑌕𑌣𑍍𑌠𑌕𑍂𑌪𑍇 𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌪𑌿𑌪𑌾𑌸𑌾𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 ॥

(கண்டகூபத்தில்) கழுத்திலுள்ள கண்டநாளத்தில் ஸம்யமம் செய்வதினால் பசி தாகங்களின் நிவிர்த்தி உண்டாகும்.

31. 𑌕𑍂𑌰𑍍𑌮𑌨𑌾𑌡𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌮𑍍 ॥

கூர்ம (ஆமை போன்ற) நாடியில் ஸம்யமம் செய்வதினால் (மநம்) ஸ்திரமான இருப்பைப் பெறலாம்.

குறிப்பு:—இந்நாடி கழுத்துக்குக் கீழ் மார்பில் உள்ளது. இது ஸர்ப்பத்தையும் உடும்பையும் போலுள்ளது. விக்ஞாந பிக்ஷு என்பார் அபிப்பிராயப்படி மண்டலாகாரமாக இருக்கின்ற ஹிருதயமே கூர்மாகாரமாக இருக்கின்றது. அதுவே இங்கு சொல்லப்படுகிறது. மற்றவர்கள் அபிப்பிராயத்தில் அது வேறுநாடி, ஹிருதயமன்று.

32. 𑌮𑍂𑌰𑍍𑌧𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥

சிரஸில் உள்ள ஜ்யோதிஸில் ஸம்யமம் செய்வதினால், ஸித்தர்களை நேரில் பார்க்கலாம்.

குறிப்பு:—ஸித்தர்கள் பூமிக்கும் அந்தரிக்ஷத்திற்கும் மத்தியிலிருக்கிறார்கள்.

33. 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌭𑌾𑌦𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 ॥

பிராகிருதி புருஷ விவேகம் உதயமாவதற்குமுன், முன் சொன்ன ஸம்யமம் இன்றியே எல்லாவற்றையும் அறியக்கூடியது.

குறிப்பு:—முன் என்றால், பிரகிருதி புருஷவிவேகம் உதயமாகும் சமயத்தில் எனப் பொருள்படுகிறது. பிராதிபம் என்று மூலத்தில் உள்ளது. அந்நிலையை அடைந்தவன் ஸம்யமம் செய்யாமலே எல்லாவற்றையும் அறிவான்.

(2) இந்த பிராதிபம் என்பது தாரகஞானம் என்று சொல்லப்பெறும். இது மோக்ஷத்திற்குக் கொண்டுவிடும். இதற்கு அடுத்த படியைப்பற்றி 54-ம் சூத்திரத்தைப் பார்க்க.

(3) முன் சொன்ன ஸம்யமம் எல்லாம், அப்பியாஸி தன் அநுஷ்டாநம் ஸரியா அல்லது பிழையா என்று திர்மாணித்துக்கொள்ளப் பரீக்ஷை போன்றவையாம். மேற்படியில் இருக்கின்ற யோகியானவன் புருஷ விவேகம் பெறுமுன், சூரியன் உதயமாகுமுன் உடைத்தாயிருக்கின்ற ஞாநத்திற்கு, அருணோதயம் போன்றதான ஞாநம் பிராதிபம் என்று பெயர். பின்பு அடுத்த சூத்திரத்தில் புருஷ ஞாநம், பூர்ணம் எவ்வித உபாயத்தால் ஏற்படும் என்பதை விவரிக்கின்றார்.

34. 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑌂𑌵𑌿𑌤𑍍 ॥

ஹிருதயத்தில் ஸம்யமம் செய்தலினால் மநத்தின் ஸ்வரூபஞாநம் உண்டாகிறது.

குறிப்பு:—சரீரத்திற்குப் பிரஹ்மபுர மென்று பெயர். அதின் ஹிருதய ஆகாசத்தில் அந்தக்கரணம் இருக்கிறது. அது ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இருப்பிடம். அந்த இடத்தில் ஸம்யமம் செய்தலினால் வாஸனையுடன் கூடிய மநத்தின் உண்மையான ஸ்வரூபம் தெரியவரும்.

35. 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌰𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌣𑌯𑍋𑌃
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑍋 𑌭𑍋𑌗𑌃 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥
𑌸𑌂𑌯𑌮𑌾𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 ॥

உண்மையில் வேறு வேறான ஸத்வம் (புத்தி) என்ன, புருஷன் என்ன இவை இரண்டையும் ஒன்றேடொன்று சேர்த்து அறிவதானது போக(த்திற்குக் காரண)மாம். (இந்த போகமானது) ஸத்வத்திற்கு ஸாதகமன்று. மற்றதற்கு (புருஷனுக்கு) ஸாதகமாம். புருஷஸ்வரூபத்தில் தனித்து ஸம்யமம் செய்வதால் புருஷ ஞாநம் உண்டாகும்.

குறிப்பு:—ஸத்துவம் ஸமஷ்டியில் பிரகிருதி யென்றும், வியஷ்டியில் புத்தி யென்றும் பொருள்படும். ஸ்வார்த்தம், அதாவது ஸ்வா + அர்த்தம். ஸ்வா=புருஷனின், அர்த்தம்=பொருள்.* புத்தி (பிரக்ஞை) புருஷனை அறிகிறதில்லை. ஆனால் புருஷன் பிரக்ஞை;

* புருஷன் குணத்ரயத்திற் குட்படாத சின்மயமான விர்த்தி ஸந்தாநம் (பிரவாஹம்).

யை அறிகிறான். புருஷன் ஜடமான புத்திக்கு சைதந்யத்தைக் கொடுத்து, அதன் மூலம் அறிகிறான். ஆனால் புத்தி புருஷனுக்கு அடுத்திருக்கின்றமையால் புத்தி அறிகின்றதென நினைக்கிறோம். புருஷனைப் புருஷன் தான் அறியலாமே ஒழிய, புத்தியானது ஜடமாகையால் அறிய முடியாது.

அடியிற்கண்ட ப்ருஹதாரண்யக உபநிஷத் வாக்கியம் இங்கு கவனிக்க தக்கது:—

"விஜ்ஞாதாரமரே கேநவிஜாநீயாத் ॥".

புருஷனை வேறு கருவியால் அறிதல் முடியாது. அதாவது புருஷன் தான் புருஷனை அறிதல் கூடும் என்றபடி. புருஷன் ஸ்வப்ரகாசன் என்பதாம்.

36. ததঃ ப்ராதிபஶ்ராவணவேதநாதர்ஶாஸ்வாதவார்தா ஜாயந்தே ॥

(மேற்கண்ட முறைப்படி அடைந்த புருஷ ஸாக்ஷாத்காரத்திற்கு)ப் பிறகு (ஸம்யமம் இல்லாமலே) புத்திக்கு ஸூக்ஷ்மமான விஷயங்கள், மறைவான விஷயங்கள், தூரத்திலுள்ள விஷயங்கள், சென்றவைகள் வரப்போகிறவைகள் இவைகளை அறியும் தெளிவும், பஞ்சேந்திரியங்களுக்கு கேட்டல், ஸ்பரிசித்தல், பார்த்தல், நுகர்தல், முதலிய திவ்ய சக்திகளின் விகாஸமும் உண்டாகின்றன.

குறிப்பு:—மேற்கண்ட அப்யாஸ முறையின் பயனாக இந்திரியங்களின் திவ்யசக்தியும், புத்திக்கு திவ்விய சக்தியும் யோகிக்கு உண்டாகும். எப்போதும் எல்லாம் அவருக்குத் தெரியவரும். உள்ளே நோக்குகின்றமையால் முக்கண் திறக்கும். நினைப்பில்லாமலே ஸகல விஷயங்களும் அவருக்குப் புலப்படும்.

37. தே ஸமாதாவுபஸர்கா வ்யுத்தாநே ஸித்தய: ॥

அவைகள் முன் (சொல்லியவை) ஸமாதிக்கு (அந்தர்முகப்பட்டு புருஷஸாக்ஷாத்காரம் பெறுதலில்) தடைகளாகும். பஹிர்முகமாகக் கொள்ளுமிடத்து (உலகவியாபார தசையில்) அவைகள் ஸித்திகளாகும்.

குறிப்பு:—ஸமாதி என்பது இங்கு அஸம்ப்ரக்ஞாத ஸமாதி என்று அறியத்தக்கது. இந்நிலையில் உள்ளவனுக்கு பிராதிபாதி

வித்திகள் இடையூறுகளாகும். கைவல்யத்தை நோக்குகிறவன் எந்த வித்திகளையும் விரும்பான். எவ்வளவு உயர்வுள்ள வித்திகளை யடைந்தாலும் இவன் கிருதகிருத்யனுகமாட்டான். அதாவது செய்யவேண்டிய காரியத்தைச் செய்தவனுகமாட்டான். அவன் செய்ய வேண்டியது வெகு காரியங்களுள்ளன. இதுவே கீதையில் அடியில் வருமாறு:—

“ஏதத்புத்த்வா புத்திமாந் ஸ்யாத் ।
க்ருதக்ருத்யஸ்ச பாரத ॥”

இதன்பொருள்: ஒருவன் இதனை அறிந்து, அறிவுள்ளவனுகவும், செய்யவேண்டியதைச் செய்தவனுகவும் ஆவன்.—கீதை., 15-ம் அத், 20-ம் சு.

இதுவரை ஞாநரூபமான விபூதிகளை (சித்திகளை) விவரித்தார். இனி அடுத்த சூத்திரம் முதற்கொண்டு கிரியாரூபமான வித்திகளை விவரிக்கிறார்.

38. பந்தகாரணஸைதில்யாத் ப்ரசாரஸம்வேதநாச்ச சித்தஸ்ய பரசரீராவேசঃ ॥

பந்தத்திற்குக் காரணமானதை (புண்ணிய பாபகர்மத்தை ஸமாதியினுல்) நழுவும்படி செய்தலினுலும், மநஸ் சஞ்சலிக்கும் (நாடிகளின்) மார்க்கத்தை அறிவதினுலும் மநத்திற்குப் பாகாயப் பிரவேசம் செய்யும் தகைமை உண்டாகிறது.

குறிப்பு:—யோகியானவன் தன் மநம் எந்தக்கர்மத்தின் காரணமாகத் தன்னுடைய சரீரத்தில் கட்டுப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தும், யோகாப்யாஸத்தினுல் கர்மபந்தங்களினின்று தன்னை விடுவித்துக் கொள்ளக்கூடுமாகையால் மநஸ், இந்திரியங்களை அந்தக் கட்டினின்று நழுவும்படி செய்தும், எந்த நாடிகளில் மநஸ், இந்த்ரியங்கள் நடைபெறுகின்றன என்பதை அறிந்து, பின்னர் எவ்வழியால், எந்நாடிவழியாகத் தன்னுடைய சரீரத்தை விட்டு வெளியேறலாமென்று அறிந்தும், வேறு சரீரத்தில் எந்நாடி வழியாக நுழையலாமென்று உணர்ந்தும், தன் சரீரத்தில் திரும்பவும் எவ்விதம் நுழையலாமென்று தெரிந்தும், பரகாயப்பிரவேசம் செய்யலாம். மநஸ் வெளியேறும்போது மற்ற இந்த்ரியங்களும், ராணித்தேனீ

யானது வெளியேறுங்காலத்தில் மற்றையத் தேனீக்களும் வெளிக் கிளம்புமாறுபோல மற்ற இந்த்ரியங்களும் வெளிக்கிளம்பும். (பிரச்ந உபநிஷத், 2-வது பிரச்நத்தைப் பார்க்க.)

39. உதா நஜயாஜ்ஜலபங்க கண்டகாதிஷ்வஸங்க உத்க்ராந்திஶ்ச ॥

உதாநவாயுவை ஜயித்தலினால், ஜலம், சேர், முள் முதலியவைகளில் சம்பந்திக்காமல் சலித்தலும், (வேண்டுங்காலத்தில்) சரீரத்தைவிட்டே வெளியேறுதலும் செய்து கொள்ளலாம்.

குறிப்பு:—இந்த்ரியங்களின் பிரவிர்த்தி இருவிதம். பார்வை முதலிய வெளிநோக்கிய பிரவிர்த்தி. ஜீவிப்பதற்காக எல்லா இந்த்ரியங்களின் உள்நோக்கிய (ஆந்தர) பிரவிர்த்தி மற்றது. இந்த உள் நோக்கிய பிரவிர்த்தியின் கார்யங்கள் பஞ்ச பிராணன்கள். அவை யாவன:—(1) பிராணன் உச்வாஸ நிச்வாஸரூபமாக நாஸிகை முதல் ஹிருதயம் வரை சஞ்சரிக்கும். (2) ஸமாநன் ஆகாரங்களை ஸமப்படுத்துகிறது, ஹிருதயம் முதல் நாபிவரை ஸஞ்சரிக்கிறது. (3) அபாநன் நாபி ஸ்தாநத்தினின்று பாதம் வரை வியாபித்துக் கொண்டிருக்கிறது. இது மலமூத்ராதிகளை வெளியேற்றும். (4) உதாநன்: நாஸி நுனியினின்று சிரஸ்வரை வியாபித்திருக்கிறது, சரீரத்தைவிட்டு மநம், இந்த்ரியங்கள் முதலியன வெளியேறுவதற்குக் காரணம் இது. (5) வியாநன் சரீரம் முழுமையும் வியாபித்திருக்கிறது. இந்த ஐந்து வாயுக்களில் பிராணன் பிரதாநமானது, முக்கியப் பிராணன் எனப் பெயர்பெறும். பிராணாதிகளுக்குள் ஏற்பட்ட சண்டையைப்பற்றி பிரச்நம், சாந்தோக்கியம், ப்ருஹதாரண்யக உபநிஷத்துக்களைப் பார்க்க. உதாநனின் மேல் ஸம்யமம் செய்து அதை ஜயிப்பதனால் ஜலம், சேர், முள் முதலியவைகளில் படாமல் நடக்கலாம். ஸுஷும்நா நாடியின் மூலமாய் ஜீவன் சரீரத்தை விட்டு அர்ச்சிராதி மார்க்கமாய்ச் செல்லலாம்.

40. ஸமாநஜயாஜ்ஜ்வலநம் ॥

ஸமாநவாயுவை ஜயித்தலினால், சரீரத்திற்கு ஜ்வலிக்கும் தன்மை உண்டாகிறது.

குறிப்பு:—ஸமாநவாயுவை ஜயித்த யோகியானவன் உயிருடன் இருக்குங்காலத்தில் தேஜஸ்வியாக இருப்பான். மரணம் வேண்

டுங்காலத்தில் தன்னிடமிருந்து அக்நி ஜ்வாலையை உண்டு பண்ணிக் கொண்டு தன் சரீரத்தை தஹநஞ் செய்துகொள்ளலாம். சரபங்கர் இராமாயணத்தில் ஸ்ரீராமனை தர்சநம் செய்த பின்பு தன்னிடமிருந்து ஒரு தேஜஸ்ஸை உண்டுபண்ணித் தன்னுடைய சரீரத்தை தஹநஞ்செய்துவிட்டு திவ்ய சரீரத்துடன் பிரஹ்மலோகத்திற்கு ஏகினார். இதை ஆரண்ய காண்டத்திற் கண்டு கொள்ளுக. பதிவ்ரதா ஸ்த்ரீயானவள் புருஷன் இறந்த மேல் எப்படித்தன்னுடைய தேஜஸ்ஸால் தன்!சரீரத்தை தஹநம் பண்ணிக்கொள்ளுவாளோ, அவ்விதமே யோகிகள் தாங்கள் உலகத்திற்கு வந்த கார்யம் ஆகிவிட்டது என்று அப்படிச் செய்துகொள்ளுகிறது உண்டு.

41. 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌕𑌾𑌶𑌯𑍋𑌃 𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌸𑌂𑌯𑌮𑌾𑌦𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑌂
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌮𑍍॥

சுரோத்ரேந்த்ரியத்திற்கும், ஆகாசத்திற்கும் உள்ள ஸம்பந்தத்தை ஸம்யமம் செய்தலினால், யோகியின் சுரோத்ரேந்திரியமானது நுண்ணிய சப்தங்களைக் கேட்கும் தகைமையைப் பெறுகிறது.

குறிப்பு:—கேட்கும் தன்மை பூர்த்தியடைகிறது. ஆகாசம் ஆவரணமின்றி எங்கும் வியாபகமாக இருத்தலினால் இந்த ஸம்யமத்தினால் ஸித்திபெற்றயோகி நினைத்தமாத்ரத்தில் எந்த சப்தத்தையும் கேட்கக் கூடியவனாவன். இவ்விதமே ஒவ்வொரு இந்த்ரியத்திற்கும் அததன் அதிஷ்டாந பூதங்களுக்கும் உள்ள சம்பந்தத்தில் ஸம்யமஞ் செய்தலினால், அந்த இந்த்ரியத்தின் பூர்ணசக்தி உண்டாகிறது.

| இந்த்ரியம் | | | அதிஷ்டாநபூதம். |
|---|---|---|---|
| த்வக் | ... | ... | வாயு. |
| கண் | ... | ... | தேஜஸ். |
| நாக்கு | ... | ... | ஜலம். |
| நாஸி | ... | .... | ப்ருதிவீ. |

42. 𑌕𑌾𑌯𑌾𑌕𑌾𑌶𑌯𑍋𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌸𑌂𑌯𑌮𑌾𑌲𑍍𑌲𑌘𑍁𑌤𑍂𑌲
𑌸𑌮𑌾𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚𑌾𑌕𑌾𑌶𑌗𑌮𑌨𑌮𑍍॥

ஶரீரத்திற்கும் ஆகாசத்திற்கும் உள்ள சம்பந்தத்தை ஸம்யமம் செய்தவினுல் சரீரத்திற்குப் பஞ்சு போன்று லகுத்துவம் உண்டாகும். அதனுல் ஆகாசகமநசக்தி (யோகிக்கு) ஏற்படும்.

*குறிப்பு:—ஆகாசத்தின் குணங்கள் யோகிக்கு உண்டாகும். ஜலத்தில் மிதக்கலாம். ஆகாசத்தில் நிற்கலாம. வாயுவில் ஸஞ்சரிக்கலாம். அக்நி அவனுக்கு ஒருவிதக் கெடுதியும் செய்யாது. சிலந்திப் பூச்சியின் நுண்ணிய இழைநூலில் ஸஞ்சரிக்கலாம். ஸூர்யகிரணங்களில் ஸஞ்சரிக்கலாம். அவன் போக்குக்கு எங்கும் தங்கு தடையில்லை.*

43. 𑌬𑌹𑌿𑌰𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌵𑌿𑌦𑍇𑌹𑌾
𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌵𑌰𑌣𑌕𑍍𑌷𑌯𑌃॥

வெளியிலுள்ள விஷயங்களால் கற்பிக்கப்படாத மநோ விர்த்திக்கு "மஹாவிதேஹா" என்று பெயர். அந்த நிலைமையை அடைவதினுல் பிரகாசத்திற்குத் தடையாயுள்ள ஆவரணத்தின் க்ஷயம் ஏற்படுகிறது.

*குறிப்பு:—முன் வெளியிலிருக்கின்ற விஷயங்களைப் பற்றியுண்டாகும் மநோவிர்த்திகளில் ஸம்யமம்செய்தல்சொல்லப்பட்டது. அவ்விர்த்திகளுக்கு 'கல்பிதம்' என்று பெயர். வெளிவிஷயங்கள் சம்பந்தமின்றி மநஸ் தன் ஸ்வரூபத்தில் இருப்பதானது 'அகல்பிதம்' என்றழைக்கப்படுகிறது. அதை "மஹாவிதேஹா" என்று சூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வெளியில் பிரவிர்த்தி இல்லை. புருஷ தர்சநமும் உண்டாகவில்லை. ஸாக்ஷாத்தியும் இல்லை. இவ்விதம் இல்லாமல் மநத்திற்கு ஒரு நிலை உண்டு. அஃது இந்த சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. கட்டுக்குட்பட்ட இந்த சரீரத்தினின்று இயங்கும் மநஸ் இந்தக் கட்டைவிட்டு வெளியேறி ஸர்வவியாபியாகி எங்கும் நினைக்கும்தன்மை உண்டாகும் நிலை இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நிலையில் பரகாயப் பிரவேசம் செய்யலாம். துக்கம், கர்மம், அக்ஞாநம் இவை நீங்கும். புத்தியின் உயர்நலம் உண்டாகும். பிரகாசம் உண்டாகும். மலபரிபாகம் என்று சைவ*

வித்தாந்திகள் சொல்லுவது இங்கே கவனிக்கத்தக்கது. தமோ குணம் ரஜோகுணம் இரண்டும் அற்று ஸத்வகுணநிலையில் மநஸ் இருக்கின்ற ஸ்திதிதான் இச்சூத்திரத்தில் விவரிக்கப்படும் "மஹா விதேஹா" என்பது. இந்நிலையிற் செய்யும் பரகாயப்பிரவேசம் முன் 38-வது சூத்திரத்தில் சொல்லியபடி ஸாதநங்களின்றி நினைத்த மாத்திரத்தில் நிகழும். இந்நிலையில் யோகி ஸத்யகாமனாகவும், ஸத்யஸங்கல்பனாகவும் ஆகிறான்.

44. ஸ்தூலஸ்வரூபஸூக்ஷ்மாந்வயார்த்த
வத்த்வஸம்யமாத் பூதஜய:

வஸ்துக்களின் ஸ்தூலமான வெளித்தோற்றம், யதார்த்த ஸ்வரூபம், ஸூக்ஷ்மமான நிலைமை, அந்வயம், அர்த்தவத்வம் இந்த 5 தன்மைகளை ஸம்யமம் செய்தலினால் பூதஜயம் உண்டாகும்.

குறிப்பு:—அடிக்கடி மாறாத தன் நிலைமை யென்பது யதார்த்த ஸ்வரூபம். அதாவது தங்கமும் நகையும் போல. ப்ருதிவீக்குக் கடினத் தன்மையும், அப்புவிற்கு நெகிழ்ச்சியான தன்மையும், தேஜஸ்ஸுக்கு உஷ்ணமும், வாயுவுக்குச் சலநமும், ஆகாசத்திற்கு எங்கும் பரவியிருத்தலும் தனித்தனி அதன் ஸ்வரூபம் என்று பெயர். ஸூக்ஷ்ம நிலைமை = தந்மாத்திரை. அந்வயம் = எல்லாப் பதார்த்தங்களிலும் ஊடுருவிப்பாய்ந்து இருக்கின்றவை. அவையாவன ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுமாம். அர்த்தவத்வம் =குணங்களின் சக்தி, போகம், அபவர்க்கம் (மோக்ஷம்)களைக் கொடுக்கும் தன்மை. குணங்கள் ஒவ்வொரு வஸ்துவினிடமுமிருக்கின்றமையால் மேற்படி தன்மை ஒவ்வொரு வஸ்துவினிடமும் உள்ளது. முன்னே இந்த பாதம் 13-ம் சூத்திரத்தில் தர்மம், லக்ஷணம், அவஸ்தை என்ற பரிணாமங்களைச் சொல்லி, பரிணாமமில்லாத நிலைமையை அறியும் முறை சொல்லப்பட்டது. இந்த சூத்திரத்தில் உலகத்தில் தோன்றும் விஷயங்களின் உண்மையை அறியும்படி 5 தன்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பூதஜயம் பெற்ற யோகியின் சங்கற்பத்தை அநுஸரித்து எல்லா பூதங்களும், பசு தன் கன்றை அநுஸரிப்பது போல, நடைபெறுகின்றன.

45. ததோ(அ)ணிமாதிப்ராதுர்பாவ:
காயஸம்பத் தத்தர்மானபிகாதச்ச ॥

அதனுல் (பூத ஜயத்தினுல்) அணிமாதி ஸித்திகளும், காயஸம்பத்தும் உண்டாகின்றன. ப்ருதிவியாதி பூதங்களின் அதததன் தர்மங்களினுல் நிகழும் தடைகள் அற்ற நிலைமையை யோகி பெறுகிறன்.

குறிப்பு:— அணுவாகும் தன்மை (அணிமா), இலேசாகும் தன்மை (லகிமா), பெரிதாகும் தன்மை (மஹிமா), கனமாகும் தன்மை (கிரிமா), தூரத்திலிருக்கின்ற வஸ்துவை அணுகும் தன்மை (பிராப்தி), கர்மங்களுக்குத் தடையின்றிருத்தல் (பிராகாம்யம்), பிராணிகளை ஸ்ருஷ்டித்தல் (ஈசத்துவம்), எல்லாவற்றையும் ஸ்வாதீனப் படுத்தல் (வசித்துவம்) இத்தகைய சக்திகள் இருந்தும் உண்மையான யோகிகள் இவைகளை வீணுகச் செய்யமாட்டார்கள். பூதங்களின் தர்மங்களால் தடைகளில்லை. என்றுல் பூமிக்குள் நுழையலாம், ஜலத்தில் உட்காரலாம், ஆகாசத்தில் நிற்கலாம், தன்னை ஆகாசமுங்கூட மறைக்கும்படியாகச் செய்துகொள்ளலாம்.

46. ரூபலாவண்யபலவஜ்ரஸம்ஹநநத்வானி காயஸம்பத் ॥

காயஸம்பத் என்றுல் அழகு, லாவண்யம், பலம், வைரம்போன்ற உறுதி என்பனவாம்.

47. க்ரஹணஸ்வரூபாஸ்மிதாந்வயார்த்தவத்த்வஸம்யமா திந்த்ரியஜய: ॥

கிரஹணம், ஸ்வரூபம், அஸ்மிதை, அந்வயம், அர்த்தவத்வம் இவைகளில் ஸம்யமஞ் செய்வதினுல் இந்த்ரிய ஜயம் உண்டாகும்.

குறிப்பு:—கிரஹணம்=சப்தாதி விஷயங்களை கிரஹித்தல், இந்த்ரிய பிரவிர்த்தி (Sensation). இது இருவிதம்: ஸாமாந்யம், விசேஷம். ஸ்வரூபம்=இந்த்ரியங்கள் ஸாத்விக அஹங்காரத்தினின்று உண்டாயின; இந்த்ரியங்கள் உண்டான அந்நிலை, பிரகாசத் தன்மையுள்ள ஸாத்விக அகங்காரத்தினின்று உற்பவித்த தத்ஸம்யத்தின் நிலைமை. அஸ்மிதை=அந்த அஹங்காரம். அந்வயம்=அவ்வகங்காரம் எதினின்று உண்டானதோ அந்த ஸத்வ ரஜஸ் தமோ

குணங்களுள்ள மஹத்தத்துவம். அர்த்தவத்வம்—போகாபவர்க்கங்கள்.

(1) இந்த்ரியங்கள் விஷயங்களை கிரஹிக்கும் நிலை, (2) இந்த்ரியங்களின் நிர்மலமான ஸ்வரூபம், (3) இந்த்ரியங்களுக்குக் காரணமான ஸாத்விக அஹங்காரமான அஸ்மிதை, (4) மேற்கண்டவைகளில் அநுஸரித்திருக்கின்ற மூன்றுகுணங்கள் (ஸாத்விகம், ராஜஸம், தாமஸம்.) (5) இக்குணங்களிலிருக்கின்ற போகாபவர்க்கங்களை உண்டு பண்ணும் சக்தி ஆகிய இவைகள் ஒன்றின் பின் ஒன்றாய் உண்டான பரிணமங்கள். இவைகளின்மேல் ஸம்யமம் செய்தலினால் இந்த்ரிய ஜயம் உண்டாகிறது. இந்த்ரியங்கள் அததன் பிரவிர்த்தியின்றியும், லயமின்றியும் தத்தம் நிலையில் இருப்பதை யோகி செய்துகொள்ளுவானாகில் அப்போது ஒருவித ஆநந்தம் ஜநிக்கும். அதற்கு "ஸாநந்தம்" என்று பெயர்.

48. ததோ மநோஜவித்வம் விகரணபாவ:
ப்ரதாநஜயஶ்ச ॥

அதனால் (இந்த்ரிய ஜயத்தினால்) மநோவேகம் போன்ற வேகத்தை யோகியின் சரீரம் பெறுகிறது. சரீரத்தின் சலநமில்லாமலே அதன் உதவியின்றியே (எல்லா தேசங்களிலும், காலங்களிலும் உண்டாகும். எல்லா விஷயங்களையும் உள்ளபடி) இந்த்ரியங்களுக்கு கிரஹிக்கும் சக்தியுண்டாகிறது. பிரதாந ஜயம் உண்டாகிறது.

குறிப்பு:—பூதஜயம், அதனால் இந்த்ரிய ஜயம், அதனால் பிரதாநஜயம் இம்மூன்று ஸித்திகளும் சேர்ந்து மது பிரதீகா என்று சொல்லப்படுகிறது. இந்த நிலையில் யோகியானவன் ரிதம்பரா பிரக்ஞையை உடையவனாகிறான்.

49. ஸத்த்வபுருஷாந்யதாக்யாதிமாத்ரஸ்ய ஸர்வபாவாதிஷ்டாத்ருத்வம் ஸர்வஜ்ஞாத்ருத்வம் ச ॥

ஸத்வம் வேறு, புருஷன் வேறு என்று நிச்சயமாக அறிந்திருக்கிற யோகிக்கு, எல்லா வஸ்துக்களுக்கும் அதிபதியாகவிருக்கும் தன்மையும் எல்லா வஸ்துக்களையும் அறியும் சக்தியும் உண்டாகின்றன.

குறிப்பு:—ஸத்துவம் (ரஜோகுணம், தமோகுணமில்லாத நிலையில் புத்தியானது சுத்த ஸத்துவகுண ஸம்பந்தியாக இருக்கிற

புத்தி தத்துவம்) புருஷன் இவையிரண்டும் அவிவேகத்தினுல் ஸாதாரண ஜநங்களுக்கு அபேதமாகக் காணப்படுகின்றன. இவையிரண்டையும் வேறென்று யோகி அறிகிறுன்.

எல்லா வஸ்துக்களையும் ஸ்வாதீநமாக வைத்துக்கொள்ளும் தகைமையும்(ஆதிபத்யமும்) ஸர்வக்ஞாந சக்தியும் உண்டாகின்றன. இந்த ஸித்திக்கு "விசோகம்" என்று பெயர். எப்போதும் எந்நிலையிலும் வியஸநமற்ற நிலைமையையுடையவனுக ஆகிறுன். விருப்பு வெறுப்பற்றவனுக இருக்கின்றுன்,

50. 𑌤𑌦𑍍𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌾𑌦𑌪𑌿 𑌦𑍋𑌷𑌬𑍀𑌜𑌕𑍍𑌷𑌯𑍇
𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌮𑍍॥

(முன் பிரஸ்தாபித்த விசோகம் என்ற ஸித்தியில்) வைராக்யத்தைப் பெறுதிவனுல் தோஷங்களுக்கும் அவைகளின் காரணமான பூர்வகர்மம், அவித்யை முதலானவைகளுக்கும் நாசம் உண்டாகும். அதன் பிறகு யோகி கைவல்யத்தைப் பெறுகிறுன்.

குறிப்பு:—(1) பூதஜயம், இந்த்ரிய ஜயம், பிரகிருதிஜயம் ஆகிய இவை மூன்று ஸித்திகள்.

(2) தோஷங்கள்—கிலேசங்கள், அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம்.

(3) பீஜம்—பூர்வகர்ம ஸம்ஸ்காரங்கள், அவித்யை.

(4) கைவல்யம்—ஸாத்விக, ராஜஸ, தாமஸ குணங்களினின்று விலகித் தனிப்பட இருத்தல், இதுவே அமநஸ்க நிலை. மநம் அற்ற ஸ்தாநம். இந்த ஸித்திக்கு ஸம்ஸ்கார சேஷம் என்று பெயர்.

(5) ஈசுவரனுக்கும் இந்நிலைபெற்ற யோகியான புருஷனுக்கும் இருக்கும் பேதம் என்னவென்றுல், ஈசுவரன் குணங்கள் மூலமாய் நிமித்த காரணனுயிருந்துகொண்டு ஸ்ருஷ்டி ஸ்திதி முதலிய கிருத்யங்களைச் செய்துகொண்டுவருகிறுர். யோகியான புருஷன் அவர் ஆளுகையினின்று விலகி ஸ்வாராஜ்யம் பெறுகிறுன்.

51. ஸ்தாந்யுபநிமந்த்ரணே ஸங்கஸ்மயாகரணம் புநரநிஷ்டப்ரஸங்காத் ||

தேவர்களால் அழைக்கப்படும் காலத்தில் பிரியத்தையும் கர்வத்தையும் கொள்ளற்க. திரும்பவும் அநிஷ்டங்கள் உண்டாகின்றமையால்.

குறிப்பு:—யோகிகள் 4 படியில் உள்ளவர்கள்:—(1) பிரதமகல்பிகர் (2) மதுபூமிகர் (3) பிரக்ஞாஜ்யோதிஸ் (4) அதிக்ராந்த பாவநீயர்.

பிரதமகல்பிகர்:—இவர் அப்பியாஸி, யோகத்தில் புகுந்தவர். ஸம்யமத்தில் ஆரம்பித்தவர். ஆனால் ஒரு ஸித்தியும் பெறாதவர்.

மதுபூமிகர்:— மதுமதி என்ற ரிதம்பரா பிரக்ஞாநிலையில் இருக்கின்றவர். பூத ஜயம், இந்த்ரிய ஜயம் பெற முயன்று, அவைகளை ஸாக்ஷாத்கரித்து ஜயித்தவர். மதுபிரதீக, விசோக, ஸம்ஸ்கார சேஷம் என்ற மூன்று பூமிகளை அடையமுயலுகின்றவர்.

பிரக்ஞாஜ்யோதிஸ்:—பூத ஜயம், இந்த்ரியஜயம் பெற்றதினால் தேவர்களால் எவ்வித சலநத்திற்குமுட்படுத்தப்படாதவன், மதுமதி, மதுபிரதீக என்ற பூமிகளை அடைந்தவன், விசோக, ஸம்ஸ்கார சேஷம் என்ற பூமிகளை புருஷஸாக்ஷாத்காரம் பெறுவதற்காக அடையும்படி (சித்திகள் பெற அன்று) ஸம்யமம் செய்கிறவன்.

அதிக்ராந்தபாவநீயர்:—மதுபூமிகா, மது பிரதீகா, விசோகா என்ற மூன்று பூமிகளையடைந்த ஜீவந்முக்தன்; கைவல்யத்தை யடைந்தவன். 2-ம் பாதம், 27-ம் சூத்திரத்தில் இவனைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறது.

இவர்களில் இரண்டாவது படி ஏறியவனுக்கே இந்தசூத்திரத்தில் சொல்லிய அபாயம் நேரிடும். தேவர்கள், இவன் மேலேறாமல் பல மயக்கங்களான உலக விஷயங்களினால் இவனை இழுப்பார்கள்.* பல ஆசைகள் வந்து பிடிக்கும். தன்னை தேவர்கள் வந்து கூப்பிடும்படியான தகைமை தனக்குண்டாயிருக்கிறதென்று அகம்பாவமும் கருவமும் கொள்ளுவான். அப்படி யேற்படுமாகில் யோக முயற்சி தளரும், குறையும், சோர்வு உண்டாகும். இந்தப்

* கடோபநிஷத்தின் முதலாம் வல்லியில் நசிகேதஸ்ஸை, யமதேவர் பலவித மயக்கங்களுக் குட்படுத்த முயலுகிறது இங்கு கவனிக்கத்தக்கது.

படியினின்று நழுவும்படியான நிலைமை உண்டாகும். அதை நோக்கியே எச்சரிக்கையாய் இருக்கும்படி இந்த சூத்திரம் உபதேசிக்கிறது. அப்படித் தளருவானாகில் எவ்வளவோ கஷ்டப்பட்டு அடைந்த, இந்த மாயா உலகவாழ்வை விட்டு உயர்நலமமைந்த ஞானத்தை உள்ளபடி அறியும் நிலைமையினின்று கீழே விழுவான். உலகக் களேபரத்தில் மறுபடியும் அழுந்துவான். அதில் மூழ்குவான். இம்மயக்கங்களுக்கு உள்ளாகாமல் நேரே படியேறி மேல் நோக்குகின்றவனே கைவல்யம் பெறுவான்.

52. க்ஷணதத்க்ரமயோ: ஸம்யமாத்விவேகஜம் ஜ்ஞாநம்॥

க்ஷணத்தையும் அதன் கிரமத்தையும் ஸம்யமம் செய்தலினால் விவேகஞானம் உண்டாகும்.

குறிப்பு:—க்ஷணம் = காலத்தின் பரம அணு. அதாவது அதற்குமேல் பகுக்கக் கூடாதது. கிரமம் = வரிசை, அந்த க்ஷணம் ஒன்றின்பின் ஒன்றாய் நிகழும் தொடர்பு. பதார்த்தங்களைப் பிரித்துகொண்டே போக கடைமுறையில் பரம அணு மிஞ்சும். 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து ஒன்றாம்". அது போலக் காலத்தைப் பிரித்துக்கொண்டே போகக் கடை முறையில் க்ஷணம் மிஞ்சும். அதைப் பிரிக்க இயலாது. ஒரு பரம அணு சென்று அடுத்த பரம அணு ஆரம்பிக்கிற வரையுள்ள காலத்திற்கு க்ஷணமென்று பெயர். அந்த க்ஷணங்களுடைய பிரவாஹத்திற்குக் கிரமம் என்று பெயர். பரம அணுக்களைத் தவிர உண்மையில் வேறாக வஸ்துக்களும், க்ஷணத்தைத் தவிர வேறாக மாதம், தினம் முதலான காலங்களும் இல்லை. அவைகள் நம்முடைய புத்தியில் ஏற்படும் தோற்றங்கள். காலம் (மாஸம் முதலியன) பிரத்யேகமான வெளிப்படையான வஸ்து அன்று, (no entity). அவை புத்தியின் கற்பிதம். ஸாதாரண ஜனங்கள் பஹிர்முக நோக்கானவர்களாகையால் அவைகளை (மாஸம், தினம் முதலியவற்றை) வஸ்துக்களாக கிரஹிக்கிறார்கள். க்ஷணம் ஒன்றே வாஸ்தவம். அது எப்பொழுதும் தொடர்பாய் நிகழ்கிறது. இதைத் தான் காலத்தின் தத்துவத்தை அறிந்தவர்கள் காலம் என்று சொல்லுகிறார்கள். இரண்டு க்ஷணங்கள் ஒன்று சேர்ந்து நிகழா. இடைவெளி உண்டு.

வஸ்துக்களின் இடைவெளியும் காலத்தின் இடைவெளியும் இருக்கின்றன. அவை அதிக ஸூக்ஷ்மமாக நிகழ்கின்றமையால் இடைவெளிகள் இல்லை போலத் தோன்றுகின்றன; வாஸ்தவத்தில் உள்ளன. வர்த்தமான க்ஷணம் நிகழ் காலம் மாத்திரம் உண்மை, சென்ற காலமும், வருங்காலமும வாஸ்தவமில்லை. ஒவ்வொரு க்ஷணத்திலும் பரம அணுக்களின் சலநங்கள் ஏற்படுகின்றன. அவைகளால் நாநாவித பரிணாமங்கள் உண்டாகின்றன. உலகமுழுவதும் கொஞ்சம் கொஞ்சமாகப் பரிணாமங்களையடைகின்றது ஜகத்திலுள்ள எல்லா வஸ்துக்களின் தர்மங்களும் க்ஷணத்தை அநுஸரித்திருக்கின்றன. அதின் மேல் அளவுகள் ஆரோபமாகவிருக்கின்றன. விவேகஞாநம்: பிரகிருதி புருஷவிவேகம்.

53. ஜாதிலக்ஷணதேசைரந்யதா
நவச்சேதாத் துல்யயோஸ்தத: ப்ரதிபத்தி: ॥

ஜாதி, லக்ஷணம், தேசம் இவைகளினுல் வேறு வேறக அறிய முடியாத வஸ்துக்களையும், முன் சொன்ன ஸம்யமத்தினுல் வேறு வேறக அறிதல் யோகிக்கு ஏற்படும்.

குறிப்பு:—ஜாதி, லக்ஷணம், தேசம் இவை மூன்றினுல் தான் வஸ்துக்களை வேறு வேருக அறிகின்றோம். சூக்ஷ்மமான ஸ்திதியில் இந்த சாதநம் உபயோகமில்லாமல் போகும். அங்நிலையில் யோகி முன் சொன்ன ஸம்யமத்தினுல் வஸ்துக்களின் வேற்றுமை ஞாநத்தை அறிகிறுன். ஸ்தூலமான வித்யாஸங்களும் ஸூக்ஷ்மமான வித்யாஸங்களும் யோகிக்குத் தெரியவரும்.

54. தாரகம் ஸர்வவிஷயம் ஸர்வதாவிஷயமக்ரமம் சேதி
விவேகஜம் ஜ்ஞாநம் ॥

விவேகத்தினுல் உண்டான ஞாநம் தாரகம் என்று பெயர். இந்த ஞாநம் எல்லாவிஷயங்களையும் எல்லாக் காலங்களிலும் ஒரே சமயத்தில் (யோகி இருக்கிற பிரகாரம்) அறியும் தகைமை உண்டாகிறது.

குறிப்பு:—தாரகம் என்பதாவது கரையேற்றிவைக்கும் ஞாநம். மோக்ஷத்திற்குக் கொண்டுபோகும் இயல்பினது. மதுமதி முதல் ஆரம்பிக்கிற யோகப் பிரபையானது இந்த ஞாநத்தின் ஒருபாகம்,

ஒரேசமயத்தில் என்றால் யாதொரு ஸாதநமுமின்றி, முறையுமின்றி ஒரே காலத்தில் நினைத்த மாத்திரையில் எல்லா விஷயங்களையும் அறிகிறான், அதாவது ஸர்வக்ஞன் என்றபடி.

55. 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑌾𑌮𑍍𑌯𑍇 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌮𑌿𑌤𑌿॥

புத்தியானது புருஷனைப் போன்று பரிசுத்தமடையும் காலத்தில் கைவல்யம் உண்டாகும்.

குறிப்பு:—கைவல்யம், தன்னிலையிலிருத்தல். ஸத்துவம், அதாவது புத்திதத்வம், அதில் புருஷன் பிரதிபிம்பிக்கிறான். ஸத்வம் தான் ஞானத்திற்கும் அகங்காரத்திற்கும் காரணம். 'அதுவே அந்தக்கரணம். அது சலநமற்று ஓய்வையடைந்து ஸமாதாநமான நிலையிலிருக்கும்போது புருஷனைப் போல் ஸ்வரூபமடைகிறது. விஷயங்களைப் பற்றுமல் அந்தக்கரணம் அழிந்தாற்போல இருக்கின்ற நிலைமையில் புருஷன் பிரஹ்மாதி ஸ்தம்ப பரியந்தமுள்ள எந்த வஸ்துவினுடைய அபேக்ஷயுமில்லாமல் ஸ்வதந்த்ரனுகிறான். ஆநந்த ஸ்வரூபியாகிறான். அதுவே கைவல்யம்.

விபூதிபாதம் முற்றிற்று.

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

## 4-வது கைவல்யபாதம்.

[குறிப்பு:—இந்த பாதத்திற்கும் முந்திய பாதங்களுக்குமுள்ள சம்பந்தம் என்னவென்றால், முதலாம் பாதத்தில் யோகம் இன்னது என்பதும் இரண்டாம் பாதத்தில் யோகஸாதனங்களும், மூன்றும் பாதத்தில் ஒரு அப்யாஸி அநுஷ்டிக்கும் ஸாதனங்கள் நேர்மையாக நடைபெறுகின்றனவா அல்லவா என்பதைப் பரீக்ஷித்துக்கொள்ளுகிறதற்கும் அதனால் யோகாப்யாஸத்தில் ருசி உண்டுபண்ணும் இயல்பினவான யோகஸித்திகளும், சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த அத்யாயத்தில் யோகத்தின் பலனான கைவல்யமும் தர்மமேக ஸமாதியும் இன்னும் சில விஷயங்களும் சொல்லப்படுகின்றன.]

1. ஜந்மௌஷதிமந்த்ரதபஸ்ஸமாதிஜாஃ ஸித்தயஃ॥

ஜாதியாலும் (பிறப்பாலும்) ஔஷதங்களினாலும், மந்த்ரத்தினாலும், தபஸ்ஸினாலும், ஸமாதியினாலும், (முன்சொன்ன) சித்திகள் உண்டாகின்றன.

குறிப்பு:—தேவனாகப் பிறந்தவனுக்கு ஜந்மத்தினாலேயே அணிமாதி ஸித்திகள் ஏற்படுகின்றன. மேலும் போன ஜந்ம கர்ம விசேஷத்தினால் அத்தகைய ஸித்திகள் ஏற்படக்கூடும். ஸாங்கிய சாஸ்திரத்தை உபதேசித்த கபில மஹரிஷி பிறக்கும்போதே ஸித்தராகப் பிறந்தாரென்று சொல்லப்படுகிறது.

மாண்டவ்யர் முதலிய முநிகள் ஔஷதங்களினால் ஸித்திகளைப் பெற்றார்கள். தமிழ்நாட்டில் ஔஷதங்களினால் ஸித்திபெற்றவர் அநேகர் இருந்திருக்கிறார்கள். ஔஷதத்தினால் காயஸித்தி பெற்றவர்கள் ரஸாயநர்கள் என்று பெயர் பெறுவார்கள். பிறந்து இறந்து புதிது புதிதாய் சரீரங்களை யெடுக்கிறதைப் பார்க்கிலும் எடுத்த சரீரத்தை நீடித்தகாலம் சிரஞ்சீவியாக இருக்கும்படி செய்தல் கூடும் என்பது இவர்களின் மதம். பாலரஸத்திலும் கந்தகத்திலும் அதிக அத்புதமான சக்திகள் அமைந்திருக்கின்றன என்பது இவர்களின் கொள்கை. சில சில மூலிகைகளுக்கு ஸித்திகள் ஸாதிக்கக் கூடிய யோக்கியதைகளுண்டென்றும் இவர்களுடைய ஸித்தாந்தம். இவைகளினால் தங்கள் காயத்தை சிரஜீவியாக இருக்கும்படி செய்த

வர்கள் அநேகர் இருக்கிறார்கள் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். மந்த்ரங்களும் இத்தகைய ஸித்திகளைக் கொடுக்க இயலும் என்று சிலர் அபிமதம். சரியான முறையாய் மந்த்ரங்களை ஜபிக்கும் பக்ஷத்தில் ஸித்திகள் கைகூடும். விச்வாமித்ரர் முதலியவர்கள் தபஸி னாலும், மந்த்ரத்தினாலும் ஸித்திபெற்றவர்கள். தபஸ் என்றால் விரதங்களினால் காயக்லேசம் செய்தல். ஹடயோக முறைகளும் இதில் அடங்கும். ஸமாதி அல்லது சித்த ஐகாக்ரியம், இதுதான் பதஞ்சலி யாருடைய அபிமதம். இதைப்பற்றித்தான் இந்த சாஸ்திரம் நிகழ்கிறது. இதுதான் உண்மையான யோகமுறை.

2. ஜாத்யந்தரபரிணாம꞉ ப்ரக்ருத்யாபூராத்॥

(மூல) பிரகிருதியினுடைய பிரவேசத்தினால், (வேறு) ஜாதிப்பரிணாமம் உண்டாகும்.

குறிப்பு:—ஒரு ஜன்மத்தில் பிறந்தவன் வேறு சரீரத்தைப் பெறுதல் எங்ஙனம்? அதன் முறையை அடுத்த சூத்திரத்தில் சொல்லுகிறார். அதன் தத்துவத்தை இதில் உபதேசிக்கின்றார்.

3. நிமித்தமப்ரயோஜகம் ப்ரக்ருதீநாம் வரணபேதஸ்து
தத꞉ க்ஷேத்ரிகவத்॥

வேறு தேஹம் உண்டாவதற்கு ஹேதுவான பிரகிருதி அணுக்களை (புண்ணிய கர்மங்களான) நிமித்தம் உண்டாக்குகின்றதில்லை; ஆனால் (திவ்ய தேஹத்தை அடைவதில்) தடைகளைப் புண்ணிய கருமமானது குடியானவன் போல, நீக்கிவைக்கின்றது.

குறிப்பு:— ஒரு குடியானவன் ஜலத்தை வயலுக்குப் பாய்ச்சும் கர்மத்தில் தடைகளை மாத்திரம் விலக்குகிறான். பின்னர் ஜலம் ஓடுகின்றது. அம்மாதிரியாகவே புண்யகருமம் திவ்ய தேஹப் பிராப்திக்குத் தடையாயிருக்கும் இடையூறுகளை விலக்குகின்றது. ஒவ்வொரு ஜீவராசியிலும், ஒவ்வொரு மனிதனிடமும், பரிபூர்ணமான புருஷன் உண்டாகும்படியான சக்திகள், யோக்யதாம்சங்கள் குப்தமாக விருக்கின்றன. ஓஷதிகளிடம் பிராணிகளாகும் அம்சமும், பிராணிகளிடம் மிருகமாகும் அம்சமும், மிருகத்தினிடம் மனிதனாகும் அம்சமும், மனிதனிடம் தேவனாகும் அம்சமும்,

குப்தமாக அமைந்திருக்கின்றன. அந்த மறைப்பான தடையை விலக்கவே, விகாஸம் படிப்படியாக உண்டாகும். நற்கருமங்கள் அவ்விடையூறான தடையைத் தவிர்க்கும்.

4. நிர்மாணசித்தாந்யஸ்மிதாமாத்ராத் ॥

(தன்னுடைய ஸித்தியால்) உண்டுபண்ணப்பட்ட சரீரங்களில் (யோகியானவன்) அஹங்காரத்தினின்று மாத்திரம் பல மநஸ்களை (உண்டுபண்ணுகிறன்.)

குறிப்பு:—மேற்கண்ட தடைகள் தபஸ் முதலானவைகளால் நீக்கப்பெறவே யோகியானவன் ஒரே சமயத்தில் பல விஷயங்களை அநுபவிக்க விரும்பிப் பல சரீரங்களை உண்டுபண்ணிக்கொண்டால் அவைகளில் தனித்தனி ஒவ்வோர் மநத்தையும் நிர்மாணம் செய்து கொள்ளுகிறன். அம் மநஸ்களை எதினின்று நிர்மிக்கிறனென்றால் அஸ்மிதையி (அகங்கார தத்துவத்தி) னின்று என இந்த சூத்திரம் உபதேசிக்கின்றது.

விஷ்ணுபுராணத்தில் வருகின்ற, சௌபரியின் கதை இங்கு கவனிக்கத்தக்கது. இத்தன்மையான யோகி மஹத்தத்துவத்தை ஜயித்தவன். அகங்காரம் மஹத்தத்துவத்தினின்று உண்டாகிறது.

5. ப்ரவ்ருத்திபேதே ப்ரயோஜகம்
சித்தமேகமநேகேஷாம் ॥

(பல மநஸ்கள் உண்டாக்கப்படுகின்றமையால்) பல ப்ரவிர்த்தி பேதங்கள் ஏற்பட்டாலும் ஒரே சித்தமானது (அஸ்மிதை, மேற்கண்ட) பல மநஸ்களை நடத்துகிறது.

குறிப்பு:—ஒரு சரீரம் மனிதன், ஒரு சரீரம் மிருகம் இவ்விதமாக இருந்தாலுங் கூட (அஸ்மிதை) நான் என்ற ஒரே ப்ரத்யயம் எல்லாவற்றிலு மிருக்கின்றமையால் பல மநஸ்கள் பல சரீரங்களிலிருந்தாலும் தோஷமில்லை. ஒரே சரீரத்தில் பல இந்த்ரியங்களிருப்பினும், ஒரே மநஸ் அவைகளின் அநுபவங்களையெல்லாம் ஒன்றுபடுத்துகின்றது, தன்மயப்படுத்துகின்றது. அதுபோல யோகி

யானவன் பல சரீரங்களையும் அவைகளின் கண் பல மநஸ்களையும் உண்டுபண்ணிக்கொண்டு அவைகளின் மூலமாய் ஏற்படும் அநுபவங்களைத் தந்மயப்படுத்துகிறான்.

இவ்வர்த்தத்தை வைத்துக்கொண்டு, "ஒரே சரீரத்தில் இரண்டு பக்ஷிகள் உண்டு. ஒன்று போக்தா. மற்றொன்று ஸாக்ஷீ" என்ற வசநத்தை ஒருவிதமாகப் பொருள் கொள்ளலாம்.

"ஒரே ஈச்வரன் தம்முடைய மநஸ் ஸங்கல்பத்தால் பல சரீரங்களை உண்டுபண்ணுகிறான், அவைகளை நடத்துகிறான், பின்பு அவைகளைத் தன்னிடம் லயப்படுத்திக்கொள்ளுகிறான்."—பத்மபுராணம்.

இவ்வபிப்பிராயம் இங்கு கவனிக்கத்தக்கது. இதுபோல யோகியும் செய்கிறான்.

6. தத்ர த்யாநஜமநாசயம் ॥

அவைகளில் (ஜந்மம், மந்த்ரம், ஔஷதம், தபஸ், ஸமாதி முதலான முறைகளின்படி கல்பிக்கப்படும் மநஸ்களில்) ஸமாதியினால் ஏற்படும் மநஸ்ஸுக்கு மாத்திரம் (ராகாதிகள், புண்யபாபங்கள் தங்க) உறைவிடமிராது. (மற்றைய மநஸ்களில் தங்க இடமுண்டு.)

குறிப்பு:—தியாந ஸமாதியால் ஏற்படுத்தப்படும் மநஸ்களில் ராகாதிகள், புண்ய பாபங்கள் தங்க இடம் கிடையாது.

மந்த்ரத்தினாலும், ஔஷதத்தினாலும், காயக் கிலேசமான தபஸ்வினாலும் உண்டுபண்ணப்படும் மநஸ்ஸுக்கும், ராகாதிகள், புண்ணிய பாபங்கள் இருக்கின்றன. அம் மநஸானது ஆசைபற்றியதாகவே இருக்கும்.

7. கர்மாசுக்லாக்ருஷ்ணம் யோகிநஸ்த்ரிவிதமிதரேஷாம் ॥

யோகிக்கு கர்மங்கள் வெளுப்பு கறுப்பு என்பது இல்லை. மற்றவர்களுக்கு (கறுப்பு, வெளுப்பு, இரண்டும் கலந்தவை என)கர்மங்கள் மூன்று விதம்.

குறிப்பு:—முன் சூத்திரங்களில் யோகியின் சித்தம் மற்றவர்களுடைய சித்தத்தைவிட வேறானது என்று சொன்னார். இதில் அவன் கர்மமும் மற்றவர்களுடைய கர்மத்தைவிட வேறானது என்கிறார்.

கர்மங்கள் நான்கு விதம்:—

(1) தமோகுணத்தை விருத்தி பண்ணுகிறது.

(2) ஸத்துவகுணத்தை விருத்திபண்ணுகிறது.

(3) ரஜோகுணத்தை விருத்திபண்ணுகிறது.

(4) முக்குணங்களைத் தாண்டியதில்லை.

கிருஷ்ணம்: இஹத்தில் துக்கத்திற்கும், பரத்தில் நரகத்திற்கும் ஹேதுவான க்ர்மம்.

சுக்லம்: (மநம், வாக்கினால் ஏற்படும் புண்ய கர்மம்) இஹத்திலும் பரத்திலும் சுகத்திற்குக் காரணமான கர்மம்.

சுக்லகிருஷ்ணம்: (புண்ய பாபம் கலந்தது) ஸாங்கியர்களின் மதப்படி ஸோமயாகங்கள் முதலியன.

சுக்லகிருஷ்ணமில்லாதது: அதாவது புண்யபாபமில்லாதது.

முதல்மூன்று ஸாதாரண ஜநங்களின்கர்மம். 4-வது யோகியின் கர்மநிலை. அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம் என்ற கிலேசங்கள் இன்மையாலும், கர்மபல ஸந்யாஸம் செய்கின்றமையாலும், யோகிக்குக் கர்மமிருந்தாலும் புண்ய பாபத்தின் பலாநுபவமில்லை. தைத்திரீய உபநிஷத் 2-ம் வல்லியிற் கடைசி அநுவாகத்திற் சொல்லியபடி "நான் புண்ய கர்மத்தைச்செய்யவில்லையே பாபகர்மத்தைச் செய்தேனே" என்ற தாபம் இல்லாத நிலையுள்ளவனாக யோகி ஆகிறான் என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

இந்த நிலையை அடியில் வரும் வசநங்களும் தெளிவிக்கின்றன.

"ஆத்மக்ரீட ஆத்மரதி: க்ரியாவானேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட:"

இதன் பொருள்: "பிரஹ்மவித் ஆனவன் ஆத்மாவிடம் கிரீடிக்கிறவனாகவும், பிரியமுள்ளவனாகவும், அசுக்லாகிருஷ்ண கர்மமுடையவனாயுமிருக்கிறான்."

𑌕𑌾𑌯𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌕𑍇𑌵𑌲𑍈𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑌪𑌿 ।
𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 ॥

*இதன் பொருள்: "யோகிகள் சரீரம், மநம், புத்தி, இந்திரியங்களால் மாத்ரம் ராகம் முதலியவை யில்லாமல் ஆத்மஞானத்தின் பொருட்டுக் கர்மத்தை யநுஷ்டிக்கிறார்கள்."**

*மேல் விவரித்த இந்த நிலைமைக்கு யோகி வருவானாகில் பிரகிருத ஜந்மம் அவனுக்குக் கடைசி ஜந்மமாகும்.*

8. 𑌤𑌤𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌾𑌕𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌾𑌨𑌾
𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌾𑌸𑌨𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

(மேற்கண்ட முதல் மூன்றுவித)கர்மங்களினின்று அந்தந்த கர்ம பரிபாகத்திற்கு அநுகூலமான வாஸனைகளின் மலர்ச்சி ஏற்படும்.

*குறிப்பு:—வாஸனைகள் இருவிதம், (1) ஜாதி, ஆயுஸ், போகம் இவைகளைக் கொடுக்கும் வாஸனை (2) வெளிவராமல் ஸம்ஸ்கார ரூபமாக மாத்ரம் இருக்கின்ற வாஸனை. முன் வினைப் பயனை அநுபவிக்க நேரிடும் சமயத்தில் இரண்டாவதான வாஸனைகளில் அவ்வினைப் பயனுக்கு அநுகூலமான வாஸனை மாத்திரம் வெளிப்படும், மலரும். மனிதனைப் பிறக்கும் காலம் வந்திட, தேவ, நரகர் ஸம்பந்தமான வாஸனைகள் வெளிவாரா. மனிதனைப் பிறத்தலுக்கு அநுகூலமான கர்ம வாஸனைகள் மாத்திரம் பிராதுர்பாவத்தை யடையும். அவ்விதமே தேவ ஜந்மம் நேரிடும் காலத்தில் மனித சம்பந்தமான வாஸனைகள் வெளிவாரா.*

9. 𑌜𑌾𑌤𑌿𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌂
𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌯𑍋𑌰𑍇𑌕𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

ஜாதி, தேசம், காலம் இவைகளால் மறைக்கப்பட்ட (இடைவிட்ட) வாசனைகளுங்கூட அடுத்து (இப்போதே யநுபவித்தும்படியாக) வெளிப்படும் தன்மையைப் பெறுகின்றன. ஸ்மிருதியும் ஸம்ஸ்காரமும் ஏக ரூபமாய் இருத்தலான்.

---

* *பகவத்கீதை 4-ம் அத்., 20-ம்ச, 18-ம் அத், 17-ம் சுலோகங்களையும் பார்க்க.*

குறிப்பு:—“ஸ்வர்க்கத்தில் தேவனாக இருந்து பெற்ற போகாதி வாஸனைகள், பின்பு அநேக ஆயிரம் ஜந்மங்களில் மனிதன் முதலான வர்க்கங்களில் பிறந்து அவைகளால் மறைக்கப் பெற்றாலும், மறுபடி தேவனாக ஏற்படுங் காலத்தில் அப்பூர்வ வாஸனைகள் எவ்விதம் திரும்ப வெளிப்படும்?” என்ற கேள்விக்கு இந்த சூத்திரம் விடையளிக்கின்றது.

“உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு”

என்ற குறளுக்கிணங்க, தூங்கி விழித்தல் போலப் பிறப்பென்றால் ஒருவனுக்குத் தூங்குமுன் எந்த வாஸனை இருந்ததோ அது தான் விழிக்கிற காலத்தில் வெளிப்படுகிறது. அம்மாதிரியாக ஒரு ஜந்மத்தில் உண்டான வாஸனைகள், அதற்கடுத்த பின் ஜந்மத்தில் தானே மலரவேண்டும்? அவ்விதமின்றி அநேக ஜந்மங்களில் மறைவாகவிருந்து, பின்னர் எவ்விதம் அபிவ்யக்தி ஏற்படுமென்றால், அதற்கு அடியிற்கண்ட உதாஹரணம் ஸமாதானமாகும். வெகு காலத்துக்குமுன் நடந்த ஸம்பவம் ஒன்று ஒருவனைப் பார்க்குங்கால் நம் ஸ்மரணைக்கு வருகிறது, அதற்கடுத்து வெகு சமீபகாலத்தில் நடந்த முக்கியமான விஷயங்கள் ஞாபகத்திற்கு வராமல் தடைபடுகின்றன என்பதை நாம் எல்லோரும் ஸ்வாநுபவத்தில் அறிகிறோம் அடுத்திருக்கிற விஷயங்கள் மறைபட்டு, முந்திய நாள் சென்ற விஷயம் எவ்விதம் பிராதுர்பாவத்தை யடைகிறதோ, அவ்விதமே பூர்வ வாஸனைகள் கர்ம பரிபாகத்தை யநுசரித்து வெளிப்படுகின்றன.

ஸ்மிருதி என்பது பிரகிருத அநுபவத்தின் வாஸனை. ஸம்ஸ்காரங்கள் பூர்வ ஜந்மங்களில் ஏற்பட்ட வாஸனைகள். இவையிரண்டும் ஒரே தன்மையனவாம். ஸம்ஸ்காரமானது வெளிப்படும் பக்ஷத்தில் ஸ்மிருதி போன்று வெளிப்படும். ஸ்மிருதியானது ஸம்ஸ்கார ரூபமாக லயப்படுகிறது. வேறு ஜந்மம், வேறு தேசம், வேறு காலம் இவைகளின் கண் நாம் இருந்து செய்த கர்மங்கள் ஸம்ஸ்கார ரூபமாக ஏற்படுகின்றன. அவைகளுங்கூட வெகு காலத்திற்குப் பின்னும் வேறு ஜாதி, வேறு தேசத்தில் நாம் பிறந்தாலும், அவைகள்

விகஸித்து, நாம் அநுபவிக்கும்படியாகவும் கர்மங்களுடைய பக்குவ காலம் வருங்காலத்தில் நேரிடும். அந்தந்த ஸம்ஸ்காரம் அந்தந்த விதமாகப் பரிணமிக்கிறது. அதாவது ஞாந ஸம்ஸ்காரம் ஸ்மிருதியாகவும், இச்சா ஸம்ஸ்காரம் இச்சையாகவும், கிரியா ஸம்ஸ்காரம் கிரியையாகவும் பரிணமிக்கின்றன.

10. தாஸாமநாதித்வம் சாஶிஷோ நித்யத்வாத் ॥

நான் என்றும் இருக்கவேண்டும் என்ற பிரியம் நித்தியமாதலின் முன் பிரஸ்தாபித்த வாஸனைகள் அநாதியானவை.

குறிப்பு:—அவ்வாஸனைகளுக்கு ஆரம்பம் இல்லை. "நான் இல்லாமல் போகக்கூடாது, எப்போதும் இருக்கவேண்டும்" என்ற எண்ணமானது ஒவ்வொரு பிராணியிடமும் இருக்கின்றது. இது சுபாவமாக உண்டாகிறது என்று சொல்ல இயலாது. பிறக்கும் பொழுதே மரணபயம், துக்கம், துவேஷம்; முதலான விர்த்திகள்; நிமித்தம் ஏற்படும்போது வெளியாகின்றன. முன் அநுபவமிருந்து, அது ஸம்ஸ்கார ரூபமாக இருக்கின்றமையால் தான்; நிமித்தம் ஏற்படும்போது அந்த ஸம்ஸ்கார ரூபமான விர்த்திகள் வெளியாகின்றன என்று அறியவேண்டும்.

சிலர் அபிப்பிராயத்தில் (சார்வாகர் மதத்தில்) மனத்தின் அளவு அது இயங்கும் சரீரத்தின் அளவைப் பொருத்ததாக இருக்கிறது என்பார்கள். தீபம் குடத்திலிருந்தால் குறுகியும்; பெரிய வீட்டிலிருந்தால் பெருகியும் ஆதல்போல மனமும் சரீர ஆகிருதியைப்பற்றியே குறுகியும் பெருகியும் ஆகின்றது என்று சொல்லுகிறார்கள். அது சரி அன்று. தீப ஜ்வாலை குறுகியும் பெருகியும் ஆகின்றதில்லை. தீபத்தின் பிரபை, (காந்தி) தீபம் இருக்கும் ஆவரணத்திற்குத் தக்கபடி ஸங்கோசம், விகாஸம் பெறுகிறது. அதுபோலவே மனத்தின் விர்த்திக்கு, நிமித்தம் உண்டாக, ஸங்கோசம் அல்லது விகாஸம் ஏற்படுகின்றதேயல்லாமல், மனத்திற்கன்று. அது ஓரே மாதிரியாகத்தான் இருக்கின்றது. நிமித்தம் பாஹ்யம், ஆந்தரம் என இருவகை. பஹிர்முகமான நிமித்தங்கள் என்பது வெளிச் சாதனங்கள். அவையாவன: ஸ்துதி, தானம், நமஸ்காராதிகள். அந்தர

முகமான நிமித்தம் சிரத்தை முதலியன. மைத்ரீ, கருணா, முதிதை, உபேக்ஷை முதலிய செய்கைகள் யோகியானவன் உலகத்தில் நடைபெறுங் காலத்தில் அவன் செய்யும் விளையாட்டுகளாம். இவைகள் வெளி நிமித்தங்களினால் உண்டாகின்றவையல்ல, அந்த யோகியின் மநத்தின் உயர் நலத்தால் ஏற்படுகின்றன.

மேற்படி இரண்டு நிமித்தங்களில் அந்தர் முகமான நிமித்தம் விசேஷ யோக்யதையை உடையது, அதிக உயர்வானது. ஞானம் வைராக்யம் இவையிரண்டையும்விட மேலானது யாதுளது? சித்த பலமின்றி யாரால் தண்டகாவநத்தை அழிக்கக்கூடும்? சுக்ராசார்யர் ஒரு காலத்தில் தம் மநோ பலத்தால் தண்டகாவநத்தை யழித்த தாகப் புராணக்கதை. ஸமுத்ரத்தை அகஸ்தியரைப்போல் மநோ பலமுடையவர்களாலன்றி வேறு யாரால் பாநம் பண்ணக்கூடும்?

நான் என்பது இல்லாத காலத்தை நினைத்தல் கூடாமையால், நான் என்பது தொடர்பறாது எப்போதுமுள்ளது. அதனால் பூர்வ ஜந்மங்கள் இருந்திருக்கின்றனவென்று ஏற்படுகிறது. மநஸ் ஆனது எத்தன்மையதாக இருக்கிறதென்று விசாரணை ஏற்பட, அது மஹாஸூக்ஷ்மமாக ஆகாசம் போல் பரவி யிருக்கிறதுஎன்று சித்தாந்தப்படுத்தப்பட்டிருக்கிறது.

11. 𑌹𑍇𑌤𑍁𑌫𑌲𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑍈𑌃
𑌸𑌙𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌷𑌾𑌮𑌭𑌾𑌵𑍇 𑌤𑌦𑌭𑌾𑌵𑌃॥

ஹேது, பலம், ஆசிரயம், விஷயம் என்றவைகள் மநத்தின்கண் வாஸனைகள் தங்கும்படி செய்கின்றன. அவைகள் போய்த்துப்போனால் வாஸனைகளும் போம்.

குறிப்பு:—ஹேது: தர்மத்தினால் சுகமும், அதர்மத்தால் துக்கமும் உண்டாகும். ஸுகம் ஆசைக்குக் காரணம், துக்கம் துவேஷத்திற்குக் காரணம். இவைகளால் முயற்சி உண்டாகிறது. இம்முயற்சி மநம், மெய், மொழிகளால் வெளிப்பட்டு ஒருவனுக்கு நன்மையையும், மற்றவனுக்குத் தீமையையும் செய்கிறது. இச்செய்கைகளால் தர்மம், அதர்மம், அவைகளால் சுகம், துக்கம், அவைகளால் ஆசை, துவேஷம் மறுபடியும் உண்டாகின்றன. இவ்விதமாக ஸம்ஸாரம் மேற்கண்ட ஆறு ஆரைக்கால்கள் உள்ள, என்றும் சுழலுகிற சக்ரம்

போன்றதாம். இச்சக்கரத்தைச் சுழலச் செய்கிறது அவித்தை. இதுவே கிலேசங்களுக்கு மூலம். இது தான் ஹேது.

பலம்:—ஜாதி (பிறப்பு), ஆயுஸ், போகங்கள் இவை அபூர்வம் பின் விளைகின்றவை.

ஆசிரயம்:—எல்லாச் செயல்களுக்கும் மநஸ் தான் காரணம். எல்லா வாஸனைகளும் அதில் இருக்கின்றன. சாந்தி, தாந்திகளால் மநத்தூய்மை பெற்ற யோகியை சுகதுக்கங்கள் பற்றுவாம். அதனால் சுக துக்கங்கள் அவன் மநத்தைத் தாக்காவாம். சுகதுக்கங்களுக்கு ஆசிரயம் போய்விடும்.

விஷயம்:—வெளியிலுள்ள விஷயங்கள், பற்றுதலை உண்டாக்கும். வெளியிலுள்ள பதார்த்தங்கள். இது ஆலம்பநம் எனப்படும்

இவை நான்குந்தான் வாஸனைகளைத் தங்கும்படி செய்கின்றன. இவை நான்கும் அற்றுப்போனால், இவைகளை ஆசிரயித்துத் தங்கும் வாஸனைகளும் அற்றுப்போம்.

12. அதீதாநாகதம் ஸ்வரூபதோऽஸ்த்யத்வபேதாத் தர்மாணாம்॥

சென்றுபோன வஸ்துவும், வரப்போகும் வஸ்துவும் உண்மையில் எப்போதும் உள்ளவை. தர்மங்கள் நிகழும் நெறியில் பேதங்கள். இருப்பதால் வஸ்து இல்லாமை தோன்றுகிறது.

குறிப்பு:—இறந்தகாலம், வருங்காலம், நிகழ்காலம் இவை மூன்றும் குணங்கள் பரிணமிக்கின்ற கிரமத்தைக் குறிப்பிடுகின்றன. குணங்கள் வித்யாஸப்படுகின்றமையால் அவ்வேற்றுமையான பாவம் ஏற்படுகிறது. பரிணமங்கள் ஒரு பிரவாஹமாக நடைபெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட இலக்ஷ்யத்தை வைத்துக்கொண்டு நாம் பார்க்கிறதில் அதை நோக்கி முன்னதை வருங்காலமென்றும் பின்னதை இறந்தகாலமென்றும் இலக்ஷித்து அநுபவிக்கிறதை நிகழ்காலம் என்றும் சொல்லுகிறோம். காரியம் காரணத்திற்குள் இருக்கின்றமையால் சங்கோசமாக இருந்ததே பின் விகாஸம் பெறுகிறது. மொட்டு, மலர், காய், கனி போல என்றறிக. இறந்த காலம், நிகழ் காலம், வருங்காலமென்ற பரிணமபேதங்களாகிய மூன்று போங்களை வஸ்துக்கள் தரிக்கின்றன. வஸ்து என்னுமுள்ளது

போர்வைகள் மாறுகின்றன, போர்வைகள் மாறி மாறி, குணங்கள் ஏற்படுகின்றன. (3-ம் பாதம், 13, 14-வது சூத்திரங்களைப் பார்க்க)*

13. தே வ்யக்தஸூக்ஷ்மா குணாத்மாந: ॥

அவைகள் (தர்மங்கள்) வியக்தமாகவும் ஸூக்ஷ்மமாகவும், குணங்களை ஸ்வரூபமாக உடையவைகளாகவும் இருக்கின்றன.

குறிப்பு:—இந்த தர்மங்கள் இறந்தகாலத்திலும், வருங்காலத்திலும் ஸூக்ஷ்மமாகவும் நிகழ்காலத்தில் வியக்தமாகவும் இருக்கின்றன. குணங்கள் மூன்றும், காலம் மூன்றும் ஸூக்ஷ்மமானவைகள். ஸ்தாவர ஜங்கம ரூபமான எல்லா ஜகத்தும் குணங்களுடைய பரிணாம பேதமே. எல்லா வஸ்துக்களும் சுகம், துக்கம், மோஹங்களையுடைய குணங்களுடன் சேர்ந்திருக்கின்றமையாலும் குணங்களினின்று உண்டாயினமையாலும் வஸ்துக்கள் யாவும் குணஸ்வரூபங்கள் எனச் சொல்லப்படுகின்றன. உண்மையில் ஜகத்தானது குணங்கள் தான். அப்படியே ஹிரண்யகர்ப்பர் சொல்லுகிறார்:—"குணங்களின் வாஸ்தவமான ஸ்வரூபம் இந்த்ரியங்களின் வரம்புக்குள் வராது. எது இந்த்ரியங்களுக்குப் புலப்படுகிறதோ அது மாயை; நாசத்தை உடையது. அது இல்லாமை போலவேயாம். இந்த்ரஜாலம் செய்பவனால் உண்டாக்கப்படும் வஸ்துவைப் போல் பிரபஞ்சம் இருக்கிறது. ஒவ்வொரு க்ஷணமும் அது நாசத்தையடைகிறது."

"குணங்கள் மூன்றாகவும், அவைகளில் பரிணமிக்கின்ற வஸ்து ஒன்றாகவும் எப்படி ஏற்படும்?" என்ற ஆக்ஷேபத்திற்கு அடியில் வரும் ஸூத்ரம் ஸமாதானத்தைச் சொல்லுகிறது.

14. பரிணாமைகத்வாத் வஸ்துதத்த்வம் ॥

பரிணாமம் ஒன்றாயிருப்பின் வஸ்து ஒன்றேயாம்.

குறிப்பு:—மூன்று குணங்கள் ஒரு வஸ்துவில் இருக்கிறதில் ஒன்று முக்யமாகவும் மற்ற இரண்டும் அமுக்கியமாகவும் இருக்கின்றமையால் ஒரே பரிணாமம் ஏற்படுகிறது. ஸத்துவகுணம் முக்கிய

---

* கீதை 2-ம் அத், 16-ம் சு., 7-ம் அத்., 26-ம் சுலோகங்கள் இங்கு கவனிக்கத்தக்கன.

மாகவும், ரஜஸ், தமஸ் அமுக்கியமாகவும் இருக்கும்போது ஞானேந்திரியங்களும்; ரஜஸ் மேலாகவும், மற்றவிரண்டும் கீழாகவும் இருக்கும் போது கர்மேந்திரியங்களும்; அவ்விதமே தமஸ் மேலாகவும், மற்றவை தாழ்ந்தும் இருக்கும்போது விஷயங்கள் (பதார்த்தங்கள்) உண்டாகின்றன.*

விக்ஞானவாதிகளின் ஸித்தாந்தம் என்னவென்றால், "வெளியில் பதார்த்தங்களே இல்லை. எல்லாம் ஸ்வப்நத்தில் போல ஞானத்தால் கல்பிதம். அதனால் குணங்கள் அல்லது பிரதானம் ப்ருதக்காக (வேறாக) இருக்கின்றமைகிடையாது" என்பதேயாம். இது சரியன்று. ஸ்வப்நத்தில் அவனவனுக்குத் தனித்தனியாக வேறுவேறாக வஸ்துக்கள் தோன்றுகின்றன. ஆனால், பிரபஞ்சத்தில், எல்லாக் காலத்திலும் எல்லாதேசங்களிலும், எல்லாருக்கும் ஒரே மாதிரியாகப் பதார்த்தங்கள் தோன்றுகின்றன. எல்லாராலும் ஒரே மாதிரியாக அநுபவிக்கப்படுகின்றன. அதனால் ஸ்வப்நாவஸ்தையைப் போல் விஷயம் இல்லையென்பது சரியன்று.

15. வஸ்துஸாம்யே சித்தபேதாத்தயோர்விபக்த: பந்தா:

வஸ்து ஒன்றாய் இருப்பினும் (அதை கிரஹிக்கின்ற) மநஸ்கள் பேதப்படுகின்றமையால், (ஞாநம், அர்த்தம் என்ற) இரண்டினுடைய வழிகள் வேறாக ஏற்படுகின்றன.

குறிப்பு:—ஞானம் வஸ்துவை உண்டுபண்ணாது. ஒரே வஸ்து பலருடைய ஞானத்தால் உண்டாக்கப்படமாட்டாது. ஞானபேதங்கள் இருக்கின்றமையால் ஒருவன் ஞானத்தாலும் அது உண்டாக்கப்படுவதில்லை. பலர் ஒரே விதமாக வஸ்துவைப் பார்க்கின்றமையால் ஞானம் அவ்வஸ்துவாகப் பரிணமிக்கிறதென்று கொண்டால், ஞானம் சேதநம், பிரகாசமுள்ளது, ஸூக்ஷ்மமானது. விஷயம் (வஸ்து) ஜடம், கநம், இலேசு, பெரிது, சிறிது, குட்டை, நெட்டை இவ்வித பேதங்களுள்ளதாயு மிருக்கின்றது. ஞானம் விஷயத்துக்குக் காரணமாயின் விஷயமாகிய கார்யம் எவ்விதமாகவாவது காரணமாகிய ஞானத்தில் முன் இருக்கவேண்டும். அப்படி இல்லை. ஒரே வஸ்து வெளியில் ஸ்வயமாக ஞானத்தை அபேக்ஷிக்காமல் இருக்கின்றது என்பது வஸ்துவையும் அதைப் பிரகாசிப்பிக்கின்றவிளக்கையும்

* பகவத்கீதை 14-ம் அத்., பார்க்க.

போன்றதாம். அப்படியானால் பலர் ஒரே வஸ்துவைப் பலவிதமாக கிரஹிக்கின்றார்களே என்றால் அவரவர்கள் பூர்வ ஸம்ஸ்கார விசேஷத்தினாலும், ஸத்வ, ரஜஸ், தமஸ், அவரவர்களின் மநத்தில் ஏற்றத் தாழ்ச்சியாக இருக்கின்றமையாலும் அவ்விதம் ஒரே வஸ்துவைப்பற்றி வேற்றுமை பாவங்கள் நிகழ்கின்றன. ஒருவன் ஒரு வஸ்துவைப் பிரியத்துடன் பார்க்கிறான், மற்றொருவன் வெறுப்புடன் பார்க்கிறான். வேறு ஒருவன் இரண்டுமின்றி மத்யஸ்தனாக இருந்துகொண்டு உதாஸீநனாகப் பார்க்கிறான். ஒரு சிறு திருஷ்டாந்தம்—ஒரே ஸ்திரீ ஒருவனுக்குப் பத்நீயாகவும், வேறு ஒருவனுக்குப் புத்திரீயாகவும், மற்றொருவனுக்குத் தாயாராகவும் இருக்கிறாள். அந்தப் பல புருஷர்களின் மநங்களில் பலவித பாவங்கள் உண்டாகின்றன. பத்நீயாகக் கொள்பவனுக்கு காமமும், புத்ரீயாகக் கொள்பவனுக்குக் காமமில்லாத அன்பும், தாயாராகக் கொள்பவனுக்கு பக்தியும் உண்டாகின்றன. சிலர் அபிப்பிராயத்தில் ஞானம் எப்போது உண்டாகிறதோ அப்போது வஸ்து உண்டாகிறது. அப்படி உண்டாதல் சுகம், துக்கம் உண்டாதல் போலவாம். இது சரியன்று. வஸ்து இல்லாமல் பூர்வ அநுபவத்தினால் ஒருவஸ்துவின் ஸ்மரணை உண்டாகிறது. வஸ்து எதிரில் இல்லை. வஸ்து சித்தத்தினின்று உண்டாகவில்லை என்பதை அடுத்த சூத்திரம் தெளிவிக்கிறது.

16. ந சைகசித்ததந்த்ரம் வஸ்து ததப்ரமாணகம் ததா கிம் ஸ்யாத் ॥

வஸ்துவானது ஒருவனுடைய சித்தம் பற்றியதாக இல்லை. அப்படி இருக்குமாகில் (அது பிரமையாகும். உண்மையிலில்லை.) சித்தம் வேறிடத்தில் போயிருக்கும்போது வஸ்து இருக்கிறதன்றோ.

குறிப்பு:—ஒருவன் சித்த நிரோதம் பண்ணினாலும் சித்தத்தை வேறு விஷயத்தில் செலுத்தினாலும் வஸ்துவுடன் சம்பந்திக்கிறானில்லை. அப்போது வேறொருவன் சித்தத்திற்கு அவ்வஸ்து உண்டா அல்லவா? வஸ்து இல்லாமல் போய்விடுமா? ஸமாதிகலைந்து அல்லது வேறு விஷயத்தை நாடின மநஸ் திரும்பினால், அவ்வஸ்துவைப் பார்க்கிறானே, எங்கே நின்று அவ்வஸ்து திரும்ப வருகின்றது? ஒருவன் ஒரு வஸ்துவின் முன் பக்கத்தைப் பார்க்கின்றான்,

அல்லது பின்பக்கத்தைப் பார்க்கின்றன. அப்படியானால் முன்றயே பின்பக்கம் இல்லையென்றும் முன்பக்கம் இல்லையென்றும் ஏற்படும். அது சரியன்று. வஸ்து புத்திதந்த்ரம் அன்று. வஸ்து தந்த்ரமே தானாக உள்ளது.

17. ததுபராகாபேக்ஷித்வாச் சித்தஸ்ய வஸ்து ஜ்ஞாதா ஜ்ஞாதம் ॥

விஷயங்களுடைய ஸம்பந்தத்தை மநஸ் எதிர்பார்க்கின்றமையால் அறியப்படும், அறியப்படாத என்ற தன்மையுள்ளவையாக (வஸ்துக்கள் ஆகின்றன.)

குறிப்பு:—விஷயங்கள் அயஸ்காந்தத்திற்கு ஸமானமாகவும், மநஸ் அயத்திற்கு ஸமானமாகவும் இருக்கின்றன. வஸ்துக்கள் மநத்தை ஆகர்ஷித்து மநத்தின்கண் காமக்குரோத முதலிய தோஷங்களை உண்டுபண்ணுகின்றன. ஸ்வயமாக மநத்திற்கு விஷயங்களாலன்றி காமக்குரோத முதலிய தோஷங்களில்லை. அறியப்படும் விஷயம் ஞாதம் என்றும், அறியப்படாத விஷயம் அக்ஞாதம் என்றும் சொல்லப்படுகிறது. அறியப்படும் விஷயத்தில் மநத்திற்கு ஒருவித பரிணாமமும், அறியப்படாத விஷயத்தில் வேறு ஒரு பரிணாமமும் உண்டாகின்றன.

18. ஸதா ஜ்ஞாதாஸ் சித்தவ்ருத்தயஸ் தத்ப்ரபோ: புருஷஸ்யாபரிணாமித்வாத் ॥

(புருஷனால்)மநோவிர்த்திகள் எப்போதும் அறியப்படுகின்றன. மநத்திற்கு ஸ்வாமியான புருஷனுக்கு எப்போதும் பரிணாமமின்மையால்.

குறிப்பு:—பரிணாமம் = மாறுதல். மநத்தைவிடப் புருஷன் வேறு என்பதை அறியவேண்டும். மநஸ் என்பதில் அடியில் வரும் நான்கும் அடங்கும்.

சித்தம் = ஸ்மரணை
புத்தி = வஸ்துக்களின் உண்மையை அறிதல்.
அகங்காரம் = நான் என்ற அபிமானம்.
மநஸ் = விஷயங்களை கிரஹித்தல்.

விஷயங்களை மநம் கிரஹிக்கிறதென்றால் மநம் அவ்வவ்வஸ்துவை யின் பரிணாமத்தைப் பெறுகிறது. வஸ்துக்களெல்லாம் பரிணாம

முள்ளவை. புருஷனும் பரிணாம முள்ளவனாக ஏற்படுவானாகில் மநம் அந்த புருஷ ரூபமாக ஒரு சமயத்தில் ஆகியும் ஒரு சமயத்தில் ஆகாமலும் இருத்தல் கூடும். ஆனால் அப்படியின்றி நான் (புருஷன்) விருத்தி எப்போது மிருக்கின்றமையால், புருஷன் விஷயமன்று. மநஸ்ஸைப்போலப் புருஷனும் மாறிக்கொண்டிருப்பானாகில், புருஷனைப்பற்றிய மநோவிர்த்திகள் சப்தாதி விஷயங்களைப் போல அறியப்பட்டும் அறியப்படாமலும் இருக்கும். புருஷன் மாறாமல் இருக்கின்றமையால் புருஷனைப் பற்றிய மநோவிர்த்தி எப்போதும் இருக்கின்றது. புருஷனுக்கு சூத்திரத்தில் பிரபு என்ற பதம் உபயோகித்திருக்கிறது. அதன் பொருள் ஸ்வாமி யென்பதாம். மநஸ்ஸைவிடப் புருஷன் உயர்வானவன், வேறானவன் என்பதைக் குறிப்பதற்கு பிரபு என்ற பதம் உபயோகித்திருக்கிறது. புருஷனுக்கு வேறு தன்மை என்னவென்றால், பரிணாமமின்மையாம்.

19. ந தத்ஸ்வாபாஸம் த்ருஶ்யத்வாத் ॥

அது (மநம்) ஸ்வப்ரகாசமுள்ளதன்று. அது (வேறொன்றால்) அறியப்படுகின்றமையால், அதாவது அது ஜடமாகிறபடியால்.

குறிப்பு:—அக்நியைப் போல மநஸ் தானும் பிரகாசமுள்ளது, வஸ்துக்களையும் பிரகாசப்படுத்துகிறது என்று வைநாசிகர் சொல்லுகின்றதை மறுத்தற் பொருட்டு இந்த சூத்திரம் ஏற்பட்டது. மநம் ஸ்வப்ரகாசம் உள்ளதன்று. அது ஜடம், மற்ற இந்த்ரியங்கள் மநத்தால் பிரகாசிக்கின்றமை போல மநமும் வேறொன்றால் பிரகாசிக்கின்றது. அக்நி உபமாநம் சரியன்று. சில வஸ்துக்களின் சேர்க்கையால் ஒரு கிரியை ஏற்பட்டு, அதன் ரூபமாக அக்நியின் பிரகாசம் உண்டாகிறது. புருஷனோ ஸ்வபாவத்தில் பிரகாசமுள்ளவன், பரிணாமமில்லாதவன். பிரகாசித்தற்கு வேறு வஸ்துவின் அபேக்ஷை வேண்டுகின்றானில்லை. மநஸ் வேறொன்றின் உதவியால் பிரகாசிக்கின்றதில்லை என்று சொல்ல முடியாது. "நான் கோபமாக இருக்கிறேன், நான் துக்கமாக இருக்கிறேன், நான் பயந்தவன்." இப்பேர்க்கொத்த அநுபவங்களால் சித்தத்திற்குப் பரிணாமங்கள் ஏற்படுகின்றனவென்று அநுபவரூபமாக சித்தத்தின ஸ்வரூபத்தை யறிகிறோம்.

20. 𑌏𑌕𑌸𑌮𑌯𑍇 𑌚𑍋𑌭𑌯𑌾𑌨𑌵𑌧𑌾𑌰𑌣𑌮𑍍॥

**ஒரே சமயத்தில் இரண்டையும் கிரஹிக்க முடியாது.**

குறிப்பு:—இரண்டு=மநஸ், விஷயம். வைநாசிகர் (அதாவது க்ஷணிக விக்ஞாநவாதிகளின்) ஸித்தாந்தத்தில் செயலும் இருத்தலும் ஒன்றே. ஒரே சமயத்தில் தன்னுடைய ஸ்வரூபத்தையும் வெளிவஸ்துவையும் தீர்மானிக்க முடியாது. க்ஷணிக விக்ஞாநவாதிகளின் அபிப்ராயத்தில் ஒரு வஸ்து, அதன் செய்கை, அதன் ஞாநம் எல்லாம் ஒரே சமயத்தில் ஒரே க்ஷணத்தில் நிகழ்கின்றன என்பதாம்.

21. 𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌦𑍃𑌶𑍍𑌯𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑌙𑍍𑌕𑌰𑌶𑍍𑌚 ॥

**முன் க்ஷணத்தில் உண்டாகும் விர்த்தியானது பின் க்ஷணத்தில் உண்டாகும் வேறு விர்த்தியால் பிரகாசம் பெறுமாகில், பின் க்ஷணத்தில் உண்டாகும் விர்த்தி அதற்குப் பின் க்ஷணத்தில் விர்த்தியை வேண்டுகிறது. அதனால் அநவஸ்தா தோஷம் உண்டாகிறது. ஸ்மிருதியில் குழப்பம் உண்டாகும்.**

குறிப்பு:—புத்திக்கு ஸ்வாமியாகவும் போக்தாவாகவும் உள்ள புருஷனை அங்கீகரிக்காததினால் லோக வ்யவஹாரங்கள் குழப்பமாயிருக்கின்றன. பஞ்சஸ்கந்தங்களை ஒப்புக்கொண்டு, அவைகளை நுகரும் புருஷனை ஒப்புக்கொள்ளாததினால் சிரஸ் இல்லாத சரீரத்திற்கு அலங்காரம் செய்தமை போல் ஆகும். ஸ்கந்தங்களைத் தவிர்க்கவும் சாந்த நிலை பெறவும் குருவை நாடி குருகுலவாஸம் செய்தல் வேண்டும் என்று சொல்லுகின்றார்கள். ஆனால் "எதற்காக இத்தன்மையான வழியோ! அது இல்லை" என்று சொல்லுவது அறிவீனம். நம்முடைய ஸித்தாந்தத்தில் புருஷனை ஸ்வாமியை ஒப்புக்கொள்ளுகிறபடியால் ஸ்மிருதி, ஞாந முதலான எல்லா வ்யவஹாரங்களும் நேர்மையாக ஏற்படுகின்றன.

வைநாசிகர் ஆக்ஷேபத்தின் அவதாரிகை:—மநஸ் ஸ்வப்பிரகாசமுடையதன்று, புருஷனால் பிரகாசப்படுத்தப்படுகின்றது. இது சரியில்லை. பரிணாமமில்லாதவராயும் அஸங்கராகவும் ஸ்வப்பிர

காசராகவும் இருக்கிற ஆத்மாவை மநஸ் சம்பந்தத்தினுல் ஒருவித கிரியைக்கும் கர்த்தாவாகச் சொல்ல முடியாது. ஆத்மாவுக்கும் மநவிற்கும், ஆகாசத்திற்கும் மற்ற பூதங்களுக்கு முள்ளது போல ஒரு வித சம்பந்தம் ஏற்படக் கூடியதில்லை. அதனுல் போக்தா என்று ஆத்மாவைச் சொல்லுகிறது எங்ஙனம்? இந்த ஆக்ஷேபத்திற்கு அடுத்த சூத்திரத்தில் ஸமாதாநம் வருகிறது.

22. 𑌚𑌿𑌤𑍇𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌙𑍍𑌕𑍍𑌰𑌮𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑌦𑌾𑌕𑌾𑌰𑌾𑌪𑌤𑍍𑌤𑍌 𑌸𑍍𑌵𑌬𑍁𑌦𑍍𑌧𑌿 𑌸𑌂𑌵𑍇𑌦𑌨𑌮𑍍 ॥

ஒன்றிலும் சம்பந்த மில்லாத அஸங்கமான சைதந்யம் (புருஷன் புத்தியில் பிரதிபிம்பிக்கும் போது) புத்தியானது புருஷ ஸ்வரூபத்தை யடைகிறது. அப்போது தனது (புருஷனுடைய) காரணமான புத்திவிர்த்தி பிரகாசிக்கிறது.

குறிப்பு:—ஒன்றிலும் சம்பந்த மில்லாத, யாதொரு பரிணமமு மில்லாத சைதந்யம் பரிணமமுள்ளதாகவும் சலநத்துடன் இருக்கின்ற விஷயங்களுடன் ஸம்பந்தப்படும்பொழுது சைதந்யமும் பரிணமமுள்ளதுபோலும் சம்பந்த முள்ளதுபோலும் காணப்படுகிறது. ஸூர்ய பிம்பம் ஜலத்தில் தோன்றுவது போல புருஷனிடமுள்ள ஞாந விர்த்தியானது புத்தி விர்த்தியைத் தவிர வேறான தாக இல்லை. இதற்குப் பிரமாணம், ஸத்யமான பிரஹ்மத்தின் (புருஷனின், ஆத்மாவின்) ஸ்தாநமாக உபநிஷத்துகளில் குகை யென்று சொல்லியிருப்பது பாதாள லோகமன்று, மலைக்குகை யன்று, இருள் அன்று, கடல் அன்று, பள்ளத்தாக்குகள் அல்ல. ஆனுல் சரீரத்தின் கண்ணுள்ள புத்திவிர்த்தியேயாம். பிரஹ்ம சைதந்யமானது புத்தி விர்த்தியுடன் அபிந்நமாகக் கலந்திருக்கின்றது.

23. 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌦𑍃𑌶𑍍𑌯𑍋𑌪𑌰𑌕𑍍𑌤𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 ॥

சித்தமானது (மநமானது) புருஷனுடனும் விஷயங்களுடனும் சம்பந்தப்படுகின்றமையால், எல்லா விஷயங்களையும் அறியும் தன்மையை உடையதாகிறது.

குறிப்பு:—சுத்தமான விர்த்தியால் புருஷனுடனும், அசுத்தமான விர்த்தியால் விஷயங்களுடனும் மநமானது சம்பந்தம் பெறுகிறது. புருஷனுடன் நேரில் சம்பந்திக்குங்கால் அறிவுமயமாகவும், விஷயங்களுடன் இந்த்ரியங்கள் மூலமாய் ஸம்பந்திக்குங்கால் பரிணாம முள்ளதாகவும் ஆகிறது. மநஸுக்குப் புருஷனுடன் சம்பந்தமில்லாத காலமின்மையால் சிலர் மநஸே ஆத்மாவென்று பிரமிக்கின்றனர்கள். ஸ்படிகம் அதன் சமீபத்திலுள்ள செம்பருத்திப் புஷ்பத்தின் சாயையைப் பெற்று, இரண்டும் அபேதமாகத் தோன்றுகின்றன போல, மநமானது புருஷனுடனும் விஷயங்களுடனும் ஸம்பந்திக்கும்போது தந்மயமாக ஆகிறது. புருஷனுடன் ஸம்பந்தித்து புருஷனாகத் தோன்றுகிறதினால் மநம் தான் ஆத்மா அல்லது புருஷன் என விக்ஞானவாதிகள் தவறாகக் கொள்கிறார்கள். என்றுமுள்ள சைதந்யமே புருஷன்.

விக்ஞானவாதிகள் 'மநஸ் ஸ்வார்த்தம்' அதாவது தனக்காகவே உள்ளது என்று சொல்வதை மறுக்க அடியில்வரும் சூத்திரம் ஏற்பட்டது.

24. ததஸங்க்யேயவாஸநாபிச்சித்ரமபி பரார்த்தம் ஸம்ஹத்யகாரித்வாத் ॥

மநமானது எண்ணிறந்த வித்தியாஸமான வாஸனைகளால் நாநாவிதமாகத் தோன்றினும் (இந்த்ரியாதிகளுடன்) சேர்ந்து காரியங்களைச் செய்வதால் (ஸ்வார்த்தமன்று) ஸ்வப்ரயோஜநத்திற்காகவன்று, பரார்த்தமாம் (அந்யனின் ப்ரயோஜநத்திற்காகவாம்).

குறிப்பு:—ஸ்வார்த்தம்=போக்தா. பரார்த்தம்=போக்யம். சரீரம் இந்த்ரியங்களுக்கு எப்படி பரார்த்தமோ, இந்த்ரியங்கள் எப்படி மநஸுக்கு பரார்த்தமோ, அப்படியே மநஸும் புருஷனுக்கு பரார்த்தம். புருஷன் ஸுகதுக்கங்களை அநுபவிப்பதற்காகவும், விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதற்காகவும் மநம் ஏற்பட்டுள்ளது. பரம்பரையாக சரீரம் குணங்களினின்று ஏற்பட்டிருக்கிறது. இந்த்ரியங்களும் அவ்விதமே; சித்தமும் ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற குணங்களினின்று ஸாக்ஷாத்தாக ஏற்பட்டிருக்கிறது. அதனால்

மநம் ஸ்வார்த்தமன்று, பரார்த்தமே. புருஷன் ஒருவனே ஸ்வார்த்தம். மற்றவை யாவும் குணங்களும் அவைகளின் காரியங்களும் பரார்த்தம். இந்த விஷயத்தில் அடியிற்கண்ட கடோபநிஷத்தின் மந்த்ரம் கவனிக்கத்தக்கது.

“ पुरुषान्न परं किञ्चित्सा काष्ठा सा परा गतिः ॥”

இதன் பொருள்: “புருஷனைவிட மேலானது ஒன்றுமில்லை. அதுதான் எல்லாராலும் அடையவேண்டிய ஸ்தாநம்.”

25. विशेषदर्शिन आत्मभावभावनाविनिवृत्तिः ॥

விசேஷத்தை (பிரகிருதி புருஷர்களை) நன்றாய் அறிந்தவனுக்கு அஹம் பாவனை ஒழியும், நீங்கிவிடும்.

குறிப்பு:—நன்றாய் அறிந்தவன் என்பதற்கு மநஸ் இத்தன்மையது, புருஷன் இத்தன்மையன் என்று உண்மையை யறிந்தவன் என்று பொருள். மழைகாலத்தில் புல், பூண்டுகள் உண்டாகின்றமையால், வித்துக்கள் முன்னமேயே இருக்கவேண்டுமென நாம் யூகிக்கின்றமை போல, மோக்ஷ மார்க்கத்தைப்பற்றிக் கேட்கும்போது ஸந்தோஷமடைந்து ஆநந்த பாஷ்பம் விடுகிறவன் முன் ஜந்மத்தில் புருஷனுக்கும் ஸத்வத்திற்கும் (மநத்திற்கும்) உள்ள வித்யாஸத்தை உள்ளபடி அறிய யத்தநம் செய்திருக்கிறான் என்று தெரியவரும். புருஷன் இத்தன்மையன் என அறிய அவாவுள்ளவனாக இருப்பான். அதை அறிந்து ‘நான்’ என்றபாவனையையும் அற்றுவிடுவான்.

26. तदा विवेकनिम्नं कैवल्यप्राग्भारं चित्तम् ॥

(அவ்விதம் அஹம்பாவனை அற்றுப்போன), போழ்து மநமானது விவேகம்பெற்று கைவல்யநிலையை அடைகிறது.

குறிப்பு:—இதுகாறும் விவேகமில்லாமையால் விஷயாதிகள் மநத்தைப் பற்றிக்கொண்டிருந்தன. அதனால் மநம் ஸம்ஸார மார்க்கத்தை நோக்கி நடைபெற்றது. இப்போது புருஷன், பிரகிருதி இவைகள் வேறு என விவேகம் அடைந்தது. கைவல்ய பாவனையையுடையதாக மநம் ஆகிறது.

27. தச்சித்ரேஷு ப்ரத்யயாந்தராணி ஸம்ஸ்காரேப்ய: ॥

கைவல்யத்தை நோக்கி ஸமாதி கொள்ளும் காலம் நீங்கலாக இடைவெளிகளான மற்ற காலங்களில் பூர்வ வாஸனைகளினின்று வேறு விர்த்திகள் உண்டாகும்.

*குறிப்பு:—ஒரேவித ப்ரத்யயம் இருத்தல் என்றால், ஒரே விர்த்தி ஒன்றின் பின் ஒன்றாய் தொடர்பாய் தைல தாரை போல் நிகழ்தல் என்பதாம். ஒரு விர்த்திக்கும் மற்றொரு விர்த்திக்கும் இடைவெளிகள் இருக்கின்றனவல்லவா? இவ்விடைவெளிகளில் பூர்வவாஸனையால் அந்யவிர்த்திகள் உண்டாகக்கூடும்.*

28. ஹாநமேஷாம் க்லேசவதுக்தம் ॥

ஆனால் இப்பூர்வ வாஸநா விர்த்திகள் பாதிக்கின்றனவல்ல. கிலேசங்களைப் போல தஹிக்கப்பட்டிருக்கின்றமையால், வறுக்கப்பட்டிருக்கின்றமையால்.

*குறிப்பு:—அந்த விர்த்திகள் இவன் பிரக்ஞைக்கு வந்தாலும், இந்த யோகியை பாதிக்கின்றனவல்ல. நாளடைவில் அவைகளின் வேகமும் வீர்யமும் குறைந்துகொண்டே வந்திருக்கின்றமையால், வறுக்கப்பட்ட விதைகள் போல விர்த்திகள் ஏற்படுகின்றன.*

29. ப்ரஸம்க்யாநேऽப்யகுஸீதஸ்ய ஸர்வதா
விவேகக்யாதேர் தர்மமேக: ஸமாதி: ॥

பிராகிருதி புருஷ விவேகம் ஏற்பட அந்நிலையிலும் கோத்சமேனும் பற்றில்லாமல் இருக்கிற யோகிக்கு எல்லாவழியிலும் விவேகம் பரவியிருக்கின்றமையால் தர்மமேகம் என்ற ஸமாதி கைகூடுகிறது.

*குறிப்பு:—26 தத்வங்களை நன்றாய் உணர்ந்து பிரகிருதி புருஷ விவேகம் பெற்றயோகிக்கு எல்லாவற்றையும் அறியக்கூடிய தன்மையும் எல்லாவற்றிற்கும் அதிபதியாகும் தன்மையும் உண்டாகின்றன. இந்நிலைக்கு பிரஸம்க்யாநம் (ப்ரஸம்க்யாநம்) என்று பெயர். இந்நிலையிலும் பற்றில்லாத யோகிக்கு விவேகக்யாதி எல்லா இடத்*

திலும் எல்லாக்காலத்திலும் அவிச்சின்னமாக இடையரூமல் தொடர்பாய் உண்டாகிறது. இதற்குத் தான் தர்மமேகம் என்று பெயர். இதைத் தான் ஸர்வபாவாபத்தி என்பர். ஈசோபநிஷத்தின் 6-ம்; 7-ம் மந்த்ரங்களில் உபதேசித்துள்ள விஷயம் இங்கு கவனிக்கத் தக்கது. அக்ருஷ்ணம்* என்றும், அசுக்லம்† என்றும் சொல்லப் பட்ட உத்தமதர்மத்தின் பலனான கைவல்ய ஸ்திதியை இடைவிடாமல் இந்த ஸமாதி வர்ஷிக்கிறதினால் இதற்கு தர்மமேகம்‡ என்று பெயர்.

“ மேலென்றும் கீழென்றி ரண்டறக் காணுங்கால்
தானென்று நானென்று தன்மைகள் ஓராறும்
பாரெங்கு மாகிப் பரந்த பராபரம்
காரென்று கற்பக மாகநின் றானே.”—திருமந்திரம்.

என்ற பாசுரம் இங்கு கவனிக்கத்தக்கது. மேற்கண்ட பாசுரத்தில் கார்=மேகம், ஓர் ஆறும் = தான், நான், நீ, அவன், அவள், அது என்ற தன்மைகள்.

30 𑌤𑌤𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃॥

அதனால் (தர்மமேகஸமாதியினால்) க்லேசங்கள், கர்மங்கள் இவைகள் ஒழிவை அடைகின்றன.

குறிப்பு:—இவைகள் ஒழிவையடையவே யோகி உயிரோடிருக்கும்போதே முக்தனாகிறான். வாஸனைகளோடு கூடிய கிலேசங்கள், கர்மங்கள் தான் ஸம்ஸாரத்திற்குக் காரணம். அவைகள் நீங்கவே ஸம்ஸாரம் விடும்.

31. 𑌤𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌰𑌣𑌮𑌲𑌾𑌪𑍇𑌤𑌸𑍍𑌯
𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌽𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌲𑍍𑌪𑌮𑍍॥

அப்பொழுது ஸகலமான ஆவரணமும் (மறைவு), மலங்களும் (க்லேசகர்மரூபமான மலங்கள்) நீங்கப்பெற்ற ஞானத்திற்கு அளவில்லாமையால், அறியவேண்டியதானது (விஷயமானது) அல்பமாம்.

---

* அக்ருஷ்ணம்=பாபகர்மத்தில் பற்றின்மை.

† அசுக்லம்=புண்யகர்மத்தில் பற்றின்மை.

‡ Vide P. 37 of the “Introduction to Yoga” by A. B.

குறிப்பு:—ஆகாசத்தில் மின்மினிப் பூச்சிபோல விஷயமும், ஆகாசம்போல ஞானமும், ஏற்படுகின்றன. கண்ணின்றி முத்தில் ஓட்டை பண்ணுகிறான். விரலின்றி நூல் கோர்க்கிறான். கழுத்தின்றி அணிகிறான். நாவின்றி ஸ்துதிக்கிறான். அதாவது ஒரு வித சாதநங்களுமின்றி எல்லாக் காரியங்களையும் அவன் செய்கிறான். ஸங்கல்பமே எல்லாவற்றையும் வித்திக்கும்படி செய்கிறது. அடியிற்கண்ட உபநிஷத்தின் வசநங்கள் இங்கு கவனிக்கத்தக்கன:-

"അപാണിപാദോ ജവനോ ഗ്രഹീതാ"
"പശ്യത്യചക്ഷുഃ സ ശൃണോത്യകർണഃ"
—சுவேதாச்வதரோபநிஷத்.

അപാണിപാദോഹമചിന്ത്യശക്തിഃ ॥
പശ്യാമ്യചക്ഷുഃ സ ശൃണോമ്യകർണഃ ॥
—கைவல்யோபநிஷத்.

"நோக்கின்றிக் கண்டு நற் கையின்றிக்
கொடுத்து, மறைநுவல்வதாய
நாக்கின்றியறு சுவையு மினிது ணர்ந்தும்
காலின்றி நடத்தல் செய்து
மூக்கின்றி மணங்கவர்ந்துஞ் செவியின்றிக் கேட்டும்"

என்ற பெரியார் பாசுரம் இந்நிலையிலுள்ள யோகியின் தகைமையை அறிவிக்கிறது.

32. തതഃ കൃതാർഥാനാം പരിണാമ
ക്രമസമാപ്തിർഗുണാനാം ॥

அதற்குப் பிறகு (தர்மமேக ஸமாதி யடைந்த பிறகு) குணங்கள் செய்யவேண்டிய காரியம் முடிவுபெற்றமையால், குணங்கள் ஒன்றின் பின் ஒன்றாய் வரிசையாய்ப் பரிணமிக்கும் தன்மையும் முடிவுபெறுகிறது.

குறிப்பு:—குணங்கள் புருஷனுக்கு போகம், அபவர்க்கம் இவையிரண்டையும் கொடுப்பதாக ஏற்பட்டன. கைவல்ய நிலையைப் பெற்ற புருஷனுக்கு இவை வேண்டுவனவல்ல.

33. க்ஷண ப்ரதியோகீ பரிணாமாபராந்த நிர்க்ராஹ்ய: க்ரம:॥

ஒவ்வொரு க்ஷணத்திலும் (மாறிமாறிக்கொண்டிருக்கிற) குணங்களின் பரிணமிக்கும் வரிசையானது (யோகியால்) பரிணாமத்தின் அபராந்தத்தில் விலக்கத்தக்கதாக ஆகிறது.

குறிப்பு:—பூர்வாந்தம் என்றும், அபராந்த மென்றும் பரிணாமங்கள் இருவகை. பூர்வாந்த மென்பது, காரணமானது காரியமாகப் பரிணமிக்கும் வரையும், அபராந்தம் என்பது, அக் காரியமானது மறுபடி வரவரக் காரணமாகப் பரிணமிக்கும் வரையுமாம். வஸ்துக்கள் கூடஸ்த நித்யம், பரிணாம நித்யம் என இரண்டுவித நிலைகளில் இருக்கின்றன. புருஷர்கள் கூடஸ்த நித்யர்களாம். குணங்கள் பரிணாம நித்யமாம். எந்த வஸ்துவானது தர்மம் (குணம்) மாறிக்கொண்டிருக்கும்போது, மாறாமல் இருக்கிறதோ அது நித்யம். குணங்களின் கார்யங்களான புத்தி, மநம் முதலியவைகள் யோகாப்யாஸத்தினால் வரவர அதிக ஸூக்ஷ்மமாகப் பரிணமித்துக்கொண்டு வருகின்றது. அப் பரிணாமம் முடிவு பெறுங் காலத்தில் அபராந்தம் என்று பெயர். அந்த ஸ்திதியில் புருஷ ஸாக்ஷாத்காரத்தை யோகி பெறுவான். அதற்குமேல் புத்திக்கு யாதொரு பரிணாமமும் இல்லை. இதுவே தர்மமேக ஸமாதியாம்.

34. புருஷார்த்த ஶூந்யானாம் குணானாம் ப்ரதிப்ரஸவ: கைவல்யம் ஸ்வரூப ப்ரதிஷ்டா வா சிதி ஶக்திரிதி॥

கைவல்யம் என்பது புருஷனுக்கு (போகம், அபவர்க்கம் இரண்டிற்கும் காரணமான)குணங்களின் லயம் அல்லது, (யோகி) தன் ஸ்வரூபத்தில் நிற்றல், அல்லது சைதந்யரூபமாக இருத்தலாம்.

குறிப்பு:— கைவல்யம் = சரீர ஸம்பந்தம், விஷய ஸம்பந்தமின்றி தனித்திருத்தல். பிரதிப்ரஸவ: = நாநாவித வாஸனைகள், ஸமாதி விஷயமான விர்த்திகள், வ்யுத்தாந ஸம்ஸ்காரங்கள், முதலியன மநத்தில் லயம் அடைகின்றன. மநஸ் அஸ்மிதையில் லயம் அடைகின்றது. அஸ்மிதை மஹத் தத்துவத்திலும், மஹத் தத்துவம் குணங்களிலும் லயம் அடைகின்றன. குணங்கள் கைவல்யம் பெற்றவனைத் தொடருகின்றனவல்ல. ஸம்பந்திக்கின்றனவல்ல.

கைவல்யபாதம் முற்றிற்று.

# விஷய அகராதி.


| | | பக்கம். |
|---|---|---|
| அணிமாதி ஸித்திகள் | ... | 111 |
| அதிக்ராந்தபாவநீயர் | ... | 114 |
| அநந்தன் | ... | 73 |
| அந்தராங்க ஸாதநங்கள் | ... | 81 |
| அபராந்தம் | ... | 140 |
| அபவர்க்கம் | .... | 54,58 |
| அபிநிவேசம் | ... | 42,46 |
| அப்யாஸம் | ... | 7 |
| அதன் படிகள் | ... | 8 |
| அவித்தை | ... | 42, 43 |
| அவிரதி | ... | 26 |
| அஸம்ப்ரக்ஞாதஸமாதி | ... | 5 |
| அதன் படிகள் | ... | 12, 13 |
| அதன் வெளிப்படையான ஸாதநங்கள் | ... | 86 |
| அஸ்மிதை | | 9, 10, 42-45, 111,120 |
| அஹம்பாவனை அறுதல் | ... | 136 |
| ஆதிகுரு | ... | 23 |
| ஆத்மஸம்வித் | ... | 6 |
| ஆநந்தம் | ... | 9, 10 |
| ஆலஸ்யம் | ... | 26 |
| ஆஸநம் | ... | 64, 72, 73 |
| ஆஸநஜயம் | ... | 73 |
| இந்த்ரன் பன்றியாக வாழ்ந்த கதை | ... | 55 |
| இந்த்ரிய சக்திகளை விருத்திபண்ணுதல் | ... | 30 |
| இந்த்ரியஜயம் பெறுதல் | ... | 111, 112 |
| ஈசுவர பக்தி | ... | 15 |
| ஈசுவரனின் தன்மை | ... | 15-22 |
| ஈசுவரன், ஜீவன்முக்தன் இவர்களின் தாரதம்யம் | ... | 16-22 |
| ஈசுவரப் பிரணிதாநம் | ... | 41 |
| ஈசுவரனுக்கும் கைவல்யம்பெற்ற யோகிக்குமுள்ள பேதம் | | 113 |

| | பக்கம். |
|---|---|
| ஈசோபநிஷத் ... | 63 |
| உச்வாஸ நிச்வாஸம் ... | 26 |
| உதார அவஸ்தை ... | 43 |
| உபாயப் பிரத்யயம் ... | 12, 13 |
| ஒரே மரத்தில் இரண்டு பக்ஷிகள் ... | 121 |
| ஒவ்வொரு ஜீவராசியிலும் பரிபூர்ணமான புருஷன் உண்டாகும்படியான சக்திகள் உள்ளன | 119 |
| ஒவ்வொரு ஜீவராசியிலும் விகாஸமுறையின் பல படிகள் அமைந்துள்ளன | 119 |
| ஔவை குறள் ... | 74, 76 |
| கடோபநிஷத் ... | 17, 24 |
| கர்மயோகம் ... | 41, 42 |
| கர்மங்களின் தன்மை ... | 48-50 |
| கர்மங்களின் கதி ... | 50, 51 |
| காயஸம்பத் ... | 111 |
| காலத்தின் நிர்ணயம் ... | 116, 127 |
| கிரமமுக்தி ... | 22 |
| கிரஹண ஸமாபத்தி ... | 35 |
| கிரஹீத்ரு ஸமாபத்தி ... | 35 |
| கிராஹ்ய ஸமாபத்தி ... | 35 |
| கிலேசங்கள் ... | 15, 42-46 |
| அவைகளை விலக்கும் முறை ... | 47,48 |
| குணங்கள் | 89, 110, 127-130 |
| கும்பகம் ... | 30 |
| கூடஸ்த நித்யம் ... | 140 |
| கைவல்யம் | 14,60,113,117,136,140 |
| கைவல்யபாதம் ... | 118-140 |
| கௌதம புத்தர் ... | 52 |
| சரபங்கர் தம்மை தஹநம் செய்த முறை ... | 108 |
| சார்வாகர் ... | 125 |
| சித்தம் ... | 4 |
| அதன் பூமிகள் ... | 4 |

| | | பக்கம். |
|---|---|---|
| சிரத்தை | ... | 13 |
| சுகர் | ... | 36 |
| சுவேதாச்வதரோபநிஷத் | ... | 23,58 |
| சௌபரி | ... | 120 |
| தநு அவஸ்தை | ... | 42 |
| தநு, கரண, புவந போகங்களின் பிரயோஜநம் | ... | 55 |
| தபஸ் | ... | 41 |
| தர்மம், தர்மி | ... | 89-91 |
| தர்மம்,லக்ஷணம், அவஸ்தை | ... | 89,110 |
| தர்மமேகம் | ... | 5,137,138 |
| தாரகம் | ... | 116 |
| தாரணை | ... | 64,78,81,84 |
| தியாநம் | ... | 64,82-84 |
| திருமந்திரம் | ... | 78,81,84,86,138 |
| திருவள்ளுவநாயனார் குறள் | ... | 20,66,120 |
| துக்கம் | ... | 26 |
| அதன் நிவிர்த்தி | ... | 52,53 |
| துவந்த்வங்கள் நீங்குதல் | ... | 73 |
| துவேஷம், ராகம் | ... | 42,43,46 |
| தேசம், காலம், கார்ய காரண பரம்பரை | ... | 90 |
| தேஜஸ்வியாக ஆதல் | ... | 107 |
| தைத்திரீயோபநிஷத் | ... | 63,64 |
| தௌர்மநஸ்யம் | ... | 26 |
| நசிகேதஸ் | ... | 114 |
| நந்திகேசுவரர் | ... | 48 |
| நம்மாழ்வார் | ... | 17-20 |
| நிகழ்காலம் ஒன்றே உண்மை | ... | 115,116,127 |
| நித்திரை | ... | 7 |
| நித்யம் | ... | 140 |
| பகவத்கீதை | | 12,18,42,59,123,128,129 |
| பஞ்சசிகாசார்யர் | ... | 20,32,73 |

| | | பக்கம். |
|---|---|---|
| பதஞ்சலி முநிவர் சரித்திரம் | ... | 1 |
| ,, ஸ்தோத்ரம் | ... | 3 |
| பதஸ்போடம் | ... | 93 |
| பரகாயப் பிரவேசம் செய்யும் விதம் | ... | 106,107,109 |
| பரமதர்மி | .... | 92 |
| பரார்த்தம், ஸ்வார்த்தம் | ... | 135 |
| பரிணாமநித்யம் | ... | 140 |
| பவப்ரத்யயம் | ... | 12,13 |
| பஹிரங்கஸாதநங்கள் | ... | 80 |
| பாழ் அல்லது லய ஸ்தாநங்கள் | ... | 33 |
| பிரகிருதிலயர்கள் | .... | 16 |
| பிரகிருதி, விகிருதி | ... | 56,57 |
| பிரக்ஞாஜ்யோதிஸ் | ... | 114 |
| பிரணவம் | ..... | 23 |
| அதன் தியாநம் | ... | 24,25 |
| பிரதமகல்பிகர் | ... | 114 |
| பிரதாநம் | ... | 57-59 |
| பிரதாந ஜயம் | ... | 112 |
| பிரத்யாஹாரம் | ... | 36 |
| பிரமாணங்கள் | ... | 6 |
| பிரமாதம் | ... | 26 |
| பிரபஞ்சம் இந்த்ரஜாலவித்தை போன்றது | ... | 128 |
| பிரஸங்க்யாநம் | ... | 137 |
| பிரஸுப்த அவஸ்தை | ... | 42 |
| பிரஹ்மகல்பம் | ... | 23 |
| பிரஹ்லாதர் | ... | 36 |
| பிராணாயாமம் | ... | 29,64,74-78 |
| பிராந்தி தர்சநம் | .... | 26,60 |
| பிருஹதாரண்யகோபநிஷத் | ... | 50, 57, 63 |
| புத்தர், கபிலர் முதலியோர் ஈசுவரனல்லர் | ... | 21 |
| பூதஜயம் பெறுதல் | ... | 110 |
| பூரகம் | ... | 26-30 |

| | | பக்கம். |
|---|---|---|
| போகம் | ... | 54 |
| போஜராஜர் | ... | 1 |
| மணிமேகலை | ... | 44 |
| மதுப்ரதீக | ... | 112 |
| மதுமதி | ... | 116 |
| மதுபூமிகர் | ... | 114 |
| மநநொய்மை | ... | 25 |
| மநஸ் | ... | 131-135 |
| மநுவின் வசநம் | ... | 66 |
| மந்த்ரங்களினுல் ஸித்திபெறல் | ... | 118, 119 |
| மலபரிபாகம்—சைவஸித்தாந்தத்தின் கொள்கை | ... | 109 |
| மஹாவிதேஹா | ... | 109 |
| மாணிக்கவாசகர் | ... | 17, 20, 82 |
| மாண்டவ்யர் | ... | 118 |
| முக்தர் | ... | 17 |
| முக்தி, அதன் இருவகை | ... | 22 |
| முண்டகோபநிஷத் | ... | 62 |
| மூலப்பிரகிருதி | ... | 92 |
| யமம் | ... | 64-67 |
| யோகதர்சநத்திற்கும் வேதாந்ததர்சநத்திற்கும் வித்யாஸம் | | 58 |
| யோகத்திற்கு அதிகாரி | ... | 4, 5 |
| யோகத்திற்குத் தடைகள் | ... | 25 |
| யோக பூமியை அடையாமை | ... | 26 |
| யோகி பல சரீரங்களை யுண்டுபண்ணிக்கொள்ளுதல் | | 120 |
| யோகி பல மநஸ்களை யுண்டுபண்ணிக் கொள்ளுதல் | | 120 |
| யோகி பிறருடன் நடைபெறும் முறை | ... | 28, 29 |
| யோகி ஸ்திரமான மநோ நிலையைப் பெறும் முறைகள் | } | 23, 27, 32, 34-39 சூத்திரங்களில் விவரிக்கப் பெற்றிருக்கின்றன. |
| யோகிகள் நாலுபடிகளிலுள்ளவர் | ... | 114 |
| ரஸாயநர்கள் | ... | 118 |
| ராகத்வேஷம் | ... | 42, 43, 46 |

| | | பக்கம். |
|---|---|---|
| ரிதம்பரா | .... | 38, 39, 112 |
| ரேசகம் | ... | 26-30 |
| வ்யபிசிந்தனை, அதன் இருவகை | ... | 82 |
| வசீகாரம் | ... | 31 |
| வஸ்துக்களின் பரிணாமங்கள்: தர்மம், லக்ஷணம், அவஸ்தை | } | 110, 127-131 |
| வஸ்துக்கள் குணங்களால் தாரதம்யப்படுதல் | ... | 54-56 |
| வாக்யஸ்போடம் | ... | 93 |
| வாசஸ்பதிமிச்ரர் | ... | 1 |
| வாஸனைகள், அவைகளின் இருவிதம் | ... | 123 |
| விகற்பம் | ... | 7 |
| விக்ஞாநபிக்ஷு | ... | 1 |
| விசாரம் | .... | 9, 10 |
| விசோகம் | ... | 113 |
| விச்சின்ந அவஸ்தை | ... | 43 |
| விச்வாமித்ரர் | ... | 48, 119 |
| விதர்க்கம் | ... | 9, 10 |
| விதேஹர்கள் | .... | 16 |
| விபர்யயம் | ..... | 6 |
| விபூதிபாதம், மூன்றாம் பாதம் | ... | 81-117 |
| விப்லவம் | ... | 61 |
| வியாதி | ... | 25 |
| வியாஸபகவாந் | ... | 1 |
| விர்த்திகள் | ... | 5 |
| அடங்குதல் | ... | 5 |
| வகை | ... | 6 |
| விவரங்கள் | ... | 6 |
| விவேகம் | .... | 61 |
| வைநாசிகர் | ... | 133 |
| வைராக்யம் | .... | 7 |
| அதன் பல படிகள் | .... | 8, 9, 14, 15 |
| வ்யுத்தானம் | .... | 87 |

| | | பக்கம். |
|---|---|---|
| ஸத்யம் | ... | 69 |
| ஸத்யகாமன் | .... | 110 |
| ஸத்ய ஸங்கல்பன் | ... | 110 |
| ஸத்யோ முக்தி | .... | 22 |
| ஸமாதி | ... | 5, 64 |
| ஸபீஜ் ஸமாதி, நிர்பீஜ் ஸமாதி | ... | 5,38.39 |
| அதன் ஸித்தி | ... | 72 |
| நிர்விகல்ப ஸமாதி | ... | 82 |
| ஸமாதி பாதம் முதல் பாதம் | ... | 3-40 |
| ஸமாபத்திகள் | ... | 35 |
| ஸவிதர்க்க ஸமாபத்தி | ... | 36 |
| நிர்விதர்க்க ஸமாபத்தி | ... | 36 |
| ஸவிசார ஸமாபத்தி | ... | 37 |
| நிர்விசார ஸமாபத்தி | ... | 35 |
| கிரஹண ஸமாபத்தி | ... | 35 |
| கிரஹீத்ரு ஸமாபத்தி | ... | 35 |
| கிராஹ்ய ஸமாபத்தி | ... | 35 |
| ஸம்ப்ரக்ஞாத ஸமாதி | ... | 5 |
| அதன் படிகள் | ... | 9-11 |
| அதன் அந்தரங்க ஸாதநங்கள் | ... | 81 |
| *ஸம்யமம் | ... | 81, 84, 85 |
| கண்டகூபத்தில் | ... | 103 |
| கர்மங்களில் | ... | 96 |
| சந்திரனில் | ... | 102 |
| சரீரத்தின் நாபிசக்ரத்தில் | ... | 102 |
| சரீரத்தின ஸ்வரூபத்தில் | ... | 95 |
| சூரியனில் | ... | 98 |
| மைத்ரீ, கருணை முதிதை என்ற பாவனைகளில் | ... | 97 |
| யானை, கருடன், ஹநுமாந், ஸிம்ஹம் முதலியவைகளில் | | 98 |
| விர்த்திகளில் | ... | 94 |
| ஸம்ஸ்காரத்தில் | ... | 94 |
| ஸ்போடத்தில் | ... | 93 |
| ஹிருதயத்தில் | ... | 104 |

*குறிப்பு:—ஸம்யமம் 3-ம் பாதம் 17 முதல் -47, 52, 54-வது சூத்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

பக்கம்.

ஸம்யோகம் ... 58–60
ஸம்ஸ்காரங்கள் ... 124
ஸம்ஸ்கார சேஷம் ... 113
ஸாங்க்யதத்வங்கள் 24-ன் விவரம் ... 56, 57
ஸாங்க்யத்திற்கும் அத்வைத வேதாந்தத்திற்குமுள்ள
வித்யாஸம் ... 57
ஸாதநபாதம், 2-ம் பாதம் ... 41-80
ஸாநந்தம் ... 112
ஸித்திகள் ... 72
ஸித்திகளுண்டாகும் முறை ... 118
ஸூக்ஷ்மமான சப்தங்களைக் கேட்டல் ... 108
ஸ்திரீகள் பற்றிய காமனைகள் ... 66
ஸ்மிருதி ... 7
ஸ்வப்நத்தில் ஞானோபதேசம் ... 33, 34
ஸ்வாத்யாயம் ... 41
ஸ்வார்த்தம், பரார்த்தம் ... 135
ஹாநம் ... 60
ஹிரண்யகர்ப்பர் ... 4, 23, 128
ஹிருதயசக்ரம் ... 32
க்ஷணத்தையும் அதன் க்ரமத்தையும் ஸம்யமம் செய்தல் 115
க்ஷணிக விக்ஞான வாதிகளின் மதமும் அதன் கண்டனமும் 27, 28
க்ஷணிக விக்ஞாந வாதிகள் ... 129, 133, 135
ஜ்யோதிஷ்மதி ... 33

॥ஓம் தத் ஸத்॥